விலை ரூபா 25.00

சுழற்சிமுறை உண்ணாவிரதம்

பக்கம் 02

ஒரு லட்சத்துக்கும் மேற்பட்டோர் கைது

பக்கம் 08

போலித் தங்கத் துண்டுகள்..

பக்கம் 17

இந்தமுறை 7 மாத்திரமே..

பக்கம் 27

www.onlineuthayan.com

★ பக்கங்கள் : 30

உதயன்

சுடர் 27
கதிர் 222

வள்ளுவர் ஆண்டு 2043 ஆனி 21 வியாழக்கிழமை (05/07/2012) UTHAYAN - A Lively National Tamil Daily

## டெசோ மாநாட்டுக்கு கூட்டமைப்பு

சென்னை, ஜூலை 5

தமிழகத்தில் தி.மு.க. வின் சார்பில் நடத்தப்படவுள்ள 'டெசோ' ('தமிழீழ ஆதரவாளர்கள் அமைப்பு') மாநாட்டில் கலந்துகொள்ள தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கும் அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது எனத் தெரிய வருகிறது.

இந்த 'டெசோ' மாநாடு எதிர்வரும் ஓகஸ்ட் 5ஆம் திகதி விழுப்புரத்தில் நடைபெறவுள்ளது என அறிவிக்கப்பட்டுள்ளது.

ஈழத் தமிழர் விவகாரத்தால் 2011 சட்டப்பேரவைத் தேர்தலில் தி.மு.க. படுதோல்வி அடைந்ததை அடுத்து கருணாநிதி மீண்டும் 'டெசோ' அமைப்பைத் தொடக்கியுள்ளார்.

தமிழீழத்தைப் 04

# சுய விருப்பம் என்ற போர்வையில் கைதிகளுக்கு பலவந்தப் புனர்வாழ்வு

### உடன் தடுத்து நிறுத்துமாறு ஜனாதிபதிக்கு கடிதம்

யாழ்ப்பாணம், ஜூலை 5

சுய விருப்பம் என்ற போர்வையில் அரசியல் கைதிகளைப் பலவந்தமாகப் புனர்வாழ்வு முகாம்களுக்கு மாற்றுவதை உடனடியாக நிறுத்துவதுடன் அவர்கள் அனைவரையும் பொது மன்னிப்பின் அடிப்படையில் விடுதலை செய்ய வேண்டும்.

இவ்வாறு அரசியல் கைதிகளை விடுதலை செய்வதற்கான அமைப்பு ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவிடம் கோரிக்கை விடுத்துள்ளது.

இது தொடர்பான கடிதம் ஒன்றை அந்த அமைப்பு ஜனாதிபதிக்கு அனுப்பி வைத்துள்ளது.

அதில் தெரிவிக்கப்பட்டுள்ளவை வருமாறு:-

அதிகமான தமிழ் இளைஞர், யுவதிகள் அதே போன்று சிங்கள, முஸ்லிம் இளைஞர்கள் பலரை எதுவித குற்றப்பத்திரிகைகளும் நீதிமன்றத்துக்கு தாக்கல் செய்யாமல் பல வருடங்களாகவும் ஒரு சிலர் பதினைந்து, இருபது வருடங்களாகவும் சிறையில் அடைக்கப்பட்டுள்ளனர். ஒரு சிலருக்கு குற்றப் பத்தி 04

### வவுனியாவில் இருந்து மஹர சிறைக்கு மாற்றப்பட்ட பின்

# அடித்து முறிக்கப்பட்ட அரசியல் கைதி சாவு

### காயமடைந்த மேலும் 10 கைதிகள் தீவிர சிகிச்சைப் பிரிவில்

கொழும்பு, ஜூலை 5

வவுனியா சிறைச்சாலையில் இடம்பெற்ற அசம்பாவிதங்களை அடுத்துக் கொழும்பு மஹர சிறைச்சாலைக்கு மாற்றப்பட்ட 32 தமிழ் அரசியல் கைதிகளில் மிகமோசமான காயங்களுடன் ராகம வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டிருந்த கைதி ஒருவர் நேற்றுமுன்தினம் இரவு சிகிச்சைபயனின்றி அங்கு சாவடைந்தார்.

வவுனியா நெளுக்குளத்தைச் சேர்ந்த கணேஸ் நிமலரூபன் [வயது -28] என்ற தமிழ் அரசியல் கைதியே இவ்வாறு சாவடைந்தவராவார்.

சிறை அதிகாரிகளாலும், சிறைக் காவலாளிகளாலும் மிக மோசமான தாக்குதல் காரணமாகவே இந்தக் கைதி சாவடைந்ததாக மனித உரிமை ஆர்வலர்களும் அரசியல் கட்சிகளின் பிரதிநிதிகளும் குற்றஞ்சாட்டியுள்ளது டன் இந்தச் சம் 04

## வீட்டுத் தகராறு உயிரிழப்பில் முடிந்தது

யாழ்ப்பாணம், ஜூலை 5

எழுதுமட்டுவாழ் தெற்கு, விழுவளை பகுதியில் இரண்டு குடும்பங்களுக்கு இடையே ஏற்பட்ட தகராறு அடிதடியாக மாறி உயிரிழப்பில் முடிந்தது. அண்மையில் மீள்குடியமர்த்தப்பட்ட இரு குடும்பங்களுக்கு இடையே நேற்று இரவு 7மணியளவில் மோதல் வெடித்தது. இதில் அதே இடத்தைச் சேர்ந்த கந்தையா ஜெயராஜா (வயது-45) என்பவர் எதிராளிகளால் தாக்கப்பட்டு உயிரிழந்தார்.. தகராறைத் தீர்ப்பதற்கு இராணுவத்தினர் முயன்றபோதும் அதனை மீறி குறித்த நபர் தாக்கப்பட்டதாக தெரிவிக்கப்படுகின்றது.

சம்பவத்தில் உயிரிழந்தவரின் 04

## அதிகாரிகள் தாக்கியதிலேயே கைதி நிமலரூபன் மரணித்தார்

### நீதியான விசாரணையை உடன் நடத்துமாறு நாடாளுமன்றில் கூட்டமைப்பு அவசர கோரிக்கை

கொழும்பு, ஜூலை 5

பொலிஸாரினதும் சிறைச்சாலை அதிகாரிகளினதும் கொடுமையான தாக்குதலுக்கு இலக்காகி தமிழ் அரசியல் கைதியொருவர் உயிரிழந்துள்ள சம்பவம் தொடர்பில் அரசு உரிய வகையில் விசாரணைகளை முன்னெடுக்க வேண்டும் என ஆணித்தரமாக வலியுறுத்தியுள்ள தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு, இது மனிதாபிமானமற்ற செயல் என சபையில் குமுறியதுடன், இந்தச் சம்பவத்தை வன்மையாகக் கண்டித்துள்ளது.

நாடாளுமன்றில் நேற்று நடைபெற்ற உற்பத்தி வரி (விசேட ஏற்பாடுகள்/ சட்டம் மற்றும் முத்திரைத் தீர்வை (விசேட 04

## மிருகத்தனமான செயல் குறித்து சர்வதேசத்திடம் முறையிடுவோம்

### மனோ கணேசன் குமுறல்

கொழும்பு, ஜூலை 5

வவுனியா சிறையில் அண்மையில் ஏற்பட்ட கலவரத்தின்போது அதிகாரிகளின் மிருகத்தனமான தாக்குதலில் காயமடைந்த நிமலரூபன் என்ற கைதி நேற்றுக் காலை உயிரிழந்துள்ளார் என மக்கள் கண்காணிப்புக் குழுவின் ஏற்பாட்டாளர் மனோ கணேசன் தெரிவித்துள்ளார்.

மேலும், அரசியல் கைதிகளின் பிரச்சினைக்கு விரைவில் தீர்வுகாணாவிட்டால் இந்த விவகாரத்தை அனைத்துக் கட்சிகளும் இணைந்து சர்வதேசமயப்படுத்துவோம். அதன் பின்னர் நாட்டுக்கு அபகீர்த்தி ஏற்படுத்திவிட்டோம் எனக் குறைகூறமுடியாது என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

## கிழக்குத் தேர்தல் ஏற்பாடுகளுக்கு குழுவை அமைத்தது கூட்டமைப்பு

### இறுதித் தீர்மானம் இன்று

யாழ்ப்பாணம், ஜூலை 5

கிழக்கு மாகாண சபைத் தேர்தலில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு போட்டியிடுவது தொடர்பான இறுதி முடிவுகளை எடுப்பதற்காகத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு 6 பேர் கொண்ட குழுவொன்றை நியமித்துள்ளது.

இந்தக் குழு இன்று முற்பகல் 10.30 மணிக்கு கொழும்பு அலுவலகத்தில் கூடி தேர்தல் தொடர்பான இறுதி முடிவுகளை எடுக்கும். வேட்பாளர்கள் 04

## காயமுற்ற கைதிகளை கூட்டமைப்பு பார்வை

யாழ்ப்பாணம், ஜூலை 5

காட்டுமிராண்டித் தனமான தாக்குதல்களுக்கு உள்ளாகி மகர சிறைச்சாலைக்கு மாற்றப்பட்ட தமிழ் அரசியல் கைதிகளை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்கள் நேற்று நேரடியாகச் சென்று பார்வையிட்டனர்.

சம்பவம் தொடர்பாக கொழும்பில் இன்று இராஜதந்திரிகளையும் சிறைச்சாலைகள் மற்றும் புனர்வாழ்வு அமைச்சரையும் சந்தித்துப் பேச 04

## அரசே முழுப் பொறுப்பு

### ஐ.தே.க. குற்றச்சாட்டு

கொழும்பு,ஜூலை 5

வவுனியா சிறைச்சாலை அதிகாரிகளால் தாக்கப்பட்டு வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வந்த நிலையில் உயிரிழந்த நிமலரூபனின் மரணத்துக்கு மஹிந்த ராஜபக்ஷ தலைமையிலான அரசே முழுப் பொறுப்பையும் ஏற்கவேண்டும் என ஐக்கிய தேசியக் கட்சி வலியுறுத்தியுள்ளது.

அத்துடன், நிமலரூபனின் மரணம் மற்றும் வவுனியா சிறைச்சாலைச் சம்பவம் தொடர்பில் 04

## இந்திய மீனவர் அத்துமீறலை கண்டித்து வேலை நிறுத்தம்

யாழ்ப்பாணம் ஜூலை 5

வடக்குக் கடற் பரப்பில் இந்திய மீனவர்களின் அத்துமீறல்களைக் கண்டித்து,வடமாகாண மீனவர்கள் விரைவில் ஒரு நாள் அடையாள வேலை நிறுத்தத்தில் ஈடுபடவுள்ளதாக வடமாகாணக் கடற்றொழிலாளர்கள் கூட்டமைப்பின் தலைவர் செ.தவரட்ணம் தெரிவித்தார். இந்த விடயம் 04

### காணி அபகரிப்பு, பாஸ் நடைமுறையை எதிர்த்து

## மன்னாரில் சனியன்று சாத்வீகப் போராட்டம்

மன்னார்,ஜூலை 5

மன்னார் மாவட்டத்தில் மீனவர்களுக்கு நடைமுறைப்படுத்தப்பட்டுள்ள பாஸ் நடைமுறை மற்றும் மன்னார் மாவட்டத்தில் படைத்தரப்பினராலும், அரசினாலும் மேற்கொள்ளப்பட்டு வரும் காணி அபகரிப்பு போன்றவற்றுக்கு எதிராக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு எதிர்வரும் 07 ஆம் திகதி சனிக் 04

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இலங்கையுடன் கருத்து வேறுபாடு; ஒப்புக்கொள்கிறார் அமெ. தூதுவர்

கொழும்பு,ஜூலை 5

அரசியல் விவகாரங்களில் கருத்து வேற்றுமைகள் இருந்தாலும், இலங்கையுடன் அமெரிக்கா தொடர்ந்தும் இணைந்து செயற்படும் என்று இலங்கைக்கான அமெரிக்கத் தூதுவர் பற்றீசியா புட்டினிஸ் தெரிவித்துள்ளார்.

அமெரிக்கசுதந்திரதினத்தை முன்னிட்டு கொழும்பில் நேற்று வெளியிட்ட செய்தி ஒன்றிலேயே அவர் இவ்வாறு கூறியுள் 04

# யாழ். பல்கலைக்கழகத்தில் அரசியல் தலையீடு அதிகரிப்பு

## ஆசிரியர் சங்கத் தலைவர் குற்றச்சாட்டு

யாழ்ப்பாணம், ஜூலை 5

யாழ். பல்கலைக்கழகத்தில் அரசியல் தலையீடு அதிகரித்துள்ளது. துணைவேந்தர் நியமனம், தொழில்நுட்ப உத்தியோகத்தர் நியமனம், சாதாரண தொழிலாளி நியமனம் என அனைத்திலுமே அரசியல் தலையீடு அதிகரித்துள்ளது.

உண்மையில் இந்த அரசியல் தலையீடுகள் இருக்கக் கூடாது. அவ்வாறு இருக்குமானால் கல்வியில் வளர்ச்சி இருக்காது. அது ஆபத்தான நிலைக்கே இட்டுச் செல்லும் என யாழ். பல்கலைக்கழக ஆசிரியர் சங்கத் தலைவர் ஏ.இராசகுமார் தெரிவித்தார்.

சம்பள அதிகரிப்பு உள்ளிட்ட பல்வேறு கோரிக்கைகளை நடைமுறைப்படுத்தும் படிகோரி நேற்று முதல் பல்கலைக்கழக ஆசிரியர்கள் சுழற்சிமுறையில் தொடர் உண்ணாவிரதப் போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர்.

நேற்று உண்ணாவிரதம் ஆரம்பமானபோது அதில் கலந்துகொண்டு உரையாற்றும்போது இவ்வாறு தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து உரையாற்றுகையில் தெரிவித்ததாவது:-

ஏனைய பல்கலைக்கழகங்களில் அரசியல் தலையீடு அதிகரித்துள்ளது போன்று யாழ். பல்கலைக்கழகத்திலும் இந்தத் தலையீடு அதிகரித்துள்ளது. இந்தப் பல்கலைக்கழகத்தில் எது சம்பந்தமான நியமனம் என்றாலும் அமைச்சரின் தலையீடு காணப்படுகிறது.

இவ்வாறு எதிலும் அமைச்சரின் தலையீடு இருக்குமானால் கல்வியில் வளர்ச்சி காண முடியாது. தகுதியான விண்ணப்பங்களின் அடிப்படையிலேயே நியமனங்கள் வழங்கப்பட வேண்டும். அமைச்சர் எப்படி நியமனப் பட்டியலைத் தெரிவு செய்யமுடியும்?

தவிர தனியார் பல்கலைக்கழகங்களுக்கு அனுமதி கொடுக்கிறார்கள். அதுபற்றி நடந்த கூட்டத்துக்கு பல்கலைக்கழக ஆசிரியர் சங்கங்களின் சம்மேளனத்தினர் அழைக்கப்பட்டிருக்கவில்லை.

பல்கலைக்கழகத்தை அரசியல் மயப்படுத்தக் கூடாது, முன் முகாமைத்துவம் செய்யக்கூடாது என்றார் அவர். (த-4)

# 14 வயது சிறுமி மீது வன்புணர்வு பிரதேச சபைத் தலைவர் கைது

கொழும்பு,ஜூலை 5

14 வயதுச் சிறுமியைப் பாலியல் வன்புணர்வுக்கு உட்படுத்திய குற்றச்சாட்டில் அக்குரஸ்ஸ பிரதேச சபைத் தலைவர் சாருவ லியனகே கனில் கைது செய்யப்பட்டுள்ளார்.

மாத்தறை சிறுவர் மற்றும் மகளிர் பிரிவு அதிகாரிகளால் நேற்று அதிகாலை 1 மணியளவில் இவர் கைது செய்யப்பட்டுள்ளார். கடந்த மே 23 ஆம் திகதி முதல் 30ஆம் திகதிக்கு உட்பட்ட காலத்தில் அக்குரஸ்ஸ நகரில் தனது வீட்டில் வசித்து வந்த 14 வயதுடைய சிறுமி பாலியல் வன்புணர்வுக்கு உட்படுத்தப்பட்டார்.

இது குறித்து சிறுவர் மற்றும் மகளிர் பிரிவுக்கு அறிவிக்கப்பட்ட பின்னர் நேற்று அக்குரஸ்ஸ பிரதேச சபைத் தலைவர் சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டுள்ளார். (த)

# ஆராய்ச்சிக்கட்டுப் பிரதேச சபை தலைவரும் நேற்றுக் கைதானார்

கொழும்பு,ஜூலை 5

ஆராய்ச்சிக்கட்டுப் பிரதேச சபையின் தலைவர் ஜகத் சமந்த (ஐ.ம.சு.மு) நேற்றுக் காலை பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

சரத் பொன்சேகாவை வரவேற்கும் நிகழ்ச்சியை ஏற்பாடு செய்ய வேண்டாம் என அச்சுறுத்திய போதும் அதனை ஏற்பாடு செய்ததால் ஐக்கிய தேசியக் கட்சியின் செயற்பாட்டாளர் ஜூட் நிஷாந்த மீது தாக்குதல் நடத்தியதாக இவர் மீது குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

அண்மையில் சரத் பொன்சேகா சிலாபத்துக்குப் பயணம் செய்த வேளை, ஆராய்ச்சிக்கட்டுப் பிரதேச சபைத் தலைவர் ஐக்கிய தேசியக் கட்சியின் செயற்பாட்டாளர் ஜூட் நிஷாந்தவுக்கு அச்சுறுத்தல் விடுத்துள்ளார்.

எனினும் அதனை கண்டுகொள்ளாது வரவேற்பு நிகழ்ச்சியை ஏற்பாடு செய்த ஜூட் நிஷாந்த மீது பிரதேச சபைத் தலைவர் உள்ளிட்ட சிலர் தாக்குதல் நடத்தியுள்ளனர்.

தாக்குதலில் காயமடைந்த ஜூட் முந்தல் அரச வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு பின் பாதுகாப்புக் கருதி சிலாபம் வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டுள்ளார்.

சம்பவத்துடன் தொடர்புடைய சந்தேகநபரான ஆராய்ச்சிக்கட்டுப் பிரதேச சபைத் தலைவரைக் கைது செய்யுமாறு சரத் பொன்சேகா பொலிஸ் மா அதிபரிடம் கோரிக்கை விடுத்திருந்தார்.

இதனையடுத்துச் சந்தேக நபர் நேற்று முந்தல் பொலிஸில் சரணடைந்த பின் கைது செய்யப்பட்டுள்ளார். அவரை நீதிமன்றில் முற்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. (த)

ஆராய்ச்சிக்கட்டுப் பிரதேச சபைத் தலைவர் ஐக்கிய தேசியக் கட்சியின் செயற்பாட்டாளர் ஜூட் நிஷாந்தவுக்கு அச்சுறுத்தல் விடுத்துள்ளார்.

# பல்கலைக்கழக ஆசிரியர்களும் சுழற்சி முறை உண்ணாவிரதம்



தொடர்ந்தும் ஏமாற்றப்பட்டு வருவதாலேயே இந்த உண்ணாவிரதப் போராட்டம்

யாழ்ப்பாணம், ஜூலை 5

சம்பள அதிகரிப்பு உட்பட பல்வேறு கோரிக்கைகளையும் நடைமுறைப்படுத்தக் கோரி யாழ். பல்கலைக்கழக ஆசிரியர்களும் சுழற்சி முறையிலான தொடர் உண்ணாவிரதப் போராட்டத்தை நேற்று முதல் ஆரம்பித்துள்ளனர்.

எமது கோரிக்கைகளை நடைமுறைப்படுத்தும் படி கோரி பணிப்பகிஷ்கரிப்பு, ஆர்ப்பாட்டம் என்பவை நடத்தப்பட்டன. கோரிக்கைகளை நிறைவேற்றுவதாகக் கூறியதால் பகிஷ்கரிப்பு கைவிடப்பட்டது. ஆனால் அவை நடைமுறைப்படுத்தப்படவில்லை. தொடர்ந்தும் ஏமாற்றப்பட்டு வருகிறோம்.

அதனாலேயே சுழற்சி முறையிலான தொடர் உண்ணாவிரதப் போராட்டத்தில் ஈடுபட்டு வருவதாகப் பல்கலைக்கழக ஆசிரியர்கள் தெரிவித்தனர்.

அவர்கள் மேலும் தெரிவித்ததாவது:-

மொத்த தேசிய உற்பத்தியில் உயர் கல்விக்கான அரச ஒதுக்கீடு 2005ஆம் ஆண்டு 3.5 வீதமாக இருந்தது. 2012இல் அது 1.9 வீதமாகக் குறைவடைந்தது. அத்துடன் 2005இல் 0.52 வீதமாக இருந்த பல்கலைக்கழகங்களுக்கான ஒதுக்கீடும் 2010இல் 0.27 வீதமாகக் குறைவடைந்தது.

தமது சம்மேளனத்தின் தொடர்ச்சியான எதிர்ப்புக்களுக்கு மத்தியிலும் உயர் கல்வி அமைச்சு கலந்தாலோசிக்கப்படாத தற்காலிக கல்விச் சீர்திருத்தங்களைத் தொடர்ச்சியாக மேற்கொள்கிறது.

தரமான கல்வியை அனைவரும் பெறுவதனை வலியுறுத்துவதாக சம்மேளனக் கோரிக்கைகள் அமைந்தன. தகுதி வாய்ந்த பல்கலைக்கழக ஆசிரியர்களை அரச பல்கலைக்கழகங்களில் இணைத்துக் கொள்ளல் மற்றும் தக்க வைத்துக் கொள்ளல் எனப் பல கோரிக்கைகள் உள்ளடங்குகின்றன - என்றார். (த-4)

# தபால் மூல வாக்களிப்புக்கு விண்ணப்பத் திகதி அறிவிப்பு

கலைக்கப்பட்டுள்ள கிழக்கு, சப்ரகமுவ மற்றும் வட மத்திய மாகாணங்களுக்கான தபால் மூல வாக்களிப்புக்கு அரச ஊழியர்கள் ஜூலை 19ஆம் திகதிவரை விண்ணப்பிக்க முடியும் என தேர்தல்க்ள் ஆணையாளர் மஹிந்த தேசப்பிரிய தெரிவித்துள்ளார்.

இதற்கான காலம் நீடிக்கப்படமாட்டாதெனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இதேவேளை, வேட்பு மனு தாக்கல் செய்யும்போது அசல் வேட்பு மனுவின் பிரதிகள் சமர்பிக்கப்படுமாயின் வேட்பு மனு நிராகரிக்கப்படும் என தேர்தல்கள் ஆணையாளர் அறிவுறுத்தியுள்ளார். (த)

# இலங்கையின் நற்பெயரை களங்கப்படுத்த முயற்சியாம்

## அமைச்சர் கெஹலிய கூறுகிறார்

மனிதக் கடத்தலுக்குப் பாதுகாப்பான இடமெனத் தவறாகக் குற்றஞ்சாட்டி இலங்கையின் நற்பெயருக்கு களங்கம் உண்டாக்க முயலும் உள்நோக்கம் கொண்ட சக்திகள் செயற்படுவதாகத் தெரிகின்றதென அரசு தெரிவித்துள்ளது.

அண்மையில் கைதுசெய்யப்பட்ட அல்லது கவிழ்ந்த படகுகளிலிருந்து காப்பாற்றப்பட்ட சம்பவங்கள் பலவற்றில் இலங்கையைச் சேர்ந்த புகலிடம் கோருவோர் காணப்படவில்லையென அரச் பேச்சாளரும் அமைச்சருமான கெஹெலிய ரம்புக்வெல்ல கூறியுள்ளார்.

'அடைக்கலம் கோருவோர் இலங்கையிலிருந்து புறப்பட்டதாகக் கூறி இலங்கையைச் சம்பந்தப்படுத்தும் வகையில் தவறாகத் தகவல்கள் பரப்பப்பட்ட பல சம்பவங்கள் அண்மையில் நடந்துள்ளன. இவை உண்மையில்லாத புனையப்பட்ட தகவல்கள் ஆகும்' எனவும் அவர் கூறினார். (த)

# காணாமற்போன 15,780 பேரின் கதி என்ன?

## செஞ்சிலுவைச் சர்வதேசக் குழு கவலை

கொழும்பு,ஜூலை 5

இலங்கையில் போர் முடிந்து மூன்று ஆண்டுகளுக்கு மேலாகியும் காணாமல் போனவர்களின் நிலைமை குறித்து செஞ்சிலுவைச் சர்வதேசக் குழு கவலை வெளியிட்டுள்ளது.

விடுதலைப் புலிகளுக்கு எதிரான போர் 2009 ஆம் ஆண்டு மே மாதம் முடிவடைந்ததாக இலங்கை அரசு தெரிவித்த பிறகும் கூட, இன்னும் 15,000க்கும் அதிகமானவர்கள் எங்கிருக்கிறார்கள் என்று தெரியவில்லை என்று செஞ்சிலுவைச் சர்வதேசக் குழுவின் 2011 ஆம் ஆண்டுக்கான ஆண்டறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

செஞ்சிலுவைச் சர்வதேசக் குழு வெளியிட்டுள்ள அறிக்கையில் இலங்கையில் போருக்கு பின்னரான காலகட்டத்தில் இன்னும் 15,780 பேரின் நிலை என்ன ஆனது என்பது இன்னும் தெளிவில்லாமல் உள்ளது என்று கூறப்பட்டுள்ளது.

காணாமல் போனவர்களின் பட்டியலில் 751 பேர் மகளிர், 1494 பேர் சிறார்கள் எனவும் அந்த அமைப்பின் அறிக்கை தெரிவிக்கிறது.

போர் முடிந்த பிறகு சுமார் 2,80,000 பேர் அரச முகாம்களில் தங்க வைக்கப்பட்டனர் எனவும், அதில் பெரும்பாலானவர்கள் தமது சொந்த இடங்களுக்குத் திருப்பி அனுப்பப்பட்டுள்ளதாகவும் கூறும் செஞ்சிலுவைச் சர்வதேசக் குழுவின் அறிக்கை, இன்னும் ஆயிரக்கணக்கானவர்களின் நிலை கேள்விக் குறியாகவே உள்ளது என்றும் சுட்டிக்காட்டியுள்ளது.

இதன் காரணமாக இன்னும் கணக்கில் வராதவர்களின் விதி குறித்து ஒரு உறுதியான தகவலை உறவினர்களால் பெற்றுக் கொள்ள முடியாமல் உள்ளது எனவும் செஞ்சிலுவைச் சர்வதேசக் குழு கூறுகிறது.

போர் நடைபெற்ற பகுதிகளுக்கான பயணத் தடை கடந்த ஆண்டு ஜூலை மாதம் விலக்கிக் கொள்ளப்பட்டாலும், அப்பகுதிகளுக்கு சுயாதீனமாக மனிதநேயப் பணியாளர்கள் சென்று வருவது இன்னும் கடுமையான நிபந்தனைகளுக்கு உட்பட்டே இருக்கிறது எனவும் ஆண்டறிக்கை கோடிட்டு காட்டுகிறது.

இலங்கையில் அவசர கால நிலை விலக்கிக் கொள்ளப்பட்டாலும், விடுதலைப் புலிகள் அமைப்புடன் தொடர்புடையவர்கள் என்று குற்றஞ் [illegible] தொடர்ந்து சிறைகள் மற்றும் தடுப்பு முகாம்களில் வைக்கப்பட்டுள்ளனர் என்றும் செஞ்சிலுவைச் சர்வதேசக் குழுவின் ஆண்டறிக்கை கூறுகிறது.

மேலும் பலர், புனர்வாழ்வு நிலையங்கள் என்று அரசால் கூறப்படும் இடங்களுக்கு கொண்டு செல்லப்பட்டனர் எனவும், அவர்களின் பெரும்பாலானவர்கள் கடந்த ஆண்டின் இறுதியில் விடுவிக்கப்பட்டனர் எனவும் அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

போர் நடைபெற்ற காலத்திலும், அது முடிவடைந்த உடனடி காலப்பகுதியிலும் தமது உறவுகளுடன் தொடர்புகளை இழந்த ஆயிரக்கணக்கானவர்கள் அது குறித்து செஞ்சிலுவைச் சர்வதேசக் குழுவிடம் முறைப்பாடு செய்துள்ளனர் எனவும், அவை இன்னும் தீர்க்கப்படாமலேயே உள்ளன எனவும் ஆண்டறிக்கை கூறுகிறது.

பிரிந்து போயுள்ள குடும்பங்களின் நிலை குறித்து பாதுகாப்பு அமைச்சுடன் தமது அமைப்பு பேச்சுக்களை தொடர்ந்து நடத்தி வருகிறது என்றும், தொடர்ந்து இது குறித்துத் தாங்கள் கண்காணித்து வருவதாகவும் செஞ்சிலுவைச் சர்வதேசக் குழு தெரிவித்துள்ளது.

காணாமல் போனவர்கள் குறித்து உரிய தகவல்களைப் பெற்றுக் கொள்வது தொடர்பில் சட்டங்கள் நடைமுறைபடுத்தப்படுவதையும் தாங்கள் கூர்ந்து கவனித்து வருவதாகவும் கூறுகிறது.

இதேவேளை போரினால் இடம்பெயர்ந்து மீண்டும் தமது இடங்களுக்கு மீளக் குடியேறச் சென்றுள்ளவர்களும் அங்கு அடிப்படை கட்டமைப்பு வசதிகள் சீரழிந்த நிலையில் உள்ளதையே காண்கிறார்கள் என்றும், தமது வாழ்வாதார நடவடிக்கைகளை முன்னெடுத்துச் செல்வதில் சிரமங்களை எதிர்கொள்கிறார்கள் எனவும் செஞ்சிலுவைச் சர்வதேசக் குழுவின் ஆண்டறிகை தெரிவிக்கிறது.

இலங்கை அரசு 2010 ஆம் ஆண்டு பிறப்பித்த ஒரு உத்தரவை அடுத்து வடபகுதியில் செஞ்சிலுவைச் சர்வதேசக் குழுவின் அலுவலகங்கள் மூடப்பட்டன என்றும் மக்களுக்கு அளிக்கப்பட்டு வந்த உதவி நடவடிக்கைகள் நின்று போயின என்றும் அதன் அறிக்கை சுட்டிக்காட்டுகிறது.

மீள்குடியேற்றப் பகுதிகளில் தாங்கள் திட்டமிட்டிருந்த குடிதண்ணீர் விநியோகத் திட்டங்களைச் செயல்படுத்தக் கூட அரசு தடை செய்தது எனவும் செஞ்சிலுவைச் சர்வதேசக் குழு தெரிவிக்கிறது. (த)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### நேர்முகத் தேர்வுக்கு விண்ணப்பிக்காத

# பட்டதாரிகள் விடயம் குறித்து பொதுநிர்வாக அமைச்சே முடிவு

## யாழ். மேலதிக அரச அதிபர் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், ஜூலை 5

*பட்டதாரி பயிலுநர் நேர்முகத் தேர்வுக்கு விண்ணப்பிக்காத பட்டதாரிகளின் முறையீடுகள், பொது நிர்வாக உள்நாட்டலுவல்கள் அமைச்சுக்கு அனுப்பப்பட்டு அமைச்சின் முடிவுக்கு அமையவே மேற்கொண்டு நடவடிக்கைகள் எடுக்கப்படும்.*

*யாழ். மேலதிக அரச அதிபர் ரூபினி வரதலிங்கம் இவ்வாறு தெரிவித்தார்.*

யாழ். மாவட்டத்தில் 2 ஆயிரத்து 39 பட்டதாரிகளுக்கு கடந்த 2 ஆம் திகதி பட்டதாரிப் பயிலுநர் நியமனம் வழங்கப்பட்டது. இதற்கான நேர்முகத் தேர்வுகள் கடந்த மாதம் 5ஆம், 6 ஆம், 7 ஆம் திகதிகளில் யாழ். மாவட்ட செயலகத்தில் நடத்தப்பட்டது.

இந்த நேர்முகத் தேர்வுகளுக்கு விண்ணப்பித்து, மாவட்ட செயலகத்தால் நேர்முகத் தேர்வுக்கு வருமாறு அறிவிக்கப்பட்டு, நேர்முகத் தேர்வில் பங்குபற்றாதவர்களுக்கு விரைவில் நேர்முகத் தேர்வுகள் நடத்தப்படவுள்ளன.


அதேவேளை நேர்முகத் தேர்வுக்கு விண்ணப்பிக்காதவர்களிடம் இருந்து முறையீடுகள் பெறப்பட்டு பொது நிர்வாக உள்நாட்டலுவல்கள் அமைச்சுக்கு அனுப்பப்பட்டு அமைச்சின் அறிவுறுத்தலுக்கு அமைவாகவே நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

அதேவேளை, பட்டதாரிகளுக்கான நியமனங்கள் வழங்கும் அதிகாரம் பொது நிர்வாக உள்நாட்டலுவல்கள் அமைச்சால் அரச அதிபருக்கே வழங்கப்பட்டுள்ளது என்று மேலதிக அரச அதிபர் தெரிவித்தார்.

இதேவேளை, சில பிரதேச செயலகங்களில், நேர்முகப் பரீட்சைக்குத் தோற்றாதவர்களை அமைச்சரின் அலுவலகத்தில் போய் பதிவு செய்யுமாறு அரச அதிகாரிகள் தெரிவிக்கின்றனர் என்று குறிப்பிடப்படுகிறது.

மாவட்ட செயலகத்தினூடாகவே பட்டதாரி பயிலுநர் நியமனம் வழங்கப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (ம-5)

### எல்லாமே விரயமாகிறது...?



*தண்ணீரை வீண் விரயம் செய்ய வேண்டாம் என்று பொதுமக்களைக் கேட்டுக் கொள்ளும் அதேசமயம் யாழ்.மாநகர சபை வளாகத்துள் உள்ள விநியோகக் குழாய் வழியாக நீர் விரயமாகிக் கொண்டிருக்கிறது. (ம-7)*

## ஊர்காவற்றுறை பிரதான வீதி திருத்தம்

யாழ்ப்பாணம்,ஜூலை 5

ஊர்காவற்றுறை பிரதான வீதியின் புனரமைப்புப் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன என்று வீதி அபிவிருத்தி அதிகார சபை தெரிவித்துள்ளது.

தற்போது இந்த வீதிக்கு தார் ஊற்றித் திருத்தியமைக்கும் பணிகள் இடம்பெற்று வருகின்றன.

இந்தப் புனரமைப்புக்கெனத் தென்பகுதியில் இருந்து பவுசர் மூலம் திரவத் தார் எடுத்துவரப்பட்டுள்ளது.

இந்தத் திரவத் தார் உடனடியாக பவுசர் மூலம் சூடாக்கி இயந்திரத்தின் உதவியுடன் உடன் விசிறப்பட்டும் வருகின்றது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம-17)

## ‘டிம்’ ஒளியில் வாகனம் செலுத்துங்கள்

*இரவு நேரங்களில் வீதிகளில் பயணிக்கும் வாகனங்களின் சாரதிகள் அனேகமாகத் தமது வாகனங்களின் விளக்குகளை ஒளிக்குறைப்பு (டிம்) செய்யாது செல்வதால் எதிரே வருவோர் விபத்துக்களை எதிர்கொள்ள நேரிடுவதாக மக்கள் விசனம் தெரிவிக்கின்றனர்.*

*யாழ். நகரிலும் நகரை அண்டிய பகுதிகளிலும் வாகனங்கள் நெருக்கமாக சென்று வரும் போது கூடிய ஒளியைப் பாய்ச்சுவதால் எதிரேவரும் பிற வாகனங்களையும் வீதிகளின் தன்மையையும் இனங்கண்டு கொள்வது கடினமாக உள்ளது. இதனால் ஆபத்துக்களைச் சந்திக்க நேரிடுகிறது என்று விசனம் தெரிவிக்கப்பட்டுள்ளது. பெரும்பாலான மோட்டார் சைக்கிள்கள், வான்களைச் செலுத்தும் இளம் சாரதிகள் இரவு நேர விதிமுறைகளைப் பேணி ஒளிக்குறைப்புச் செய்வதைப் பின்பற்றுவதில்லை என்றும் தெரிவிக்கப்படுகிறது. இதனால் சைக்கிள் மற்றும் கால்நடையாகப் பயணிப்போர் ஒளித் தாக்கத்தால் எதிரேவரும் சிறு வாகனங்களுடன் மோதும் நிலை காணப்படுகின்றது.*

*போக்குவரத்துப் பொலிஸார் இதுவிடயமாக கவனமெடுத்து இரவு நேரங்களில் சாரதிகள் ஒளிச் சமிக்ஞைகளைப் பின்பற்றி வாகனம் செலுத்த நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. (ம-135)*

## கடும் வெப்பத்தால் கால்நடைகள் தவிப்பு

யாழ்ப்பாணம்,ஜூலை 5

தற்போதைய கடும் வெப்பத்தால் தீவுப் பகுதியில் கால்நடைகள் தண்ணீர் இன்றித் தவித்து வருகின்றன.

மண்டைதீவு, வேலணை, அல்லைப்பிட்டி, புங்குடுதீவு போன்ற பகுதிகளில் கட்டாக்காலியாக நடமாடும் ஆயிரக்கணக்கான கால்நடைகள் கடும் வரட்சி காரணமாகப் பெரும் அவஸ்தையடைந்து வருகின்றன.

இந்தக் கடுமையான வெப்பத்தை ஈடுகொடுக்க முடியாமல் அனேகமான மாடுகள் கடற்கரைப் பகுதியை நோக்கி படையெடுத்து அங்கே குளிர்ச்சிக்காகப் படுக்கின்றன.

மண்டைதீவு மற்றும் வேலணைக் கடற்கரை ஓரங்களில் இவ்வாறு நூற்றுக் கணக்கான கால்நடை களைக் காணக்கூடியதாக உள்ளது.

அத்துடன் இந்தப் பகுதியில் உள்ள குளங்கள் மற்றும் நீர் ஏரிகள் போன்றவை முழுமையாக வற்றியுள்ளமையால் குடிதண்ணீர் இன்றியும் இந்தக் கால்நடைகள் பெரும் சிரமப்பட்டு வருகின்றன.

தற்போது நிலவும் கடும் வரட்சி காரணமாகக் கால்நடைகள் நோய்வாய்ப்பட்டு வருகின்றன என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம-17)

## நயினாதீவு வர்த்தக நிலையத்தில் பணம் திருடிய ஆசாமி மாட்டினார்

யாழ்ப்பாணம்,ஜூலை 5

நயினாதீவு நாகபூஷணி அம்மன் ஆலயச் சுற்றாடலில் உள்ள வர்த்தக நிலையம் ஒன்றில் திருடர்கள் தமது கைவரிசையைக் காட்டியுள்ளனர். இதனையடுத்து இந்தப் பகுதி இளைஞர்கள் மேற்கொண்ட முயற்சியால் குறித்த திருடன் பிடிக்கப்பட்டு ஊர்காவற்றுறைப் பொலிஸில் ஒப்படைக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்தத் திருட்டு சம்பவம் தேர்த்திருவிழா அன்று இரவு இடம்பெற்றது.

ஆலயச் சூழலில் உள்ள வர்த்தக நிலையம் ஒன்றில் பொருள்களை வாங்கி கொண்டுநின்ற ஒருவர் அங்கு காசாளரின் மேசையில் இருந்த பணப்பையை மிகவும் தந்திரமாகச் சுருட்டிக் கொண்டு தப்பிச் சென்றுள்ளார்.

பின்னர் வர்த்தக நிலையத்தைப் பூட்டுவதற்கு முன்னர் பணப்பையை எடுக்கச் சென்ற சமயம், அந்த பணப்பை காணாமல் போயிருந்தமை தெரியவந்தது.

அந்தப் பணப் பையில் சுமார் ஐந்து லட்சம் ரூபா பணம் இருந்ததாக சம்பந்தப்பட்ட வர்த்தக நிலையத்தின் உரிமையாளர் தெரிவித்தார்.

இந்தத் திருட்டு தொடர்பாக ஊர்காவற்றுறை பொலிஸாரிடம் முறைப்பாடு செய்யப்பட்டது. சம்பந்தப்பட்ட திருடனை மடக்கிப் பிடிக்கும் முகமாக ஆலயச் சூழலில் இளைஞர் குழு ஒன்று உடனடி நடவடிக்கையில் ஈடுபட்டது.

நயினாதீவு இறங்குதுறையிலும் நேற்றுமுன்தினம் அதிகாலை முதல் இளைஞர்கள் குறித்த திருடனைப் பிடிக்கும் நடவடிக்கையில் ஈடுபட்டிருந்தனர்.

கடுமையான முயற்சியால் சம்பந்தப்பட்ட திருடன் நேற்றுமுன்தினம் நண்பகல் நயினாதீவில் உள்ள வர்த்தக நிலையம் ஒன்றில் வைத்து மடக்கிப் பிடிக்கப்பட்டான்.

இந்த பணப்பையைத் திருடியதாகக் கூறப்படும் குறித்த திருடன் ஊர்காவற்றுறைப் பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டார். பொலிஸார் திருடனை விசாரணைக்காக ஊர்காவற்றுறை பொலிஸ் நிலையத்துக்குக் கொண்டுசென்றனர். (ம-17)

## பகிஷ்கரிப்புச் செய்த காலத்து கொடுப்பனவை கோரி ஆர்ப்பாட்டம்




சம்பள உயர்வுகோரி பகிஷ்கரிப்பில் ஈடுபட்ட 21 நாள்களுக்குமான சம்பளத்தையும் வழங்கக் கோரி அனைத்துப் பல்கலைக்கழகக் கல்விசாரா ஊழியர்கள் நேற்று 2மணிநேர ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

அவர்களுக்குரிய சம்பளம் வழங்கப்படுவதாகக் கூறப்பட்டதையடுத்து ஆர்ப்பாட்டம் கைவிடப்பட்டது. சம்பளமும் நேற்று வழங்கப்பட்டது.

யாழ்.பல்கலைக்கழக கல்விசாரா ஊழியர்களும் நேற்று இந்த ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர். "பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவே ஊழியரைப் பழிவாங்காதே", "பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவை உடன்பாட்டை நிறைவேற்று", "உடன்படிக்கையை மீறாதே", "சம்பளத்தை வெட்டாதே", "பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுத் தலைவரே உடன் வெளியேறு" உள்ளிட்ட பல கோரிக்கைகளை முன்வைத்துப் பல்கலைக்கழக வாயிலில் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

சம்பள அதிகரிப்பு உள்ளிட்ட பல்வேறு கோரிக்கைகளை முன்வைத்து கல்விசாரா ஊழியர்கள் 21நாள்கள் தொடர்பணிப்பகிஷ்கரிப்பில் ஈடுபட்டு வந்தனர். கடந்த 26 ஆம் திகதி பகிஷ்கரிப்பு கைவிடப்பட்டு ஊழியர்கள் பணிக்குத் திரும்பியிருந்தனர்.

சில பல்கலைக்கழகங்களில் கல்விசாரா ஊழியர்களுக்கு 21 நாள்களுக்குமான சம்பளம் வழங்கப்பட்டுவிட்டது.

யாழ்.பல்கலைக்கழகம் உட்பட ஏனைய பல பல்கலைக்கழகங்களில் ஊழியர்களுக்குச் சம்பளம் வழங்கப்படாதிருந்தது. அதனை வழங்கக் கோரியே நேற்று ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டிருந்தனர். (ம-4)

### வீதியோரம் வைத்து எரிக்கப்படும் குப்பைகளால் போக்குவரத்து சிரமம்

மானிப்பாய் பட்டினத்திலுள்ள வீதிகளில் உள்ள குப்பைகளைக் கூட்டித் துப்புரவு செய்யும் வலி.தென்மேற்கு பிரதேச சபை தொழிலாளர்கள், குப்பைகளை அகற்றுவதற்குப் பதிலாக அந்த இடத்தில் வைத்தே தீ மூட்டுகிறார்கள். இதனால் வீதியால் செல்லும் மக்கள் அசௌகரியங்களுக்கு அளாகி வருகின்றனர் என்று சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

வலி. தென்மேற்கு பிரதேசத்தில் மானிப்பாய் நகரப் பகுதியில் உள்ள பிரதான வீதி உட்பட குறுக்கு வீதிகளை வாரம் ஒரு முறை கூட்டித் துப்புரவு செய்வதில் தொழிலாளர் ஈடுபட்டு வருகின்றனர்.

பிரதான வீதியில் கூட்டப்படும் குப்பைகள் தள்ளு வண்டியில் ஏற்றப்பட்டு அகற்றப்படுவது வழமை. குறுக்கு வீதிகளில் கூட்டப்படும் குப்பைகள் வண்டிகளில் ஏற்றுவதற்குப் பதிலாக அந்த இடங்களில் வைத்தே எரிக்கப்படுகின்றன.

இந்த நிலை குறித்து சம்பந்தப்பட்ட அதிகாரிகள் நடவடிக்கை எடுக்க முன்வரவேண்டுமென்று மக்கள் கோரியுள்ளனர். (ம-115)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


பிரதான சொத்துக்களை பாதுகாப்பதன் அவசியத்தை வலியுறுத்தி தேசிய மரபுரிமை அமைச்சின் ஏற்பாட்டில் கொழும்பு ரயில் நிலையத்தில் வீதி நாடகம் மற்றும் விழிப்புணர்வு செயற்பாடுகள் நேற்று நடைபெற்றன.

## காயமுற்...

01 வுள்ளதாகவும் இது பற்றி நாடாளுமன்றிலும் சுரேஷ்பிரேமச்சந்திரன் பேசவுள்ளதாகவும் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்கள் தெரிவித்தனர்.

நாடாளுமன்ற உறுப்பினர்களான சுரேஷ்பிரேமச்சந்திரன், செல்வம் அடைக்கலநாதன், சிவசக்தி ஆனந்தன், பொன். செல்வராஜா, ஈ.சரவணபவன் ஆகியோரே நேற்று நேரில் சென்று கைதிகளைப் பார்வையிட்டனர். (த-4)

## கிழக்குத் தேர்தல்......

01 தெரிவு, போட்டியிடவுள்ள சின்னம், எண்கள் தொடர்பில் இன்று இடம்பெறவுள்ள கூட்டத்தில் முடிவு எட்டப்படும் எனத் தெரிவிக்கப்பட்டது.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன் தலைமையில் கொழும்பிலுள்ள கூட்டமைப்பின் அலுவலகத்தில் நேற்றுக் காலை இந்தச் சந்திப்பு இடம்பெற்றுள்ளது.

இந்தச் சந்திப்பில் நாடாளுமன்ற உறுப்பினர்களான இரா.சம்பந்தன், மாவை.சேனாதிராஜா, சுரேஸ் பிரேமச்சந்திரன், சிவசக்தி ஆனந்தன், செல்வம் அடைக்கலநாதன், செல்வராஜா ஆகியோரும் முன்னாள் நாடர்ளுமன்ற உறுப்பினர்களான க.சிவாஜிலிங்கம் வீ.ஆனந்தசங்கரி, த.சித்தார்த்தன் மற்றும் ஹென்றி மகேந்திரன், ராகவன் ஆகியோரும் கலந்து கொண்டனர்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் உயர் பீடம், நிதிக் குழு என்பவற்றை அமைத்தல், கிழக்கு மாகாண சபைத் தேர்தல் தொடர்பான தேர்தல் நியமனக் குழு ஒன்றை நியமித்தல், தேர்தலில் எந்தச் சின்னத்தில் போட்டியிடுதல் என்பன தொடர்பில் இதன்போது கலந்துரையாடப்பட்டது.

இந்த விடயங்கள் தொடர்பாக இறுதித் தீர்மானம் மேற்கொள்வதற்காக 6 பேர் கொண்ட குழு நியமனம் செய்யப்பட்டுள்ளது. இந்தக் குழுவில் இரா.சம்பந்தன், மாவை.சேனாதிராஜா, சுரேஷ் பிரேமச்சந்திரன், செல்வம் அடைக்கலநாதன், வீ.ஆனந்தசங்கரி, த.சித்தார்த்தன் ஆகியோர் இடம் பெற்றுள்ளனர். (த-5)

## அரசே ....

01 பக்கச்சார்பின்றி அரசு விசாரணைகளை முன்னெடுக்க வேண்டும் எனவும் ஐக்கிய தேசியக் கட்சியின் பிரதிபொதுச் செயலாளரும், நாடாளுமன்ற உறுப்பினருமான ஜயலத் ஜயவர்த்தன நேற்று வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

இலங்கை சிறைச்சாலைகளில் பல்லாயிரக்கணக்கான தமிழ் அரசியல் கைதிகள் அரசியல் நோக்கம் காரணமாகத் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர். இவர்களின் விடுதலை தொடர்பில் இந்த அரசு எந்தவொரு நடவடிக்கைகளையும் மேற்கொள்ளவில்லை.

ஆனால், இந்த தமிழ் அரசியல் கைதிகளுக்கு அரசு பொய் வாக்குறுதிகளை வழங்கி அவர்களை ஏமாற்றி ,வருகின்ற நிலையில், வவுனியா சிறைச்சாலையில் துரதிஷ்டமான சம்பவத்துக்கு கைதிகள் முகம்கொடுத்தனர். அரசின் பொறுப்பற்ற தன்மையே இந்தச் சம்பவத்துக்குக் காரணமாகும்.

நிமலரூபனின் மரணம் மற்றும் வவுனியா சிறைச்சாலை சம்பவம் தொடர்பில் பக்க சார்பின்றிய விசாரணைகளை அரசாங்கம் முன்னெடுக்க வேண்டும். அதே போன்று குற்றவாளிகள் எவராகவிருந்தாலும் தண்டனை வழங்கப்பட வேண்டும்-என்றுள்ளது. (த)

## இந்திய மீனவர் ...

01 தொடர்பில் அவர் மேலும் தெரிவித்தமை வருமாறு:-

வடக்குக் கடற்பரப்பில் இந்திய மீனவர்களின் அத்துமீறல்கள் தொடர்ச்சியாக நடைபெற்றுவருகின்றது. இதற்காகக் கடந்த 2004 ஆம் ஆண்டிலிருந்து இந்திய , இலங்கை மீனவர் பிரதிநிதிகள் பேச்சு நடத்திவருகின்றனர். இந்த பேச்சுக்களில் முன்னேற்றம் இருப்பதாகவோ ,பலன் இருப்பதாகவோ தெரியவில்லை. மாறாக இந்திய மீனவர்கள் அத்து மீறல்கள் தான் அதிகரித்துக் கொண்ட செல்கின்றன.

எனவே இவற்றைத் தடுப்பதற்காக ஜனநாயக ரீதியாக ஒரு நாள் அடையாள வேலை நிறுத்தத்தில் ஈடுபட இருக்கிறோம். இதற்கு முன்னதாக நாம் முல்லைத்தீவு மாவட்ட மீனவர் சமாசத்தினரைச் சந்தித்துக் கலந்துரையாடிய பின்னர் உத்தியோக பூர்வ அறிவிப்பை விடுவோம். இதன் மூலம் எமது மீனவர்ச் சமுதாய விடயத்தில் சம்பந்தப்பட்ட தரப்பினருக்கு எமது பிரச்சினையை நினைவூட்ட விரும்புகிறோம் என்றார்.(த-5)

## மன்னா ....

01 கிழமை மன்னார் நகரில் நட்த்தவிருக்கும் மாபெரும் சாத்வீகப் போராட்டத்தில் தமிழ் பேசும் மக்கள் அனைவரும் கலந்து கொண்டு ஒருமித்து குரல் கொடுக்குமாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன் தெரிவித்துள்ளார்.

இது குறித்து அவர் மேலும் கூறியுள்ளதாவது:-

மன்னாரில் மீனவர்கள் மீது அடக்குமுறைகள் தொடர்கின்றன. மக்களின் காணிகள் படையினரால் அபகரிக்கப்படுகின்றன. இடம் பெயர்ந்த மக்கள் மீள்குடியேறத் தமது சொந்த நிலம் பறிபோனமையினால் காடுகளில் தஞ்சமடைந்துள்ள அவல நிலை தற்போது ஏற்பட்டுள்ளது.

எனவே குறித்த பிரச்சினைகளைச் சர்வதேசம் அறிந்து கொள்ளும் முகமாகவும், உரிய தீர்வினை பெற்றுக்கொள்ளும் நோக்குடனும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு எதிர்வரும் 7 ஆம் திகதி சனிக்கிழமை மன்னாரில் மாபெரும் சாத்வீகப் போராட்டம் ஒன்றை நடத்தவுள்ளது-என்றார். (த)

## அதிகாரிகள் .....

01 ஏற்பாடுகள் சட்டம்) ஆகியவற்றின் கீழான கட்டளைகள் மீதான விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே கூட்டமைப்பின் சார்பில் மேற்படி சம்பவத்துக்கு நாடாளுமன்ற உறுப்பினர் சுமந்திரன் கடும் கண்டனத்தை வெளியிட்டார்.

அவர் மேலும் கூறியவை வருமாறு:-

பொலிஸாரின் தாக்குதலால் நிமலரூபன் என்ற கைதி மரணமடைந்தமை குறித்து அரசு உரிய விசாரணைகளை முன்னெடுக்க வேண்டும்.

இந்த மனிதாபிமானமற்ற செயலை நாம் வன்மையாகக் கண்டிக்கின்றோம்.

வவுனியா சிறைச்சாலையில் அண்மையில் நடைபெற்ற சம்பவத்தையடுத்து இராணுவத்தினரும் விசேட அதிரடிப்படையினரும் இணைந்து நடத்திய தாக்குதலால் சிறையிலிருந்த கைதிகள் பலர் காயமடைந்தனர்.

தாக்குதலுக்குள்ளாகி காயமடைந்த கைதிகள் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டனர். இவர்களுள் படுகாயமடைந்த நிமலரூபன் என்ற கைதியே ராகம வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வரும் நிலையில் உயிரிழந்துள்ளார்.

தடுப்புக்காவலில் வைக்கப்பட்டு அதிகாரிகளால் தாக்கப்பட்டமையாலேயே நிமலரூபனுக்கு இந்த நிலைமை ஏற்பட்டுள்ளது.

கைதிகள் விவகாரத்திற்கு ஒரு மாதத்தில் தீர்வு காண்பதாக அரசு உறுதியளித்தது. இந்நிலையிலேயே மேற்படி சம்பவமும் இடம் பெற்றுள்ளது.

இது குறித்து உரிய விசாரணைகளை முன்னெடுக்குமாறு நாம் அரசிடம் கேட்டுக்கொள்கின்றோம் - என்றார்.

## இலங்கையுடன் ...

01 ளார்.அதில் அவர் மேலும் தெரிவித்ததாவது:-

இலங்கை அரசு மீள்குடியமர்விலும், போருக்குப் பிந்திய அபிவிருத்தியிலும் முன்னேற்றத்தை எட்டியுள்ளது. நான் 2009இல் கொழும்பு வந்த போது தான் போர் முடிவுக்கு வந்திருந்தது.

நூறாயிரக்கணக்கான இடம்பெயர்ந்த மக்கள் மீளக் குடியேற்றப்பட வேண்டிய நிலையில் இருந்தனர். தற்போது அந்த எண்ணிக்கை சில ஆயிரங்களாகக் குறைந்துள்ளது:இலங்கை அரசு முன்னாள் போராளிகளுக்குப் புனர்வாழ்வு அளிப்பதிலும் மிகப்பெரிய முன்னேற்றதைக் காண்பித்துள்ளது.கண்ணிவெடி அகற்றல் அதன் இன்னொரு முக்கியமான அடைவாகும்.

எவ்வாறாயினும், இன்னும் நிறையச் செய்ய வேண்டியுள்ளது. இதற்கு இலங்கைக்கு உதவ எமது நாடு தயாராகவே உள்ளது. ஆனால், ஒரு நண்பன் என்ற வகையில், இலங்கையுடன் அமெரிக்கா தொடர்ந்தும் பங்காளனான இருக்கும். -என்றார். (த)

## வீட்டுத்...

01 சடலம் சாவகச்சேரி மருத்துவமனையில் ஒப்படைக்கப்பட்டுள்ளது. விசாரணைகளை கொடிகாமம் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (10-9)

## டெசோ...

01 பெறுவதற்கான அடுத்த கட்டப் பணிகள் தொடர்பாக இந்த மாநாட்டில் ஆலோசிக்கப்பட உள்ளது எனவும், இலங்கைக்கு எதிராக மத்திய அரசை வலியுறுத்த முடிவு செய்யப்பட்டுள்ளது எனவும் கூறப்படுகிறது.

இதற்கு இலங்கை பேரினவாதக் கட்சிகள் கடும் ஆட்சேபம் தெரிவித்துள்ளன. மீண்டும் யாராவது தமிழீழ ஆதரவு கோரினால் இலங்கையில் பேரழிவு ஏற்படும் என்று அமைச்சர் சம்பிக்க எச்சரிக்கை விடுத்திருந்தார்.

அதேபோல், தனி ஈழக் கோரிக்கையினை விடுப்பதன் மூலம் அது இலங்கையில் இறை யாண்மைக்கும், ஒருமைப்பாட்டுக்கும் நேரடி அச்சுறுத்தலாக அமையும். நல்லெண்ணம், நல்லுறவு போன்றவை அழிந்து மீண்டும் மோசமான விளைவுகள் ஏற்படும். எனவே, டெசோ மாநாட்டைத் தடுத்து நிறுத்த வேண்டும் என இந்தியப்பிரதமருக்கு ஜாதிக ஹெல உறுமய கடிதம் அனுப்பியுள்ளது.

இந்நிலையிலேயே டெசோ மாநட்டில் கலந்து கொள்ள தமிமிழ்க் கூட்டமைப்புக்கு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது. டெசோ அமைப்பின் ஏற்பாட்டாளர்களே இந்த அழைப்பை விடுத்துள்ளனர்.

ஆனால், இந்த மாநாட்டில் தமிழ்க் கூட்டமைப்பு கலந்துகொள்ளும் சாத்தியமில்லை எனகூட்டமைப்பு வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

## அடித்து முறிக்கப்பட்ட...

01 பவத்தை மிக மோசமான மனித உரிமை மீறல் எனவும் கண்டித்துள்ளனர். தாக்குதலுக்கு இலக்காகி மேலும் 10 அரசியல் கைதிகள் மஹர வைத்தியசாலையிலும், ராகம வைத்தியசாலையிலும் சிகிச்சை பெற்று வருவதாகத் தெரிவிக்கப்பட்டது.

அஜித், கிறிஸ்ரி, கண்ணன், குலேந்திரன், கர்ணன், விக்னேஸ்வரன் ஆகியோர் மஹர வைத்தியசாலையிலும், எஸ். ஜெபநேசன், எஸ்.சசி, பி.வேலாயுதம், எம்.டில்றுக்ஷன் ஆகியோர் ராகம வைத்தியசாலையிலும் சிகிச்சை பெற்று வருவதாகத் தெரிவிக்கப்பட்டது.

இந்தச் சம்பவம் தொடர்பில் மேலும் தெரிய வருவதாவது:-

கடந்த வெள்ளிக்கிழமை 29ஆம் திகதி வவுனியா சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டிருந்த தமிழ் அரசியல் கைதிகள் தமது கோரிக்கைகளை நிறைவேற்றுமாறு கோரி சிறை அதிகாரிகள் மூவரைத் த்டுத்து வைத்தனர்.

இந்தக் கைதிகளிடமிருந்து சிறை அதிகாரிகளை மீட்பதற்காக பொலிஸ் மற்றும் விசேட அதிரடிப் படையினர் அழைக்கப்பட்டு சிறை அதிகாரிகள் மீட்கப்பட்டனர். இதன் போது இடம்பெற்ற தாக்குதல் காரணமாக தமிழ் அரசியல் கைதிகள் காயமடைந்தனர்.

இந்த அசம்பாவிதங்களைத் தொடர்ந்து தமிழ் சிறைக் கைதிகள் அனுராதபுரம் சிறைச்சாலைக்கு மாற்றப்பட்டனர்.

அங்கு சிறைச்சாலை அதிகாரிகளினாலும் காவலாளிகளாலும் மோசமாகத் தாக்கப்பட்ட கைதிகள் மகர சிறைச்சாலைக்கும், கண்டி போகம்பரை சிறைச்சாலைக்கும் கொண்டு செல்லப்பட்டனர்.

இவ்வாறு மகர சிறைச்சாலைக்கு கொண்டு செல்லப்பட்ட தமிழ்க் கைதிகளுள் ஒருவரான நிமலரூபன் படுகாயங்களுடன ராகம வைத்தியசாலையில் சிறைச்சாலை அதிகாரிகளினால் அனுமதிக்கப்பட்டார். அங்கு சிகிச்சைகள் பயன் அளிக்காத நிலையில் நிமலரூபன் நேற்று முன்திணம் செவ்வாய்க்கிழமை இரவு மரணமடைந்துள்ளார். இவர் வவுனியா நெளுக்குளத்தைச் சேர்ந்தவர்.

இந்தக் கைதியின் உயிரிழப்பை அடுத்து சிறைச்சாலைகளில் பெற்றோர் தமது பிள்ளைகளுக்கு என்ன நேருமோ என்ற பீதியுடனும் அச்சத்துடனும் உள்ளனர்.

இதேவேளை -

வவுனியா சிறைச்சாலை அசம்பாவிதங்களைத் தொடர்ந்து தமிழ் அரசியல் கைதிகளின் நிலைமை தொடர்பாக ஆராய்ந்து உடன் நடவடிக்கை எடுப்பதற்காக அவசர கூட்டம் ஒன்று கொழும்பு கொள்ளுப்பிட்டியில் இருக்கும் மனித உரிமைகள் நிலையத்தில் நடைபெற்றது. இந்தக் கூட்டத்தை மக்கள் கண்காணிப்புக்குழு ஏற்பாடு செய்திருந்தது.

இந்தக் கூட்டத்தில் தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்கள், தொழிற்சங்கத் தலைவர்கள், இந்த விடயம் தொடர்பான செயற்பாடுகளில் அக்கறை உள்ளவர்கள் பலரும் கலந்து கொண்டனர்.

இந்தக் கூட்டம் நடைபெற்றுக் கொண்டிருந்த வேளையிலேயே நிமலரூபன் மரணச் செய்தி கிடைத்தது. இதனால் அங்கிருந்தவர்கள் அனைவரும் அதிர்ச்சியடைந்தனர்.

இங்கு நடைபெறும் அடிப்படை மனித உரிமை மீறல்கள், தமிழ்க் கைதிகளின் சித்திரைவதை, அவர்களின் விடுதலை தொடர்பாக சர்வதேச சமூகத்தின் கவனத்துக்கு கொண்டு செல்வதையும் இங்குள்ள வெளிநாட்டுத் தூதுவர்களுக்கு உண்மை நிலையை தெரியப்படுத்தி மனுக்களைச் சமர்ப்பிப்பது எனவும் இந்தக் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டது. (த-2)

## சுய விருப்பம் என்ற போர்வையில்...

01 ரிகை தாக்கல் செய்திருந்தாலும் மேற்கொண்டு எதுவித நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்படவில்லை.

1971 கிளர்ச்சியில் பங்கேற்ற சிறைச்சாலைகளில் தடுத்து வைக்கப்பட்டிருந்த சிங்கள அரசியல் கைதிகளை விடுதலை செய்து கொள்வதற்காகத் தென்னிலங்கை சமூகம் அன்று முன்வந்தது. அது சிங்கள சமூகத்தில் முக்கிய பங்கை வகித்தது என நாம் கருதுகின்றோம்.

அதேபோன்று திகதி இன்றி குற்றம் சுமத்தப்படாமல் தமிழ் அரசியல் கைதிகள் சிறைகளில் தடுத்து வைத்திருப்பது மனித நேயமற்ற செயலாகும். இது இந்த இளைஞர்களின் வாழ்க்கையை கேள்விக்குறியாக்கும் செயலாகும். அன்று 1971 இல் சிங்கள அரசியல் கைதிகளுக்கு அரசியல் அந்தஸ்து கொடுத்து விடுதலை செய்யப்பட்ட நாட்டில் தமிழ் அரசியல் கைதிகளுக்கு அதேபோன்று விடுதலையைப் பெற்றுக் கொடுக்காததன் மூலம் இனவாத நிலைக்குள் கட்டுப்பட்டிருக்கின்ற தன்மையை வெளிப்படுத்துகின்றது. இது நாட்டின் அபிவிருத்திக்கும் இந்த நாட்டின் எதிர்காலத்துக்கும் பாரிய பிரச்சினையை எதிர்காலத்தில் ஏற்படுத்தக்கூடிய விடயமாக மாறிவிடும்.

விசேட நீதிமன்றங்களை அமைத்து தீர்வொன்றைப் பெறுவதும், சட்ட மா அதிபர் மூலமாக குழு ஒன்றை அமைத்து தீர்வொன்றைப் பெறுவதும் தீர்வாக அமையாது. அதனை ஏற்றுக்கொள்ளவும் முடியாது.

சுய விருப்பத்தின் பேரில் என்று பலவந்தமாக புனர்வாழ்வு முகாம்களுக்கு அரசியல் கைதிகளை மாற்றுவதை உடன் நிறுத்த வேண்டும். பொது மன்னிப்பின் கீழ் அனைவரையும் விடுதலை செய்ய வேண்டும் என வலியுறுத்துகின்றோம்.

இந்த அனைத்து விடயங்களையும் கருத்தில் கொண்டு அனைத்து அரசியல் கைதிகளும் விடுதலை செய்யப்பட வேண்டும் என அரசுக்கு அழுத்தம் கொடுப்போம் - என்றுள்ளது. (த-2)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

# காணி, பொலிஸ் அதிகாரங்கள் மாகாண சபைகளுக்கு பகிரப்படுமா?

தீவிர இனவாத போக்குடன் தற்போதைய அரசில் இணைந்து கொண்டுள்ள சில கட்சிகள் அவ்வப்போது இனக் குரோதமான கருத்துக்களை கக்குவது ஒரு புறமிருக்க இன நல்லிணக்கத்துக்கு வழிவகுக்கக் கூடியதான கருத்துக்களைக் கொண்டவர்களும் அவ்வாறான கருத்துக்களை வெளியிடுபவர்களும் அரசுக்குள் இருக்கவே செய்கிறார்கள் என்பது ஆறுதல் அளிக்கும் விடயமாகும்.

அந்த வகையில் இனங்காணக்கூடியவர்களாய் இருப்பவர்களின் பட்டியலில் மீன்பிடி மற்றும் நீரியல்வள அபிவிருத்தி அமைச்சர் டாக்டர் ராஜிதசேனாரத்னவையும் சேர்த்துக் கொள்ளலாம். பொலிஸ் மற்றும் காணிகள் தொடர்பான அதிகாரங்கள் மாகாணசபைகளுக்கு வழங்குவது குறித்து அவர் வெளியிட்டிருக்கும் கருத்து வேறு சில அரசுத் தலைவர்கள் வெளியிடும் கருத்துக்களுக்கு நேர்மாறாக உள்ளது.

இந்திய-இலங்கை ஒப்பந்தத்தின் கீழ் அரசமைப்பில் இணைத்துக் கொள்ளப்பட்டுள்ள 13 ஆவது திருத்தத்தின் படி மாகாணங்களுக்குட்படும் பொலிஸ் மற்றும் பொது ஒழுங்கு தொடர்பான அதிகாரங்கள் மாகாண சபையின் கீழ் வரும் பொலிஸ்துறையின் பிரிவு அந்த மாகாண முதலமைச்சரின் கட்டுப்பாட்டில் இருக்கும் அதே சமயம் இந்த துறைக்கு ஆள்களைச் சேர்க்கும் பணியானது மாகாணப் பிரிவு பொலிஸ் ஆணைக்குழுவிடம் ஒப்படைக்கப்பட்டிருக்கும்.

இந்தத் திருத்தத்தின்படி மாகாண சபைகளுக்கு வழங்கப்படும் இன்னொரு முக்கிய அதிகாரம் காணிகள் சம்பந்தப்பட்டது. காணிகளைப் பயன்படுத்தல், காணிகளில் குடியேற்றம் மற்றும் காணிகளை மேம்படுத்தல் மாகாணசபைகளின் கீழ்வரும் அதிகாரங்களாகும். மாகாண சபையானது தனது செயல்பாட்டுக்குத் தேவையான காணிகள் அனைத்தையும் பெற்றுக் கொள்ளலாம். அதே சமயம் மத்திய அரசு தனக்குக் காணிகள் தேவையெனில் மாகாண சபையுடன் ஆலோசனை கலந்த பின்னரே பயன்படுத்தலாம்.

உலகில் பலநாடுகளில் இவ்வாறான அதிகாரங்கள் பகிரப்பட்டுள்ளன. அந்த நாடுகளில் ஏற்படாத தவறு இங்கு மட்டும் எங்ஙனம் ஏற்பட முடியும் என்று கேட்டுள்ள அமைச்சர், ஏஸியன் ரிபியூன் இணையத்துக்கு அளித்துள்ள பேட்டியில் இந்த அதிகாரங்கள் பகிரப்படுவதனால் ஏற்படக் கூடிய பாதிப்புகள் பற்றி சில அரசியல் தலைவர்கள் கற்பனையானதொரு பயத்தையே கொண்டிருக்கிறார்கள் என்று குறிப்பிட்டுள்ளார்.

உண்மையில் காணி மற்றும் பொலிஸ் அதிகாரங்கள் மாகாணங்களுக்கு பகிரப்படுவது குறித்து ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவே சமீபகாலம் வரை தென்னிலங்கையில் பல இடங்களில் எதிர்மறையான கருத்துக்களை வெளியிட்டு வந்துள்ளார். பொலிஸ் அதிகாரங்கள் மாகாணங்களுக்கு பகிரப்படுமானால் தமக்கே தமது சொந்த இடத்துக்குப் போக முடியாத நிலைமை ஏற்பட்டுவிடும் என்று நகைச்சுவைப் பாணியில் இந்தக் கோரிக்கையை நையாண்டி செய்து வந்துள்ளார். ஆனால் அப்படியான ஒரு நிலைமை ஏற்படுவதற்கு சாத்தியமே இல்லை என்பதை டாக்டர் ராஜித சேனாரத்ன விளக்கியிருப்பது குறிப்பிடத்தக்கது.

அமைச்சர் சுட்டிக் காட்டியிருக்கும் இன்னொரு விடயம் ஐ.நா.வின் உலகளாவிய பருவகால மீளாய்வுக் குழுவுக்கு ஏற்கனவே இந்த அதிகாரங்களைப் பகிர்ந்தளிக்கப் போவதாக அளித்துள்ள வாக்குறுதி நிறைவேற்றப்படவில்லை என்பதாகும்.

பொலிஸ் அதிகாரங்கள் பகிர்ந்தளிக்கப்பட்டுள்ள நாடுகளில் நமக்கு பக்கத்து நாடான இந்தியாவும் ஒன்று. அங்கே உள்ள மாநில ஆட்சி முறைக்கும் இலங்கையில் உள்ள மாகாண ஆட்சி முறைக்கும் நிறையவே மாற்றங்களும் முரண்பாடான கட்டமைப்புகளும் காணப்படுகின்றன. மாநில ஆட்சி முறையில் வழங்கப்பட்டுள்ள அதிகாரங்கள் மாகாண ஆட்சிமுறையில் மிகக் குறைவான அளவிலேயே உள்ளன என்பதை அமைச்சர் சுட்டிக் காட்டியுள்ளதுடன் மாநில ஆட்சியாளர்களால் சட்ட ஒழுங்கு சீர்குலையும் போது அந்த மாநில ஆட்சியானது ஜனாதிபதி ஆட்சியின் கீழ் கொண்டு வரப்பட்டுவிடக்கூடிய ஏற்பாடு இருப்பதைக் காண்கிறோம்.

எனவே மாகாண சபைகள், அவைகளுக்கு வழங்கப்படும் அதிகாரங்களை மீறிச்செயல்படாத வகையில் அதிகாரப் பகிர்வில் ஏற்பாடுகளைச் செய்து கொள்வது அவ்வளவு கஷ்டமான விடயமல்ல.

இந்தியாவில் ஜனாதிபதி தேர்தலில் மாநிலங்களில் உள்ள சட்ட சபைகளும் மேல் சபைகளும் பெரும் பங்களிப்பை வழங்குகின்றன. அதனால் அந்தப் பதவிக்கு போட்டியிடுபவர் எல்லா மாநிலங்களுக்கும் பொதுவானவராகவும் ஒருதலைப்பட்சமாக செயல்படாதவராகவும் எல்லோராலும் மதிக்கப்படுபவராகவும் இருப்பதை உறுதிபடுத்த வேண்டியிருக்கிறது. அதுமட்டுமல்ல மத்தியில் பிரதமராகவும்கூட மாநிலங்களில் இருந்து பிரமுகர்கள் தெரிவாகக் கூடிய வசதி அங்குண்டு. அதனால்தான் அங்கே நாட்டின் ஒருமைப்பாடு கட்டிக்காக்கப்படுகின்றது.

அவ்வாறான ஓர் ஆட்சி முறை இங்கு வருவது இந்த யுகத்தில் அல்ல, இன்னும் பல யுகங்கள் சென்றாலும் எதிர்பார்க்க முடியாது.

### இலங்கை கல்வி நிர்வாக சேவை தரம்III பதவி

# வெட்டுப் புள்ளிகளைத் தவற விட்டதால் நியமனம் வழங்க முடியாத நிலைமை

அச்சுவேலி, ஜூலை 5

இலங்கை கல்வி நிர்வாக சேவை தரம் III பதவி ஆளணிக்கு ஆள்களை தெரிவு செய்வதற்கு நடத்தப்பட்ட போட்டிப் பரீட்சையில் குறிப்பிட்ட புள்ளிகளைப் பெற்று அதற்குரிய வெட்டுப் புள்ளிகளைப் பலர் பெறத் தவறி இருப்பதால் உரிய எண்ணிக்கையை உள்ளடக்கி நியமனம் வழங்க முடியாத நிலை ஏற்பட்டுள்ளது. 50 வீதத்தினர் மட்டுமே நியமனம் பெறவுள்ளனர்.

இலங்கை கல்வி நிர்வாக சேவை ஆளணிக்கு இந்த வருடம் 410 பேரைச் சேர்த்துக் கொள்வதற்கு தீர்மானிக்கப்பட்டு அதற்கான தெரிவுக்கு மூன்று மட்டங்களில் போட்டிப் பரீட்சைகள் நடத்தப்பட்டன.

இலங்கை கல்வி நிர்வாக சேவையின் சேவைப்பிரமாணக்குறிப்பின் பிரகாரம் இலங்கை அதிபர் சேவையில் இருந்து 40 வீதத்தினரும், மட்டுப்படுத்தப்பட்ட நிலையில் 35 வீதத்தினரும் திறந்த நிலையில் 25 வீதத்தினரும் தெரிவு செய்யப்பட வேண்டும். இந்த வகையில் மூன்று வகைப்பாட்டைச் சேர்ந்தவர்களுக்கும் போட்டிப் பரீட்சைகள் நடத்தப்பட்டன.

போட்டிப் பரீட்சைகளில் தோற்றிய பாடங்களில் ஒவ்வொன்றிலும் 40 புள்ளிக்கு குறையாத நிலையிலும் குறித்த வெட்டுப் புள்ளியைப் பெற்றவர்கள் நேர்முகப் பரீட்சைக்கும் அழைக்கப்பட்டிருந்தனர்.

இந்த வகையில் தெரிவு செய்யப்பட வேண்டிய ஆளணி எண்ணிக்கைக்கு குறைந்த தொகையினரே உரிய வெட்டுப் புள்ளியை பெற்றிருப்பதால் உரிய ஆளணியில் அரைப் பங்கு தொகையினரே நியமனம் பெறக்கூடிய நிலைமை ஏற்பட்டுள்ளது.

திறந்த நிலையில் நடைபெற்ற போட்டிப் பரீட்சையில் முதலாவது போட்டிப் பரீட்சைக்குத் தோற்றி இருந்த 18 ஆயிரம் பேரில் 173 பேர் உரிய வெட்டுப் புள்ளியைப் பெற்று இரண்டாவது போட்டிப் பரீட்சைக்குத் தோற்றினர். அதில் 58 பேர் உரிய வெட்டுப் புள்ளியைப் பெற்று நேர்முகப் பரீட்சைக்குத் தோற்றி இருந்தனர். அதில் ஆறு தமிழர்கள் உட்பட 51 பேர் நியமனம் பெறத் தகுதி பெற்றிருப்பதாக கல்வி அமைச்சு அறிவித்துள்ளது.

இவர்களின் பெயர் விவரம், அவர்கள் தெரிவு செய்யப்பட்டுள்ள துறை என்பன கல்வி அமைச்சின் இணையத் தளத்தில் வெளியிடப்பட்டுள்ளன.

திறந்த நிலையில் இலங்கை கல்வி நிர்வாக சேவைக்கு இந்த வருடம் 102 பேரை நியமிப்பதற்கு தீர்மானிக்கப்பட்டிருந்த போதிலும் 50 வீதத்தினர் மட்டுமே நியமனம் பெற்றுள்ளனர். அதே போன்று ஏனைய மட்டுப்படுத்தப்பட்ட நிலை, மற்றும் இலங்கை அதிபர் சேவை நிலையிலும் குறைந்த வீதத்தினரே தெரிவு செய்யப்பட்டிருப்பதாகக் கல்வி அமைச்சின் உயர் அதிகாரி தெரிவித்தார்.

கல்வி நிர்வாக சேவை தரம் III இற்குத் தெரிவு செய்யப்பட்டவர்களுக்கு 6 மாத காலப் பயிற்சி விரிவுரை மற்றும் கள நிலையில் வழங்கப்பட்டு உதவிக் கல்விப் பணிப்பாளர் பதவிகள் வழங்கப்படவுள்ளன. இவர்களுக்கான பயிற்சிகள் இந்த மாதம் பிற்பகுதி அல்லது ஓகஸ்ட் முற்பகுதியில் ஆரம்பிக்கலாம் எனக் கூறப்படுகின்றது.

(ம-11)

## அகழ்வாராய்ச்சி திணைக்களம் உள்வாங்கும் பட்டதாரிகள்

யாழ்ப்பாணம், ஜூலை 5

யாழ்.கோட்டை அகழ்வாராய்ச்சியில் ஈடுபட்டு தற்போது பட்டதாரிப் பயிலுநர் நியமனம் பெற்றுச் சென்றுள்ள 13 பட்டதாரிகளையும் இந்த அகழ்வாராய்ச்சித் திணைக்களத்தினுள் உள்வாங்க தொல்லியல் திணைக்களம் நடவடிக்கை எடுத்துள்ளது எனத் தெரிவிக்கப்படுகின்றது.

யாழ். பல்கலைக்கழகத்திலிருந்து பட்டதாரிகளாக வெளியேறியோரில் 13 பேர் யாழ்.கோட்டை அகழ்வாராய்ச்சிப் பணியில் ஈடுபட்டு வந்தனர். இந்த நிலையிலேயே அவர்களுக்குப் பட்டதாரிப் பயிலுநர் நியமனம் வழங்கப்பட்டது.

அவர்கள் 6 மாதகால பயிற்சியை நிறைவு செய்த பின்னர் மீண்டும் தொல்பொருள் திணைக்களத்தினுள் உள்வாங்கவே நடவடிக்கை எடுக்கப்படுகிறது எனத் தெரிவிக்கப்படுகிறது. (ம-4)

## 'நயினை மக்கள் சங்கமம்' நாளை

நயினாதீவு சமூக பொருளாதார கல்வி கலாசார அபிவிருத்திச் சங்கம் நடத்தும் நயினை மக்கள் சங்கமம் அதன் தலைவர் ப.க.பரமலிங்கம் தலைமையில் நாளை வெள்ளிக்கிழமை மாலை 6 மணிக்கு மேகலை அரங்கில் நடைபெறும்.

நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ். மாவட்ட அரச அதிபர் சுந்தரம் அருமைநாயகமும் சிறப்பு விருந்தினராக யாழ். மேலதிக அரச அதிபர் திருமதி ரூபினி வரதலிங்கமும் கௌரவ விருந்தினராக வேலணை பிரதேச செயலர் திருமதி மஞ்சுளாதேவி சதீஷனும் கலந்து கொள்வர்.

மங்கல விளக்கேற்றலைத் தொடர்ந்து கொழும்பு அபிநயக்ஷேத்திரா மாணவிகளின் நடனம், தரம் 5 புலமைப் பரிசில், சாதாரண தரம், உயர்தரப் பரீட்சைகளில் திறமைச் சித்தி பெற்ற மாணவர்களுக்கான விருதுகள், வறுமைக் கோட்டுக்கு உட்பட்டவர்களுக்கு சைக்கிள் வழங்குதல், சிறப்புச் சொற்பொழிவுகள், நாட்டியவிருந்து, விருந்தினர் உரை என்பனவும் இடம்பெறவுள்ளன என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம-7)

### பிரதேச சபை எதிரணி உறுப்பினர்களுக்கு

# உள்ளூராட்சி உதவி ஆணையாளர் அ.அட்டை வழங்கியது ஏன்?

வடமராட்சி, ஜூலை 5


கரவெட்டிப் பிரதேச சபை எதிர்க்கட்சி உறுப்பினர்கள் மூவருக்கு யாழ்.பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் அடையாள அட்டை வழங்கும் நிலையில் ஆளும் கட்சி உறுப்பினர்களுக்கும் அடையாள அட்டை வழங்கப்பட வேண்டும் எனக் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

உள்ளூராட்சி மன்றங்களைச் சேர்ந்த உறுப்பினர்களுக்கு அந்தந்த உள்ளூராட்சி மன்றங்களின் தலைவர்களே உள்ளூராட்சி மன்ற உறுப்பினர் என அடையாளப் படுத்தும் அடையாள அட்டைகளை வழங்க வேண்டும் என யாழ்.பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் அலுவலகம் அறிவித்திருந்தது.

அந்த அறிவிப்புக்கு மாறாக, கரவெட்டி பிரதேச சபை எதிர்க்கட்சி உறுப்பினர்களான ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியைச் சேர்ந்த மூன்று உறுப்பினர்களுக்கு அடையாள அட்டைகள் யாழ். பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளரால் கரவெட்டிப் பிரதேச சபை ஊடாக வழங்கப்பட்டுள்ளது.

யாழ். பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளரின் இந்த நடவடிக்கை குறித்து கரவெட்டிப் பிரதேச சபைக் கூட்டத்தில் ஆட்சேபம் தெரிவிக்கப்பட்டதுடன் எதிர்க்கட்சி உறுப்பினர்களுக்கு அடையாள அட்டை வழங்கியது போல ஆளும் தரப்பு உறுப்பினர்களுக்கும் உதவி ஆணையாளரே அடையாள அட்டை வழங்க வேண்டும் என சபை கோரிக்கை விடுத்துள்ளது. (ம-8)

# சுண்டிக்குளி மகளிர் மாணவிகள் இருவர் அயர்லாந்து பயணம்





அயர்லாந்தில் உள்ள பெண்சாரணிய அமைப்பின் ''பெண் சாரணிய பாசறை 101'' இல் கலந்து கொள்வதற்காக சுண்டிக்குளி மகளிர் கல்லூரியின் பெண்சாரணியர் இருவர் அயர்லாந்து சென்றுள்ளனர்.

இவர்கள் நேற்று புதன்கிழமை அயர்லாந்தில் ஆரம்பமான சாரணியப் பாசறை தொடர்பான நிகழ்வுகளில் பங்குபற்றவே சென்றுள்ளனர். எதிர்வரும் 13 ஆம் திகதி வரை பாசறை இடம் பெறும்.

பெண் சாரணியர்களின் வடக்கு மாகாண ஆணையாளர் திருமதி என்.தர்மகுலசிங்கத்தின்வழிகாட்டலின் கீழ் ஷேரன் திவ்யா துஷிதரன், ஹம்சாயினி முகுந்தன் ஆகிய இருவரும் வடக்கு மாகாணத்தின் சார்பில் இந்த நிகழ்வில் கலந்து கொள்வதற்காக அயர்லாந்து சென்றுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ம)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வவுனியா மாவட்டத்தில் ஒரு லட்சத்து 87, 457 பேர்

### பிந்திய கணக்கெடுப்பில் தகவல்

வவுனியா, ஜூலை 5
வவுனியா மாவட்டத்தில் தற்போது ஒரு லட்சத்து 87 ஆயிரத்து 457 பேர் வசித்து வருகின்றனர் என்று வவுனியா மாவட்டப் புனர்வாழ்வு விவரக் கிளையினரின் தகவல்கள் தெரிவிக்கின்றன.

கடந்த ஏப்ரல் மாதம் 30 ஆம் திகதி வரை பிரதேச செயலகங்கள் மூலம் திரட்டப்பட்ட தகவல்களின் அடிப்படையில் சுமார் 51 ஆயிரத்து 72 குடும்பங்களைச் சேர்ந்த ஒரு லட்சத்து 87 ஆயிரத்து 457 பேர் வசிக்கின்றனர் என வவுனியா மாவட்டச் செயலகப் புனர்வாழ்வு பிரதித் திட்டப்பணிப்பாளர் திருமதி வி.கிருபாசுதன் தெரிவித்தார்.

வவுனியா பிரதேச செயலக பிரிவில் 34 ஆயிரத்து 326 குடும்பங்களைச் சேர்ந்த ஒரு லட்சத்து 29 ஆயிரத்து 778 பேரும்-

வவுனியா தெற்கு பிரதேச செயலர் பிரிவில் 5 ஆயிரத்து 412 குடும்பங்களைச் சேர்ந்த 17 ஆயிரத்து 633 பேரும், வவுனியா வடக்கு பிரதேச செயலர் பிரிவைச் சேர்ந்த 3 ஆயிரத்து 926 குடும்பங்களில் 12 ஆயிரத்து 638 பேரும்-

செட்டிகுளம் பிரதேச செயலர் பிரிவில் 7 ஆயிரத்து 408 குடும்பங்களைச் சேர்ந்த 27 ஆயிரத்து 408 பேரும் தற்போது வவுனியா மாவட்டத்தில் வசித்து வருகின்றனர்.

இதேவேளை கடந்த காலப் போர் இடர்கள் காரணமாக இடம்பெயர்ந்தவர்களில் இதுவரை சுமார் 11 ஆயிரத்து 801 குடும்பங்கள் மீளக்குடியமர்த்தப்பட்டுள்ளன.

வவுனியா பிரதேச செயலர் பிரிவில் 4 ஆயிரத்து 912 குடும்பங்களைச் சேர்ந்த 17 ஆயிரத்து 643 பேரும்-

வவுனியா தெற்கு பிரதேச செயலர் பிரிவில் ஆயிரத்து 377 குடும்பங்களைச் சேர்ந்த 4 ஆயிரத்து 516 பேரும்-

வவுனியா வடக்கு பிரதேச செயலர் பிரிவில் 3 ஆயிரத்து 926 குடும்பங்களைச் சேர்ந்த 12 ஆயிரத்து 638 பேரும்-

செட்டிகுளம் பிரதேச செயலர் பிரிவில் ஆயிரத்து 586 குடும்பங்களைச் சேர்ந்த 5 ஆயிரத்து 888 பேரும் மீளக்குடியமர்த்தப்பட்டுள்ளனர் என்று வவுனியா மாவட்ட புனர்வாழ்வுப் பகுதியினர் மேலும் தெரிவித்தனர். (க-400)

# கஞ்சாப் பொதிகளுடன் கைதானார் படைச் சிப்பாய்

### மக்களிடையே அச்சமும், விசனமும்

### 23 கட்டு கஞ்சாப் பொதிகளும் பொலிஸாரால் மீட்கப்பட்டன.

மன்னார்,ஜூலை 5
மன்னாரில் கஞ்சாப் பொதிகளுடன் கைது செய்யப்பட்ட இராணுவச் சிப்பாய் விளக்கமறியலில் வைக்கப்பட்டார்.

மன்னார் விடத்தல் தீவுப் பகுதியில் கடமையாற்றி வந்த சிப்பாய் ஒருவர் கடந்த ஞாயிற்றுக்கிழமை விடுமுறை பெற்று வீடு சென்றபோதே முருங்கன் பகுதியில் வைத்துப் பொலிஸாரால் கைது செய்யப்பட்டார். அப்போது இவரிடம் இருந்து 23 கட்டு கஞ்சாப் பொதிகளும் பொலிஸாரால் மீட்கப்பட்டன.

குறித்த இராணுவச் சிப்பாய் தொடர்பாகக் கிடைத்த இரகசியத் தகவல் ஒன்றை அடுத்தே இவர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டார் என்று தெரிவிக்கப்படுகின்றது.

இவர் நேற்று முன்தினம் மன்னார் நீதிமன்றத்தில் முன்னிலைபடுத்தப்பட்டார். இவரை எதிர்வரும் 11 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு மன்னார் நீதிவான் ஏ.யூட்சன் உத்தரவிட்டார்.

இதேவேளை கடந்த முதலாம் திகதி தள்ளாடி இராணுவ முகாம் அமைந்துள்ள பகுதியில் 990 கிராம் எடை கொண்ட கஞ்சாப் பொதியுடன் இராணுவச் சிப்பாய் ஒருவரும் கைது செய்யப்பட்டு மன்னார் நீதிமன்றத்தில் முன்னிலைபடுத்தப்பட்டார். இருவரையும் விளக்கமறியலில் வைக்குமாறு நீதிவான் உத்தரவிட்டார்.

பாதுகாப்புத் தரப்புடன் தொடர்புடையவர்கள் இவ்வாறு போதைப் பொருள்களுடன் கைது செய்யப்பட்டுள்ளமை இங்குள்ள மக்கள் மத்தியில் பெரும் அச்சத்தையும், விசனத்தையும் ஏற்படுத்தியுள்ளமையை அவதானிக்க முடிந்தது. (க-12)

## குன்றும் குழியுமாகக் காணப்படும் வவுனியா கதிரேசன் வீதி

வவுனியா, ஜூலை 5
வவுனியா ரயில் நிலைய வீதியிலிருந்து பிரிந்து செல்லும் கதிரேசன் வீதி நீண்டகாலமாகப் புனரமைக்கப்படாது குன்றும் குழியுமாகக் காணப்படுவதால் பயணிகள் பலத்த அசௌகரியங்களை எதிர்நோக்குவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

வவுனியா நகரசபைக் குட்பட்ட இந்த வீதியால் பாடசாலை மாணவர்கள் மற்றும் பொது மக்கள் அதிகளவில் போக்கு வரத்தை மேற்கொண்டு வருகின்றனர்.

இந்த வீதியில் ஆங்காங்கே பெரிய குழிகள் காணப்படுவதனால் இரவு நேரங்களில பயணம் செய்யும் பாதசாரிகள் சிரமங்களை எதிர்கொள்வதோடு விபத்துக்கள் எற்படக்கூடிய சந்தர்ப்பங்கள் காணப்படுகின்றன

இந்த வீதியினூடாகவே சர்வதேச பாடசாலை, வவுனியா சைவப்பிரகாச மகளிர் கல்லூரி மற்றும் தனியார் கல்வி நிலையங்களுக்கு மாணவர்கள் சென்று வருகின்றனர்

தற்போது பல வீதிகளைப் புனரமைக்கும் பணியில் ஈடுபட்டு வரும் வவுனியா நகரசபையினர் இந்த வீதியையும் புனரமைப்புச் செய்ய வேண்டுமெனப் பாதசாரிகள் வேண்டுகோள் விடுத்துள்ளனர். (க-400)



கிளிநொச்சி இந்துக் கல்லூரியில் இடம்பெற்ற உயர்தர வகுப்பு மாணவரின் ஒன்றுகூடல் நிகழ்வின்போது மாணவர்கள் ஒன்றாக அமர்ந்து உரையாடுகின்றனர். (405)

## ஆசிரியர்,மாணவர்களை கைவிடும் அரச பஸ்கள்

புதுக்குடியிருப்பு,ஜூலை5
கிளிநொச்சி டிப்போவைச் சேர்ந்த அரச பஸ்கள் பிற்பகல் வேளையில் ஆசிரியர்களையும் மாணவர்களையும் ஏற்றாது விட்டுச் செல்வதாக முறைப்பாடு தெரிவிக்கப்பட்டுள்ளது.

காலையில் யாழ்ப்பாணத்திலிருந்து 5.30 இற்கு முல்லைத்தீவுக்குப் புறப்படும் பஸ் சீராக புறப்படுவதாகவும், ஆனால் புதுக்குடியிருப்புக் கல்விக்கோட்டத்தைச் சேர்ந்த அநேக பாடசாலைகளின் ஆசிரியர்களைப் பிற்பகல் வேளையில் பாடசாலை விடும் நேரத்தில் மீளவும் ஏற்றாது கைவிட்டுச் செல்வதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

முன்னர் புதுக்குடியிருப்புச் சந்தியிலிருந்து பிற்பகல் 2.00 மணியளவில் புறப்படும் மேற்படி பஸ் புதுக் குடியிருப்பு, கைவேலி வள்ளிபுனம், உடையார்கட்டு, இருட்டுமடு போன்ற பாடசாலை ஆசிரியர்களைக் குறித்த நேரத்தில் வந்து ஏற்றிக்கொண்டு யாழ்ப்பாணம் சென்றடைவது வழக்கமாக இருந்தது. ஆனால்தற்பொழுது 2 மணிக்கு முன்னராகவே இந்த பஸ் மேற்படி பாடசாலைகளைக் கடந்து யாழ்ப்பாணம் சென்று விடுகின்றது. இதனால் ஆசிரியர்கள் நீண்ட நேரமாக வீதியில் காத்திருந்து தனியார் பஸ்களில் தாம் பயணிக்க வேண்டியுள்ளதாகக் கவலை தெரிவிக்கின்றனர்.

இதைவிடச் சில நடத்துநர்கள் காலையிலும், மதியத்திலும் மாணவர்களைச் ஏற்றிச் செல்வதை தவிர்த்து வருவதாகவும், பிற பயணிகள் ஏறும்போது மாணவர்களும் ஏறினால் அவர்களை இவர்கள் கண்டபடி பேசுவதாகவும் மாணவர்கள் கவலை தெரிவிக்கின்றனர். (க- 555)

## உயர்தரத்தில் முக்கிய பாடங்களுக்கு ஆசிரியர் பற்றாக்குறை தொடர்கிறது

துணுக்காய்,ஜூலை 5
முல்லைத்தீவு மாவட்டம் மாந்தை கிழக்கு பாண்டியன் குளம் மகாவித்தியாலயத்தில் ஜி.சி.ஈ. உயர்தர வகுப்பில் புவியியல், வரலாறு ஆகிய பாடங்களைக் கற்பிப்பதற்கு கடந்த 3 மாதங்களாக ஆசிரியர் இல்லாததால் மாணவர்களின் கற்றல் செயற்பாடுகள் கேள்விக் குறியாக உள்ளதாகப் பெற்றோர் கவலை தெரிவித்துள்ளனர்.

பாண்டியன் குளம் மகாவித்தியாலயத்தில் ஜி.சி.ஈ. உயர்தர வகுப்பில் கற்கும் சுமார் 40 வரையான மாணவர்கள் புவியியல்,வரலாறு போன்ற பாடங்களைக் கற்பிப்பதற்கு ஆசிரியர்கள் இல்லாததால் கல்வியில் பின்னடைவைச் சந்தித்து வருகின்றனர்.

இது தொடர்பாகப் பெற்றோர்கள் அதிகாரிகளிடம் பலமுறை கோரிக்கை விடுத்த போதிலும் பயன் கிடைக்கவில்லையெனக் கவலை தெரிவித்தனர். (க-415)

## போதிய நீர் கிடைக்காமையால் சிறுபோகச் செய்கை பாதிப்பில்

சிறுபோக செய்கைக்கு ஏற்ற வகையில் நீர் கிடைப்பதில்லை என்றும் இதனால் தமது பயிர்கள் பாதிக்கப்பட்டுள்ளன என்றும் விவசாயிகள் தெரிவிக்கின்றனர்.

முல்லைத்தீவு,ஜூலை 5
முல்லைத்தீவு மாவட்டத்தின் வவுனிக்குளம் கீழ் மேற்கொள்ளப்பட்ட சிறுபோக நெற்செய்கைக்குப் போதிய நீர் கிடைக்காமையால் தமது பயிர்ச் செய்கைகள் பாதிக்கப்படுகின்றன என்று இந்தக் குளத்தின் கீழ் பயிர்ச் செய்கையை மேற்கொண்ட விவசாயிகள் தெரிவிக்கின்றனர்.

முல்லைத்தீவு மாவட்டத்திலுள்ள வவுனிக்குளத்தின் புனரமைப்புப் பணிகள் தற்போது நடைபெற்றுவரும் நிலையில் இந்தக் குளத்தின் கீழ் உள்ள இடது கரை வாய்க்கால் பகுதியில் சிறுபோகச் செய்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இந்த நிலையில் தமது சிறுபோக செய்கைக்கு ஏற்ற வகையில் நீர் கிடைப்பதில்லை என்றும் இதனால் தமது பயிர்கள் பாதிக்கப்பட்டுள்ளன என்றும் விவசாயிகள் தெரிவிக்கின்றனர்.

இந்தப் பகுதி விவசாயிகள் தமது பயிர்ச் செய்கைகளை மட்டுப்படுத்தியுள்ள போதிலும் அதற்குக் கூடச் சீரான நீர் விநியோகம் மேற்கொள்ளப்படுவதில்லையெனத் தெரிவிக்கின்றனர். (க-6)

# மழை வேண்டி கமக்கார அமைப்பினர் யாகம்

### இரணைமடுக் குளத்தில் நீர்வற்றியதால் விவசாயம் பாதிப்பு

கிளிநொச்சி,ஜூலை 5
இரணைமடு கனகாம்பிகை அம்மன் ஆலயத்தில் மழையை வேண்டி கமக்கார அமைப்புக்கள் யாக பூசையில் ஈடுபட்டன.

கிளிநொச்சி மாவட்டத்தில் இரணைமடு நீர்ப்பாசனக் குளத்தின் கீழ் செய்கை பண்ணப்பட்டுள்ள சுமார் 8500 ஏக்கர் வயல் நிலங்கள் போதிய நீரில்லாததால் பாதிக்கப்பட்டுள்ளன.

அண்மைய வாரங்களாக இந்தப் பகுதியில் வீசுகின்ற கடும் காற்று மற்றும் வெப்பம் காரணமாக நிலத்தடி நீர்மட்டம் தாழ்ந்து செல்வதுடன் நீர் நிலைகளும் விரைவாக வற்றி வருகின்றன. இதனால் சிறுபோக வேளாண்மை அழிவுக்குள்ளாகி வருவது கண்டு விவசாயிகள் பெருங் கவலையடைந்துள்ளனர்.

36 அடி கொள்ளளவுடைய இரணைமடுக்குளத்திலும் நீர் குறைந்துள்ளதால் குறித்த விளை நிலங்களுக்கு நீர்ப்பாசனத்தை மேற்கொள்ள முடியாது அதிகாரிகள் திணறுகின்றனர்.


இதனையடுத்து கமக்கார அமைப்புக்கள் ஒன்று கூடி நேற்றுமுன்தினம் அதிகாலை தொடக்கம் இரணைமடு கனகாம்பிகை அம்மன் ஆலயத்தில் மழை வேண்டி யாக பூசையில் ஈடுபட்டனர்.

இதுகுறித்து கிளிநொச்சி மாவட்ட விவசாய அமைப்புக்களின் சம்மேளனத் தலைவர் எஸ்.சிவப்பிரகாசம் கருத்துத் தெரிவிக்கையில்; "ஏற்கனவே மீளமுடியாத வங்கிக் கடன்களின் மத்தியில் சிறுபோகச் செய்கையை மேற்கொண்ட எமது விவசாயிகள் முழுமையான அழிவைச் சந்திக்கின்ற நிலைமையே இங்குள்ளது. இருக்கின்ற குளத்து நீர் வயல் நிலங்களை நனைக்கவே போதுமானது. கடந்த மாரிமழையின்போது குளம் பூரணமாக நிரம்பியிருந்த போதும் ஏதோ ஒரு காரணத்தால் நீர் திறந்து விடப்பட்டது. இன்று அதன் விளைவையே எமது விவசாயிகள் அனுபவிக்கின்றனர். இன்னும் இரண்டு வாரங்களில் இயற்கை இந்த யாகத்தின் பயனாக எமக்கு கைகொடுக்கும் என்று நம்பிக் காத்திருக்கின்றோம்'' -என்றார்.

மீளமுடியாத வங்கிக் கடன்களின் மத்தியில் சிறுபோகச் செய்கையை மேற்கொண்டனர்.

அத்துடன் கிளிநொச்சி பாரதிபுரம், கல்லாறு, தட்டுவன்கொட்டி, பூநகரியின் முழுமையான பிரதேசங்கள் ஆகியவற்றில் கடும் வரட்சி நிலவுகின்றது. இதனால் தண்ணீர்த் தட்டுப்பாடு அதிகரித்துள்ளதுடன் பள்ளிக்குடா, சேவையர் தோட்டம், தரவையார் வெளி, பல்லாய் போன்ற பகுதிகளில் ஒரு லீற்றர் குடிதண்ணீர் ஒரு ரூபாவுக்கு விற்பனை செய்யப்படுவதால் மக்கள் மத்தியில் மிகுந்த கவலை நிலவுகிறது. (க-426-301)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



கிளிநொச்சி வன்னேரிக்குளம் ஆகாயத் தாமரை, சல்பீனியா போன்றவற்றால் நிறைந்து காணப்படுகின்றது. இதனால் நுளம்பு பெருகும் அபாயம் ஏற்பட்டுள்ளதாகவும், இவற்றை அகற்ற நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் இந்தப் பகுதி மக்கள் கோரியுள்ளனர். (ங-18)

# ஏற்றினார்; பறித்தார்; பறந்தார்

கிளிநொச்சி,ஜூலை 5

வீதியில் பயணித்த வயோதிபர் ஒருவரை வலிந்து மோட்டார் சைக்கிளில் ஏற்றிச் சென்று அவரிடமிருந்த பணத்தையும், மோதிரத்தையும் பறித்தெடுத்துக் கொண்டு பறந்து சென்ற நபர் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார்.

கடந்த ஞாயிற்றுக்கிழமை ஸ்கந்தபுரம் பகுதியில் இருந்து கிளிநொச்சிக்கு வயோதிபர் ஒருவர் பயணித்துக் கொண்டிருந்தார். அவரை வலிந்து தனது மோட்டார் சைக்கிளில் ஏற்றிய ஒரு நபர், கிளிநொச்சி நகரை அண்மித்த கந்தன்குளம் பகுதியில் ஆளரவமற்ற பகுதியில் வைத்து, வயோதிபரிடம் இருந்த 13 ஆயிரம் ரூபா பணத்தைப் பறித்தெடுத்தார். அத்துடன் அவர் அணிந்திருந்த தங்க மோதிரத்தைக் கழற்றித் தருமாறு கேட்டுப் பலமாகத் தாக்கியுள்ளார்.

இதனால் வயோதிபர் கூக்குரலிட்டபோது வயலில் வேலை செய்து கொண்டிருந்தவர்களும், இராணுவத்தினரும் சம்பவ இடத்துக்குச் சென்றுள்ளனர். இராணுவத்தினர் இந்த நபரைக் கைதுசெய்ய முயன்றபோதும், குறித்த சந்தேக நபர் அவர்களிடம் சிக்காமல் தப்பியோடிவிட்டார்.

எனினும், எதிர்பாராத விதமாக மீண்டும் கடந்த திங்கட்கிழமை குறித்த நபர் இராணுவத்தினரிடம் சிக்கினார். பின்னர் இவர் கிளிநொச்சிப் பொலிஸ் நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டு நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்தப்பட்டார். இவரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிமன்றில் உத்தரவு பிறப்பிக்கப்பட்டது. (ங-க-6)

# 'கோடா' வைத்திருந்த பெண்ணுக்கு அபராதம்

கிளிநொச்சி வன்னேரிக்குளம் பகுதியில் 15 போத்தல் கசிப்பை உற்பத்தி செய்யக் கூடிய 'கோடா'வை வைத்திருந்த விதவைப் பெண் ஒருவருக்கு 25 ஆயிரம் ரூபா அபராதம் விதிக்கப்பட்டுள்ளது.

கிளிநொச்சி வன்னேரிக்குளம் பகுதியில் கசிப்பு உற்பத்திக்கு பயன்படுத்தும் 15 போத்தல் கோடாவை வைத்திருந்த குற்றச்சாட்டின் பேரில் குறித்த பெண் கடந்த 27 ஆம் திகதி கிளிநொச்சிப் பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டிருந்தார். இவர் கிளிநொச்சி மாவட்ட நீதிவான் நீதிமன்றில் நீதிவான் பெ.சிவகுமார் முன்னிலையில் மறுநாள் முன்னிலைப்படுத்தப்பட்ட போதே அவருக்கு 25 ஆயிரம் ரூபா தண்டம் விதிக்கப்பட்டது. இதனைச் செலுத்தத் தவறின் ஐந்து மாத சாதாரண சிறைத் தண்டனையை அனுபவிக்க வேண்டும் எனவும் நீதிமன்றம் உத்தரவிட்டது. (ங-க-6)

# காணாமல்போன எங்கள் உறவுகளின் கதி என்ன?

## கண்ணீரோடு ஆறு வருடங்களாகக் காத்திருப்போரின் கேள்வி

மன்னார், ஜூலை 5

போர் நிகழ்ந்த காலத்தில் மன்னார் மாவட்டத்தில் காணாமல் போன நூற்றுக்கும் மேற்பட்டவர்களின் கதி என்னவென்று தெரியாத நிலையில் கடந்த ஆறு வருடங்களாக தாம் கண்ணீரிலேயே வாழ்ந்து வருவதாகவும், தமது உறவுகளுக்கு என்ன நேர்ந்தது என்பதை உரியவர்கள் வெளிப்படுத்த வேண்டும் எனவும் காணாமல் போனோரின் உறவினர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

போர் நடைபெற்றபோது மன்னாரின் பெரும்பகுதி இராணுவக் கட்டுப்பாட்டின் கீழேயே இருந்தது. எனினும் ஏராளமான இளைஞர்கள், யுவதிகள், குடும்பஸ்தர்கள் இக்காலத்தில் காணாமல் போயினர். இவர்களில் அநேகர் தொழில் நிமித்தமாகவோ கல்வி கற்பதற்காகவோ சென்ற வேளையிலேயே இனந்தெரியாதவர்களால் கொண்டு செல்லப்பட்டனர்.

இதைவிட வீடுகளுக்குள் நள்ளிரவு வேளையில் புகுந்த ஆயுதம் தரித்தவர்கள் 'விசாரணைக்காக அழைத்துச் செல்கிறோம்' என்று கூறி வீட்டில் இருந்த சிலரை பிடித்துச் சென்றனர். பின்னர் அவர்களை எல்லா இராணுவ முகாம்களிலும் தேடி அலைந்த போதும் பலன் எதுவும் கிடைக்க வில்லை. சில நாள்களின் பின்னர் இவ்வாறு காணாமல் போன சிலர் துப்பாக்கிச் சூட்டுக் காயங்களுடன் ஆளரவமற்ற இடங்களில் சடலங்களாக மீட்கப்பட்டனர். எஞ்சியோரின் கதி இதுவரை என்னவென்று தெரியவில்லை. இவ்வாறு காணாமல் போனோரில் அநேகர் படையினராலேயே பிடித்துச் செல்லப்பட்டதாக நம்பப்படுகிறது.

ஆனால், படை முகாம்களிலோ தடுப்பு முகாம்களிலோ இவ்வாறு காணாமல் போனோர் இருப்பதற்கான பதிவுகள் எதுவும் இல்லை. கடந்த ஆறு வருடங்களாக காணாமல் போனோரை தேடி அலைந்து பல்வேறு தரப்புகளிடமும் தமது உறவுகளை மீட்டுத் தருமாறு கோரிக்கை விடுத்தனர். நல்லிணக்க ஆணைக்குழுவின் அமர்வுகளின்போது கூட இந்த மக்கள் தமது உறவுகளை கண்டுபிடித்துத் தருமாறு கேட்டிருந்தனர். ஆனால், அவற்றுக்கு இதுவரை உரிய பதில் கிடைக்க வில்லை.

எனவே, இனியாவது தமது உறவுகளின் கதி குறித்து உரியவர்கள் தெரியப்படுத்த நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று மன்னார் மாவட்டத்தைச் சேர்ந்த காணாமல் போனோரின் உறவுகள் அரசிடம் கோரிக்கை விடுத்துள்ளனர். (ங-12)

# வர்த்தகத்தைப் பயில்வதால் வேலைவாய்ப்பைப் பெறலாம்

## ஆளுநரின் இணைப்புச் செயலர் அறிவுரை

வவுனியா, ஜூலை 5

உயர்தர வகுப்புகளில் வர்த்தகத் துறையைத் தெரிவு செய்வதன் மூலம் மாணவர்கள் எதிர் காலத்தில் தேவையான வேலைவாய்ப்புகளை இலகுவில் பெற்றுக் கொள்ளமுடியும். இவ்வாறு தெரிவித்தார் வடமாகாண ஆளுநரின் இணைப்புச் செயலர் முகைதீன்.

வவுனியா தெற்கு வலயம் ஏற்பாடு செய்த வர்த்தகக் கண்காட்சியின் ஆரம்ப நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

வவுனியா தெற்கு வலயக் கல்விப் பணிப்பாளர் திருமதி அன்ரன் சோமராஜா தலைமையில் இடம்பெற்ற இந்த நிகழ்வில் அவர் மேலும் தெரிவித்ததாவது:-

இன்று வீட்டில் இருந்தவாறே வர்த்தக நடவடிக்கைகளில் ஈடுபடக் கூடியஒருசூழல்தொழில்நுட்ப வளர்ச்சியால் ஏற்பட்டுள்ளது.

க.பொ.த.சாதாரண தரப் பரீட்சையில் 9 ஏ தரச் சித்தி பெறும் பெரும்பாலான மாணவர்கள் விஞ்ஞானப் பாடநெறிகளைத் தெரிவு செய்கின்றனர். இவர்களுக்கு பல்கலைக்கழக அனுமதி கிடைக்காத விடத்து எதிர்காலம் தொடர்பாக தீர்மானிக்க முடியாது திண்டாடுகின்றனர்.

தற்போதுள்ள தொழில்நுட்ப வளர்ச்சி மிகுந்த இந்தக் காலப் பகுதியில் வர்த்தகக் கற்கை நெறிகளை மாணவர்கள் தேர்வு செய்வதன் மூலம் எதிர்காலத்தில் பல வேலைவாய்ப்புகளைப்பெற்றுக் கொள்ளமுடியும். அந்த வகையில் பாடசாலை அதிபர்கள், ஆசிரியர்கள், மாணவர்களை வர்த்தகப் பாட நெறிகளைக் கற்பதற்கு வழிகாட்ட வேண்டும் - என்றார். (ங-க-400)

# பற்றைகளால் மூடிய மலசலகூடங்கள் மறைவிடங்களை நாடும் மக்கள்

துணுக்காய்,ஜூலை 5

மாங்குளத்தின் மக்கள் கூடும் பிரதான இடத்தில் உள்ள மலசலகூடங்கள் மக்களின் பயன்பாட்டுக்கு உதவாத நிலையில் காட்சியளிப்பதால் மக்கள் சிரமங்களை எதிர்கொண்டு வருகின்றனர்.

மாங்குளம் பிரதேசம் ஏ-9 பிரதான வீதியின் ஒரு மையப் பகுதியாகும். இங்கிருந்து கிழக்குத் திசையில் முல்லைத்தீவுக்கும், தெற்குத் திசையில் துணுக்காய், வெள்ளாங்குளம் ஆகிய பகுதிகளுக்கும் செல்ல முடியும். இதனால் தூர இடங்களில் இருந்து வரும் பயணிகள் இங்குள்ள பஸ் தரிப்பிடங்களை நாடி வருகின்றனர். இவர்களில் பெண்களும், சிறு பிள்ளைகளும் அடங்கியுள்ளனர். இவர்கள் தமது இயற்கை உபாதைகளைத் தீர்ப்பதற்கு [illegible] அலைந்து திரிந்து அவலப்படுகின்றனர்.

நிலைமையைச் சமாளிக்க முடியாமல் பலர் தேநீர் கடைகளுக்கு அருகில் உள்ள ஒதுக்குப் புறங்களிலும் மர நிழல்களின் அருகிலும் தமது இயற்கைக் கடன்களை முடிந்துக் கொள்கின்றனர்.

ஆனால், போருக்கு முன்னர் பயன்படுத்திய இங்குள்ள நான்கு மலசலகூடங்களும் இன்று வரை சீரமைக் கப்படாமல் பற்றைகளால் முடிக் காணப்படுகின்றன.

மக்களின் அவசர தேவைகளைப் பூர்த்தி செய்வதற்கு உரியவர்கள் உதவ முன்வர வேண்டும் என்று பிரதேச வாசி[illegible] கோரிக்கை விடுக்கின்றனர்.(க-415)

# மரண அறிவித்தல்

## கனகலிங்கம் இராஜரட்ணம்



கொக்குவில் மேற்கு கொக்குவிலை பிறப்பிடமாகவும் 58/3 செட்டித்தெரு நல்லூரை வசிப்பிடமாகவும் கொண்ட கனகலிங்கம் இராஜரட்ணம் நேற்று (04.07.2012) புதன்கிழமை இறைபதம் அடைந்துவிட்டார். அன்னார் காலஞ்சென்றவர்களான கனகலிங்கம், பவளம்மா தம்பதியரின் மூத்த புதல்வனும் பிரான்சிஸ்காவின் அன்புக்கணவரும் சுமதி(கனடா), மலர்விழி (ஆஸ்திரேலியா), முரளி (ஜேர்மன்) முகுந்தன் (ஆஸ்திரேலியா) ஆகியோரின் பாசமிகு தந்தையும் செல்வராசா, துரைராசா(கனடா), தவராசா(ஜேர்மனி), திலகவதி, புனிதவதி, புஸ்பவதி, பகவதி, உமா ஆகியோரின் பாசமிகு சகோதரனும் ஆவார். அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும். இந்த அறிவித்தலை உற்றார்,உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

58/03, செட்டித்தெரு, நல்லூர் (20076)(14-3) தகவல்: குடும்பத்தினர்.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பழைய மாணவர்சங்கம் - தெல்லிப்பழை
## யா/மகாஜனக் கல்லூரி, தெல்லிப்பழை
## வருடாந்த பொதுக்கூட்டம்
## 08.07.2012

அன்புடையீர்,

எமது கல்லூரியின் பழைய மாணவர்சங்கத்தின் வருடாந்தப் பொதுக்கூட்டம் எதிர்வரும் (08.07.2012) ஞாயிற்றுக்கிழமை அன்று நடைபெறவுள்ளது. அனைத்துப் பழைய மாணவர் களையும் தவறாது கலந்து சிறப்பிக்குமாறு கேட்டுக்கொள்கின் றோம்

தலைவர் : திரு.கு.வேல்சிவானந்தன் (அதிபர்)
இடம் : பாவலர் துரையப்பாபிள்ளை மண்டபம்
காலம் : 08.07.2012 ஞாயிற்றுக்கிழமை
நேரம் : காலை 9.30 மணி

### நிகழ்ச்சி நிரல்

1. பழைய மாணவர்களின் ஒன்றுகூடல்
2. பொதுக்கூட்டம்
2.1 இறைவணக்கம்
2.2 தலைமை உரை
2.3 செயலாளர் அறிக்கை
2.4 செயற்றிட்ட திரட்டறிக்கை
2.5 பொருளாளர் கணக்காய்வு அறிக்கை
2.6 புதிய நிர்வாகசபைத் தெரிவு
2.7 பிறவிடயங்கள்
2.8 நன்றியுரை
2.9 கல்லூரிக் கீதம்

**பழைய மாணவர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்**

திரு.கு. வேல்சிவானந்தன்
தலைவர்

செ. உமாகாந்தன்,
நா. புனிததயாபரன்,
இணைச்செயலாளர்கள்

(சி/1226)(14-8)

## 31ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்



தோற்றம் 14 ★ 04 ★ 1924
மறைவு 05 ★ 06 ★ 2012

அமரர் திருமதி
**சரஸ்வதி வேலுப்பிள்ளை**

எமது தாயாரின் மரணச் சடங்கில் கலந்து கொண்ட உற்றார், உறவினர்,நண்பர்களுக்கும், தொலை பேசி மூலம் அனுதாபம் தெரிவித்தவர்களுக்கும் எமது நன்றியைத் தெரிவித்துக் கொள்வதுடன் இன்று (05.07.2012) வியாழக்கிழமை மு.ப.10.00 மணியளவில் எமது இல்லத்தில் நடைபெறும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையில் கலந்து கொள்ளுமாறு உற்றார், உறவினர்,நண்பர்கள் அனைவரையும் கேட்டு நிற்கின்றோம்.

இராமலிங்கர் வீதி,
கல்வயல் சாவகச்சேரி.
(C/9333)(3-14)

செல்வி
வேலுப்பிள்ளை சிவஞானம் (மகள்)

## மரண அறிவித்தல்
### குமாரசாமி செந்தில்மணி



கொக்குவில் மேற்கு, முதலியார் கோயிலடியை வசிப்பிடமாகவும் தற்போது கனடாவில் வசித்தவருமான குமாரசாமி செந்தில்மணி நேற்றுமுன்தினம் (03.07.2012) செவ்வாய்க்கிழமை கனடாவில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான குமாரசாமி - சரஸ்வதி தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்ற நடராசா மற்றும் பொன்னரியம் தம்பதியரின் மூத்த மருமகனும், பத்மினிதேவியின் அன்புக் கணவரும், சபேசன், பிரகாசினி ஆகியோரின் பாசமிகு தந்தையும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (05.07.2012) வியாழக்கிழமை கனடாவில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

சபேசன் - மகன்
4164353256
செல்வராசா மைத்துனர்
9054774510
279, Milliken Meadow Drive Markham
O-N-T Canada L3R - OW 2

தகவல்:
செ. கனகராசா (வரதர்),
முதலியார் கோவில் ஒழுங்கை, கொக்குவில் மேற்கு, கொக்குவில்

(20079)(8-14)

## கரும்புள்ளியானில் கடும் வரட்சி

கிளிநொச்சி,ஜூலை 5

மாந்தை கிழக்கு கரும்புள்ளியான் பகுதியில் நிலவிவரும் கடும் வரட்சி காரணமாகக் குடிதண்ணீருக்குப் பெரும் தட்டுப்பாடு நிலவி வருகின்றது.

முல்லைத்தீவு மாவட்டம் மாந்தை கிழக்குப் பிரதேச செயலர் பிரிவில் கரும்புள்ளியான் பகுதி அமைந்துள்ளது. இங்கு தற்போது கடும் வரட்சி நிலவி வருகின்றது. இதனால் இங்குள்ள வீட்டுக் கிணறுகள் நீர் வற்றிய நிலையில் காணப்படுகின்றன. அத்துடன் இங்கு அமைக்கப்பட்ட குழாய்க் கிணறுகளும் நீர்வற்றிய நிலையிலேயே காணப்படுகின்றன. இதனால் இங்குள்ள மக்கள் பெரும் குடிதண்ணீர்த் தட்டுப்பாட்டை எதிர்கொண்டு வருகின்றனர்.

இவர்கள் தற்போது தூர இடங்களிலிருந்து குடிதண்ணீரைப் பெற்றுக்கொள்வதில் பல்வேறு சிரமங்களை எதிர்கொள்வதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(க-6)

## சுயதொழிலை மேற்கொள்ள நிதியுதவி

திருகோணமலை,ஜூலை 5

திருகோணமலை மாவட்டத்தில் விசேட தேவையுடைய் பெண்கள் சுயதொழிலை மேற்கொள்வதற்கான நிதியுதவி வழங்கும் நிகழ்வு நடுத்தீவு சனசமூக நிலையத்தில் நேற்றுமுன்தினம் செவ்வாய்க்கிழமை நடைபெற்றது.

ஐரோப்பிய யூனியனின் அனுசரணையுடன் அனுராதபுரத்தில் இயங்கும் ஆகாஸ் பெண்களுக்கான வலுவூட்டல் சங்கத்தினால் ஏற்பாடு செய்யப்பட்ட இந்தநிகழ்வில் இலங்கைக்கான பிரான்ஸ் தூதுவர் கிரிஷ்டினா ரொபின்சன் கலந்துகொண்டு நிதியைக் கையளித்தார்.

கிண்ணியா, தம்பலகாமம் ஆகிய கிராமங்களைச் சேர்ந்த பெண்களுக்கு இந்த நிதியுதவி வழங்கப்பட்டது.

பிரான்ஸ் நாட்டின் உதவி இலங்கைக்கு பெருமளவு கிடைக்கின்றது. கிண்ணியா - மட்டக்களப்பு வீதியில் உள்ள பாலம், கந்தளாய் நீர் சுத்திகரிப்பு நிலையம், கிண்ணியா மகாமாறு பகுதியில் நிர்மாணிக்கப்பட்டு வரும் நீர்த்தாங்கி போன்ற அபிவிருத்தித் திட்டங்கள் பிரான்ஸ் நாட்டின் நிதியுதவியினூடாக முன்னெடுக்கப்படும் மனிதாபிமான நடவடிக்கைகளாகும் என்று இலங்கைக்கான பிரான்ஸ் தூதுவர் கிரிஷ்டினா ரொபின்சன் தெரிவித்தார்.

திருகோணமலை மாவட்டத்தில் குடிதண்ணீர் சுத்திகரிப்பு நிலையத்தில் பிரான்ஸ் பொறியியலாளர்கள் தமது துரித பணிகளை மேற்கொண்டு வருகின்றனர். இதன்மூலம் இம் மாவட்டத்தில் 3 லட்சம் பேருக்கு குடிதண்ணீர் விநியோகிக்கப்படவுள்ளது என்று அவர் கூறினார்.

(ச)

### தவறிவிட்டது

ந.ராஜமனோகரன் (772881401ஏ) ஆகிய எனது தேசிய அடையாள அட்டை மற்றும் ஆவணங்கள் அடங்கிய பேர்ஸ் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் கீழ்க் காணும் இலக்கத்துடன் தொடர்பு கொள்ளவும். தகுந்த சன்மானம் வழங்கப்படும்.

தொடர்பு: 0779185724


### பெருந்தெருக்கள்
### கோடு கீறுதல்

அனுபவம் உள்ள தொழிலாளர்கள் தேவை. தொடர்பு கொள்ளுங்கள்

நளீன்

0777 416720




### தேவை

புடவை நிலையத்திற்கு விற்பனையில் அனுபவ முள்ளவர்கள் (பெண்கள் மட்டும்) தேவை. சுன்னாகம் அதனை அண்டிய பகுதியில் உள்ளவர்கள் விரும்பத்தக்கது.

தொடர்பு- 075 5659976 (20071) (17.3)

### விற்பனைக்கு

[illegible]

தொடர்பு- 071 6199379 (20071) (17.3)

## இதய அஞ்சலிகள்



எமது கல்லூரியின் சிரேஷ்ட ஆசிரியை திருமதி சர்வானந்த ஈஸ்வரி ஜெயலிங்கம் அவர்களின் அன்புத்தாய்


**திருமதி மகேஸ்வரி சச்சிதானந்தம்**

அவர்களின் மறைவினால் துயருற்றிருக்கும் அவரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடைய எமது இதய அஞ்சலிகளைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

யா/கொக்குவில் இந்துக் கல்லூரி.
(20074) (3.14)
ஆசிரியர் நலன்புரிக் கழகம்.

## மரண அறிவித்தல்கள்

### முதலித்தம்பி இராஜசிங்கம் (பேபியர்)



புன்னாலைக்கட்டுவன் தெற்கைப் பிறப்பிடமர்கவும், வசிப்பிடமாகவும் கொண்ட முதலித்தம்பி இராஜசிங்கம் (பேபியர்) நேற்றுமுன்தினம்(03.07.2012) செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் மதிவதனியின் அன்புக் கணவரும், காலஞ்சென்றவர்களான முதலித்தம்பி - செல்லம்மா தம்பதியரின் மகனும், காலஞ்சென்றவர்களான தங்கரத்தினம், நல்லம்மா மற்றும் இராஜேந்திரம், பரமேஸ்வரி, காலஞ்சென்ற இராசம்மா (தேவி) மற்றும் சிவபாக்கியம், செல்வராணி ஆகியோரின் அன்புச் சகோதரனும் காலஞ்சென்ற சபாரத்தினம் மற்றும் பூதப்பிள்ளை, மகாலட்சுமி, காலஞ்சென்ற அருந்தவரட்ணம் மற்றும் ஜெகநாதன் காலஞ்சென்ற சிவகுமார் ஆகியோரின் அன்பு மைத்துனரும், இ.சதீசன் (லண்டன்), காலஞ்சென்ற இ.சுதர்சன் மற்றும் இ.சதீஸ்கரன் (கனடா) ஆகியோரின் சிறிய தந்தையாரும், சிவேஸ்வரன் (கனடா), மனோகரன் (கனடா), ரதிதேவி, வதனா (பிரான்ஸ்), ஜெயானந்தன் (கனடா), சுதானந்தர் (கனடா), பாலகுமார் (லண்டன்), பாலசிறி (லண்டன்), பாலமோகன் (கனடா), பாலமுரளி (கனடா), பால கௌரி (கனடா), பாலசுமதி (லண்டன்), லாவண்யா (பிரான்ஸ்), சௌமியா (கனடா), கஜகர்ணிகன் ஆகியோரின் அன்பு மாமனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (05.07.2012) வியாழக்கிழமை மு.ப. 9.00 மணியளவில் புன்னாலைக்கட்டுவனில் உள்ள திரு.வே. பாலசுப்பிரமணியம் (அதிபர்) அவர்களின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக விலங்கன் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்

புன்னாலைக்கட்டுவன் தெற்கு,
புன்னாலைக்கட்டுவன்

தகவல்:
சகோதரர்கள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்

(சி/2007)(8-14)

### செபமாலை அருளானந்தன் (ஜெயம்)



பலாலியைப் பிறப்பிடமாகவும், ஜேர்மனியை வதிவிடமாகவும் கொண்ட செபமாலை அருளானந்தன் (ஜெயம்) நேற்று முன்தினம் (03.07.2012) செவ்வாய்க்கிழமை ஜேர்மனியில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான செபமாலை (அதிபர்), அஞ்சலீனா (ஆசிரியர்) தம்பதியரின் இளையமகனும், மேரி மல்லிகா (ஆசிரியர்- சென்.பற்றிக்ஸ் கல்லூரி), அருட்பிரகாசம் (தவம்- இத்தாலி) ஆகியோரின் அன்புச்சகோதரரும் ஜோன் அரியதாஸ், ஆன்றெபேகா ஆகியோரின் பாசமிகு மைத்துனரும், ஆன்ஸ்ரென், வாரிசா (இத்தாலி) ஆகியோரின் அன்புச் சிறிய தந்தையும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார்,உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

சந்தை தெற்கு வீதி,
சுன்னாகம்.

(20073) (3)

தகவல்:
ஜோன் அரியதாஸ்

### திருமதி மகேஸ்வரி சச்சிதானந்தம்



இல 25/1 பிரம்படி ஒழுங்கை கொக்குவிலைச் சேர்ந்த திருமதி. மகேஸ்வரி சச்சிதானந்தம் நேற்று (04.07.2012) புதன்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சின்னத்தம்பி சச்சிதானந்தம் அவர்களின் அன்பு மனைவியும் திருமதி.ச. ஜெயலிங்கம் (ஆசிரியை கொக்குவில் இந்துக் கல்லூரி), சிவகுமார் (குகன் ஸ்ரோர்ஸ்- ஹற்றன்), காலஞ்சென்ற விஜய்குமாரன் மற்றும் உருத்திரகுமாரன், இன்பமலர் (கனடா), ஜெகதீஸ்வரி ஆகியோரின் அன்புத் தாயும் அ.ஜெயலிங்கம், இ.ஜெயாபரன்(கனடா), மு.ஈழத்தமிழ்மணி (பிரதேச வைத்தியசாலை - பளை), திருமதி.சாவித்திரி சிவகுமாரன், திருமதி. நந்தினிவிஜயகுமாரன் (மாநகரசபை-யாழ்ப்பாணம்), திருமதி. குமுதினி உருத்திரகுமாரன் (இந்து மகளிர் கல்லூரி யாழ்ப்பாணம்) ஆகியோரின் அன்பு மாமியும் ரதினி, நிரோ, நிஷாந், ஹரிஷாந், நிதுர்ஷன், ஜீவகன், செந்தூரன் ஆகியோரின் அன்புப் பேர்த்தியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (05.07.2012) வியாழக்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக பிற்பகல் 2.00 மணிக்கு கொக்குவில் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார்,உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

25/1, பிரம்படி ஒழுங்கை,
கொக்குவில்.

(20069) (3)

தகவல்:
ச.சிவகுமாரன்
(மகன்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கடலில் தொடரும் சுரண்டல் நடவடிக்கை இல்லையா?

## வடமராட்சி கிழக்கு மீனவர்கள் விசனம்

வடமராட்சி, ஜூலை 5
வடமராட்சி கிழக்கு கடற்பிரதேசத்தில் கடல் வளம் தங்கு தடையின்றி சுரண்டப்பட்டு வருவதால், வடமராட்சி கிழக்குப் பிரதேச மீனவர்கள் மீன் பிடித் தொழில் மூலம் போதிய வருமானமின்றிக் கஷ்டப்பட்டு வருகின்றனர்.

இந்த நிலை நீடிக்குமானால் அந்தப் பிரதேச மீனவர்கள் பட்டினி நிலையை எதிர்நோக்க வேண்டி வரும் என அஞ்சப்படுகின்றது.

இந்தப் பிரதேசத்தில் மீளக்குடியமர்த்தப்பட்டுள்ள நாகர்கோவில் மேற்கு, நாகர்கோயில் கிழக்கு, மாமுனை, செம்பியன் பற்று வடக்கு, தாளையடி, மருதங்கேணி வடக்கு, உடுத்துறை, வத்திராயன், ஆழியவளை, வெற்றிலைக்கேணி, கட்டைக்காடு ஆகிய இடங்களைச் சேர்ந்த மக்கள் மீன் பிடித் தொழிலையே பிரதான தொழிலாகக் கொண்டுள்ளார்கள்.

இவர்கள் அரச, அரச சார்பற்ற நிறுவனங்களின் உதவியுடன் மீன்பிடி உபகரணங்களைப் பெற்று மீன்பிடித் தொழில்களை மேற்கொண்டுள்ள நிலையில் பிற மாவட்டங்களைச் சேர்ந்த மீனவர்கள் இந்தக் கடற்பிரதேசத்தை ஆக்கிரமித்துள்ளனர். அத்துடன் தடை செய்யப்பட்ட மீன்பிடி உபகரணங்களையும் மீன்களை இடம் பெயரச் செய்யும் கடற்கலங்கள் மற்றும் உபகரணங்களையும் பாவித்து அத்துமீறி மீன் பிடித்து வருவதாகப் முறைப்பாடு தெரிவிக்கப்படுகின்றது. இதன் மூலம் கடல் வளங்கள் முற்று முழுதாகச் சுரண்டப்படுவதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இந்த நிலையில் வடமராட்சி கிழக்கு மீனவர்கள் போதியளவு மீன்களைப் பிடிக்க முடியாத நிலை ஏற்பட்டுள்ளது. இந்தத் தொழில் பாதிப்பால் அரச, அரச சார்பற்ற நிறுவனங்களிடம் கடனுக்குப் பெற்ற மீன்பிடி உபகரணங்களுக்கான கடன்களைத் திருப்பிச் செலுத்த முடியாத நிலை ஏற்பட்டுள்ளது.

இந்தப் பிரதேச மீனவர்கள் 1990 ஆம் ஆண்டு இடப்பெயர்வுக்கு முன்னர் மீன்பிடித் தொழில் மூலம் பெரும் எண்ணிக்கையில் மீன்களைப் பிடித்துகிளிநொச்சி, சாவகச்சேரி சந்தைகளில் இவற்றைச் சந்தைப்படுத்தி வந்தனர். அத்துடன் கொழும்புக்கும் மீன் வகைகள் மற்றும் கருவாடு வகைகளை அனுப்பி வைத்து பெற்ற வருமானத்தில் தமது வாழ்வாதாரத்தை மேம்படுத்தி சிறப்புற வாழ்ந்து வந்திருந்தனர்.

இன்றோ நிலைமை தலைகீழாக மாறியுள்ளதுடன் கிளிநொச்சி, சாவகச்சேரிப் பகுதி மக்களுக்கு போதிய மீன் வகைகளும் கிடைக்காத நிலைமை ஏற்பட்டுள்ளது.

சொந்த இடங்களில் மீள்குடியமர்ந்துள்ள மீனவர்கள் அத்துமீறி மீன் பிடிப்போரால் சுதந்திரமாகத் தொழில் செய்து வாழ வழியில்லாத நிலை உருவாகியுள்ளதாக அந்தப் பிரதேச மீனவர்கள் கவலை தெரிவிக்கின்றனர். (ம-8)

# பெண் தலைமைக் குடும்பங்களுக்கு சுயதொழில் மேம்பாட்டு உதவி



தென்மராட்சி, ஜூலை 5
போரால் பாதிக்கப்பட்ட பெண்களைக் குடும்பத் தலைவர்களாகக் கொண்ட குடும்பங்களின் வாழ்வாதாரத் திட்டத்தை மேம்படுத்தும் நோக்குடன் கோழிக் குஞ்சுகள் வளர்க்கும் செயற்றிட்டம் ஆரம்பித்து வைக்கப்பட்டுள்ளது.

யாழ். மாவட்ட இந்து அமைப்புகளின் ஒன்றியத்தினர், ஒவ்வொரு பிரதேச செயலர் பிரிவிலிருந்தும் தெரிவு செய்யப்பட்ட தலா ஆறு பயனாளிகளுக்கு 14 ஆயிரம் ரூபா பெறுமதியான கோழி வளர்ப்பு உபகரணங்களையும் 30 கோழிக் குஞ்சுகளையும் வழங்கி வருகின்றனர்.

இந்த வகையில் முதன் முறையாகத் தென்மராட்சி பிரதேச செயலர் பிரிவில் தெரிவு செய்யப்பட்ட பயனாளிகளுக்குக் கோழிக் குஞ்சுகள் வழங்கும் திட்டம் நேற்று ஆரம்பமாகியது.

தென்மராட்சி பிரதேச செயலர் திருமதி அ.சாந்தசீலன் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் அமைப்பின் உப தலைவர் இ.ஜெயசேகரம், பொருளாளர் சீ.வி.கே. சிவஞானம், நிர்வாக உறுப்பினர் இ.ஜெனக்குமார் உட்படப் பலர் கலந்து கொண்டனர். (ம-9)

# தொலைபேசி இணைப்பு வழங்குவதில் பாகுபாடு

## கைதடி மக்கள் விசனம் தெரிவிப்பு

யாழ்ப்பாணம்,ஜூலை 5
கைதடிப் பிரதேசத்தில் வழங்கப்பட்டு வரும் கேபிள் தொலைபேசி இணைப்பு வழங்குவதில் பாகுபாடு காட்டப்பட்டு வருகின்றது என்று அந்தப் பகுதி மக்கள் விசனம் தெரிவிக்கின்றனர்.

கடந்த சில மாதங்களுக்கு முன்னர் கேபிள் தொலைபேசி இணைப்பு வழங்குவதற்காக ரெலிகொம் நிறுவனம் இணைப்புக்கான தூண்களை அமைத்துதொலைபேசி இணைப்பையும் மிக விரைவில் வழங்குவோம் என உறுதி கூறப்பட்டிருந்தது.

இதனை நம்பி பலரும் விண்ணப்பித்திருந்தனர் என்றும் ஆனாலும் இணைப்பை வழங்குவதில் பாகுபாடு காட்டப்படுவதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

இந்த விடயம் தொடர்பாக குறித்த தொலைபேசி நிறுவனத்துடன் தொடர்பு கொண்டு கேட்டபோது, கேபிள் இணைப்புக்காக வயர்கள் போதாத காரணத்தாலேயே மேற்கொண்டு வழங்க முடியாதுள்ளது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த விடயத்தில் உரிய நிறுவனம் உடனடிக் கவனமெடுத்து பாதிக்கப்பட்ட ஏனையோருக்கும் இந்த இணைப்பை வழங்க நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும் பலராலும் வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது. (ம-288)



டெங்கு ஒழிப்பு நடவடிக்கையைத் துரிதப்படுத்தும் முகமாக சுகாதார அமைச்சால் ஜூன் 25 தொடக்கம் ஜூலை 29 வரையான காலப்பகுதியில் சகல இடங்களிலும் டெங்கு ஒழிப்பு சிரமதானங்கள் மேற்கொள்ளுமாறு அறிவிக்கப்பட்டிருந்தது. இதனையடுத்துச் சாவகச்சேரி ஆதார வைத்தியசாலை வளாகத்தில் நேற்று ஊழியர்களும் பொது மக்களும் இணைந்து சிரமதானத்தை மேற்கொண்டனர். (ம-9)

# ஆவணங்கள் இணைப்பு

தென்மராட்சி, ஜூலை 5
தென்மராட்சிப் பிரதேச செயலக ஓய்வூதியர் கிளையால் பராமரிக்கப்பட்டு வரும் ஓய்வூதியர்கள் சிலரது கோவைகளில் சில ஆவணங்கள் இல்லாதிருப்பது கண்டறியப்பட்டுள்ளது.

இந்த ஓய்வூதியர்களிடமிருந்து குறித்த ஆவணத்தைப் பெற்றுக் கோவையில் இணைப்பதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

குறித்த ஆவணங்கள் இல்லாதவர்களுக்கு ஓய்வூதியக் கிளையால் கடிதங்கள் அனுப்பப்பட்டு வருகின்றன. கடிதத்தில் குறிப்பிட்ட ஆவணத்தை ஓய்வூதியக் கிளையில் ஒப்படைக்குமாறு அறிவிக்கப்பட்டுள்ளது.

ஓய்வூதியரின் பிறப்புச் சான்றிதழ், தேசிய அடையாள அட்டை, ஓய்வூதிய இலக்கம், விதவை அநாதை ஓய்வூதிய இலக்கம், ஓய்வு பெற்ற திகதி போன்ற விவரங்களை உடனடியாகச் சமர்ப்பிக்குமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. (ம-9)

# யாழ். – குறிகாட்டுவான் சேவையில் ஈடுபட்ட இ.போ.சவில் பரிசோதகர்கள் கடும்சோதனை

யாழ்ப்பாணம்,ஜூலை 5
யாழ்ப்பாணத்துக்கும் குறிகாட்டுவான் துறைக்கும் இடையில் சேவையில் ஈடுபட்ட இலங்கைப் போக்குவரத்துச் சபையின் யாழ். சாலை பஸ்களில் ரிக்கெட் பரிசோதகர்களின் நடிவடிக்கைகள் இந்த முறை மிகவும் அதிகரித்துக் காணப்பட்டது.

நயினை நாகபூஷசணி அம்மன் ஆலயத்தில் தேர் மற்றும் தீர்த்தத் திருவிழாவுக்கு போக்குவரத்துச் சபை பஸ்கள் கூடுதலாகப் பயன்படுத்தப்பட்டன.

இந்த பஸ்களில் பயணம் செய்த பயணிகளின் எண்ணிக்கையும் கூடுதலாகவே காணப்பட்டது.

இந்த பஸ்களில் பயணம் செய்த பயணிகள் ரிக்கெற் எடுத்தார்களா என்பதை பரிசோதிப்பதில் இம்முறை தீவிரம் காட்டப்பட்டது. பரிசோதகர்கள் ஒவ்வொரு பஸ்களிலும் திடீரென பிரவேசித்து ஒவ்வொரு பயணியிடமும் ரிக்கெற்றைத் துருவி துருவிப் பரிசோதித்தனர்.

இந்த திடீர் அதிரடி நடவடிக்கையை அடுத்து சகல போக்குவரத்துச் சபை பஸ்களிலும் நடத்துநர்கள் ரிக்கெற்களைப் பாதுகாப்பாக வைத்திருக்குமாறு மக்களுக்கு அறிவுறுத்தல் வழங்கியமை குறிப்பிடத்தக்கது. (ம-17)

# உள்ளூர் உற்பத்திக்குச் சந்தை வாய்ப்பு இல்லை

## பனை அபிவிருத்திச் சபை கவலை

யாழ்ப்பாணம், ஜூலை 5
யாழ்.குடாநாட்டில் பனை சார்ந்த உற்பத்திப் பொருள்கள் போதிய சந்தை வாய்ப்பின்றி தேங்கியுள்ளதாகப் பனை அபிவிருத்தி சபை கவலை தெரிவித்துள்ளது.

புழுக்கொடியல், ஒடியல், ஒடியல் மா, பனங்கட்டி போன்ற பனை சார்ந்த உற்பத்திப் பொருள்களே போதிய விற்பனை இன்றித் தேங்கியுள்ளன. இந்த பொருள்களை சகலரும் சுயதொழில் மூலம் உற்பத்தி செய்தும் வருகின்றனர்.

இந்த உற்பத்தியாளர்கள் இந்த பொருள்களை குடாநாட்டின் சகல இடங்களிலும் விற்பனை செய்து வருகின்றனர்.

இதன் காரணத்தால் இந்தப் பொருள்கள் போதிய விற்பனை இன்றி தேங்கி காணப்படுகின்றன. அதே சமயம் பனாட்டின் உற்பத்தி கடந்த போகத்தின் போது மிக குறைவாகவே காணப்பட்டது.

இதன் காரணத்தால் பனாட்டுக்குப் பெரும் கிராக்கி நிலவுவதோடு ஒரு கிலோ பனாட்டு ஆயிரம் ரூபா வரைக்கும் விற்பனை செய்யப்பட்டு வருகின்றது என்று மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம-17)

# படுமோசமான நிலையில் சரசாலை - மட்டுவில் வீதி

## உரியவர்கள் கவனிப்பார்களா?

சரசாலை மத்தியிலிருந்து மட்டுவிலுக்குச் செல்லும் வீதி நீண்டகாலமாகத் திருத்தப்படாமல் உள்ளதாக அந்தப் பகுதி மக்கள் தெரிவித்தனர்.

கனகன்புளியடி - சரசாலை வீதியில் சரசாலை ப.நோ.கூ. சங்கக் கிளைக்கு முன்பாக ஆரம்பித்து சரசாலை மத்தி ஊடாக மட்டுவில் வடக்கு கமலாசனி வித்தியாலயத்துக்கு அருகில் செல்லும் வீதியே திருத்தப்படாமல் உள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

மட்டுவில் வடக்குப் பகுதி மக்கள் சரசாலைக்குச் செல்வதற்கு இந்த வீதி குறுகிய தூரமாக உள்ளதால் பெரும்பாலானோர் இந்த வீதியைப் பயன்படுத்துகின்றனர். இந்த வீதியில் உள்ள 150 இற்கும் மேற்பட்ட குடும்பங்களைச் சேர்ந்த மக்களும் மாணவர்களும் இந்த வீதியையே பயன்படுத்துகின்றனர்.

2000 ஆம் ஆண்டு தொடக்கம் 2003 ஆம் ஆண்டு வரையான காலப்பகுதியில் கனகன்புளியடியிலிருந்து சரசாலைக்குச் செல்லும் வீதி தடை செய்யப்பட்டிருந்ததால் கனரக வாகனங்கள் உட்படப் பொதுமக்கள் இந்த வீதியையே பயன்படுத்தினர். இதனால் வீதியின் பெரும்பாலான பகுதிகள் மணல் வீதியாக மாறியதால் மோட்டார் சைக்கிள் மற்றும் சைக்கிள்களில் செல்வோர் பல இடங்களில் இறங்கி நடந்து செல்ல வேண்டிய நிலையே உள்ளது. சுமார் 2 கிலோமீற்றர் நீளமான இந்த வீதி 50 வருடங்களுக்கு மேலாக எந்தவித புனரமைப்புமின்றிக் காணப்படுகிறது.

இந்த வீதியை மீள செப்பனிட்டு வழங்குமாறு உரிய அதிகாரிகளுக்கும் சாவகச்சேரி பிரதேச சபையினருக்கும் பல தடவைகள் அறிவித்தும் பயன் கிடைக்கவில்லை எனவும் தெரிவிக்கப்பட்டது. (ம-9)

# காணொலிப்பேழை வெளியீடு

யாழ்ப்பாணம், ஜூலை 5
நல்லூர் பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட வண்ணார் பண்ணை, கந்தர்மடம், நல்லூர், திருநெல்வேலி கிராம அலுவலர் பிரிவுகளைச் சேர்ந்த நூறு இந்து ஆலயங்களின் வரலாற்று காணொலிப்பேழை எதிர் வரும் 14 ஆம் திகதி நல்லூர் பிரதேச செயலகக் கலாசாரப் பகுதியால் வெளியிடவுள்ளது.

குறிப்பிட்ட பகுதிகளில் உள்ள ஆலயங்களில் வரலாறுகள் விடுபட்டிருப்பின் நல்லூர் பிரதேச கலாசாரப் பகுதியுடன் தொடர்புகொள்ளுமாறு பிரதேச செயலர் பா.செந்தில்நந்தனன் தெரிவித்துள்ளார். (ம-7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தி.மு.கவின் சிறை நிரப்புப் போராட்டம்

# ஒரு லட்சத்துக்கும் மேற்பட்டோர் கைது

சென்னை, ஜூலை 5

தி.மு.கவினர் மீது அ.தி.மு.க. அரசு பொய் வழக்குப் போடுவதைக் கண்டித்து தி.மு.க. சார்பில் நேற்று தமிழகம் முழுவதும் சிறை நிரப்புப் போராட்டம் நடைபெற்றது. தி.மு.க. பொருளாளர் மு.க.ஸ்டாலின், மாநிலங்களவை உறுப்பினர் கனிமொழி, முன்னாள் அமைச்சர்கள் டி.ஆர்.பாலு, தாமோ அன்பரசன், நடிகை குஷ்பு, முன்னாள் மத்திய அமைச்சர் தயாநிதி மாறன், முன்னாள் சபாநாயகர் ஆவுடையப்பன் உட்பட தமிழகம் முழுவதும் சுமார் ஒரு லட்சம் பேர் வரை கைது செய்யப்பட்டிருக்கின்றனர் என்று தி.மு.க. வட்டாரத் தகவல்கள் தெரிவிக்கின்றன.









போராட்டத்தில் ஈடுபட்டுக் கைதான அத்தனை பேரும் திருமண மண்டபங்களில் தங்க வைக்கப்பட்டுள்ளனர்.

தமிழகத்தில் அ.தி.மு.க. ஆட்சிக்கு வந்த பின்னர் தி.மு.கவினர் மீது பொய் வழக்குகளைப் போடுவதாகவும், குண்டர் சட்டத்தைப் பிரயோகிப்பதாகவும் தி.மு.க. தலைமை கண்டனம் தெரிவித்துள்ளது. இதைக் கண்டிக்கும் வகையில் நேற்று சிறை நிரப்புப் போராட்டத்தை நடத்த அது அழைப்பு விடுத்திருந்தது.

அதன்படி தமிழகம் முழுவதும் நேற்று தி.மு.கவினர் சிறைகளை நிரப்பும் வகையில் மறியல், ஆர்ப்பாட்டம் உள்ளிட்ட போராட்டங்களை நடத்தினர். இதற்காக மாநிலம் முழுவதும் ஆயிரக்கணக்கானோர் திரண்டு வந்தனர்.

போராட்டத்தில் கலந்து கொள்ள வந்தவர்களை ஆங்காங்கே வழிமறித்தும், போராட்டக் களத்தில் வைத்தும் பொலிஸார் கைது செய்தனர்.

ஒவ்வொரு பிரதேசத்திலும் பல்லாயிரக்கணக்கானோர் கைது செய்யப்பட்டனர் என்று தி.மு.க. தரப்பில் தகவல்கள் தெரிவிக்கப்பட்டன. கைது செய்யப்பட்ட அனைவரும் உடனடியாக அருகில் உள்ள திருமண மண்டபங்களுக்குக் கொண்டு சென்று தங்க வைக்கப்பட்டனர்.

சென்னையில் 22 இடங்களில் போராட்டம் நடைபெற்றது. கொளத்தூரில் மு.க.ஸ்டாலின் தலைமையிலும், சைதாப்பேட்டையில் கனிமொழி தலைமையிலும் போராட்டங்கள் நடைபெற்றன.

**பிரமாண்டமான வெற்றி**

இதுகுறித்து தி.மு.க தலைவர் கலைஞர் தெரிவித்ததாவது:-

தி.மு.க. போரட்டத்தில் எதிர்பார்த்த அளவை விட பெருந்திரளான தொண்டர்கள் கலந்து கொண்டனர். தி.மு.கவின் போராட்டம் பிரமாண்டமான வெற்றியைப் பெற்றுள்ளது. எத்தனை போராட்டங்கள் நடத்தினால் அ.தி.மு.க. அரசு திருந்தும் என்ற நம்பிக்கை இல்லை. எழுச்சியுடன் நடைபெற்ற போராட்டத்தில் திமுகவினர் உற்சாகத்துடன் கலந்து கொண்டனர்- என்றார். (வ)

## நித்தியின் அறக்கட்டளைக்கு எதிராக அமெரிக்காவில் தீர்ப்பு



சென்னை, ஜூலை 5

நித்தியானந்தா அறக்கட்டளைக்கு எதிராக அமெரிக்க நீதிமன்றத்தில் தொடரப்பட்ட வழக்கில் அந்த அறக்கட்டளை குற்றம் புரிந்துள்ளதாகத் தீர்ப்பளிக்கப்பட்டுள்ளது.

பொபத்லால் சாவ்லா என்பவர் நித்தியானந்தாவுக்கு எதிராக கலிபோர்னியா மாவட்ட நீதிமன்றத்தில் வழக்குத் தொடர்ந்திருந்தார். அமெரிக்காவில் வேதிக் பல்கலைக் கழகம் ஒன்றை ஆரம்பிக்க நித்தியானந்தா அறக்கட்டளைக்கு 1.57 மில்லியன் டொலர் நன்கொடை அளித்ததாகவும், ஆனால் உறுதி அளித்தபடி பல்கலைக்கழகம் ஆரம்பிக்கப்படவில்லை என்றும் அவர் தனது மனுவில் குறிப்பிட்டிருந்தார். இதை விசாரித்த நீதிமன்றம் நித்தியானந்தா அறக்கட்டளை இந்த விவகாரத்தில் குற்றம் புரிந்துள்ளது உறுதிப்படுத்தப்பட்டுள்ளதாகத் தீர்ப்பளித்துள்ளது. நன்கொடையாக அளிக்கப்பட்ட 1.57 மில்லியன் டொலரை பொபத் லால் சாவ்லாவுக்கு திருப்பி அளிக்குமாறு நித்தியானந்தா அறக்கட்டளைக்கு உத்தரவிட்ட நீதிமன்றம், இந்த வழக்கில் தண்டனை விபரம் எதிர்வரும் 19 ஆம் திகதி அறிவிக்கப்படும் என்று தெரிவித்துள்ளது. (வ)

## ஜெகன் மோகன் ரெட்டியின் பிணை மனு நிராகரிப்பு



ஹைதராபாத், ஜூலை5

வை.எஸ்.ஆர். காங்கிரஸ் கட்சித் தலைவர் ஜெகன் மோகன் ரெட்டியின் பிணை மனுவை ஆந்திர உயர் நீதி மன்றம் நிராகரித்தது.

ஜெகன்மோகன் சொத்துக்குவிப்பு வழக்கில் கைது செய்யப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டுள்ளார். சொத்துக்குவிப்பு வழக்கு விசாரணை முக்கிய கட்டத்தில் இருப்பதால் அவருக்குப் பிணை வழங்க மத்திய புலனாய்வுத் துறை எதிர்ப்புத் தெரிவித்தது. அதை ஏற்று அவரது பிணை மனுவை உயர்நீதி மன்றம் நிராகரிப்புச் செய்து உத்தரவிட்டது.

ஜெகன்மோகன் ரெட்டி சார்பாக மூத்த சட்டத்தரணி ஜேத்மலானி முன்னிலையாகி வாதாடினார். (வ)

### இந்திய துணை ஜனாதிபதி தேர்தல்

## அடுத்த மாதம் 7ஆம் திகதி

டில்லி, ஜூலை 5

துணை ஜனாதிபதித் தேர்தல் எதிர்வரும் ஓகஸ்ட் மாதம் 7 ஆம் திகதி நடத்தப்படும் என்று தேர்தல் ஆணையம் அறிவித்துள்ளது.

துணை ஜனாதிபதியாக இருக்கும் ஹமீது அன்சாரியின் பதவிக்காலம் எதிர்வரும் ஓகஸ்ட் மாதம் 10 ஆம் திகதியுடன் முடிவடைகிறது. இதையடுத்து அந்த பதவிக்கான தேர்தல் நடத்துவது குறித்து தலைமைத் தேர்தல் ஆணையர் வி.எஸ். சம்பத் தேர்தல் ஆணையாளர் எச்.எஸ். பிரம்மா, துணை ஆணையாளர்கள் உள்ளிட்ட அதிகாரிகளுடன் நேற்று முன்தினம் ஆலோசனை நடத்தினார்.

அதன் பின்னர் துணை ஜனாதிபதி பதவிக்கான தேர்தல் எதிர்வரும் ஓகஸ்ட் மாதம் 7ஆம் திகதி நடைபெறும் என்று அறிவிக்கப்பட்டது.

இந்தத் தேர்தலுக்கான வேட்புமனுத் தாக்கல் செய்வோர் நாளை தொடக்கம் எதிர்வரும் 20 ஆம் திகதி வரை தாக்கல் செய்யலாம். எதிர்வரும் 21 ஆம் திகதி வேட்புமனுக்கள் பரிசீலிக்கப்படும். வேட்புமனுக்களை வாபஸ் பெற விரும்புவோர் எதிர்வரும் 23 ஆம் திகதிக்குள் வாபஸ் பெற வேண்டும். (வ)

## பிரணாப், சங்மாவின் வேட்பு மனுக்கள் ஏற்பு

ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடும் இரு பிரதான வேட்பாளர்களின் மனுக்களும் பரிசீலனைக்குப் பின்னர் ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ளன என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

ஆளும் ஐக்கிய முற்போக்குக் கூட்டணியின் சார்பில் போட்டியிடும் முன்னாள் நிதியமைச்சர் பிரணாப் முகர்ஜியின் வேட்பு மனு நிராகரிக்கப்பட வேண்டும் என்று எதிர்கட்சிகளின் வேட்பாளர் பி.ஏ. சங்மா முறையிட்டிருந்தார்.

வேட்பு மனுத்தாக்கல் செய்யப்படும் நாளில் பிரணாப் முகர்ஜி, ஊதியம் பெறும் பதவியான, கொல்கத்தாவிலிருந்து செயற்படும், இந்தியப் புள்ளியியல் நிறுவனத்தின் தலைவர் பொறுப்பில் இருந்தார் என்றும், அதன் காரணமாக அவரது மனு நிராகரிக்கப்பட வேண்டும் எனவும் சங்மா தரப்பில் ஆட்சேபம் தெரிவிக்கப்பட்டிருந்தது.

ஆனால் மனு தாக்கல் செய்யும் முன்பாகவே அப்பொறுப்பிலிருந்து பிரணாப் முகர்ஜி விலகிவிட்டார் என்று ஆளும் தரப்பில் வாதிடப்பட்டது.

இருதரப்பு வாதங்களைக் கேட்ட தேர்தல் அதிகாரி, பிரணாப் முகர்ஜி விதிமீறல் எதையும் செய்யவில்லை என்று கூறி அவரது வேட்பு மனு ஏற்கப்படுவதாக அறிவித்தார். (வ)



ஜனாதிபதி வேட்பாளரான பிரணாப் முகர்ஜி, ஆதரவு கோரி உத்தரப்பிரதேச [illegible] அவரை பகுஜன்சமாஜ் [illegible] மலர்செண்டு கொடுத்து வரவேற்றார். (வ)

### 2 'ஜி' ஸ்பெக்ட்ரம் விவகாரம்

## ஜே.பி.சி. சாட்சிகள் பட்டியலில் வாஜ்பாய், சிதம்பரம் பெயர்கள்





டில்லி, ஜூலை 5

ஸ்பெக்ட்ரம் விவகாரம் தொடர்பாக விசாரணை நடத்திவரும் நாடாளுமன்ற கூட்டுக் குழுவின் சாட்சிகள் பட்டியலில் முன்னாள் பிரதமர் வாஜ்பாய், மத்திய அமைச்சர் ப.சிதம்பரம் உள்ளிட்டோரின் பெயர்கள் இடம்பெற்றுள்ளன. 2ஜி ஸ்பெக்ட்ரம் ஒதுக்கீடு விவகாரம் தொடர்பாக விசாரணை நடத்த பி.சி.சாக்கோ தலைமையில் நாடாளுமன்ற கூட்டுக்குழு (ஜே. பி.சி) அமைக்கப்பட்டுள்ளது. ஜே.பி.சி கூட்டம் டில்லியில் நேற்று முன்தினம் நடந்தது. இதில், சாட்சிகள் பட்டியலை பி.சி. சாக்கோ தாக்கல் செய்தார். பட்டியலில் முன்னாள் பிரதமர் வாஜ்பாய், மத்திய உள்துறை அமைச்சர் ப.சிதம்பரம் ஆகியோர் உட்பட பலரது பெயர்கள் இடம் பெற்றிருந்தன.

இதற்கு பாரதீய ஜனதாக்கட்சியைச் சேர்ந்த யஷ்வந்த் சின்கா எதிர்ப்புத் தெரிவித்தார். முன்னாள் பிரதமர் வாஜ்பாயை சாட்சியாக வரவழைத்தால், பிரதமர் மன்மோகன் சிங்கை அழைக்க வேண்டும் என்ற எங்கள் கோரிக்கையையும் ஏற்க வேண்டும் என்று யஷ்வந்த் சின்கா கூறினார். இதைத் தொடர்ந்து சாக்கோ தெரிவித்ததாவது:-

''வாஜ்பாய் பெயரை நான் சேர்க்கவில்லை. சாட்சிகள் எண்ணிக்கையைக் குறைப்பது தொடர்பாகப் பேசி முடிவு செய்ய வேண்டும். எனவே, இந்தப்பட்டியலை வாபஸ் பெறுகிறேன்'' - என்றார். எதிர்வரும் 10 ஆம் திகதி நடக்கும் அடுத்த கூட்டத்தில் சாட்சிகளாக யாரையெல்லாம் அழைக்க வேண்டும் என்பது பற்றி முடிவு செய்யப்படும் என்று ஜே.பி.சி. வட்டாரங்கள் தெரிவித்தன. (வ)

## எயார் இந்தியா விமானிகளின் வேலை நிறுத்தம் முடிவுக்கு வந்தது

வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டுள்ள எயார் இந்தியா விமானிகளை 48 மணி நேரத்துக்குள் பணிக்குத் திரும்ப வேண்டும் என்று டில்லி நீதிமன்றம் உத்தரவிட்டிருப்பதால், எயார் இந்தியா விமானிகளின் வேலை நிறுத்தம் நேற்று முன்தினத்துடன் முடிவுக்கு வந்ததாகத் தெரிகிறது.

சம்பள உயர்வு உள்ளிட்ட பல கோரிக்கைகளை முன்வைத்து எயார் இந்தியா விமானிகள் நேற்றுமுன்தினம் 58 ஆவது நாளாக வேலை நிறுத்தப் போராட்டத்தில் ஈடுபட்டிருந்தனர். இவர்களில் 100 விமானிகளை, நிர்வாகம் பணிநீக்கமும் செய்திருந்தது. அதன் பின்னர் கருணை அடிப்படையிலும் விமானிகள் சங்கம் தாக்கல் செய்திருந்த மனுவின் அடிப்படையிலும் இவர்களை டில்லி உயர்நீதி மன்றம் 48 மணி நேரத்துக்குள் வேலையில் மீண்டும் சேரவேண்டும் என்று உத்தரவிட்டுள்ளது.

இதையடுத்து விமானிகளும் வேலை நிறுத்தத்தை கைவிட்டுக் கடமைக்கு மீண்டும் திரும்புவர் என்று தெரிவிக்கப்பட்டது. (வ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இஸ்ரேலைத் தாக்கும் ஏவுகணை


## பரிசோதித்தது ஈரான்

தெஹ்ரான், ஜூலை 5

ஈரான் ராணுவம் இஸ்ரேலைத் தாக்கும் திறன் படைத்த ஏவுகணையை நேற்றுமுன்தினம் வெற்றிகரமாக ஏவி சோதித்துப் பார்த்தது. தங்கள் நாட்டின் மீது தாக்குதல் நடத்தப்பட்டால் பதிலடி கொடுக்கத் தயாராக இருப்பதை உணர்த்தவே இத்தகைய சோதனை நடத்தப்பட்டதாகத் தெரிகிறது.

அந்த நாட்டிலுள்ள காவிர் பாலைவனத்திலிருந்து ஷஹாப்-3 என்ற பெயரிலான இந்த ஏவுகணை சோதித்துப் பார்க்கப்பட்டது. ஈரான் ராணுவம் ஒரு வார ராணுவ ஒத்திகையை நிகழ்த்தி வருகிறது. இந்த ஒத்திகை எதிர்வரும் புதன்கிழமையுடன் நிறைவடைகிறது.

ஷஹாப் - 3 ரக ஏவுகணை 2,000 கி.மீ. தூரம் சென்று இலக்கைத் தாக்கும் வகையில் வடிவமைக்கப்பட்டுள்ளது. இதன் மூலம் 1,000 கி.மீ. தொலைவில் உள்ள இஸ்ரேலைத் தாக்கும் வகையில் இது உருவாக்கப்பட்டுள்ளதாக ராணுவ வட்டாரங்கள் தெரிவித்தன.



இதற்கு முன்பு ஷஹாப்-1 மற்றும் ஷஹாப் -2 ஆகிய குறுகிய தொலைவு ஏவுகணைகளை ஈரான் ராணுவம் சோதித்துப் பார்த்தது. இவை முறையே 300 கி.மீ. மற்றும் 500 கி.மீ. தூரம் சென்று தாக்கும் திறன் படைத்தவை.

12-க்கும் மேற்பட்ட ஏவுகணைகள் பல்வேறு இடத்திலிருந்து ஏவப்பட்டு கார்வி பாலை வனத்தில் உள்ள இலக்கைத் தாக்கும் வகையில் சோதனை மேற்கொள்ளப்பட்டது என ராணுவத்தினர் தெரிவித்தனர்.

2,000 கி.மீ. தூரம் சென்று தாக்கும் திறன் படைத்த ஷஹாப்-3 ஏவுகணை, சோதனையின்போது 1,300 கி.மீ. தொலைவில் இலக்கைத் தாக்கும் வகையில் வடிவமைக்கப்பட்டிருந்தது.

ராணுவ ஒத்திகையின் நிறைவு நாளன்று ஆளில்லா விமானம் மூலம் குண்டுகளை வீசும் பயிற்சி மேற்கொள்ளப்பட உள்ளது என 'இஸ்னா' செய்தி நிறுவனத்துக்கு அளித்த பேட்டியில் பிரிகேடியர் ஜெனரல் அமிர் அலி ஹஜிஸாதே தெரிவித்தார். இஸ்தான்புல்லில் மேற்கத்திய நாடுகளின் பிரதிநிதிகள் ஈரான் அதிகாரிகளிடம் அணு ஆயுதத் திட்டத்தைக் கைவிடுவது குறித்து பேச்சு நடத்தி வருகின்றனர். இந்த நிலையில் ஏவுகணை சோதனையை ஈரான் நடத்தியுள்ளது குறிப்பிடத்தக்கது.

# கொடிய விஷம் வைத்தே கொல்லப்பட்டார் அரபாத்



உடல்நலக்குறைவு காரணமாகப் பாலஸ்தீன முன்னாள் தலைவர் அரபாத்,2004 ஆண்டு நவம்பர் 11ஆம் திகதி உயிரிழந்தார்.

75 வயதாகிய நிலையில் யசீர் அரபாத் உயிரிழந்தது உடல் நலக்குறைவு என கருதப்பட்டு வந்த நிலையில், அவரது மனைவி சுஹாவிடம் கொடுக்கப்பட்ட அரபாத்தின் உயிரியல் மாதிரிகளை வைத்து ஆய்வு மேற்கொள்ளப்பட்டது.

சுவிற்சர்லாந்தில் நடந்த இந்த ஆய்வில் அவருக்கு பொலோனியம் என்ற கதிர் வீச்சுக் கொண்ட கொடிய விஷம் கொடுக்கப்பட்டது எனவும் இதன் காரணமாகவே அவர் மரணமடைந்தார் எனவும் அரேபிய ஊடகமான அல்-ஜெசீரா தெரிவித்துள்ளது.

இது குறித்து லாசேன் பல்கலைக்கழகத்தின் கதிர்வீச்சு இயற்பியல் துறைத் தலைவர் பிரான்காய்ஸ் போசட் கூறிய தாவது:-

யசீர் அரபாத்தின் உயிரியல் மாதிரிகளை ஆய்வு செய்ததில் அதில் குறிப்பிடத்தக்க அளவு பொலோனியம் இருந்தது- என்றார்.

அரபாத் இறந்தபோது அவரை இஸ்ரேல் விஷம் வைத்துக் கொன்றுவிட்டது என பாலஸ்தீன அதிகாரிகள் தெரிவித்தனர்.

ஆனால் அவர் விஷம் வைத்துக் கொல்லப்படவில்லை என்று 2005 ஆம் ஆண்டு விசாரணை அறிக்கையில் தெரிவிக்கப்பட்டது என்பது குறிப்பிடத்தக்கது.

இந்தப்பொலோனியத்தை இஸ்ரேல்தான் அரபாத்தின் உணவில் கலந்திருக்க வேண்டும் என்று அவரது ஆதரவாளர்கள் கூறுகின்றனர்.

## சர்கோஸியின் வீட்டில் பொலிஸ் தேடுதல்

பிரான்ஸின் முன்னாள் ஜனாதிபதி நிக்கோலஸ் சர்கோஸியின் வீட்டிலும், அலுவலகத்திலும் அந்த நாட்டுப் பொலிஸார் நேற்று தேடுதல் நடவடிக்கையில் ஈடுபட்டனர்.

2007 ஆம் ஆண்டு பிரான்ஸ் ஜனாதிபதித் தேர்தலுக்கான பிரசாரத்திற்கு நிதி சேகரித்தமை தொடர்பான குற்றச்சாட்டுக்கள் காரணமாக இந்தத் தேடுதல் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது என தெரிவிக்கப்பட்டுள்ளது.

சர்கோஸி ஒரு பங்காளராக உள்ள சட்ட நிறுவனம் ஒன்றிலும் சோதனை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

பிரான்ஸின் மிகப்பெரிய செல்வந்த பெண்மணியான லிலியானே பெட்டன்கோர்ட் டிடமிருந்து 2007 ஆம் ஆண்டின் தேர்தல் பிரசாரத்திற்காக சட்டவிரோதமான வகையில் நன்கொடை பெற்றதாக சார்கோஸி மீது குற்றம் சுமத்தப்பட்டுள்ளது. அந்தப் பெண்ணின் தரப்பினர் சர்கோஸிக்கு 150,000 யூரோவை வழங்கினர் என விசாரணை ஒன்றில் கூறப்பட்டுள்ளது.

2007 முதல் பிரான்ஸ் ஜனாதிபதியாகப் பதவி வகித்த நிக்கோலஸ் சர்கோஸி கடந்த மே மாதம் நடை பெற்ற ஜனாதிபதித் தேர்தலில் பிரான்ஸூவா ஹோலன் டிடம் தோல்வியுற்றார்.

தற்போது அவர் தனது குடும்பத்தினருடன் கனடாவில் தங்கியுள்ளார்.

# தாமிர தொழிற்சாலைத் திட்டத்தைக் கைவிட்டது சீனா

பீஜிங், ஜூலை 5

சுற்றுச் சூழலுக்குப் பாதிப்பு ஏற்படுத்தும் எனக் கூறி, மக்கள் பெரிய அளவில் போராட்டம் நடத்தியதால், தாமிர தொழிற்சாலை அமைக்கும் திட்டத்தை சீன அரசு கைவிட்டுள்ளது.

சீனாவின் சிச்சுவான் மாகாணத்தில் உள்ளது ஷிபாங் நகரம். இங்கு, தாமிர தொழிற்சாலையை அமைக்க அரசு முடிவு செய்தது. இதற்கான பணிகள் தொடங்கின. ஆனால், 'சுற்றுச் சூழலுக்குப் பாதிப்பு ஏற்படுத்தும் இந்தத் தொழிற்சாலையை அமைக்கக்கூடாது' எனக் கூறி ஷிபாங் நகர மக்கள் வலைத்தளம் உள்ளிட்டவை மூலம் தங்கள் எதிர்ப்பைத் தெரிவித்தனர். ''போராட்டம் நடத்தும் மக்கள் மீது கடும் நடவடிக்கை பாயும் என, அரசு எச்சரித்தது. எங்களுக்கு சுகாதாரம் தான் முக்கியம் எனக், கூறி பாடசாலை மாணவர்கள் தொடக்கம் நகர மக்கள் வரை அனைவரும் ஒன்று திரண்டு, கடந்த 2ஆம்திகதி இரவு, அரசு அலுவலகங்களை முற்றுகையிட்டனர்.



மறுநாள் விடிந்தும், மக்கள் அந்த இடத்தை விட்டு நகரவில்லை. பொலிஸார் தடியடி நடத்தியும், கண்ணீர் புகைக் குண்டுகளை வீசியும் மக்களைக் கலைந்து போகச் செய்தனர்.

இந்தச் சம்பவத்தில் ஒருவர் உயிரிழந்தார். இதனால், நிலைமை மோசமானது. தங்கள் போராட்டத்தைக் கைவிடப் போவதில்லை என, மக்கள் சபதம் ஏற்றனர். நிலைமை விபரீதமாகப் போவதை உணர்ந்த சீன அரசு, தாமிர தொழிற்சாலைத் திட்டத்தை கைவிடுவதாக அறிவித்துள்ளது.

சுற்றுச்சூழல் குறித்த விழிப்புணர்வு, சீன மக்களிடையே அதிகரித்துள்ளது. கடந்த ஆண்டு டாலியான் பகுதியில் இரசாயன தொழிற்சாலை திறக்கப்பட இருந்தது. 12 ஆயிரம் மக்களின் தொடர் போராட்டம் காரணமாக, இந்தத் தொழிற்சாலை திறப்பதை அரசு கைவிட்டது என்பது குறிப்பிடத்தக்கது.

## மியன்மாரில் 80 கைதிகள் விடுதலை

மியன்மாரில் 34 வெளிநாட்டு கைதிகள் உட்பட 80 பேர் சிறையிலிருந்து விடுவிக்கப்பட்டுள்ளனர். மியன்மாரில் பல ஆண்டுகளாக ராணுவ ஆட்சி நடக்கிறது. கடந்த ஆண்டு தீன் சீன் தலைமையிலான அரசு பதவி ஏற்றது. இதைத் தொடர்ந்து சில ஜனநாயக நடைமுறைகள் தலைகாட்டத் தொடங்கியுள்ளன. நீண்ட காலமாக வீட்டு சிறையில் அடைக்கப்பட்டிருந்த, ஜனநாயக தலைவர் ஆங் சாங் சூகி விடுவிக்கப்பட்டார். சமீபத்தில் இவர் தேர்தலில் போட்டியிட்டு நாடாளுமன்ற உறுப்பினராகியுள்ளார்.கடந்த மார்ச் மாதம் முதல் இதுவரை, 28,424 கைதிகள் விடுதலை செய்யப்பட்டுள்ளனர். இந்த நிலையில் நேற்றுமுன்தினம், 34 வெளிநாட்டுக் கைதிகள் உட்பட 80 கைதிகள் மனிதாபிமான அடிப்படையில் விடுவிக்கப்பட்டுள்ளனர். வெளிநாடுகளுடனான உறவை மேம்படுத்தும் வகையில், 34 வெளிநாட்டு கைதிகள் விடுவிக்கப்பட்டு அவரவர் நாடுகளுக்கு அனுப்பப்பட்டு வருகின்றனர்.



ஆப்கனில் அல்.குவைதா வேட்டையில் ஈடுபட்டிருக்கும் அமெரிக்க ராணுவத்தினர் இப்படித்தான் ஓய்வெடுக்கின்றனர்.

## அழகான மனைவியைக் கொலை செய்த கணவன்

மனைவி மிக அழகாக இருந்ததால் பொறாமையடைந்த கணவன் அவரைக் கத்திரிகோலால் குத்திக் கொலை செய்துள்ளார்.இத்தாலியின் நேப்பிள்ஸ் பகுதியைச் சேர்ந்தவர் ஜியான் கார்லோ. தொழிற்சாலை ஊழியராகப் பணியாற்றுகின்றார். இவரது மனைவி அலெஸ் சான்ட்ரா. இவர்களுக்கு ஆறு மற்றும் நான்கு வயதில் இரண்டு குழந்தைகள் உள்ளனர்.

மனைவி அலெஸ்சான்ட்ரா அழகாக இருந்ததால் அவர் மீது ஜியான்கார்லோவுக்கு சந்தேகப்புத்தி எழுந்தது. இதனால் அவரை தனியாக விட்டுச் செல்ல முடியாமல் தவித்தார். இந்த நிலையில் நேற்றுமுன்தினம் பால்மா பகுதியில் உள்ள தனது வீட்டில் அலெஸ்சாண்ட்ராவை இரண்டு கத்தரிகோலால் மார்பில் குத்திக் கொலை செய்தான். அந்த நேரத் தில் குழந்தைகள் உறங்கிக் கொண்டிருந்தனர். இந்தக் கொலைச் சம்பவத்தைக் கேள்விப்பட்ட பொலிஸார், ஜியான் கார்லோவை கைது செய்தனர். 'மனைவி மிக அழகாக இருந்ததால்தான் கொலை செய்தேன்' என, பொலிஸாரிடம் தனது வாக்கு மூலத்தில் தெரிவித்துள்ளார்.

## மூன்று இந்தியர்களைக் கொன்ற ஆஸ்திரேலியருக்கு 45 ஆண்டு சிறை

இந்திய வம்சாவளியினரான, மூன்று பேரைக் கொன்ற ஆஸ்திரேலியருக்கு, சிறைத் தண்டனை உறுதி செய்யப்பட்டுள்ளது. 45 ஆண்டுகாலம் இவருக்கு சிறைத்தண்டனை விதிக்கப்படலாம் என எதிர்பார்க்கப்படுகிறது. ஆஸ்திரேலியாவின் பிரிஸ்பேன் பகுதியைச் சேர்ந்தவர், மேக்ஸ் சிகா. இவரது காதலி நீல்மா சிங். 2003ஆம் ஆண்டு, மேக்ஸ், தனது காதலி நீல்மா சிங்கையும், குழந்தைகள் குணால்சிங், சித்தி சிங் ஆகியோரையும் குத்திக் கொலை செய்தார். இந்தக் கொலையைத் தான் செய்யவில்லை, என மேக்ஸ் மறுத்து வருகிறார். இருப்பினும், சாட்சியங்களின் அடிப்படையில் அவருக்கு கொலைக் குற்றத்துக்கான தண்டனை உறுதி செய்யப்பட்டுள்ளது. ஆஸ்திரேலியாவின் குயின்ஸ்லாந்து மாகாண சட்டப்படி, கொலைக் குற்றத்துக்கு, ஆயுள் தண்டனை உறுதி. பரோலில் வெளிவரமுடியாத படி, 20 ஆண்டு சிறை தண்டனை விதிக்கப்படும். மேக்ஸ், மூன்று கொலைகளைச் செய்துள்ளதால், அவருக்கு, 45 ஆண்டுகாலம் சிறைத் தண்டனை கிடைக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது. அரசு இந்தத் தண்டனைக்கு அனுமதியளித்ததும், அவரது தண்டனை, உறுதி செய்து நிறைவேற்றப்படும். ''நீங்கள் ஏதாவது கூற விரும்புகிறீர்களா?'' என நீதிபதிகள், கொலையாளி மேக்ஸிடம் கேட்டனர்.


அதற்கு நான் இந்தக் கொலையை செய்யவில்லை. குயின்ஸ்லாந்து சட்டம் சரியில்லை. அவ்வளவுதான் நான் கூற முடியும் எனக் கூறினான்.

நான் இந்தக் கொலையை செய்யவில்லை. குயின்ஸ்லாந்து சட்டம் சரியில்லை. அவ்வளவுதான் நான் கூற முடியும் எனக் கூறினான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 27 சித்திரவதை நிலையங்கள்

## சிரியாவில் இயங்குகின்றன



சிரியாவின் புலானாய்வுப் பிரிவினரின் 27 சித்திரவதை நிலையங்களில் மனிதாபிமானத்திற்கு எதிரான குற்றங்கள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன என்று மனித உரிமைகள் கண்காணிப்பகம் குறிப்பிட்டுள்ளது.

குறித்த நிலையங்களில் அதிகாரிகளால் ஆயிரக் கணக்கானவர்கள் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர் என கண்காணிப்பகத்தின் அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

தடிகள் மற்றும் கேபிள்கள் மூலம் அடித்தல், அமிலம் மூலம் எரித்தல், பாலியல் துஷ்பிரயோகம், கைவிரல் நகங்களைப் பிடுங்குதல் போன்ற துன்புறுத்தல்கள் அங்கு மேற்கொள்ளப்படுகின்றன என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

அசாத்தின் அரசுக்கு எதிரான ஆர்பாட்டங்கள் ஆரம்பித்ததையடுத்து இந்த நிலையங்கள் இயங்கி வருகின்றன என்று கண்காணிப்பகம் சுட்டிக்காட்டியுள்ளது.

துன்புறுத்தலுக்கு இலக்கானதாகக் கூறப்படும் 200 இற்கும் மேற்பட்டவர்களிடம் நேர்காணல் மேற்கொண்டதாகவும் சர்வதேச மனித உரிமைகள் கண்காணிப்பகம் குறிப்பிட்டுள்ளது.

இந்த விடயத்தைச் சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்துக்குக் கொண்டு செல்ல வேண்டுமெனவும் மனித உரிமைகள் கண்காணிப்பகம் வலியுறுத்தியுள்ளது.

**குறித்த நிலையங்களில் அதிகாரிகளால் ஆயிரக்கணக்கானவர்கள் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர் என கண்காணிப்பகத்தின் அறிக்கையில் சுட்டிக்காட்டப் பட்டுள்ளது.**

# கவலையடைகிறார் அசாத்



தனது ராணுவத்தினர் தற்பாதுகாப்பு நடவடிக்கையாகவே அந்த விமானத்தைச் சுட்டனர் என கூறியுள்ள ஜனாதிபதி அசாத், இந்தச் சம்பவத்திற்காக மன்னிப்பு கோரவில்லை.

துருக்கிய விமானமொன்று சிரியப் படையினரால் சுட்டு வீழ்த்தப்பட்டமைக்காகத்தான் கவலையடைவதாக சிரியாவின் ஜனாதிபதி பஷர் அல் அசாத் கூறியுள்ளார் என துருக்கியப் பத்திரிகையொன்று நேற்று செய்தி வெளியிட்டுள்ளது. எனினும் அந்த விமானம் சிரியக் கடற்பரப்புக்குள்ளேயே சுடப்பட்டது எனவும் அவர் கூறினார்.

மேற்படி துருக்கி விமானப்படைக்கு சொந்தமான மேற்படி போர் விமானம் ஜூன் 22 ஆம் திகதி சுட்டு வீழ்த்தப்பட்டது. இந்த விமானத்தின் விமானிகள் இருவரும் காணாமற் போயுள்ளனர். சிரிய ராணுவத்தினரால் சுடப்பட்டபோது இந்த விமானம் சர்வதேச கடற்பரப்புக்கு மேல் இருந்தது என துருக்கி கூறுகிறது. எனினும் சிரிய வான்பரப்புக்குள் ஊடுருவிய நிலையிலேயே அந்த விமானம் சுடப்பட்டது என்று சிரியா கூறுகிறது.

தனது ராணுவத்தினர் தற்பாதுகாப்பு நடவடிக்கையாகவே அந்த விமானத்தைச் சுட்டனர் என கூறியுள்ள ஜனாதிபதி அசாத், இந்தச் சம்பவத்திற்காக மன்னிப்புக் கோரவில்லை.

2007 ஆம் ஆண்டு சிரியாவினால் நிர்மாணிக்கப்பட்டுக் கொண்டிருந்த கட்டடமொன்றைத் தாக்குவதற்கு இஸ்ரேலிய விமானப் படை விமானங்கள் பயன்படுத்திய பாதையை மேற்படி விமானமும் பயன்படுத்தியது என சிரிய ஜனாதிபதி பஷார் அசாத், அந்தப் பத்திரிகைக்கு அளித்த செவ்வியில் கூறினார்.

'அந்த விமானத்தை நாம் சுடாமல் இருந்திருக்க வேண்டும் என 100 சதவீதம் விரும்புகிறேன்' என அவர் கூறினார்.

# ஈராக்கில் 32 பேர் சாவு

ஈராக்கில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற குண்டுவெடிப்பு மற்றும் தாக்குதல்களில் 32 பேர் உயிரிழந்துள்ளனர்.

லொறியொன்றில் பொருத்தப்பட்ட குண்டொன்று திவானியா நகரில் பிரபல சந்தையொன்றில் வெடித்ததால் 25 பேர் உயிரிழந்தனர். இந்தச் சம்பவத்தில் சுமார் 70 பேர் காயமடைந்தனர். அதேவேளை வேறு சில இடங்களில் இடம்பெற்ற தாக்குதல்களில் 7 பேர் உயிரிழந்துள்ளனர்.

25 பேர் உயிரிழந்தனர் என திவானியா நகரிலுள்ள வைத்தியசாலை அதிகாரி ஒருவர் உறுதிப்படுத்தினார்.

இறந்தவர்களில் பெண்கள் மற்றும் சிறார்களும் அடங்குகின்றனர். 15 கடைகளும் இந்தக் குண்டுவெடிப்பினால் சேதமடைந்தன. சுமார் 440,000 பேர் வசிக்கும் திவானியா நகரில் மேற்படி சம்பவத்தையடுத்து ஊரடங்கு உத்தரவு பிறப்பக்கப்பட்டது.

# காளான் விஷமாகியது

## மூன்று சிறார்கள் சாவு

நேபாளத்தில் காளான் சாப்பிட்ட மூன்று சிறார்கள் உயிரிழந்துள்ளனர். மேற்படி சம்பவத்தில் ஒரே குடும்பத்தைச் சேர்ந்த இரண்டு சிறார்கள் உயிரிழந்துள்ளமை அந்தக் கிராமத்தைச் சோகத்தில் ஆழ்த்தியுள்ளது.

நேபாளத்தின் பால்பா மாவட்டத்தின் ஹக்லேங் கிராமத்தைச் சேர்ந்தவர்கள் எக்பர் சாரு, கிரண் சாரு, குஷால் ராணா ஆகிய மூன்று சிறார்கள். இந்த மூன்று சிறாரும், அருகில் உள்ள காட்டுப் பகுதியில் விளைந்த காளான்களை எடுத்து வந்து, தனது குடும்பத்தோடு சாப்பிட்டுள்ளனர். கடந்த 1 ஆம் திகதி, இவர்கள் காளானைச் சாப்பிட்டதும் உடல்நிலை மோசமடைந்து, மருத்துவமனையில் சேர்க் கப்பட்டனர்.

நேற்றுமுன்தினம் இந்த மூன்று சிறாரும் சிகிச்சை பயனின்றி உயிரிழந்தனர். இந்தக் காளானை சாப்பிட்ட மேலும் இரண்டு சிறார், மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருகின்றனர். இவர்களின் நிலைமையும் இப்போது மோசமடைந்து வருகின்றது என மருத்துவமனை வட்டாரங்கள் தெரிவித்தன


## முதலாம் ஆண்டு நினைவு



தோற்றம் 11 ★ 07 ★ 1930

மறைவு 17 ★ 06 ★ 2011

திதி : துதியை

அமரர் பொன்னுத்துரை சண்முகசுந்தரம்

( நிர்வாக உத்தியோகத்தர்)

ஆறாது ஆறாது தங்கள் மறைவு
ஆறவே மாட்டாது எங்கள் ஆயுள்பூராகவும்

'ரூபா பகாஸ்''
உரும்பிராய் வடக்கு, உரும்பிராய்

குடும்பத்தினர்.

(சி/1217)(6-8)

## நீங்காத நினைவில் முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



மலர்வு 30 ★ 09 ★ 1946

உதிர்வு 17 ★ 07 ★ 2011

அமரர் நாகலிங்கம் செல்வராசா

திதி:- துதியை

ஆண்டொன்று ஓடி மறைந்தாலும் உங்கள் நினைவு
என்றென்றும் எம் மனதில் பசுமையாய் நிறைந்திருக்கும்
காலங்கள் விடைபெறலாம் ஆனாலும்
கண்முன்னே நிழலாடும் உம் நினைவுகள்
ஓராண்டு என்ன ஓராயிரம் ஆண்டுகள்
சென்றாலும் எம் உயிர் உள்ளவரை
உம் நினைவில் வாழும்......

74, பொன்னம்பலம் வீதி,
அரியாலை, யாழ்ப்பணம்.

- குடும்பத்தினர்.

(2-6)

## மணமகள் தேவை

யாழ். இந்து கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த 1984 ஆம் ஆண்டு பிறந்த புனர்பூச நட்சத்திரத்தை உடைய அரச சேவையில் இருக்கும் மணமகனுக்கு மணமகள் தேவை.

தொடர்புகளுக்கு : 077 0505123

(18106)(6-8)

## விற்பனைக்கு

கொள்வனவு செய்து பாவிக்காத நிலையில் உள்ள Cash Machine (Casio), Sicher Diesel Generator 5Kw 25 மணித்தியாலயங்கள் பாவித்த நிலையில் விற்பனைக்குண்டு.

தொடர்பு : 077 1331784

(20054)(6-8)

## வீடு வாடகைக்கு

திருநெல்வேலி பலாலி வீதியில், 1500 சதுர அடி கொண்ட வீடு வாடகைக்கு உண்டு. நிறுவனங்கள் காட்சி அறைக்கு மட்டும்.

தொடர்புகளுக்கு : 077 1331784

(20053)(6-8)

## வீடு, காணி விற்பனைக்கு

இல.92, கச்சேரி நல்லூர் வீதி, யாழ்ப்பாணத்தில் உள்ள வீட்டுடன் கூடிய காணி விற்பனைக்கு உண்டு.

14/2, புது வீதி,
கொய்யாத்தோட்டம்,
யாழ்ப்பாணம்.

077 644 6156
குணபூரணி
யோகலிங்கம்

(20051)(5-6)

## இறைச்சிக்கோழி விற்பனை

உள்ளூரில் உற்பத்தி செய்யப்பட்ட புறொயிலர், கல்பேட் தினமும் சுத்தம் செய்யப்பட்டு விற்பனையாகின்றது. சுத்தம் செய்யப்பட்ட புறொயிலர் இறைச்சி ரூ.470 மட்டுமே. தினமும் காலை 6 மணி தொடக்கம் மாலை 8 மணிவரை திறக்கப்படும்

நல்லூர் பாம் சென்ரர்
#19, முருகேசர் ஒழுங்கை, நல்லூர் யாழ்ப்பாணம் (18767)

## மணமகன் தேவை

யாழ் இந்து கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த 52 வயது திருமணமாகாதவருக்கு இயலுமை உ சகோதரன் துணைவரைத் தேடுகிறார். தகுந்த சீதனம் வழங்கப்படும்.

தொடர்பு: 077 612 0846

(20047)(5-6)

## புனித யாத்திரைத் தலமான புங்குடுதீவு அருள்மிகு அந்தோனியார் ஆலய உயர் திருவிழா



**கொடியேற்ற விழா :-**
06.07.2012 வெள்ளிக்கிழமை
மாலை 5.30 மணிக்கு
குரு:- அருட்பணி
சி.லியோ ஆம்ஸ்ரோங் அடிகளார்

**நற்கருணை விழா:-**
07.07.2012 சனிக்கிழமை
மாலை 5.30 மணிக்கு

**உயர் திருவிழா:-**
08.07.2012 ஞாயிற்றுக்கிழமை காலை 8.30 மணிக்கு திருப்பலி ஆராதனையும் அற்புதரின் தேர்ப்பவனியும் இடம்பெறும்.

நண்பகல் 12.00 மணிக்குப் பக்தர்களுக்கு அன்னதானம் வழங்கப்படும்.

- நிர்வாகம்,
புங்குடுதீவு புனித அந்தோனியார் ஆலயம்.

(20029) (2-6)

## 14 ஆம் மாத நினைவுகளும் 23 ஆவது பிறந்த நாளும்



மலர்வு 05 ★ 07 ★ 1989

உதிர்வு 14 ★ 05 ★ 2011

அமரர் மகேந்திரசெல்வம் சுரேன்

அற்புதமாய் ஒரு நாள் இன்று உன் பிறந்த நாள்
உன் மலர் முகம் தேடி எம் ஈரவிழிகள் வாடுதையா
மகனாய் நற்சகோதரனாய் எம்மிடையே வாழும் அன்பின் தீபமே
எம் கண்ணில் நீரை கசிய விட்டுச் சென்றதும் ஏனோ!

880, கே.கே.எஸ். வீதி,
யாழ்ப்பாணம்.

உன்பிரிவால் துயருறும்:
குடும்பத்தினர்.


(20045) (2-6)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாய்ப்பு வரும் நேரம்

(19)

லீவெல் கூறுகிறார்: "தான் செய்ய வேண்டிய வேலையுடன் பிறக்காத மனிதன் எவனும் உலகில் பிறந்ததில்லை. அங்கே வேலை எப்போதும் உள்ளது. வேலை செய்யக் கூடியவர்கள் அனைவருக்கும் அங்கே சாதனங்கள் உள்ளன."



ஒல்புல் கிறிஸ்டியானா பல்கலைக்கழகத்தில் மாணவனாக இருந்த சமயத்தில், ஒரு தரும ஸ்தாபனத்தின் திறப்பு விழாவில் வயலின் வாசிக்குமாறு கேட்டுக் கொள்ளப்பட்டார். அவர் சிறிது நேரம் தயங்கிய பின், வயலின் வாசிக்க ஒப்புக் கொண்டார். அவர் மீது விழுந்த மந்திர ஆற்றல் அவனது ஒவ்வொரு துளி ரத்தத்தையும் தூண்டி விட்டது; அவன் ஏறக்குறைய இரவு முழுவதும் ஒரு பேராசிரியரின் வீட்டில் வயலின் வாசித்தான். அடுத்த நாள் காலையில் நடந்த லத்தீன் மொழித் தேர்வில் அவன் தோல்வி அடைந்தான். அவன் நம்பிக்கை இழந்து குழப்பத்துடன் தன் மனதில் உள்ளதை ஆசிரியரிடம் சொன்னான். அவனது சிறந்த நண்பரான அவர் சொன்னார். "உனக்கு நடந்திருக்கக் கூடியவற்றில் இதுவே மிகச் சிறந்த நிகழ்ச்சி, நீ பின்லாந்தில் துணைநிலைச் சமயப் பணி லாப்ஸில் சமயப் பிரசாரம் செய்யப் பொருத்த மானவன் என்று நம்புகிறாயா? நிச்சயமாக இல்லை. நீ வெளி நாட்டில் பயணம் செய்து இசை பயில வேண்டும் என்பதே உன் நண்பர்களின் எண்ணம். இதற்கு இடையில், நீ அங்கு செல்லும் வரையில், பில்ஹார்மோனிக் அண்டு டிரமடிக் சொசைட்டீசின் மியூசிகல் டைரக்டராக நியமிக்கப்படுகிறாய்.

எமர்சன் கூறினார், "வேலையும் மகிழ்ச்சியும் அளிக்கும் ஏதாவது ஒரு தொழிலின் மீது ஒரு தலைப்பட்ச உணர்வுடன் பிறப்பது, வாழ்வின் உயர்ந்த பரிசு, மனிதனுக்கு சூட்டப்படும் மகுடம் போன்ற அதிர்ஷ்டம் ஆகும்." ஒல் புல்லின் சிறந்த வாழ்க்கை எமர்சனின் கூற்றிற்கு நல்லதொரு விளக்கம் ஆகும்.

ஒருவர் மிகவும் சிறப்பாகச் செய்ய விரும்பும் வேலை, அவரது ஆற்றலுக்கு ஏற்றதாக உள்ளது என்பது ஒரு விதியாக உள்ளது. ஒரு மனிதன் தனக்கு உரிய இடத்தைக் கண்டுபிடிக்கும் வரையில், அவன் உயர்ந்த இலட்சியத்துடன் வெற்றிபெற முடிவதில்லை; அல்லது உலகில் அதிக மதிப்புடையவனாக முடிவதில்லை.அவன் ஒரு ரயில் எஞ்ஜினைப் போல தண்டவாளத்தின் மீது பலமுள்ளவனாக இருக்கிறான்; ஆனால், மற்ற இடங்களில் பலமில்லாதவனாக இருக்கிறான். எமர்சன் கூறுகிறார்: "ஒவ்வோர் இளைஞனும் ஒரு நதியில் செல்லும் படகைப்போல, ஒரு பக்கத்தைத் தவிர மற்ற எல்லாப் பக்கங்களிலும் தடைகளைத் தாண்டிச் செல்ல நேரிடுகிறது. அந்த ஒரு பக்கத்தில் தடைகள் நீக்கப்பட்டுள்ளன. அவன் நம்பிக்கையுடன் ஆழமான கால்வாயை வேகமாகக் கடந்து எல்லையற்ற கடலுக்குள் செல்கிறான்."

**எது எனக்கு ஏற்ற இடம்?**
**எவ்விதம் நான் அதைக் கண்டறிவது?**

இப்படிப்பட்ட கேள்விக்குப் பதில் அளிப்பது எத்தனை சிரமமாக இருந்தாலும், அதற்குக் கட்டாயமாக பதில் அளிக்க வேண்டும். இல்லையெனில், வாழ்க்கை தோல்வி ஆகிவிடும்.

ஃப்ராங்க்ளின் கூறுகிறார்:"வாழ்வில் வெற்றி பெற வேண்டுமென்றால், ஒவ்வொருவரும் வியாபாரத்தையும், தொழிலையும் ஆராய்ந்து கண்டுபிடித்துக் கொண்டு, அதை உறுதியுடன் பின்பற்றிச் செயல்பட வேண்டும்." ஒருவரது தொழில் அவருக்கு மகிழ்ச்சியான நிகழ்வாக வரக்கூடும். பிரபல ஆங்கிலேய வழக்கறிஞர் எர்ஸ்கின் வாழ்வின் ஆரம்ப காலத்தில் நான்கு வருடங்கள் கப்பல் படையில் பணி புரிந்தார்; பிறகு, அவர் வெகுவிரைவில் பதவி உயர்வு பெறும் நம்பிக்கையுடன் இராணுவத்தில் சேர்ந்தார். அவர் தனக்காக வேறு ஒரு தொழில் காத்துக் கொண்டிருக்கிறது என ஒரு தடவை கூட நினைக்காமல், இராணுவத்தில் இரண்டு வருடங்களுக்கு மேல் வேலை செய்தார். ஆனாலும், ஒரு நாள், அதிர்ஷ்டவசமாக அவரது படையினர் முகாமிட்டிருந்த நகரத்தின் நீதிமன்றத்தைக் காணும் ஆவலில் அங்கே சென்றார். அதன் தலைமை நீதிபதி அவருக்கு அறிமுகமானவர். அவர் எர்ஸ்கினை வரவேற்று அருகில் உட்காரச் சொன்னார். அன்று நீதிமன்றத்தில் வாதாடும் வழக்கறிஞர்களில் சிலர் கிரேட் பிரிட்டனின் மிகப் பிரபல வழக்கறிஞர்களில் சிலர் எனவும் சொன்னார். எர்ஸ்கின் அவர்களது வாதங்களைக் கேட்டவுடன் அவர்களது வாதாடும் வழிமுறைகளை மனதில் பதித்துக் கொண்டார்; அவர்களைவிடச் சிறப்பாக வாதாடி தன்னால் வெல்ல முடியும் என நம்பினார். உடனே, சட்டம் படிக்க முடிவு செய்தார். அவர்கள் அனைவரையும் வென்றிடும் திறமை உண்மையில் அவரிடம் இருந்தது. அவர் நாட்டின் சிறந்த வழக்கறிஞர்களில் ஒருவராக மாறினார்.

பிரபலமான அமெரிக்க விஞ்ஞானிகளின் ஒருவர், இன்று ஒரு தலை சிறந்த பல்கலைக்கழகத்தின் வானிலை ஆராய்ச்சி நிலையப் பொறுப்பாளராக உள்ளார். அவர் நாஷ்விலேயில் ஒரு புகைப்படக் கண்காட்சியகத்தில் வேலை செய்து கொண்டிருக்கும் போது வானியல் படிக்க ஆரம்பித்தார். அவர் ஸ்ருடியோவுக்கு வந்திருந்த ஒரு விஞ்ஞானி தற்செயலாக விட்டுச் சென்ற புத்தகத்தை எடுத்துப் பார்த்ததால் வானியல் படிக்கும் வழி பிறந்தது.

-ஓரிசன் ஸ்வெட் மார்டன்- (தொடரும்)

# மாறிவரும் உலக ஒழுங்குக்கு ஏற்றவாறு மாணவர் தம்மை தயார்படுத்த வேண்டும்

## யாழ்.இந்துக் கல்லூரி அதிபர் தெரிவிப்பு

காரைநகர்,ஜூலை 5

உலகம் இன்று மிக விரைவாக மாறிவருகின்றது. மாறி வரும் உலகத்துக்கேற்ப மாணவர்கள் தம்மை தயாரப்படுத்தி எதிர்காலச் சவால்களுக்கு முகம்கொடுக்க வேண்டும்.

தனியே புத்தகத்தை மட்டும் கற்காது ஏனைய சகல விடயங்களையும் தேறக் கற்கும் பழக்கத்தை மாணவர்கள் கடைப்பிடிக்க வேண்டும் என்று யாழ்.இந்துக் கல்லூரி அதிபர் வீ.கணேசராசா தெரிவித்தார்.

காரைநகர் கலாநிதி ஆ.தியாகராசா ம.ம.வித்தியாலய உயர்தர மாணவர் மன்ற வருடாந்த ஒன்று கூடல் நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டு உரையாற்றும் போதே கணேசராசா மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் அங்குமேலும் தெரிவித்ததாவது:-

ஒழுக்கம் நிறைந்த மாணவர்கள் தான் சிறந்த பெறுபேறுகளைப் பெற்றுக்கொடுக்க முடியும். தீவக வலயத்தில் முதல்நிலைப் பாடசாலையாக விளங்கும் இந்தப் பாடசாலை தொடர்ந்தும் வீறுநடை போட வேண்டும்.

இந்தப் பாடசாலையில் இருந்து தான் யாழ்.இந்துக் கல்லூரி வி.எஸ்.குமாரசாமி, என்.சபாரட்ணம் போன்ற புகழ்பூத்த அதிபர்களைப் பெற்றது. அவர்கள் யாழ்.இந்துக் கல்லூரியின் வளர்ச்சிக்கு அயராது உழைத்தனர் என்பது குறிப்பிடத்தக்கது. காரைநகரில் புகழ்பூத்த ஆசிரியர்கள் அன்றிலிருந்து இன்றுவரை யாழ்.இந்துக் கல்லூரியில் கற்பித்து வருகின்றார்கள். அவர்களில் ஒருவர்தான் அதிபர் சிவானந்தராஜா. அவர் சிறந்த ஆசிரியர் மட்டுமல்ல சிறந்த அதிபர் என்பதையும் அவரது வாழ்க்கைத் தடங்கள் எடுத்துக் காட்டுகின்றன.

நீண்ட காலத்துக்குப் பின்னர் உயர்தர மாணவர் மன்றம் "நதி" என்ற சஞ்சிகையை வெளியிட்டது வரவேற்கத்தக்கது.

தீவக மாணவர்கள் இயல்பாகவே அறிவுவிருத்தி கூடியவர்கள். இதற்குக் காரணம் தீவகத்தில் கலாசாரம், பண்பாடு இன்றும் பேணப்படுகின்றமையே ஆகும். அரசியல்வாதிகள், வர்த்தகர்கள், கல்விமான்கள்,சிறந்த நிர்வாகிகள் அனைவரும் அமையப்பெற்ற இடம் காரைநகர் - என்றார்.

உயர்தர மாணவர் மன்றத்தால் வெளியீடு செய்யப்பட்ட "நதி" என்ற சஞ்சிகையை பாட்சாலை அதிபர் பொன்.சிவானந்தராஜா வெளியிட்டு வைக்க யாழ்.இந்துக் கல்லூரி அதிபர் வீ.கணேசராசா பெற்றுக்கொண்டார். (எ-250)



தெல்லிப்பழை ஸ்ரீதுர்க்காதேவி அன்னபூரணி மணி மண்டபத்தில் இடம்பெற்ற சிறப்பு இசையரங்கில் இசைக் கலைமாணி வர்ண ராமேஸ்வரனின் பாட்டுக்கச்சேரி இடம் பெற்றது. வயலின் கலாவித்தகர் மதுரா பாலச்சந்திரன், மிருதங்கம் கலாவித்தகர் சு.வரதராஜசர்மா கெஞ்சிரா கலைமாணி நா.சிவகுப்பிரசர்மா முகர்சிங் சி.செந்தூரன் ஆகியோரும் காணப்படுகின்றார்கள். (எ-86)

# பலம் வாய்ந்த நிறுவனங்களாக வடக்கு உள்ளூராட்சிச் சபைகள்

## பிரதேச சபை உறுப்பினர் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், ஜூலை 5

மக்களால் தெரிவு செய்யப்பட்ட முன் வரைவுத் திட்டங்களை உரிய காலத்தில் செய்து முடித்தால் வடக்கு உள்ளூராட்சிச் சபைகள் பலம் வாய்ந்த நிறுவனங்களாக மாறிவிட்டன.

2011 இல் நெல்சிப் மூலம் ஒவ்வொரு உள்ளூராட்சி சபைகளும் முதற்கட்டமாக 100 மில்லியனுக்கான வேலைகளை 2012 இற்குள் முடிவு செய்ததால் பலம் வாய்ந்த நிறுவனங்களாக உள்ளூராட்சிச் சபைகள் மாறியது உள்ளூராட்சி வரலாற்றில் பெரும் வெற்றியாகும் என்று வலி.மேற்கு பிரதேச சபை உறுப்பினர் தர்மலிங்கம் நடனேந்திரன் தெரிவித்தார்.

வலி.மேற்கு பிரதேச சபை தொழில்நுட்பக் குழுக் கூட்டத்தில் கருத்துத் தெரிவித்த போதே நடனேந்திரன் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் தெரிவித்ததாவது:-

உள்ளூராட்சி கடந்த பல தசாப்தங்களைக் கொண்ட வரலாறு. அதிலும் [illegible] ஒவ்வொரு உள்ளூராட்சிச் சபைகளையும் பலப்படுத்த உலகவங்கி 200 மில்லியனை முதற்கட்டமாக வழங்கியுள்ளது.

இதில் 2012 உடன் 100 மில்லியன் அபிவிருத்தி வேலைத் திட்டத்துக்குச் செலவு செய்யப்படும். மிகுதி 2013 இல் அடையப்படும். மக்களின் முன்னுரிமை மூலம் தெரிவுசெய்யப்பட்ட திட்டங்கள் 2017 வரை செய்யக்கூடியதாக இனம்காணப்பட்டுள்ளது.

எனவே அரசு உள்ளூராட்சியை நல்லாட்சி தத்துவத்தின் கீழ் அபிவிருத்தி செய்யவும் பலப்படுத்தவும் உலக வங்கி மேலும் வடக்கில் உள்ள உள்ளூராட்சிச் சபைகளுக்கு மேலும் 500 மில்லியன்களை வழங்க வேண்டும்.

இதனைவிட கிளிநொச்சி, முல்லைத்தீவில் உள்ள உள்ளூராட்சி சபை அபிவிருத்திக்கு ஒவ்வொன்றுக்கும் மேலும் 1000 மில்லியன் ரூபாவை வழங்க வேண்டும். அப்போதுதான் போருக்குப் பின்னர் அழிவடைந்த பிரதேச சபைகள்-நகரசபைகள் மீளத் தோற்றம் பெற்று வளர்ச்சி அடையும்.

அத்துடன் அந்தப் பிரதேச மக்களும் நல்லாட்சித் தத்துவங்களை அனுபவிக்கும் வாய்ப்பு ஏற்படும் - என்றார். (எ-41)

### இடமாற்றம்

வீதி அபிவிருத்தி அதிகாரசபையின் வடக்கு மாகாண பணிப்பாளர் எஸ். மரியதாசன் அனுராதபுரத்துக்கு இடமாற்றப்பட்டுள்ளார். அனுராதபுரம் வீதி அபிவிருத்தி அதிகார சபையின் பணிப்பாளர் ஏக்கநாயக்கா வடமாகாண பணிப்பாளராக நியமிக்கப்பட்டுள்ளார். (ம-17)

### ஆங்கில தினப் போட்டி முடிவுகள்

காரைநகர்,ஜூலை 5

காரைநகர் கோட்ட பாடசாலைகளுக்கிடையே நடத்தப்பட்ட ஆங்கில தினப் போட்டி முடிவுகள் வெளியாகி உள்ளன. இந்த போட்டிகளில் முதல் மூன்று இடங்களைப் பெற்ற மாணவர்களின் பெயர் விவரம் வருமாறு:-

**பேச்சுப்போட்டி**

**தரம்-3**

முதலாம் இடம்- பிருந்தா உலகுருநாதன் (யாழ். சுந்தரமூர்த்தி நாயனார் வித்தி.), இரண்டாம் இடம், சசிகரன் தனுஜன் (வலந்தலை வடக்கு அமெரிக்க மிசன் த.க. வித்தி.), மூன்றாம் இடம், ஜெயந்தினி அரிகரன் (யாழ்.சுப்பிரமணிய வித்தி.)

தரம் -4

முதலாம் இடம்- நளினி நகுலேஸ்வரன் (யாழ். சுப்பிரமணிய வித்தி.), இரண்டாம் இடம்- தமிழினி இராஜரட்ணம் (யாழ். சுந்தரமூர்த்தி நாயனார் வித்தி.), மூன்றாம் இடம்- தர்மலிங்கம் பகீரதன் (யாழ். சுந்தரமூர்த்தி நாயனார் வித்தி.)(தொடரும்)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

உதயன் தொடர்புகளுக்கு

தலைமையகம்:
361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி:021-222 9933, 222 9944, 5679933, 5679944
விளம்பரம்:021-5671111
விநியோகம்: 021-5677222
தொலைநகல்
செய்தி: 021-5678844,
விளம்பரம்: 021-2229731

மின் அஞ்சல்
செய்தி : news@uthayan.com
கருத்து: comments@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com

வன்னிப் பணிமனை:
ஏ-9 வீதி, கரடிப்போக்கு, கிளிநொச்சி (புனித திரேசா வீதி முன்பாக)
தொலைபேசி: 021 228 0065
தொலைநகல்: 021 228 0066

நெல்லியடிக் கிளை:
பிரதான வீதி, நெல்லியடி (HNB அருகே)
தொலைபேசி : 021-2262789, 021226 2395

சாவகச்சேரிக் கிளை:
நவீன சந்தை மேல்மாடி, சாவகச்சேரி
தொலைபேசி: 021 227 0323

விளம்பர முகவர்கள்: 'சதா பொன்ஸ்' -மாலு சந்தி, அல்வாய் : 021226 3206, 'நெல்லியடி மொடேன் ஸ்ரோர்ஸ்' - பஸ் நிலையம், நெல்லியடி : 021490 1519, 'மீசாலை கஜானன்' - கண்டி வீதி, மீசாலை தெற்கு : 021 227 0399, 'மன்னார் சிவசாந்தி' - தாழ்வுபாடு வீதி, மன்னார் : 0752824478, 'கொடிகாமம் அருள்நாயகி' - பஸ் நிலையம், கொடிகாமம் : 0774937585, 'மல்லாவி புவனேஸ்வரி புத்தகசாலை' - மத்திய சந்தையடி, மல்லாவி : 0778175116, 'கோபி எலைக்சிற்றி' - முல்லைத்தீவு நகர் : 0779598917, 'அன்பரசன்' - சிவன் கோயிலடி, ஒட்டுசுட்டான் : 0775035571, 'சுஹா ரவல்ஸ்' - 98, பிரதான வீதி, மன்னார் : 023 222 3311

## ஆபத்தில் இருக்கும் சிறுவர்கள்

இலங்கையில் வாழும் சிறுவர்கள் பல்வேறு பாதிப்புக்களுக்கு உள்ளாகிய வண்ணமேயிருக்கின்றனர். முடிவு பெற்ற போர் உடல் ரீதியான, உளவியல் ரீதியான தாக்கங்களை அவர்களுக்கு ஏற்படுத்தியிருந்தது. போரின் பின்னரான தற்காலத்திலும் வெடிபொருள் தொடர்பிலான அபாயங்களை எமது சிறார்கள் எதிர்கொண்டிருக்கின்றனர். இதனைக் கட்டுப்படுத்துவதற்காக பல சர்வதேச தொண்டு நிறுவனங்களும், உள்ளூர் தொண்டு நிறுவனங்களும் மேற்கொள்ளும் செயற்றிட்டங்கள் வெற்றியைக் கண்டடையாத நிலையே தொடர்கின்றது.

இந்த நிலையில் இலங்கைச் சிறுவர்கள் இன்னொரு ஆபத்தையும் எதிர்கொண்டிருக்கின்றனர். காமுகர்களின் வயது வேறுபாடு பாராத வேட்டைக்கு இந்தச் சிறார்கள் பாவிக்கப்படும் சந்தர்ப்பங்கள் அண்மை நாள்களாக அதிகரித்திருக்கின்றன. அதுவும் சொந்த உறவினர்களாலேயே பாலியல் தேவைகளுக்குட்படுத்தப்படும் சிறுவர்கள் தொடர்பிலான செய்திகள் மனித குலத்தையே இழிவுபடுத்துவதாக அமைகின்றன. இந்த வாரத்தின் தொடக்கப்பகுதியில் கூட கிருலப்பனையில் 6 வயதைக் கடந்திருந்த சிறுமி நெருங்கிய உறவுகளாலேயே பாலியல் கொடுமைக்குள்ளாக்கப்பட்டு கால்வாயில் தூக்கி வீசப்பட்ட சம்பவம் இன்னமும் அதிர்ச்சியை ஆற்றவில்லை.

இது கொழும்பில் நடைபெற்றதால் நமக்கு அவ்வளவு உணர்வுமிகு விடயமாக, ஆபத்துமிகு குறிகாட்டியாகத் தெரியவில்லை. ஆனால் பரவி வரும் ஆபத்து இலங்கை வாழ் அனைத்து சமூகங்களுக்கும் பொதுவானது. பாரதூரமான விளைவுகளை ஏற்படுத்தக் கூடியது. வடபகுதியிலும் இதன் பாதிப்பு அண்மைக்காலமாகப் பரவலாக உணரப்பட்டது. பல வயோதிபர்கள் சிறுவர் பாலியல் துஷ்பிரயோகங்களில் ஈடுபட்டமை சட்டத்தின் முன் கொண்டுவரப்பட்டது என அறிவிக்கப்பட்டது. ஆனால் குற்றங்கள் குறைந்ததாகத் தெரியவில்லை. நாள்தோறும் அதிகரித்துக் கொண்டே போகின்றது.

இதற்கு என்ன காரணம்? பல்கிப் பெருகிவிட்ட இணையத்தள வளங்களும், போதைப் பொருள் பழக்கமும் தான். கீழ்த்தரமான பாலியல் வன்மங்களை இலவசமாக வழங்கும் இந்தத் தளங்கள் இழிவான பண்பாடொன்றை ஒவ்வொரு பார்வையாளன் மனத்திலும் செருகிவிடுகின்றன. அதனைத் தொடர்ந்து பார்ப்பவர் மனத்தில் பாலியல் வக்கிரம் கறைபடியும் என்கின்றனர் உளவியலாளர்கள். ஆழப்படிந்துவிட்ட வன்மத்தைத் தீர்க்க வடிகால்கள் தேவைப்படுகின்றன. தமது இச்சைக்கு எதிர்ப்புக் காட்டாத பொம்மைகள் இந்த பாலியல் காட்டுமிராண்டிகளுக்கு அவசியப்படுகின்றன. தலைக்கேறிய போதையும் நிலைமாற்றத்தை ஏற்படுத்திவிடுகின்றது. அவர்களின் இச்சைத் தேவைக்காக சிறுவர்கள் குறி வைக்கப்படுகின்றனர். எதிர்ப்புக்காட்டுபவர்களும், பெற்றோரின் தீவிரமான பார்வைக்குள் இருப்பவர்களும் காட்டுமிராண்டிகளை சட்டத்தின் முன் கொண்டுவருகின்றனர். பயம், ஆபத்துணராமை போன்ற காரணங்களுக்குத் தலைப்படும் சிறார்கள் அடங்கிப் போய் சீரழிவைச் சந்திக்கின்றனர்.

இந்தக் குற்றங்களுக்காக வழங்கப்படும் தண்டனைகள் கடுமையானதாக இல்லாதபடியால் குற்றவாளிகள் இலகுவாகத் தப்பித்து விடுகின்றனர். வழங்கப்படும் தண்டனைகள் கடுமையானதாக இருக்காதவிடத்து பரவி வரும் இந்தக் குற்றங்களைத் தடுக்கவியலாது. இதற்கான விழிப்புணர்வு வேலைத்திட்டங்கள் ஏற்கனவே ஒழுக்கக்கட்டமைவுச் சிதைவுக்குள்ளாகி வரும் சமூகத்தில் எந்தளவுக்குத் தாக்கத்தை ஏற்படுத்தும் என்பது கேள்விக்குறியே. ஆகவே இறுக்கமாக்கப்படும் தண்டனைகளின் வழியிலேயே குற்றத்தைக் குறைப்பதற்கான வாய்ப்புகள் ஏற்படக்கூடும். அது தான் எதிர்கால சிற்பிகளை இந்த பாலியல் சாத்தான்களிடம் இருந்து காப்பாற்றிக் கொள்வதற்கான வழியாகவும் அமையும் என்பதில் சந்தேகத்துக்கு இடமில்லை.

# இலங்கையைப் புறக்கணிக்கும் வெளிநாடுகள்

துன்னாலைச் செல்வம்

“

இறுதிப் போரில் பங்கு கொண்ட படை அதிகாரிகளுக்கு வெளிநாடுகளில் உள்ள தூதரங்களில் முக்கிய பதவிகள் வழங்கப்பட்டுள்ளன. ஆனால் சனல்-4 தொலைக்காட்சியில் ஒளிபரப்பான இலங்கையின் கொலைக்கள ஆவணப் படம் வெளிநாடுகளில் உள்ள இலங்கை இராணுவ அதிகாரிகளுக்கு பெரும் நெருக்கடியை கொடுத்துள்ளதாக ஆங்கில ஊடகம் ஒன்று தகவல் வெளியிட்டுள்ளது.

இறுதிப் போரின் போது இலங்கைப் இராணுவத்தின் கண்மூடித்தனமான தாக்குதல்களில் அப்பாவிப் பொதுமக்கள் படுகொலை செய்யப்பட்டனர். இந்தப் படுகொலையானது இலங்கை இராணுவத்துக்கு எதிரான போர்க்குற்றச் சாட்டுக்களாகப் பதிவாகியுள்ளது. போர்க் குற்றச்சாட்டுக்கு உள்ளாகியுள்ள இலங்கைக் கடற்படையில் பணியாற்றிய உயர் தமிழ் அதிகாரி ஒருவரின் அரசியல் தஞ்சக் கோரிக்கையை நிராகரித்து, அவரை நாடு கடத்துமாறு உத்தரவிட்டுள்ளது கனேடிய நீதிமன்றம். கொமடோர் நடராஜா குருபரன் என்ற இலங்கைக் கடற்படை அதிகாரியே மேற்படி அரசியல் தஞ்சக் கோரிக்கை நிராகரிக்கப்பட்டவராவார்.

இலங்கைக் கடற்படையின் அட்மிரல் தரத்துக்கு மூன்று நிலைகள் கீழாக பணியாற்றியுள்ள முன்னாள் கொமடோர் குருபரன் விடுதலைப்புலிகள் தோற்கடிக்கபட்ட, எண்ணிலடங்காத பொதுமக்கள் கொல்லப்பட்ட கொடூரப் போர் முடிவடைந்த காலப்பகுதியான 2009 ஜூனில் ஓய்வு பெற்றிருந்தார்.

2009 ஓகஸ்ட் 4 ஆம் திகதி தனது மனைவி பாமினி குருபரன் மற்றும் இரு பிள்ளைகளான மயூரன், கிருசாந்தி ஆகியோருடன் கனடாவில் இவர் அடைக்கலம் கோரினார். குடிவரவு அதிகாரிகள் இவர் உண்மையான அகதி அல்லர் என்றும், மனித குலத்திற்கு எதிராக இழைக்கப்பட்ட குற்றங்களுக்கு உடந்தையாக இருந்தவர் என்றும் தெரிவித்துள்ளனர். இலங்கை இராணுவத்தினர் கொடூரங்களைப் புரிந்துள்ளதை உறுதி செய்துள்ள இந்த நீதிமன்றத் தீர்ப்பு மிகவும் முக்கியமாக கருதப்படுகிறது. இறுதிப் போரில் இராணுவத் தரப்பு புரிந்த படுகொலைகள் போர்க்குற்றச் சாட்சியாக இலங்கைக்கு எதிராக முளைவிடத் தொடங்கியுள்ளன.

இந்த நடவடிக்கை இலங்கைப் இராணுத்தரப்பை கிலிகொள்ள வைத்துள்ளது. வெளிநாட்டில் இருக்கும் இலங்கையின் இராணுவத்தளபதிகளுக்கு இந்தச் செய்தியானது தலையிடியைக் கொடுத்துள்ளது. தமக்கு எதிராக எந்த நடவடிக்கையையும் சர்வதேசம் எடுக்காது என்று நம்பியிருந்த இலங்கைப் இராணுவத்தினருக்கு ஒரு ஏமாற்றத்தைக் கொடுத்த முதல் செய்தியாக கொமடோர் நடராஜா குருபரன் கனடாவில் அரசியல் தஞ்சம் நிராகரிக்கப்பட்டமை அமைந்துள்ளது. நடராஜா குருபரன் தொடர்பில், 10 ஆயிரக்கணக்கான காணாமல் போதல்கள், நிறுவனமயப்படுத்தப்பட்ட சித்திரவதைகள் தொடர்பான குறிப்புகள் உள்ளன. அது தொடர்பான அறிக்கையில் அடங்கியுள்ள விரிவான சாட்சியங்களும், ஆதாரங்களும் இலங்கைக் கடற்படையை உள்ளடக்கிய, இலங்கைப் பாதுகாப்பு படைகளும் மேற்கொண்ட மக்கள் மீதான தாக்குதல்களுக்கு உதவியாக இருந்துள்ளன என்று தனது 50 பக்க தீர்ப்பில் நீதிபதி ஜோன் ஓ கீவ் தெரிவித்துள்ளார். இவ்வாறு கனடா நீதிமன்றம் இலங்கை இராணுவத்துக்கு எதிரான தீர்ப்பினை வெளியிட்டமை இதுவே முதல் தடவையாகும்.

இறுதிப் போரில் போர்க்குற்றச் சாட்டுக்களை சுமந்து நிற்கும் இலங்கை இராணுவத்தினர் அந்த குற்றச் சாட்டில் இருந்து தப்பித்துக் கொள்வதற்காகப் பல முயற்சிகளை மேற்கொண்டு வருகின்றனர். சனல்-4 வெளியிட்டுள்ள காணொலியில், இறுதிப் போரில் தமிழ் மக்கள் மீது இராணுவத்தினரால் மேற்கொள்ளப்பட்ட படுகொலைகள் பதிவாகியுள்ளன.



இராணுவத்தினரால் கைபேசியினால் எடுக்கப்பட்ட படுகொலைக் காட்சிகளையே சனல்-4 வெளியிட்டுள்ளது. சனல்-4 வெளியிட்டுள்ள இந்த இலங்கை இராணுவத்தினருக்கு எதிரான போர்க் குற்றச்சாட்டுக்களை போலியாக எடுக்கப்பட்டவை என்று இறுதிப் போரில் பங்கு பற்றிய படைத்தளபதிகள் வெளிநாடுகளில் இருந்து கொண்டு தெரிவிக்கின்றனர்.

இறுதிப் போரில் பங்கு கொண்ட படை அதிகாரிகளுக்கு வெளிநாடுகளில் உள்ள தூதரங்களில் முக்கிய பதவிகள் வழங்கப்பட்டுள்ளன. அதனால் சனல்-4 தொலைக்காட்சியில் ஒளிபரப்பான இலங்கையின் கொலைக்கள ஆவணப்படம் வெளிநாடுகளில் உள்ள இலங்கை இராணுவ அதிகாரிகளுக்குப் பெரும் நெருக்கடியைக் கொடுத்துள்ளதாக ஆங்கில ஊடகம் ஒன்று தகவல் வெளியிட்டுள்ளது.

இப்போது அமெரிக்காவில் உள்ள இலங்கைத் தூதரகத்தில் பணியாற்றும் மூன்றாவது அதிரடிப்படைப் பிரிவின் தளபதியாக பணியாற்றிய பிரிகேடியர் ரவிப்பிரிய அமெரிக்க அதிகாரிகளுக்கு சனல்-4 வெளியிட்டுள்ள காணொலி பற்றி விளக்கம் அளித்துள்ளார். 55 மற்றும் 59 ஆவது டிவிசன்களின் தளபதியாக இருந்த மேஜர் ஜெனரல் பிரசன்ன சில்வா பிரித்தானியா அதிகாரிகளிடமும், 57 ஆவது டிவிசன் தளபதியாகப் பணியாற்றிய மேஜர் ஜெனரல் ஜெகத் டயஸ், ஜேர்மனி மற்றும் சுவிஸ் அதிகாரிகளிடம் இது பற்றி விளக்கம் அளித்துள்ளனர்.

58 ஆவது டிவிசன் தளபதியாக இருந்து தற்போது நியூயோர்க்கில் ஐ.நாவுக்கான இலங்கையின் வதிவிடப் பிரதிநிதியாகப் பணியாற்றும் மேஜர் ஜெனரல் சவீந்திர சில்வாவும் இது பற்றி விளக்கம் அளித்துள்ளார். மேலும் இந்தியப் பாதுகாப்புக் கல்லூரியில் பட்டயக் கல்வி ஒன்றைக் கற்றுவரும் 53 ஆவது டிவிசனின் தளபதியாக இருந்த மேஜர் ஜெனரல் கமால் குணரட்ணவும் சனல்-4 ஒளிநாடா பற்றி இந்திய இராணுவ அதிகாரிகளிடமும் விளக்கம் அளித்துள்ளார். இவர்கள் அனைவரும் சனல்-4 வெளியிட்டுள்ள ஒளிநாடா பொய்யானது என்றே கூறியுள்ளனர்.

இறுதிப் போரில் பங்கு கொண்ட பாதுகாப்புத்துறை பிரதம அதிகாரி ஏயர் மார்சல் டொனால்ட் பெரேரா, வான்படைத் தளபதி ஏயர் சீவ் மார்சல் றொசான் குணதிலக்க, கடற்படைத் தளபதி அட்மிரல் வசந்த கரன்னகொட ஆகியோருக்கு வெளிநாடுகளில் தூதரகப் பணிகள் வழங்கப்படவுள்ளன.

இது மட்டுமல்லாது டிவிசன் படையணிகளை வழிநடத்திய அதிகாரிகளுக்கும் பதவிகள் வழங்கப்படவுள்ளன. படையின் நடவடிக்கைப் பணிப்பாளர் பிரிகேடியர் உதயநாணயக்கார மலேசியாவுக்கான பிரதித் தூதுவராக சில மாதங்களுக்கு முன் நியமனம் பெற்றுள்ளார். மேலதிக வெற்றிடங்கள் ஏற்படும் போதும் மேலும் பல இலங்கை இராணுவத் தளபதிகளுக்குப் பதவிகள் வழங்கப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. இறுதிக் கட்டப் போரின் போது 40 ஆயிரம் அப்பாவித் தமிழ் மக்கள் படுகொலை செய்யப்படுவதற்கு காரணமாக இருந்த படைத் தளபதிகள் வெளிநாடுகளில் உள்ள தூதரகங்களில் பணியாற்றுகின்றனர்.

இப்படியாக வெளிநாடுகளில் குடியேறியுள்ள இறுதிப்போரில் பங்கு கொண்ட இலங்கை இராணுவத் தளபதிகள் தாம் போர்க் குற்றங்களை மேற்கொள்ளவில்லை என்று கூறிவருகின்றனர்.

சனல்-4 இறுதிப் போரில் இடம் பெற்ற படுகொலைச் சம்பவங்களை காணொலியாக வெளியிட்டு சர்வதேசத்திற்கு ஒரு அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது. அந்தச் சம்வங்கள் உண்மையானது என்றும் நிரூபித்தும் வருகிறது. இராணுவத்தினர் சொல்லும் பொய்க் கருத்துக்கும், சனல்-4 வெளியிட்டுள்ள காணொலிக்கும் தீர்ப்பு வருமாக இருந்தால் அப்பொழுது தான் இராணுவத்தினரின் உண்மை நிலை மேலும் வெளிச்சத்திற்கு வரும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உயிர் வெடிப்புக்கள்

## வீர வரலாற்றை இட்டு நிரப்பிய சாவுகளும், நினைவுகளும்

- தில்லாலங்கடி

அடிமைப்பட்ட ஒரு சமுதாயத்தின் விடுதலைக்காக ஒரு தனி மனிதன் சாகத் துணிவானாயின் அந்தச் சமுதாயம் விடுதலை பெற்று வாழும். இந்த வார்த்தைகளை உதிர்ந்தவர் இந்திய தேசத்தின் அஹிம்சாவாதி என்று போற்றப்படும் அண்ணல் காந்தி அவர்கள்.

இந்த வார்த்தைகளுக்கு செயல் வடிவம் கொடுத்து, சமுதாயத்தின் வாழ்விற்காக வீரகாவிய மானவர்களை இன்றைய தினம் புலம் பெயர் தேசம் எங்கும் வாழ்த்தி வணங்குகின்றனர். தடைகள் வருகின்ற வேளைகளில் அதனை தகர்த்தெறிகின்ற இந்த வீரர்களை மூன்றாண்டுகளுக்கு முன்னரும் ஈழமண் வணங்கியிருந்தது.

இரண்டாவது உலகமாகா யுத்தத்தில் அமெரிக்கா அணுகுண்டு வீசியது மட்டுமே எம்மில் பலருக்கு தெரிந்த விடயம். ஆனால் அமெரிக்காவின் அணுகுண்டு வீச்சின் பின்னால் ஜப்பானியர்களின் தற்கொடை தாக்குதல் இருந்தது பலருக்கு தெரிந்திருக்க வாய்ப்பில்லை.

ஜப்பான் விமானப் படையின் வல்லமையுடன் இருக்கின்ற அதே வேளையில், அமெரிக்கா கடற்படை வலிமையுடன் இருந்தது. ஜப்பான் மீதான அமெரிக்காவின் ஆக்கிரமிப்பை தகர்க்க, அமெரிக்காவின் போர்க் கப்பல் மீது, விமானத்திலிருந்து ஜப்பானிய வீரன் குதித்து தன்னுயிரை மாய்த்து அமெரிக்காவின் போர்க் கப்பலை சிதறடித்தான். இதுவே அமெரிக்காவின் சினத்துக்கு காரணமாயிருந்தது. தன்னுயிரைத் துச்சமென மதித்துப் போராடத் தொடங்கிய ஜப்பானியர்களை அடக்குவதற்கு அணுகுண்டே ஒரே வழி என்று தீர்மானித்தது அமெரிக்கா.

இந்தத் தற்கொடைத் தாக்குதல் ஒரு நாட்டின் இராணுவத்தினரால் முன்னெடுக்கப்பட்டிருந்தது. இந்த வழியிலே இலங்கையின் ஈழப் போராட்டத்தில் தமிழீழ விடுதலைப் புலிகளும் தற்கொடை கொலை தாக்குதல்களை முன்னெடுத்திருந்தனர்.

1987 ஆம் ஆண்டு இலங்கை இராணுவம் யாழ். மாவட்டத்தின் வடமராட்சிப் பிரதேசத்தினை தனது கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வருவதற்காக ' ஒப்ரேஷன் லிபிரேஷன்' இராணுவ நடவடிக்கையை முன்னெடுத்திருந்தது. அந்தக் காலம் இளசுகள் வீதியில் திரிவதற்கே பயங்கரமான காலப்பகுதியாக இருந்தது. அந்தளவு தூரத்துக்கு இராணுவம் அந்தப் பகுதியை தனது அடக்குமுறைகளுக்குள் உட்படுத்தியிருந்தது.

ஜூலை மாதம் 5 ஆம் திகதி 1987 ஆம் ஆண்டு. மரபு வழி இராணுவமாக விடுதலைப் புலிகள் இயங்கிக் கொண்டிருந்த காலம். வடமராட்சியின் பெரும் பகுதியை இராணுவம் தின்று விட்டிருந்தது. நெல்லியடி மத்திய மகா வித்தியாலயத்தில் பெரும் எடுப்பில் இராணுவம் முகாமிட்டிருந்தது. அன்றைய நாள் மாலை 6 மணியை தாண்டிய சில மணித்துளிகளில், யாழ்ப்பாணமே அதிருகின்ற வகையில் பெரும் வெடியோசை. இராணுவ முகாமில் தவறுதலாக வெடி விபத்து ஏற்பட்டிருக்கலாம் என்ற வதந்தி ஊர் மனைகள் முழுவதும் பரவியது.

ஆனால் மறுநாள் உலகுக்கு ஒரு புதிய செய்தியுடன் உண்மை வெளி வந்தது. விடுதலைப் புலிகள் மரபு வழி இராணுவமாக பரிணமித்துக் கொண்டிருக்கின்ற அதே வேளையில், ஜப்பானிய இராணுவத்தினரின் தாக்குதலுக்கு நிகராக தற்கொலைத் தாக்குதலை நடத்தியிருந்தனர்.

துன்னாலையைப் பிறப்பிடமாகக் கொண்ட மில்லர், தனது உயிரை இந்த ஈழ மக்களின் விடுதலைக்காக அர்ப்பணித்து நெல்லியடி இராணுவ முகாமை தகர்த்தெறிந்திருந்தார். அன்று தொடங்கியது இந்தக் காரிருள் புலிகளின் (கரும்புலிகளின்) வேட்டை. விடுதலைப் போராட்டம் பல இடங்களில் இந்தத் தற்கொடையாளர்களின் உயிரால் எழுச்சி பெற்றிருக்கின்றது. இந்த எழுச்சியே இலங்கை அரசை பல சந்தர்ப்பங்களில் கிலி கொள்ள வைத்திருக்கின்றது.

கட்டுநாயக்கா விமானப் படைத் தளத்தினுள் புகுந்து வேட்டையாடியது மட்டுமல்ல, அநுராதபுரம் விமானப்படைத் தாக்குதல், தரைப்படைத் தற்கொலை தாக்குதல், கடற்படைத் தற்கொலைத் தாக்குதல் என்று பரிணமித்த இந்தத் தாக்குதல்கள், இறுதியில் விமானப்படை தற்கொடைத் தாக்குதல் வரை என்று விடுதலைப் புலிகளால் நடத்தப்பட்டிருந்தன.

இனத்தின் விடுதலைக்காக தமிழீழ விடுதலைப் புலிகளின் தற்கொடைப் போராட்டங்கள் முன்னெடுக்கப்பட்ட அதே காலப் பகுதிகளில் சர்வதேச அரங்கில் வேறு சில அமைப்பு[illegible]களும் இந்தத் தாக்குதல்களை முன்னெடுத்திருந்தனர். அவர்களது இலக்குகள் வேறு மாதிரியானவையாக இருந்தன. குறிப்பாகப் பலஸ்தீன விடுதலை இயக்கமான ஹமாஸ் அமைப்பும், அல்குவைதா போன்ற அமைப்புக்களும் இந்த வகையான தற்கொடை யுக்திகளை கையாண்டன.

தமிழீழ விடுதலைப் புலிகளைப் பொறுத்த வரையில் இராணுவத்தினர் மீதே தற்கொடைத் தாக்குதல்களை நடத்தி தமது தடைகளைத் தகர்த்தெறிந்தார்கள். சில வேளைகளில் தவறிய இலக்குகள் மக்களைப் பாதித்திருந்தன. ஆனால் ஹமாஸ், அல்குவைதா போன்ற அமைப்புக்கள் மக்கள் மீது தாக்குதல் நடத்துவதனையே குறிக்கோளாகக் கொண்டிருந்தன.

இதுவே சர்வதேச அரங்கில் தற்கொடைத் தாக்குதல்களை மேற்கொள்ளும் அமைப்புக்களை பயங்கரவாத அமைப்புக்களாகப் பார்க்கும் நிலையை உருவாக்கியிருந்தது. ஹமாஸ், அல்குவைதா அமைப்புகளின் தவறான தாக்குதல்கள் தமிழீழ விடுதலைப் புலிகளின் நியாயமான தாக்குதல்களையும் சிதைத்திருந்தன. எல்லா விடயத்திலும் தொப்பி பிரட்டும் இலங்கை அரசுக்கு சர்வதேசத்தின் இந்தப் பார்வை தமிழீழ விடுதலைப் புலிகளை ஒடுக்குவதற்குச் சாதகமாகியது.

இறுதிப் போரிலும் இந்த உயிர்க் கொடையாளர்களினது பங்கு கணிசமானதாக இருந்தது. ஆனாலும் அனைத்து மௌனிப்புக்களுடனும் தற்கொடையாளர்களின் நினைவும் மௌனிக்கப்பட்டாயிற்று. ஒரு இனத்தின் விடுதலையின் அடையாளமாக இருந்தவர்கள் கால அடுக்குகளில் மறக்கப்படுவது துயரமான உண்மையே. ஆனாலும் புலம் பெயர் தேசங்களில் சில நினைவு முணுமுணுப்புக்கள் கேட்கின்றன. அது [illegible] நிரப்பபடும்.


நெல்லியடி ராணுவ முகாமை
கரும் புலிகள் தகர்த்தனர்
பெருமெண்ணிக்கையான
சிப்பாய்கள் பலியாகினர்
இடிபாடுகளிடையே சடலங்கள்
ஆயுதங்கள்
விரமரணம்
யுத்தத்தை நிறுவில்லை
ஸ்ரீலங்கா இந்திய ரஷ்யா தொட
வெற்றியை நீ
நீண்டகாலம் எ
நெல்லியடி ஒரு படி
சுபநேரம்

### முதற் தற்கொடையாளியின் தாய் பேசினாள்

என்ர மகன் எது செய்தாலும் நன்மைக்காகத்தான் செய்வான் என்கிறது என்ர நம்பிக்கை, அதனால நான் அவன்ர போக்குகளைப் பற்றி பெரிசா யோசிக்கிறது இல்ல. அவன் ஒரு துடியாட்டமான பொடியன். ஒரு இடத்தில் ஆறுதலாக இருக்கிறத காணவே ஏலாது. ஏதாவது ஒன்று செய்துகொண்டு தான் இருப்பான். மண்ணைக் கிண்டுவான். பற்றரியையும் வயரையும் வைத்து முடிந்துகொண்டு இருப்பான். அல்லது அப்பாவின்ர கார் பொனட்டைத் திறந்து கொண்டு அதற்குள் ஏதாவது கழட்டிப் பூட்டிக்கொண்டு இருப்பான்.

மற்ற ஆள்களுக்கு உதவி செய்யிற பழக்கம் அவனிட்ட சின்னனிலிருந்தே வந்தது. ஆர் என்ன உதவி கேட்டாலும் உடனே போய்ச் செய்துகொடுப்பான். முயற்சியும், இரக்கமும் அவன் பிறக்கும் போதே அவனோடு கூடப்பிறந்ததுகள்.

மில்லர் சிறுவனாக இருந்த நாள்களில் அப்பா கார் ஓடும் போது அருகிலிருந்து அவதானித்துக் கொண்டு இருப்பான். அப்பா இல்லாத நேரங்களில் அதையே திரும்பச்செய்து பார்க்கத் தொடங்கீற்றான். அடிக்கடி நின்ற இடத்திலேயே இயங்கிய கார் பிறகு மெல்ல உருளத்தொடங்கீற்றுது. நாள் செல்லச் செல்ல அகலமான வீட்டு முற்றத்தில் முன்னுக்கும் பின்னுக்கும் போய் வந்தது. ஒருநாள் நான் சமைச்சுக் கொண்டிருக்கும் போது கார் வீதியில் ஏறி விக்கி விக்கி ஓடத் தொடங்கியது. என்னைப் பயம் பற்றிக் கொள்ள வீதியிலே ஓடிவந்து பார்த்தேன்.

இப்படித்தான் இன்னும் ஒரு நாள்...

மோட்டார் சைக்கிளில் வந்த ரெண்டு பேர் பெற்றோல் முடிஞ்சதால் வீட்டுக்கு முன்னால நின்று திண்டாடிக்கொண்டிருந்திச்சினம்.எங்கோ இருந்து வீட்டுக்குத் திரும்பிக்கொண்டிருந்த மில்லர் அவையிட்ட விசயத்தைக் கேட்டறிந்தான். வீட்டுக்கு வந்தவன் மெதுவாக ஒளித்து ஒளித்து பின்னால போய், கார் ராங்கிற்குள் குழாயைவிட்டு வாயால இழுத்துப் பெற்றோல் எடுத்து அவையளிட்ட குடுத்து அனுப்பிவிட்டு ஓர் அசல் அப்பாவியைப் போல எனக்கு முன்னால் வந்தான். நடந்ததைக் கண்டபோதும் நான் அவனிடம் எதுவும் கேட்கேல்லை. எனக்கும் அது பிழை மாதிரித் தெரியேல்ல.

தன் பிள்ளை எது செய்தாலும் அதில் தவறிருக்காது என்பது அந்தத் தாயின் கணிப்பு.

அதனால் அவனது செய்கையைப் பற்றி அம்மா கவலைப்படுவதில்லை. காலச்சக்கரம் தன்பாட்டில் உருண்டு சென்றது. அப்போது 1984 இன் ஆரம்பம். தமிழ் தேசத்தில் அடிக்கடி வெடியோசை கேட்கத் தொடங்கியது.

மக்களின் இயல்பு வாழ்க்கை மாறியபொழுது அது மில்லர் வீட்டிலும் பிரதிபலிக்கத் தொடங்கியது. மில்லரின் போக்கும் மாறிவிட்டது. முன்புபோல், பழைய நண்பர்களுடன் மாந்தோப்பில் விளையாடுவது நின்றுபோனது. இப்போது புதிய நண்பர்களுடன் வெளியில் திரியத் தொடங்கினான். ஒருநாள் பள்ளிக்கூடத்தில் இருந்து அவசர அவசரமாக ஓடி வந்த தம்பி சொன்னான்,அம்மா...அம்மா... அண்ணா சந்தியடியில் நோட்டீஸ் கெடுத்துக்கொண்டு நிற்கிறான்.

அம்மாவுக்கு உள்ளாறப் பயம்தான். ஆனாலும், அம்மா அவனைப்புரிந்துகொண்டார். அவனின் புதிய நண்பர்கள் அவனைத் தேடி வீட்டுக்கு வருவார்கள். மில்லர் அவர்களோடு புறப்பட்டுப்போவான். இப்படிச் செல்கிறவன் சில நேரங்களில் ஒரு சில இரவுகள் கழித்துத் வருவான். அம்மா எல்லோருக்கும் சாப்பாடு தருவார். எல்லோரும் சிரித்துக் கதைத்து சந்தோஷமாகச் சாப்பிடுவதைப் பார்த்து சந்தோஷப்படுவார். இது வழமையாகிப் போனது. இப்படித்தான் ஒருநாள் அந்த நண்பர்களோடு புறப்பட்டுப் போனவன் திரும்பிவரவில்லை. பயிற்சி முகாமில் நிற்கிறான் என நண்பன் ஒருவன் வந்து சொன்னான். வீட்டில் எல்லோரும் அழுதார்கள். அம்மாவால் தாங்கிக்கொள்ள முடியவில்லை. அவரும் அழுதார். இருந்தாலும் சமாளித்துக்கொண்டார்.

தன் பிள்ளை எது செய்தாலும் நன்மைக்காகத்தான் செய்வான் என்பது அம்மாவின் நம்பிக்கை. அந்தத் தாய் இறுதி நாளை நினைத்துப் பார்க்கிறார்.

அது 'ஒப்பரேசன் லிபரேசன்' காலம். அந்த நேரம் இங்க எல்லா இடத்திலயும் ஆமி. அதனால இரவில் நாங்கள் நேரத்தோடயே படுத்திடுவம். அன்றைக்கும் நாங்கள் படுத்திட்டம். திடீரென வீடு எல்லாம் அதிர பெரும் குண்டுச் சத்தம் எங்களை திடுக்கிட்டு எழுப்பிச்சு. கொஞ்ச நேரம் சண்டை நடக்கிறதைப் போல சத்தம் கேட்டுக்கொண்டிருந்தது. பிறகு எல்லாம் அமைதியாகிவிட்டது. பொடியள் நெல்லியடிப் பக்கம் ஆமிக்கு நல்லா அடி குடுத்திருக்கிறாங்கள் போல கிடக்கு என்று எங்களுக்கை கதைச்சுப்போட்டு படுத்திட்டம்.

அடுத்த நாள் காலையில் நெல்லியடி பக்கம் இருந்து வந்த ஒருத்தர் சொல்லி ஊருக்குள்ள அந்தக் கதை மெல்ல மெல்ல என்ர காதுக்குள்ள வந்தபோதுதான் தெரியும்.முதல் நாள் உலுக்கி என்ர நித்திரையால் திடுக்கிட வைத்த அந்த குண்டுச் சத்தம் என்ர பிள்ளையையும்.....

அப்ப அழவுமேலாது எல்லாப் பக்கத்திலயும் ஆமி....அறைக்குள்ள போய் இருந்து எனக்குள்ள மட்டும் குமுறிக் குமுறி அழுதன். றோட்டால ஆமி வாகனங்கள் வாற சத்தம் உறுமிக்கொண்டு கேட்கும். மெதுவாக பின்பக்கத்தால் வீட்டை வந்த சனங்கள் கலைந்து போய் விடுவினம்.. பிறகு வருவினம். ம்...ம்... என்ர மகன் செத்துட்டான் என்கிறது எனக்குக் கவலைதான். ஆனால் அவன் நாட்டுக்காகத்தானே செத்தவன். அதை நினைக்கப் பெருமையாகத்தான் இருக்கிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஞானிகளுக்கு உணவு முக்கியமல்ல

வாழ்கையில் உணவு என்பது,ஒரு பகுதி நேரப் பிரச்சினையாக மட்டுமே இருக்கவேண்டும். அதாவது உண்ணுகிறவர்களை இரண்டு வகையாகப் பிரிக்கலாம்.வாழ்வதற்காக உண்ணுகிறவர்கள் ஒரு வகை; உண்ணுவதற்காகவே வாழுகிறவர்கள் இன்னொரு வகை. நீங்கள் எந்தக் கட்சி? வாழ்வதற்காக உண்ணுகிறீர்களா? அல்லது உண்ணுவதற்காகவே வாழ்கிறீர்களா?

உண்ணுவதற்காகவே வாழ்கிறவர்களை இனம் கண்டு கொள்வது எப்படி என்று கேட்கிறீர்களா? நீங்கள் ஏதேனும் ஓர் ஊருக்குச் செல்கிறீர்கள் என்று வைத்துக்கொள்ளுங்கள். உண்ணுவதற்காகவே வகையைச் சேர்ந்தவர்களிடம் இதைப்பற்றிய யதார்த்தமாகச் சொல்லுங்கள். உடனே, அந்த ஊரில் பிரத்தியேகமான ருசியோடு இருக்கக்கூடிய ஓர் உணவுப்பண்டத்தின் பெயரை சட்டெனச் சொல்லிவிடுவார்கள்.

உதாரணத்திற்கு,நீங்கள் திருப்பதி போவதாகக் கூறினால்,உடனே அவர்கள் தனக்கு லட்டு வாங்கி வரும்படிச் சொல்வார்கள். அந்த லட்டு உங்களுக்குக் கிடைக்கிறதோ இல்லையோ, தனக்கு எப்படியும் வந்துவிட வேண்டும் என்பதிலேயே அவர்கள் குறியாக இருப்பார்கள். நீங்கள் திருநெல்வேலி செல்வதாகக் கூறினால்,அல்வா வாங்கும் படி அறிவுரை கூறுவார்கள். நீங்கள்பழனி முருகனைத் தரிசிக்கச் செல்வதாக கூறினால், அவர்கள் திருநீற்றைப் பற்றியெல்லாம் பேசாமல், பஞ்சாமிர்தத்திலேயே குறியாக இருப்பார்கள்.இப்படி, ஒவ்வோர் ஊரின் தனிச்சிறப்பு மிக்க பலகாரங்களின் பெயர்கள் அவர்களுடைய விரல்நுனியில் உண்மையாக இருக்கும். அந்த உணவுகளும் விரல் நுனியில் இருக்கும்... தின்னிப் பண்டாரங்கள்.

ஒரு வேளை, எந்த ஓர் உணவுக்கும் பிரசித்தி பெறாத ஏதேனும் ஓர் ஊருக்குப் போவதாகக் கூறினாலும் கூட, அந்த ஊரில் உள்ள ஒரு ஹோட்டலின் பெயரைச் சொல்லி அங்கே தனி ருசியோடு செய்யக் கூடிய ஓர் உணவு வகையை குறிப்பிட்டு அதைச் சாப்பிடாமல் வந்து விடாதீர்கள் என்று நாக்கைச் சப்புக்கொட்டியபடியே நமக்கு யோசனை சொல்வார்கள்.

இப்படிப்பட்ட வகையினர் தான் உண்ணுவதற்காகவே வாழ்கிறவர்கள். உண்ணுவதற்காகவே வாழ்வது நம்மைக் கீழான நிலையிலேயே வைத்துவிடுகிறது.

வாழ்வதற்காகத்தான் நாம் உண்ண வேண்டும்.

''தேடிச் சோறு நிதம் தின்று'' என்றார் பாரதியார்.

உண்ணுவதற்கும், தின்னுவதற்கும் என்ன வித்தியாசம்? உண்ணுவது மனிதன் செய்கிற செயல்; தின்னுவது விலங்கு செய்கிற செயல்.

மாபெரும் ஞானி ஒருவர், இமயமலையில் நீண்ட காலம் தவம் இருந்துவிட்டு, தன் சொந்த கிராமத்தில் இருந்த மடத்துக்குத் திரும்பினார். அவருடைய வருகையால் சீடர்கள் மிகவும் மகிழ்ச்சி அடைந்தனர் அந்த ஞானியின் ஆற்றலைக் கேள்விப்பட்ட அந்தக் கிராம வாசிகள். அவரைத் தரிசிப்பதற்காக வந்தனர்.

அந்த ஞானி நடுநாயகமாக ஒரு மேடையில் அமர்ந்திருக்க,அந்த ஊர் மக்கள் அவரைச் சுற்றிலும் நின்று கொண்டு, பல்வேறு கேள்விகளை அவரிடம் கேட்டுக் கொண்டே வந்தனர். அந்த ஞானியும் புன்னகையுடன் அவர்களுடைய கேள்விகளுக்குப் பொறுமையாக விளக்கம் அளித்துக் கொண்டே வந்தார்.

கடைசியாக, அந்த உரையாடல்,உணவுப்பக்கம் திரும்பியது. அந்தக் கூட்டத்தில் இருந்த ஒருவர் கேட்டார், ''சுவாமி,ஆன்மிகத்தில் ஈடுபட வேண்டுமானால், எந்த மாதிரி உணவுகளைச் சாப்பிட வேண்டும்? சைவ உணவு நல்லதா, அசைவ உணவையும் சேர்த்துக் கொள்ளலாமா?


ஞானி பதிலளித்தார், ''ஆன்மிகத்துக்கும் உணவுக்கும் எந்த சம்பந்தமும் இல்லை. அது முழுக்க முழுக்க உன் மனதைப் பொறுத்த விடயம். சரி, உனக்கு சைவ, உணவு பிடிக்குமா, அல்லது அசைவ உணவு பிடிக்குமா?'' எனக்கு சைவ உணவில் தான் விருப்பம் அதிகம் சுவாமி'' என்றார் அவர். ''அப்படியா, அப்படியானால், நீ சைவ உணவைச் சாப்பிட்டபடியே ஆன்மிகத்தில் ஈடுபடலாம்'' என்றார் ஞானி. உடனே அங்கிருந்த சைவப் பிரியர்கள் கை தட்டி ஆரவாரம் செய்து, தங்கள் மகிழ்ச்சியை வெளிப்படுத்தினார்கள்.

இன்னொருவர் எழுந்து அவசர அவசரமாகக் கூறினார், ''சுவாமி எனக்கு அசைவம் இல்லாவிட்டால்,உணவே இறங்காது,நான் ஆன்மிகத்தில் ஈடுபட முடியாதா? உடனே அந்த ஞானி, சிரித்துக் கொண்டே, ''உனக்கு அசைவ உணவு தான் பிடிக்கும் என்றால், தாரளமாகச் சாப்பிடலாம்,ஆன்மிகத்தில் அதற்கு எந்தத் தடையும் இல்லை'' என்று கூறினார் .

உடனே அங்கிருந்த அசைவப்பிரியர்கள்,தங்கள் கைகளைத் தட்டிக் கரகோஷம் செய்தனர். அந்தக் கூட்டத்தில் தொப்பையும் தொந்தியுமாக இருந்த ஒரு மகா அசைவப்பிரியர், ஞானி சொன்னதைக் கேட்டவுடன்,விழுந்து விழுந்து விநோதமான குரலில் உரக்கச் சிரிக்க தொடங்கினார். அதைப் பார்த்ததும், ஞானிக்கும் சிரிப்பை அடக்க முடியவில்லை. அவரும் வாய் விட்டுச் சிரித்தார். அதைப் பார்த்த கூட்டத்தினர் அனைவரும் சேர்ந்து சிரிக்கத் தொடங்கிவிட்டனர். மொத்தத்தில், அந்தச் சிரிப்பொலியால் மடாலயமே அதிர்ந்து போய் விட்டது.

இந்த வெடிச் சிரிப்பால் ,அந்தக் கூட்டத்தில் கலந்து கொண்ட அனைவருக்கும் அன்று ஜீரணப் பிரச்சினையே இல்லை.


கடைசியாக ஞானி முடித்தார். ''சைவமோ அசைவமோ பிடிக்கும் என்ற உணர்வு உள்ள வரை ஞானம் மட்டும் வராது. ஆனால் உலக வாழ்க்கைக்கு ஞானம் அவசியம் அல்ல. மகிழ்ச்சி தான் முக்கியம்.''



சுகி.சிவம்

# தீவகத்தின் திடமான கல்விப்புலமான புனித அந்தோனியார் கல்லூரி

(கடந்தவாரத் தொடர்ச்சி)



அருள்சகோதரர் பீற்றர் போல் ஆங்கில பாட சாலையின் தலைமையாசிரியராகக் கடமையாற்றிய போது இராயப்பு, அருளானந்தம் ஆகியோர் அவருக்குத் துணைபுரிந்தனர். தற்போதும் கம்பீரமாக நிமிர்ந்து நிற்கும் பிரதான மண்டபமும் போட்டிக் கோவும் புனித அந்தோனியார் ஆலயத்தையும் பிரசித்தி பெற்ற ஊர்காவற்றுறை இறங்குதுறையையும் எதிர் நோக்கிய விதமாக அருள்சகோதரர் பாக்கியநாதர் அதிபராய் இருந்த காலத்தில் கட்டி எழுப்பப்பட்டவையாகும்.

**என்.சசிக்குமார்**

புனித சூசையப்பர் சபை சகோதரர்களின் மேற்பார்வையில் 1896 - 1938 வரை இக்கல்விக் கூடம் பெரியளவில் வளர்ச்சி கண்டது. ''உன்னைப் பிறதர்மாரின் பள்ளிக்கூடத்தில் போட்டால் தான் நீ எல்லா விதத்திலும் சரி வருவாய்'' என்று சொல்லி தீவுப் பகுதியின் பெற்றோர்கள் தங்கள் பிள்ளைகளை இந்தப் பாடசாலையில் சேர்க்க முண்டியடித்தனர். இந்தப்பாடசாலைக்கெனத் தம்மை முழுமையாக அர்ப்பணித்து அரும்பணியாற்றிய அருள் சகோதரர்கள் பிலிப், லீனஸ், மனுவேற்பிள்ளை, அலோசியஸ், சிறில் பேடினன், சைமன், பேதுறுப்பிள்ளை, ரைற்றிஸ், அலெக்ஸிஸ் ஆகியோர் இன்றும் மறக்கப்பட முடியாதவர்கள். அருள்சகோதரர் பேதுருப்பிள்ளை வீணைப் பெட்டி போடுவதிலும் பாடசாலை மணிக்கூட்டைத் திருத்துவதிலும் பெயர் போனவராக இருந்தார்.

1924 மார்ச் 9 இல் மேதகு ஆயர் கியோமார் ஆண்டகை யாழ் ஆயராகப் பொறுப்பேற்ற பின்னர் கல்லூரி பல மாற்றங்களைக் கண்டது. 1938ல் கல்லூரி குருமாரின் பராமரிப்பில் கொண்டுவரப்பட்டது. இதன் முதல் அதிபராக இங்கிலாத்தில் கல்வி கற்ற சில்லாலையைச் சேர்ந்த அருள்திரு ஏ.எஸ்.ஜோசவ் அடிகளார் ஆயரால் நியமிக்கப்பட்டார். ஒழுங்கமைக்கும் திறனும் மிகுந்த கட்டுப்பாட்டாளனுமான இவரது காலத்தில் கல்லூரி கடமை, கண்ணியம், கட்டுப்பாடு ஆகியவற்றில் வானளாவ உயர்ந்தது. லண்டன் ஒக்ஸ்போட்-கேம்பிறிஜ் பல்கலைக் கழகங்களிற்கிடையே நடைபெறும் படகு ஓட்டப்போட்டி போன்று ஊர்காவற்றுறை குடாக் கடலில் காரைநகர்- ஊர்காவற்றுறை இறங்கு துறைகளுக்கிடையில் படகோட்டப் போட்டிகளையும் நீச்சல் போட்டிகளையும் முதல் முதலில் ஆரம்பித்தவர் இவரேயாவர். இந்த வருடாந்த நிகழ்வு ஊர்காவற்றுறை மக்களால் பெரிதும் எதிர்பார்க்கப்படும் ஓர் நிகழ்வாகும். 1948 இல் அருள்திரு. ஏ.எஸ்.ஜோசவ் மரித்து சரித்திரமானார்.

1961 இல் பாடசாலைகள் அரசினால் பொறுப்பேற்கப்பட்ட போது ஆயரின் பராமரிப்பில் இருந்து 186 கத்தோலிக்க தனியார் பாடசாலைகளில் 5 பாடசாலைகள் தவிர அனைத்தும் அரசிடம் கையளிக்கப்பட்டது. இந்த 5 பாடசாலைகளில் புனித அந்தோனியார் கல்லூரியும் ஒன்றாகும்.

1949 - 1950 வரையிலான குறுகிய காலப்பகுதியில் அருள்திரு.வில்லியம் ஜேசுதாசன் அதிபராகக் கடமையாற்றினார். அருள்திரு. ஏ.எஸ். அருள்நேசன் அடிகள் 1951 முதல் 1952 வரை அதிபரானார். புனித பத்திரிசியார் கல்லூரியின் அதிபராக அருள் திரு லோங் அடிகளாரின் பணியை அவர் பொறுப்பேற்றார். அவரின் காலத்தில் ஆரம்பிக்கப்பட்ட விஞ்ஞான ஆய்வுகூடம் இவரின் பின் வந்த அருள்திரு.ஏ.ஜே. கருணாகரர் அடிகளாரால் முடித்து வைக்கப்பட்டது. அருள்திரு ஏ.ஜே. கருணாகரர் அடிகள் 1952 - 1954 வரை அதிபராக இருந்து அரும்பணியாற்றினார். பக்தியும் கட்டுப்பாடும் மிகுந்த அவரின் பதவிக் காலத்தில் கருணாகரர் கட்டடம் கட்டப்பட்டது 1954 - 1960ல் யாழ் புனித பத்திரிசியார கல்லூரியின் அதிபராகும் வரை அருள்திரு.பி.ஐ. ஜீவரட்ணம் அடிகள் புனித அந்தோனியார் கல்லூரியின் அதிபராகவிருந்தார். ஜீவரட்ணம் கட்டடம் என அழைக்கப்படும் புதிய அலுவலக கட்டடம் இவர் காலத்தின் அமைக்கப்பட்டது. விஞ்ஞானக் கல்வி இவர் காலத்தில் பெரிதும் வளர்ச்சியடைந்தது. இந்திய விஞ்ஞான பட்டதாரிகள் புதிதாகச் சேர்க்கப்பட்டனர். புனித அந்தோனியார் கல்லூரி விஞ்ஞானக் கல்வியில் முன்னிலை வகிக்கும் கல்லூரியாகத் திகழத் தொடங்கியது.

1961 இல் பாடசாலைகள் அரசினால் பொறுப்பேற்கப்பட்டபோது ஆயரின் பராமரிப்பில் இருந்து 186 கத்தோலிக்க தனியார் பாடசாலைகளில் 5 பாடசாலைகள் தவிர அனைத்தும் அரசிடம் கையளிக்கப்பட்டது.

இந்த 5 பாடசாலைகளில் புனித அந்தோனியார் கல்லூரியும் ஒன்றாகும். யாழ். புனித பத்திரிசியார் கல்லூரி, யாழ் திருக்குடும்பக் கன்னியர் மடம், இளவாலை கென்றியரசர் கல்லூரி, அனுராதபுரம் சூசையப்பர் கல்லூரி ஆகியன ஏனைய நான்காகும். 1961 இல் அருள்திரு எஸ்.ஜே. ஸ்ரனிஸ்லெஸ் கல்லூரியின் அதிபரானார். இவர் கல்லுரியின் எல்லா செயற்பாடுகளிலும் தானும் பங்கேற்று முன்னின்று உழைத்தார். உதைபந்தாட்டம், கூடைப்பந்தாட்டம், மெய்வல்லுநர் போட்டிகள் உடலியல் கல்வி என்பன இவர் காலத்தில் உயர்ந்த தரத்தை அடைந்தன.

உள்ளூரிலும் மாவட்ட மட்டத்திலும் இப்போட்டிகளில் இந்தக்கல்லூரி சிறந்து விளங்கியது. 1964 இல் இளவாலை கென்றியரசர் கல்லூரியின் அதிபராக இடம் மாற்றம் பெற்றார். இடமாற்றம் பெற்றபின் அருள்திரு எம்.ஜே.மரியாம்பிள்ளை அதிபரானார். அருள்திரு எம்.ஜே.மரியாம்பிள்ளை அடிகளாரின் காலத்தின் சமயப்பணி, சமூகப் பணி, இலக்கியப்பணி ஆகியவற்றில் கல்லூரி உயர்ந்து நின்றது.

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



சாரணியர் நூற்றாண்டு விழாவை முன்னிட்டு அக்கரைப்பற்று, கல்முனை மாவட்ட சாரணியர் சங்கத்தின் ஏற்பாட்டில் சாரணிய மாணவர்களின் பாசறை சவளக்கடை வீரதிடல் அல்-ஹிதாயா மகா வித்தியாலயத்தில் மாவட்ட ஆணையாளர் முஸ்தபா தலைமையில் நேற்று நடைபெற்றது. இந்த நிகழ்வில் கலந்துகொண்ட அட்டாளைச்சேனை பிரதேச சபைத் தவிசாளர் ஏ.எம்.நசீர், உதவி மாவட்ட ஆணையாளர் முனாஸ் உள்ளிட்ட அதிதிகள் நினைவுச் சின்னம் வழங்குகின்றனர்.

## ஆசிரியர் மீது தாக்குதல்

திருகோணமலை, ஜூலை 5

திருகோணமலையில் நடைபெற்ற கிழக்கு மாகாண மட்ட விளையாட்டுப் போட்டிக்கு மண்டூர் மகா வித்தியாலயத்திலிருந்து மாணவர்களை அழைத்துச்சென்ற ஆசிரியர் இனந்தெரியாத நபர்களால் தாக்கப்பட்டுள்ளார்.

திருகோணமலையில் நடைபெற்ற பாடசாலைகளுக்கிடையிலான மாகாணமட்டப் போட்டியில் மாணவர்கள் பங்குபற்றிய பின்னர் கடந்த சனிக்கிழமை மைதானத்தை விட்டு வெளியேறும்போது இந்தத் தாக்குதல் நடத்தப்பட்டது எனத் தெரியவருகின்றது.

இது தொடர்பாக பாதிக்கப்பட்ட ஆசிரியர் தெரிவிக்கையில், ''நான் மாணவர்களுடன் மைதானத்திலிருந்து வெளியே வந்துகொண்டிருந்தபோது இடைமறித்த ஒரு கும்பல், ''நீ தமிழா, முஸ்லிமா'' என வினவினர். அப்போது ஆசிரியராகிய நான், நாம் தமிழர்; மட்டக்களப்பிலிருந்து வந்துள்ளோம் எனக் கூறியதும் உடனடியாக அந்தக் கும்பல் என்னைத் தாக்கியது - எனக் குறிப்பிட்டார்.(ச)

## ஆதரவாளர் விரும்புவதால் கிழக்குத் தேர்தலில் போட்டி

### மு.கா. பிரமுகர் கூறுகிறார்

அம்பாறை, ஜூலை 5

முஸ்லிம் காங்கிரஸின் கொள்கைகளை முன்னெடுப்பதற்காகவும், கட்சி ஆதரவாளர்களின் கோரிக்கைகளை நிறைவேற்றுவதற்காகவும் இந்தமுறை நடைபெறவுள்ள கிழக்கு மாகாண சபைத் தேர்தலில் போட்டியிடுவதற்குத் தீர்மானித்துள்ளேன் என்று அம்பாறை மாவட்ட முஸ்லிம் காங்கிரஸ் இணைப்பு அலுவலகப் பொறுப்பாளர் ஏ.எல்.மர்ஜூன் தெரிவித்தார்.

அக்கரைப்பற்றில் அமைந்துள்ள முஸ்லிம் காங்கிரஸ் கட்சியின் அம்பாறை மாவட்ட இணைப்பு அலுவலகத்தில் நடைபெற்ற கட்சி ஆதரவாளர்களுடனான கலந்துரையாடலில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இதுதொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:-

அக்கரைப்பற்றில் இன்று முஸ்லிம் காங்கிரஸுக்கு செல்வாக்கு அதிகரித்து வருவதை நாம் எல்லோரும் அறிவோம். இது நமது சமூகத்தின் எழுச்சிக்கான மிகப்பெரும் பலமாகப் பார்க்கப்படுகின்றது.

கடந்த மாநகரசபைத் தேர்தலில் முஸ்லிம் காங்கிரஸுக்கு பல வழிகளிலும் கெடுபிடிகளை ஏற்படுத்தினார்கள். அதுமட்டுமா? பள்ளிவாசல்களின் புனிதத்தையே கெடுத்தார்கள். இன்று நீதிமன்றத்தில் பல வழக்குகளுக்காகப் படி ஏறுகின்றோம். எங்களுக்கு என்னதான் இடையூறுகளை ஏற்படுத்தினாலும் முஸ்லிம் காங்கிரஸின் வெற்றிக்காகப் பாடுபட்டு வருகின்றோம்.

நடைபெறவுள்ள கிழக்கு மாகாணசபைத் தேர்தலில் அக்கரைப்பற்று மண்ணிலிருந்து ஒரு மாகாணசபை உறுப்பினரை நாம் பெற்றே ஆகவேண்டும்.

மாகாண சபைத் தேர்தலில் என்னைப்போட்டியிடுமாறு கட்சி ஆதரவாளர்களான நீங்கள் கோருகின்றீர்கள். மிகவும் சந்தோஷமாக உள்ளது. பட்டம், பதவிகளுக்காக ஆசைப்படுபவன் நானில்லை. சமூகத்தினதும், இந்தப் பிரதேசத்தினதும் முன்னேற்றத்திற்காக ஆசைப்படுபவர்கள் நாங்கள். நிச்சயமாக உங்களது கோரிக்கைகளை ஏற்றுக்கொள்கின்றேன்- என்றார். (ச)

## பல்கலைக்கழகங்களில் வன்முறையை இல்லாதொழிப்பதற்கு ஒத்துழையுங்கள்

### உயர்கல்வி அமைச்சர் கோருகிறார்



அம்பாறை, ஜூலை 5

பல்கலைக்கழகங்களில் வன்முறையில்லாத நிலையை உருவாக்க அனைவரும் ஒத்துழைக்க வேண்டும் என்று உயர்கல்வி அமைச்சர் எஸ்.பி. திஸாநாயக்க கோரிக்கை விடுத்துள்ளார்.

கிழக்கு பல்கலைக்கழகத்தின் சுகாதார சௌக்கிய விஞ்ஞான பீடத்தின் மாணவர் விடுதிக் கட்டடத்துக்கான அடிக்கல் நடும் நிகழ்வு கடந்த திங்கள்கிழமை நடைபெற்றது. இந்தநிகழ்வில் உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இந்தநிகழ்வில் அவர் மேலும் தெரிவித்ததாவது:-

பல்கலைக்கழகங்களில் பகிடி வதைக்கு விரோதமாக இருக்கும் மாணவர்கள் தாக்கப்படுகின்றார்கள்.

அரசியல்வாதிகள் பல்கலைக்கழகங்களுக்குள் செல்ல முடியாது. இவ்வாறான ஒரு ஜனநாயகமற்ற சூழ்நிலை பல்கலைக்கழகங்களில் ஏற்படுவதை நாம் ஒரு போதும் அனுமதிக்க முடியாது. இவ்வாறான நிலைமையிலிருந்து பல்கலைக்கழகங்களை மீட்டெடுக்க பல்கலைக்கழக நிர்வாகத்தினர் உதவ வேண்டும்.

கிழக்குப் பல்கலைக்கழகத்தின் சௌக்கிய சுகாதார விஞ்ஞான பீடத்தை முழுமையாக கட்டி முடிப்பதற்கு 5000 மில்லியன் ரூபா தேவைப்படும். முதல் கட்டமாக 360 மில்லியன் ரூபா நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

கிழக்கு பல்கலைக்கழகத்தின் சௌக்கிய விஞ்ஞான பீடம் சிறப்பாக இயங்குகின்றது. போதியளவு வசதி வாய்ப்பு இல்லாத போதிலும் இதன் முன்னேற்றம் சிறப்பாகவுள்ளது. கிழக்குப் பல்கலைக்கழகத்தின் விஞ்ஞான பீடமும் ராஜரட்ட பல்கலைக்கழகத்தின் விஞ்ஞான பீடமும் அண்மையில் ஆரம்பிக்கப்பட்டன. கிழக்குப் பல்கலைக்கழகத்தின் விஞ்ஞான பீடம் துரித வளர்ச்சி கண்டுள்ளது.

பல்கலைக்கழக கல்வி சார் ஊழியர்களுக்கு உடனடியாக சம்பள உயர்வு வழங்கப்படமாட்டாது. எதிர்வரும் ஒக்ரோபர் மாதத்தில் பல்கலைக்கழக ஊழியர்களுக்கு சம்பள அதிகரிப்பு வழங்கப்படும்.

பல்கலைக்கழக பகுதி நேர விரிவுரையாளர்களுக்கு 500 ரூபா முதல் 1500 ரூபா வரை ஏற்கனவே அதிகரிக்கப்பட்டுள்ளது. அரசால் அரச உத்தியோகத்தர்களுக்குவழங்கப்படும் அனைத்துக் கொடுப்பனவுகளும் பல்கலைக்கழக கல்வி சார் ஊழியர்களுக்கும் வழங்கப்பட்டுள்ளன.

மலேசியா, சிங்கப்பூர் போன்ற நாடுகளில் கல்வி கற்பவர்களிடமிருந்து பணத்தைப் பெற்று சம்பளம் வழங்கப்படுகின்றது. ஆனால் இலங்கை மாணவர்களிடமிருந்து பணம் பெற்று சம்பளம் வழங்கப்படவில்லை.

இலங்கையில் அரசு பல்கலைக்கழக பேராசிரியர்களுக்கும் கல்வி சார் ஊழியர்களுக்கும் வசதி வாய்ப்புகளை செய்து கொடுத்துள்ளது. இந்த நாட்டில் உயர் நீதிமன்ற நீதிபதி பெறும் சம்பளத்தைப் போன்று பல்கலைக்கழக சிரேஷ்ட பேராசிரியரும் பெறுகின்றார் - என்றார்.

## கத்தோலிக்க திருச்சபையின் புதிய மறை மாவட்டமாக மட்டக்களப்பு பிரகடனம்

மட்டக்களப்பு,ஜூலை 5

கத்தோலிக்க திருச்சபையின் புதிய மறைமாவட்டமாக மட்டக்களப்பு மாவட்டம் நேற்றுமுன்தினம் செவ்வாய்க்கிழமை பாப்பரசர் 16ஆம் ஆசீர்வாதப்பரினால் பிரகடனப்படுத்தப்பட்டது.

சுமார் 117 வருடங்களாக திருகோணமலை மறைமாவட்டத்துக்குள்ளேயே மட்டக்களப்பு, அம்பாறை நிர்வாக மாவட்டங்கள் உள்ளடங்கியிருந்தன.

இந்தநிலையில் மட்டக்களப்பு புதிய மறைமாவட்டம் வத்திக்கான் திருக்கூடத்தில் பரிசுத்த பாப்பரசர் 16 ஆம் ஆசீர்வாதப்பரினால் பிரகடனம் செய்யப்பட்டது.

நீண்ட காலமாக மட்டக்களப்பு, அம்பாறை கத்தோலிக்க மக்களாலும் துறவற சபைகளாலும் இலங்கைத் திருச்சபையினூடாக பாப்பரசருக்கு விடுக்கப்பட்டிருந்த கோரிக்கையின் பயனாகவே இந்தப் புதிய மறைமாவட்டம் உருவாக்கப்பட்டதாக மட்டக்களப்பிலுள்ள கத்தோலிக்க அருட்தந்தை ஒருவர் தெரிவித்தார்.

எதிர்வரும் செப்ரெம்பர் மாதம் தொடக்கம் திருகோணமலை மறைமாவட்டம் தனியாகவும் மட்டக்களப்பு மறைமாவட்டம் தனியாகவும் நிர்வாக ரீதியாக இயங்கவுள்ளன. திருகோணமலையின் ஆயராக ஜோசப் கிங்ஸ்லிசுவாம்பிள்ளை ஆண்டகையும் மட்டக்களப்பு மறை மாவட்டத்தில் முதல் ஆயராக பொன்னையா ஜோசப் ஆண்டகையும் இறைபணி புரிவதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. (ச-31)

## மத்திய மாகாணத்தில் தொடர்ந்து அடை மழை

### மகாவலி கங்கை நீர்மட்டம் உயர்வு

நுவரெலியா, ஜூலை 5

நுவரெலியா மாவட்டத்தில் பல்வேறு பகுதிகளில் பெய்துவருகின்ற அடைமழையினால் நீர் வற்றிப் போயிருந்த நீரோடைகள், ஆறுகள், நீர்த்தேக்கங்களில் தற்போது நீர் நிறைந்து வருவதை அவதானிக்க முடிகிறது.

கண்டி மாவட்டத்திலும் தொடர்ச்சியான மழை வீழ்ச்சி காணப்படுவதால் மகாவலி கங்கையின் நீர் மட்டமும் உயர்ந்து வருகின்றது.

நுவரெலியா மாவட்டத்தில் கடுங்குளிர் நிலவுகின்ற அதேவேளை மேகமூட்டமும் ஏற்பட்டுள்ளதால் வாகன சாரதிகள் அவதானமாக வாகனங்களைச் செலுத்த வேண்டுமென போக்குவரத்துப் பொலிஸார் அறிவுறுத்தியுள்ளனர். (ச)

## நோர்வூட்டில் சுழல் காற்று வீடுகளுக்கு கடும் சேதம்

நோர்வூட், ஜூலை 5

வீசிய கடும் காற்றினால் நோர்வூட் பகுதியில் இரண்டு வீடுகள் சேதமடைந்ததுடன் பெண் ஒருவர் காயமடைந்துள்ளார்.

தற்போது நிலவும் காலநிலை காரணமாக கடும் காற்று வீசுவதால் மரங்கள் முறிவடையக்கூடிய அபாயம் நிலவுகின்றது. எனவே பொதுமக்கள் அவதானத்துடன் செயற்பட வேண்டும் என பொலிஸார் எச்சரிக்கின்றனர்.

இதேவேளை, ஹற்றன், டன்பார் பகுதியில் மதில் சுவர் ஒன்று [illegible] தொடர்ந் [illegible] ன் செயற்படுமாறு ஹற்றன் பொலிஸார் வேண்டுகோள் விடுக்கின்றனர்.

## பாடசாலைக்கு பெயர் மாற்றம்

அக்கரைப்பற்று, ஜூலை 5

அக்கரைப்பற்று வலயக் கல்வி அலுவலகத்துக்குட்பட்ட அட்டாளைச்சேனை, மீனோடைக்கட்டு அரசினர் முஸ்லிம் கலவன் பாடசாலை, டாக்டர் ஜலால்தீன் வித்தியாலயமாகப் பெயர் மாற்றம் செய்யப்பட்டுள்ளது என்று அதிபர் ஏ.எல்.எம். பாயிஸ் தெரிவித்தார்.

இதற்கான அனுமதியை கிழக்கு மாகாணக் கல்வி, பண்பாட்டலுவல்கள், காணி அபிவிருத்தி, போக்குவரத்து அமைச்சின் செயலாளர் என்.ஏ.புஷ்பகுமார வழங்கியுள்ளார்.

அக்கரைப்பற்று வலயத்தில் மிகவும் பழைமை வாய்ந்த இந்தப் பாடசாலையின் பெயரை டாக்டர் ஜலால்தீன் வித்தியாலயமாக மாற்றுவதற்குப் பாடசாலை அபிவிருத்திச் சங்கம், பொதுமக்கள் மற்றும் பாடசாலை சமூகம் என்பன கோரிக்கை விடுத்திருந்தன.

பொத்துவில் தொகுதியில் முதலாவது நாடாளுமன்ற உறுப்பினராகத் தெரிவு செய்யப்பட்ட டாக்டர் எஸ்.எம்.ஜலால்தீன் இந்தப் பிராந்தியத்துக்கு மட்டுமல்லாது, முழு நாட்டுக்குமே சேவை செய்து தனது பெயரை மூவின சமூகங்களும் ஏற்கும்வகையில் வரலாற்றுத் தடம் பதித்தவர். அந்த வகையில் இவர் வாழ்ந்த பிரதேசத்தில் அமைந்துள்ள இப்பாடசாலைக்கு அவரது பெயர் சூட்டப்பட்டுள்ளமை வரலாற்றில் ஒரு நிகழ்வாகும்.

இந்தப் பாடசாலையின் பெயர் மாற்றத்துக்கு உறுதுணையாக செயற்பட்ட கிழக்கு மாகாண சபை உறுப்பினர் ஏ.எம்.ஜெமில், அக்கரைப்பற்று வலயக் கல்விப் பணிப்பாளர் ஏ.எல்.எம்.காசிம், அட்டாளைச்சேனை கோட்டக் கல்விப் பணிப்பாளர் என்.கே.எம். இப்றாஹிம் உட்பட சம்பந்தப்பட்ட அனைவருக்கும் பாடசாலைச் சமூகம் பாராட்டுத் தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (ச)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தருவது வித்தியா

# இன்றைய நாள் உங்களுக்கு எப்படி?

நாளை

ஆனி 22 வெள்ளிக்கிழமை 06.07.2012
திதி: திருதியை மு.இ 08.57 வரை
நட்சத்திரம்: திருவோணம் பி.ப. 02.55 வரை
சுபநேரம்: 05.58- 07.28 வரை
ராகு காலம்: 10.28- 11.58 வரை

**மேடம்:** எதிர்பாராத வகையில் வேலைப்பளு அதிகரிக்கும். உடல்நிலையில் சோர்வு ஏற்படும். புதிய முயற்சிகள் ஓரளவுக்குப் பயன் தரும். பழைய கடன் குறைந்து, புதிய கடன் ஏற்படும். தொழில் ரீதியான தடைகளை அகற்றி வருமானத்தை அதிகரிப்பீர்கள்.

**இடபம்:** மனதில் புதிய வியூகங்களோடு செயற்படுவீர்கள். உற்சாகம் அதிகரிக்கும். பெற்றோரின் உடல் நலன் தொடர்பான விடயங்களில் கவனம் தேவை. தொழில் வகையில் இடர்பாடுகள் ஏற்பட்டபோதும், பாதிப்புகள் இருக்காது.

**மிதுனம்:** உங்களின் சாதுர்யமான முயற்சிகள் வெற்றி தரும். எதிர்பாராத பணவரவு உண்டு. குடும்பத்தில் கலகலப்பு, மகிழ்ச்சி காணப்படும். வீண் வம்பு விவகாரங்களை அமைதியான வழியில் தீர்ப்பீர்கள். கலைஞர்களுக்கு திறமையை வெளிக்காட்ட வாய்ப்புகள் கிடைக்கப்பெறும்.

**கடகம்:** நீங்கள் நினைத்தது ஒன்றும், நடந்தது ஒன்றுமாக இருக்கும். புதிய வேலைக்காக முயற்சி செய்து கொண்டிருப்பவர்களுக்கு, நல்ல தகவல் கிடைக்கும். தொழில் தொடர்பான விடயங்கள், மன ஆறுதல் அளிக்கும்.

**சிங்கம்:** உங்கள் மனதில் எதிர்கால சிந்தனை அதிகமாக இருக்கும். சந்திக்க நினைத்த நபர் ஒருவர், உங்களைச் சந்திக்க வருவார். குடும்ப விவகாரங்களில், தெளிவான முடிவுக்கு வருவீர்கள். தொழில் மற்றும் வியாபாரத்தில் சில விடயங்களைத் தெரிந்து கொள்வீர்கள்.

**கன்னி:** அடுத்தடுத்து பணிகள் இருக்கும். சோர்வில்லாமல் செய்து முடிப்பீர்கள். நண்பர் ஒருவரின் ஆலோசனையும், உதவியும் பயன் தரும். தொழில் தொடர்பாக பயணங்கள் ஏற்படும். வியாபாரத்தில், சற்று ஏற்ற இறக்கமான நிலையே. பண நிலையில் எதிர்பாராத வரவுகள் மன மகிழ்ச்சி தரும்.

**துலாம்:** நீங்கள் எதிர்பார்க்கும் உதவிகள் சற்று தாமதப்பட்டபோதும் கிடைக்கப்பெறும். அரசால் சில நன்மைகள் கிடைக்கப்பெறுவீர்கள். தாய்வழி உறவு சந்திப்பு, அவர்களால் செலவுகள் ஏற்படும்.

**விருச்சிகம்:** மனநிலையில் குழப்பம் சற்று கூடுதலாக இருந்தபோதும், அதனை பொருட்படுத்திக் கொள்ளாது, பணிகளில் கவனம் செலுத்துவீர்கள். பணப் பற்றாக்குறை நிலவிய போதும், அதற்குள் செலவுகளை ஏற்படுத்திக் கொள்வீர்கள்.

**தனுசு:** அவசரப்பட்ட செயல்களால் அவதிப்பட நேர்ந்தபோதும், உங்களின் நிதானமான நடவடிக்கையால், வெற்றிகரமாகச் செய்துமுடிப்பீர்கள். வீட்டிலும், வெளியிலும் வார்த்தைகளில் மென்மை தேவை. தொழிலில், ஏற்ற இறக்கமான சூழ்நிலை காணப்படும்.

**மகரம்:** பேச்சுக்களால் காரியங்களை எளிதாக முடிக்க வாய்ப்பு உண்டு. சில பணிகளை மனதில் கொண்டு விரைவாகச் செயற்பட திட்டமிடுவீர்கள். ஓரளவுக்கு உங்களின் திட்டம் நிறைவேறும். பணி முடிந்த போதும், பணவரவு சற்று தாமதப்படும்.

**கும்பம்:** உற்சாகம் அதிகரிக்கும். சில தகவல்களால் சந்தோஷங்கள் அதிகரிக்கும். இந்த சந்தோஷத்தால் பணிகளை விரைவாகச் செய்து முடிப்பீர்கள். நண்பர் ஒருவரின் உதவி, மிகுந்த பயனுள்ளதாக இருக்கும். தொழிலில் புதிய ஒப்பந்தங்கள் ஏற்படும்.

**மீனம்:** பொறுப்பு அதிகரிக்கும். உறவுகளால் எதிர்பார்த்த உதவி கிடைக்கும். கொடுக்கல், வாங்கலில் கவனம் தேவை. அயலில் தொந்தரவு குறையும். உத்தியோகத்தர்கள், நிர்வாகத்தினரின் நம்பிக்கையைப் பெறுவர்.

# சுடோக்கு
## எண் விளையாட்டு

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | 4 | 1 | 6 | 9 | | | | |
| | | | | | | | | 5 |
| 2 | 6 | | 4 | 3 | | | 9 | |
| 1 | | | 9 | 2 | 3 | 8 | 4 | |
| | | 8 | | | | 9 | | |
| | 3 | 9 | 8 | 1 | 4 | | | |
| | 8 | | | 4 | 9 | | 1 | 2 |
| 9 | | | | | | | | |
| | | | | 6 | 8 | 7 | 5 | |

## சுடோக்கின் நேற்றைய விடை

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 2 | 8 | 3 | 7 | 9 | 6 | 4 | 1 | 5 |
| 6 | 5 | 1 | 4 | 2 | 8 | 7 | 9 | 3 |
| 9 | 7 | 4 | 3 | 5 | 1 | 8 | 6 | 2 |
| 1 | 9 | 5 | 2 | 7 | 3 | 6 | 4 | 8 |
| 8 | 4 | 2 | 6 | 1 | 5 | 3 | 7 | 9 |
| 7 | 3 | 6 | 9 | 8 | 4 | 2 | 5 | 1 |
| 5 | 6 | 8 | 1 | 4 | 2 | 9 | 3 | 7 |
| 4 | 2 | 7 | 5 | 3 | 9 | 1 | 8 | 6 |
| 3 | 1 | 9 | 8 | 6 | 7 | 5 | 2 | 4 |

சுடோக்கு ஒரு எண் விளையாட்டு. தர்க்க ரீதியான ஒழுங்குபடுத்தல்தான் இதன் அடிப்படை. 1-9 வரையான எண்களை ஒழுங்குபடுத்தி ஒரே கோலத்தை ஏற்படுத்த வேண்டும். இந்தப் பெட்டி 9 நிரல்களையும் 9 நிரைகளையும் கொண்டது. 3X3 ஆக உள்ளேயும் 3 நிரல்களையும் 3 நிரைகளையும் கொண்டிருக்கிறது. (உள்ளே இருப்பவற்றை பெட்டிகள், கட்டங்கள், பகுதிகள், உபசதுரங்கள் என்றும் அழைக்கிறார்கள்). இந்த ஒவ்வொரு நிரையிலும் நிரலிலும் 1-9 வரையான எண்கள், இரண்டு தடவைகள் (மீண்டும் மீண்டும்) வராமல் நிரப்பப்பட வேண்டும். அவ்வாறு நிரப்பப் படுகையில் உள் பெட்டிகளுக்குள்ளும் அவ்வாறே 1-9 இலக்கங்கள் இரட்டைப் படாமல் வரவேண்டும். சில கட்டங்கள் ஏற்கனவே நிரப்பப்பட்டிருக்கும் தர்க்க ரீதியில் ஏனையவற்றை நிரப்ப வேண்டியதே வேலை. சுடோக்கு என்பது ஜப்பானியச் சொல். அதன் பொருள் 'தனி எண்' என்பதாகும். 1986 இல் ஜப்பானிய நிறுவனமான 'நிகோலி' இதனை அறிமுகப்படுத்தி வெற்றிகரமாகப் பரவலாக்கியது. 2005இல் இது உலக அளவில் பிரபல்யமானது.


# 31ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்



மலர்வு 20 ★ 03 ★ 1930

உதிர்வு 05 ★ 06 ★ 2012

அமரர்
## இராஜேஸ்வரி சோமசுந்தரம் (தாத்தோ)

எமது குடும்பத்தின் ஒளிவிளக்காய் திகழ்ந்து அன்போடும், பண்போடும், பாசத்தோடும் எம்மை பாதுகாத்து சீரோடும் சிறப்போடும் நாம் வாழ வழிகாட்டி பேரோடும், புகழோடும் இன்று வானுறை தெய்வமாகிவிட்ட எமது அன்புத் தாய் திருமதி இராஜேஸ்வரி சோமசுந்தரம் அவர்களது 31ஆம் நாள் நினைவஞ்சலி தினத்தில் எமது குலவிளக்கான அன்புத் தெய்வத்தை சிரந்தாழ்த்தி இரு கரம் கூப்பி வணங்குகின்றோம்.

எமது குடும்பத் தலைவி மறைந்த போது நேரில் வந்து எம்முடன் துயர் பகிர்ந்து கொண்டவர்களுக்கும், ஊடகங்கள் மூலமாக அனுதாபச் செய்திகள் அனுப்பியவர்களுக்கும் மலர் வளையம் சாத்தி அஞ்சலி செய்தோருக்கும், கண்ணீர் அஞ்சலி பிரசுரங்கள் மூலம் துயரில் பங்கு கொண்டவர்களுக்கும் குறிப்பாக வடமராட்சி மத்திய மகளிர் கல்லூரி அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள் ஆகியோருக்கும் அமரர் நோயுற்ற வேளையில் சிகிச்சையளித்த மந்திகை ஆதார வைத்தியசாலை வைத்தியர், தாதிமார்கள் மற்றும் உத்தியோகத்தர்களுக்கும் அமரரின் சகல கிரியைகளையும் செய்த சிவாச்சாரியார்கள் ஆகிய சகலருக்கும் எங்கள் உள்ளங்கனிந்த நன்றியை தெரிவித்துக் கொள்வதுடன் இன்று (05.07.2012) வியாழக்கிழமை அன்னாரின் இல்லத்தில் நடைபெறும் அந்தியேட்டிக் கிரியையிலும் சபிண்டி நிகழ்விலும் கலந்து கொண்டு அன்னாரின் ஆத்ம சாந்திக்காக இறைவனை பிரார்த்திப்பதோடு மதிய போசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

'இராஜஸ்தான்'
வதிரி, கரவெட்டி.

குடும்பத்தினர்.

(சி/1211)(5-6)



# முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



மண்ணில் 21 ★ 04 ★ 1940

விண்ணில் 16 ★ 07 ★ 2011

## Dr. P.V. தம்பித்துரை

திதி : அபரபக்க துதியை

பாராண்ட குலவிளக்கு பரமசிவன் நீர் எமக்கு
எல்லை இல்லா அன்பு தந்தீர் பாசம் தந்தீர்
அழகான நம் வாழ்வை பசுமையாய் ஆக்கிவிட்டீர்
விழிமுடி விழிக்க முன் விலகித்தான் சென்றீரோ?
உருக்குலைந்து போய் விட்டோம் எமை விட்டுச் சென்றதும்
ஓராண்டு சென்றாலும் ஓயாது உம் நினைவு
அணையாத தீபமாய் எம் இனிய ஒளிவிளக்காய்
என்றென்றும் வாழுமையா உம் இனிய நினைவுகள்
மறுபிறப்பென்றொன்று மறுபடியும் உண்டெனில்
ஏங்கித் தவிக்கின்றோம் மீண்டும் எம் உறவாய் வாரும் ஐயா...

வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன் வானுறையும்
தெய்வத்துள் வைக்கப்படும்

முதலாம் ஆண்டு நினைவுப்பிரார்த்தனை இன்று (05.07.2012) வியாழக்கிழமை மு.ப. 11.00 மணிக்கு எமது இல்லத்தில் நடை பெறும். இந்நிகழ்விலும் அதனைத் தொடர்ந்து இடம்பெறும் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும், மதியபோசனத்திலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

[illegible] வீதி,
சாவகச்சேரி வடக்கு, மீசாலை

என்றும் உங்கள் நினைவுடன்:
குடும்பத்தினர்

(சி/9332)(6-8)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சோதனைகளின்போது சிறைச்சாலையில்

# போதைப்பொருள் இருந்தால் அத்தியட்சகருக்கு பணிநீக்கம்

### சட்டத்திலும் மாற்றம் வரும் என்கிறார் சந்திரசிறி கஜதீர



கொழும்பு, ஜூலை 5

சிறைச்சாலைப் புலனாய்வுப் பிரிவு அதிகாரிகளினால் மேற்கொள்ளப்படும் சோதனைகளின்போது, சிறைச்சாலைகளில் இருந்து போதைப் பொருள், கையடக்கத் தொலைபேசி, பணம் உள்ளிட்ட தடைசெய்யப்பட்ட பொருள்கள் மீட்கப்பட்டால் அதற்குச் சிறைச்சாலை அத்தியட்சகர் பதில் கூறும் வகையில் சட்டத்தில் திருத்தங்கள் செய்யப்படுவதுடன், அவர் பணிநீக்கமும் செய்யப்படலாம் என்று சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு மற்றும் புனர்வாழ்வு அமைச்சர் சந்திரசிறி கஜதீர தெரிவித்தார்.

இதுதொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:-

சிறைச்சாலைகளுக்குள் இடம்பெறும் சட்டவிரோத செயற்பாடுகளை ஒழிப்பதற்காகத் தனியான பிரிவு ஒன்றை ஏற்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. இந்தப் பிரிவுக்கு 150 அதிகாரிகள் இணைத்துக் கொள்ளப்பட உள்ளனர்.

வவுனியா சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டிருந்த கைதிகளிடம் இருந்து 20 ஆயிரத்துக்கும் மேற்பட்ட பணம், நவீன தொழில் நுட்பங்களுடன் கூடிய தொலைபேசிகள் கைப்பற்றப்பட்டன. நீர்கொழும்பு சிறையில் அடைக்கப்பட்டுள்ள வெளிநாட்டுக் கைதிகளிடம் இருந்தும் இவ்வாறு பெறுமதியான தொலைபேசிகளும், பணமும் கைப்பற்றப்பட்டன.

எதிர்காலத்தில் இவ்வாறான சம்பவங்கள் இடம்பெறாத வகையில் நடவடிக்கை எடுக்கப்படும்- என்றார். (ச)

## 7 பேரைக் காவு கொண்ட காட்டு யானை சிக்கியது

கொழும்பு, ஜூலை 5

சுமார் இரண்டு வருடங்களாக அநுராதபுரத்தில் பல பகுதிகளுக்கும் நுழைந்து மக்கள் மீது தாக்குதல் நடத்தி அட்டகாசம் புரிந்துவந்த காட்டு யானை பிடிக்கப்பட்டுள்ளது.

இந்தக் காட்டு யானை அநுராதபுரம் - ஸ்ராவஸ்திரபுர, மொரகொட, உலுக்குளம் உள்ளிட்ட கிராமங்களில் புகுந்து அட்டகாசம் புரிந்து வந்ததோடு, இதன் தாக்குதலுக்கு இலக்காகி மூன்று பெண்கள் உட்பட 7 பேர் இறந்துள்ளனர்.

5 நாள்கள் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பின் பின்னர் வன ஜீவராசிகள் திணைக்கள அதிகாரிகளால் யானை பிடிக்கப்பட்டுள்ளது.

குறித்த யானையைச் சரணாலயத்துக்கு அனுப்பி வைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக வன ஜீவராசிகள் திணைக்களம் குறிப்பிட்டுள்ளது. (ச)

## நாட்டின் கரையோர பாதுகாப்பு அதிகரிப்பு

கொழும்பு, ஜூலை 5

நாட்டின் கரையோரப் பாதுகாப்பு தீவிரப்படுத்தப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. கற்பிட்டி முதல் பூநகரி வரையிலான பகுதியில் விசேட கண்காணிப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவுள்ளன என்று குறிப்பிடப்படுகிறது.

இலங்கைக் கடற்படையினர் கண்காணிப்பு மற்றும் ரோந்து நடவடிக்கைகளை அதிகரித்துள்ளனர். இந்திய போதைப் பொருள் கடத்தல்காரர்கள் மற்றும் சட்டவிரோத ஆள்கடத்தல்காரர்களின் நடவடிக்கைகளை கட்டுப்படுத்தும் நோக்கில் பாதுகாப்பு அதிகரிக்கப்பட்டுள்ளது.

வடமத்திய மற்றும் வடமேற்கு கரையோரப் பகுதிகளில் விசேட படகுகள் ரோந்தில் ஈடுபடுத்தப்பட்டுள்ளன.

போதைப் பொருள் உள்ளிட்ட பல்வேறு சட்டவிரோத வர்த்தக நடவடிக்கைகளில் ஈடுபடும் தரப்பினர் கடற்பரப்பை ஊடறுத்து நாட்டுக்குள் பிரவேசித்து வருவதாக உயர் கடற்படை அதிகாரியொருவர் தெரிவித்தார். (ச)

## தூதர்களுக்கு விசேட பயிற்சி

கொழும்பு, ஜூலை 5

வெளிநாடுகளில் பணியாற்றிவரும் இலங்கைத் தூதர்களுக்கு விசேடபயிற்சி அளிக்கப்படவுள்ளது.


இந்தப் பயிற்சி தியத்தலாவ இராணுவப் பயிற்சி நிலையத்தில் நாளைமறுதினம் சனிக்கிழமையும் மறுநாள் ஞாயிற்றுக்கிழமையும் நடைபெறவுள்ளது.

நாட்டின் வெளியுறவுக் கொள்கை மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பில் தூதர்களுக்கு விளக்கம் அளிக்கப்படவுள்ளது.

தூதர்களுக்கு விசேட கல்விச் சுற்றுலா ஒன்றையும் வெளிவிவகார அமைச்சு ஒழுங்கு செய்துள்ளது.

எதிர்வரும் 9 ஆம் திகதி தொடக்கம் 11 ஆம் திகதி வரையில் இராஜதந்திரிகள் மட்டக்களப்பு மற்றும் திருகோணமலை மாவட்டங்களுக்கு சுற்றுலா மேற்கொள்ளவுள்ளனர்.

நாட்டின் நன்மதிப்பை சர்வதேச ரீதியில் மேம்படுத்தும் நோக்கில் பயிற்சி மற்றும் கல்விச் சுற்றுலா ஒழுங்கு செய்யப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.



கல்வி அமைச்சின் ஏற்பாட்டில் நேற்றுமுன்தினம் செவ்வாய்க்கிழமை நடைபெற்ற மாணவர்களின் எசல பெரஹெரவை அலரிமாளிகைக்கு முன்னாலிருந்து ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ மற்றும் அமைச்சர்கள் பலர் பார்வையிட்டனர்.

## பௌத்த சனத் தொகையில் வீழ்ச்சி ஏற்பட்டுள்ளதாம்

### பேராசிரியர் தம்மரத்ன தேரர் கூறுகிறார்

கொழும்பு,ஜூலை 5

பௌத்த மக்கள் சனத்தொகையில் வீழ்ச்சி ஏற்பட்டுள்ளதாகப் பேராசிரியர் இந்துராகாரே தம்மரத்ன தேரர் தெரிவித்தார்.

சட்டவிரோத மதமாற்றம் தொடர்பில் நடத்தப்பட்ட ஆய்வு அறிக்கையைச் சமர்ப்பிக்கும் வைபவத்தில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

நான் சிறுவயதாக இருக்கும்போது இலங்கையில் மொத்த சனத்தொகையில் 79 வீதம் பௌத்தர்கள், தற்போது அந்த எண்ணிக்கை 61 வீதமாக வீழ்ச்சியடைந்துள்ளது. அடுத்த சனத்தொகை மதிப்பீட்டில் இந்த எண்ணிக்கை 51 வீதமாக வீழ்ச்சியடையும் என்று கூறினார்.

மதமாற்ற நடவடிக்கைகள் மிகவும் நுட்பமான முறையில் மேற்கொள்ளப்படுகின்றன. பல திட்டமிட்ட குழுக்கள் மதமாற்ற நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றன என்று அவர் மேலும் தெரிவித்தார். (ச)

## குளவி கொட்டி இருபது பேர் வைத்தியசாலையில்

கொழும்பு,ஜூலை5

சிகிரியாவில் சிங்கத்தின் பாதத்துக்கு அருகில் நேற்றுப் புதன்கிழமை காலை குளவிக் கொட்டுக்கு இலக்காகி 20 பேர் காயமடைந்துள்ளனர்.

குளவிக் கொட்டுக்கு இலக்காகி காயமடைந்தவர்களில் 2 கிரேக்க நாட்டவரும் 2 சிறுவர்களும் அடங்குகின்றனர் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

காயமடைந்தவர்கள் சிகிச்சைக்காக சிகிரியா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். சிகிரியாவுக்கு வரும் வெளிநாட்டு மற்றும் உள்நாட்டுச் சுற்றுலாப் பயணிகள் நுழைவாயிலுக்குள் உள்நுழையும் வேளையில் பல தடவைகள் குளவிக் கொட்டுக்கு இலக்காகியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ச)

# காணி, பொலிஸ் அதிகாரங்களை வழங்க அச்சம் தேவை இல்லை

### அதிகாரங்களை பரவலாக்கும் செயற்பாடுகளை முன்னெடுக்கலாம் என்கிறார் அமைச்சர் ராஜித

கொழும்பு, ஜூலை 5

காணி மற்றும் பொலிஸ் அதிகாரங்களை வழங்குவது குறித்து அச்சம் கொள்ளத் தேவையில்லை. இலங்கை அரசு அச்சமின்றி சர்வதேசம் எதிர்பார்க்கும் விதத்தில் காணி மற்றும் பொலிஸ் அதிகாரங்களுடன் அதிகாரத்தை பரவலாக்க உடனடியாகச் செயற்பாடுகளை முன்னெடுக்க வேண்டும் என்று மீன்பிடி மற்றும் நீரியல்வள அமைச்சர் ராஜித சேனாரட்ன தெரிவித்தார்.

ஆங்கில இணையத்தளம் ஒன்றுக்கு வழங்கிய செவ்வியிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இதுதொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:-

உலகில் பல நாடுகள் அதிகாரங்களை பரவலாக்கியுள்ளன, எனினும் அந்த நாடுகளில் இதனால் எந்த ஆபத்தும் ஏற்படவில்லை. இலங்கையில் உள்ள கட்சிகளில் பெரும்பாலானவை காணி மற்றும் பொலிஸ் அதிகாரங்களுடன், அதிகாரத்தைப் பரவலாக்குவதை ஏற்றுக்கொண்டுள்ளன.

> 13 ஆவது அரசியல் திருத்தத்தை நடைமுறைப்படுத்த அமைச்சரவையின் அனுமதி தேவையில்லை. காரணம் அது நிறைவேற்றப்பட்ட அரசியல் அமைப்புச் சட்டம்.

இந்தச் சந்தர்ப்பத்தில் இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண நாடாளுமன்றத் தெரிவுக்குழு ஒரு சிறந்த நடவடிக்கையாகும். தமிழரசுக் கட்சித் தலைவர் இரா.சம்பந்தன் போன்றவர்களையும் இதில் இணைத்துக் கொண்டு அதனைப் பரிசீலித்துப் பார்க்க வேண்டும். தற்போதைய அரசில் உள்ள பலர், சந்திரிக்கா பண்டாரநாயக்க குமாரதுங்கவுடன் அரசியல் தீர்வுக்காக இணைந்து செயற்பட்டவர்கள்.

2008 ஆம் ஆண்டு ஐக்கிய நாடுகள் மனித உரிமை சபையின் கூட்டத் தொடரில் 13 ஆவது அரசியல் அமைப்புக்கு அப்பால் சென்று அரசியல் தீர்வை வழங்குவதாக உறுதிமொழி வழங்கப்பட்டது. எனினும் அதனை இதுவரை செய்யவில்லை. இந்த உறுதிமொழி காரணமாகவே சர்வதேச சமூகம் போரில் வெற்றிப்பெற உதவி செய்தது. 13 ஆவது அரசியல் அமைப்பு திருத்தத்தை நடைமுறைப் படுத்த குறைந்த பட்சம் அமைச்சரவையின் அனுமதி கூடத் தேவையில்லை. காரணம் அது நிறைவேற்றப்பட்ட அரசியல் அமைப்புச் சட்டம். ஜனாதிபதி அதனை நடைமுறைப்படுத்த முடியும். - என்றார். (ச)

## போலி தங்கத் துண்டுகளை விற்க முயன்ற மூவர் கைது



கொழும்பு, ஜூலை 5

தங்கவர்ணம் பூசப்பட்ட ஈயத்துண்டுகளை தங்கத்துண்டுகளெனக் கூறி விற்பனை செய்ய முயன்ற 3 பேரை அலவத்துகொடை பொலிஸார் நேற்றுமுன்தினம் செவ்வாய்க்கிழமை கைதுசெய்துள்ளனர்.

கைதுசெய்யப்பட்ட நபர்களிடமிருந்து ஒரு கிலோ எடையுள்ள 547 போலி தங்கத்துண்டுகளும், கையடக்கத் தொலைபேசிகளும் கைப்பற்றப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

அலவத்துகொடை பொலிஸாருக்குக் கிடைத்த தகவலையடுத்து இவர்கள் கட்டுகஸ்தோட்டை நகரில் கைதுசெய்யப்பட்டதாக பொலிஸார் கூறினர்.

சந்தேகநபர்களை க் கண்டி நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்தவுள்ளதாக அலவத்துகொடை பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி நிஷாந்த ஹெட்டியாராய்ச்சி தெரிவித்தார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ்.ஜெய்ப்பூர் வலுவிழந்தோர் புனர்வாழ்வு நிறுவனம்

# வெள்ளிவிழாச் சிறப்புமலர்

1987- 2012

## நல்லை திருஞானசம்பந்தர் ஆதீன முதல்வரின் அருளாசிச் செய்தி...



யாழ்.ஜெய்ப்பூர் வலுவிழந்தோர் புனர் வாழ்வு நிறுவனம் தனது 25ஆவதுஆண்டுசேவையை நிறைவு செய்வதையிட்டு மகிழ்ச்சிடைகின்றோம்.

மனித வாழ்வை நல்நிலைப்படுத்துவதில் பல செயற்பாடுகள் உள்ளன. இந்தவகையில் அவயவங்கள் பாதிப்படைந்திருந்தால் வாழ்க்கை மகிழ்வடையாது. இதனை உணர்ந்த யாழ். ஜெய்ப்பூர் நிறுவனம் பேறால் அவயவங்களை இழந்த மனிதர்களை மகிழ்வடையச் செய்து தன்னிகரற்ற பணியால் அனைவருடைய மனங்களையும் மகிழ்வித்துவருகின்றது.

அவயவங்கைளை இழந்தவர்களுக்கு நிறைவான செயற்கை அவயவங்கைளைப் பொருத்தி அவர்களது வாழ்வாதாரத்துக்கு ஏற்ற தொழில் பயிற்சிகளையும் கடன் வசதிகளையும் ஏற்படுத்திக்கொடுக்கும் பணியை ஆற்றிக்கொண்டிருக்கும் நிறுவனத்தின் தலைவர், செயலாளர், பொருளாளர் மற்றும் உறுப்பினர்கள் பாராட்டுக்குரியவர்கள்.

இவர்களின் இப்பணி தொடர்ந்து நடைபெற இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

என்றும் வேண்டும் இன்ப அன்பு

ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தரபரமாசரிய ஸ்சுவாமிகள்

## Message from the Ven. Meeghajandure Sri Vemala thero



Twenty five years of community Service is a great achievement. The services rendered by your oreganization for the persons who has lost their limbs for no fault of their is a great relief to these persons. They are now able to be useful citizens and be of burden to the state.

Yours is the only centre in Jaffna which provides prosthetic, orthotic devices and orthodaedic services. Your Centre has also taken step to rehabilitate disabled and make them and asset to the Country.

All this could be achieved only by those are devoted, dedicated to their Mission. We observe that these qualities are in abundence in your Staff.

We wish you all success in your Vision and Mission

Ven. Meeghajandure
Sri Vemala thero
Viharidhiphy of Sri Nagavihara, Jaffna

## தலைவரின் உள்ளத்திலிருந்து..



கொழும்பு நட்புறவுச் சங்கத்தின் யாழ்.கிளையாக 1987இல் ஸ்தாபிக்கப்பட்ட யாழ்.ஜெய்ப்பூர் நிறுவனம் யுத்தத்தாலும் நோயின் காரணமாகவும் அவயவங்களை இழந்தவர்களை அன்புக் கரம் கொண்டு அரவணைத்து அவர்களும் எமது சமூகத்தின் ஓர்அங்கம் என்ற உணர்வை அனைவரிடத்திலும் மேலோங்கச் செய்வதற்காக அவ்வாறானவர்களுக்கு உயர்ந்த தரத்தில் நிறைகுறைவான செயற்கை அவயவங்களை உற்பத்தி செய்து தகுந்த பராமரிப்புடன் அவற்றை இலவசமாகப் பொருத்தி போதியளவு பயிற்சிகளை வழங்கி அவர்களை மாற்றுவலுவுள்ளோராக மாற்றி அவர்களது வாழ்வாதாரத்துக்கு ஏற்றவாறான தொழில் பயிற்சிகளையும் குறைந்த வட்டியிலான கடன் வசதிகளையும் வழங்கிவருவது அவர்கள் மீதான அதிக அக்கறையின் வெளிப்பாடாகவே அனைவராலும் உணரப்படுகின்றது.

அர்ப்பணிப்புடன் கூடிய மனித நேயமிக்க எமது சேவைக்கு சமூக சேவைத் திணைக்களமும், சர்வதேச செஞ்சிலுவைச் சங்கமும் உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு அன்பளிப்பாளர்களின் பங்களிப்புக் கிடைக்கப்பெற்று வருவதனாலும் எமது நிறுவனத்தின் சேவைகள் தடையின்றித் தொடருமென்பத்தில் எவ்வித ஐயமுமில்லை.

டாக்டர் (திருமதி) ஜெ.கணேசமூர்த்தி.
கௌரவ தலைவர்.









07.07.2012



### விதியை மாற்றியவள் வாழி

முக்காலிக்குத்தான் மூன்று காலா?
முடவனாகிய நானும் மூன்று காலல்
ஏறனேன் யாழ்.ஜெய்ப்பூரதில் அங்கு
அன்பால் அரவணைத்த
அன்னையவள் முன்
என் துயரெல்லாம் வெடித்தது அழுகையாய்
அஞ்சற்ற மகனே உன்னைப் போல
என் மக்கள் பலர் பெற்றனர் புதுவாழ்விங்கே
உனக்குண்டு எதிர்காலம் பொற்காலமாய்
எனக்கூறியவள் கூற்று பொய்க்கவில்லை எனக்கு
அந்தோ அதிசயம் என் கண்ணும் என்னை
ஏமாற்றுமா? படைக்கும் பிரமனுக்கும் போட்டியா?
இயற்கை தந்த என் காலுக்கீடாக பொருத்தினாள்
என் வாழ்வுக்கு ஆதாரமான செயற்கைக் காலது
மாற்றினாள் விதியெழுதிய என் கதையை

_ பயனடைந்த பயனாளி

### யாழ்.ஜெய்ப்பூரே நீடுழி வாழி!!

வாழ்வினிலே வலுவிழந்தோர் தமக்கு மிக்க
வலுவூட்டும் நிறுவனமாய் இருந்து
கொண்டு - உன்
வாழ்நாளில் இருபத்தைந்தாண்டு காலம்
சேவை செய்து வெள்ளிவிழாக் காணும் நேரம்
நீள் புகழே கொண்டு நன்னெறியில் நின்று
நேர்த்தியோடு பணிகள் பல புரிந்த உன்னை
வாழ்கவே பல்லாண்டு காலம் - என்ற
வாயார வாழ்த்துகின்றோம்! நீடு வாழ்க!!

- மாற்றுவலுவுடையோர்





"ஒருவன் தனது
பலவீனத்தைப் பற்றிச்
சிந்திக்காது
மாறாக வலிமையைப்
பற்றிச் சிந்திப்பது
மேலானது"

- சுவாமி விவேகானந்தர்

எமது சேவைகளில சில........

- ★செயற்கை கால், கை பொருத்துதல்
- ★ அவயவ சார்புறுப்பு பொருத்துதல்
- ★ நடமாடும் உபகரணப் உற்பத்தி
- ★இயன்மருத்துவ சேவை வழங்கல்
- ★உளவளச் சேவை வழங்கல்
- ★வெளிக்கள சேவை வழங்கல்







## யாழ். ஆயரின் ஆசிச்செய்தி



தனது 25வது வருட வெள்ளிவிழா நிறைவைக் கொண்டாடும் யாழ்.ஜெய்ப்பூர் வலுவிழந்தோர் புனர் வாழ்வு நிறுவனத்தினருக்கு இத்தருணத்தில் ஆழ்ந்த அன்பையும் பாராட்டையும் தெரிவித்துக்கொள்கின்றேன்.

தமிழ் மக்களுடைய வரலாற்றில் யுத்தகாலம் பெரும் ஆதிக்கம் செலுத்தியுள்ள வேளையில் யுத்தம் ஏற்படுத்திய பாதகமான விளைவுகளால் அங்கவீனர்களாகப் பலர் உருவாக்கப்பட்டனர். மனிதநேய நோக்கோடு யாழ்.ஜெய்ப்பூர் ஸ்தாபனத்தை உருவாக்க முனைந்த அதற்கு முயற்சித்த அனைவரையும் இந்தநேரத்தில் நினைவுகூருகின்றேன்.

அவயவங்களை இழந்து வாழ்வே முடிந்தது என்ற நிலையில் தவித்த மக்களுக்கு மீண்டும் புது நம்பிக்கை கொடுத்து வாழ வைக்கும் உதவிக் கரம் நீட்டும் மனிதநேய ஸ்தாபனமாகிய இந்த யாழ்.ஜெய்ப்பூர் ஸ்தாபனம் தனது 25 ஆம் ஆண்டு நிறைவைக் கொண்டாடுகின்ற இவ் வேளையில் அனைவரோடும் சேர்ந்து நானும் மனதார வாழ்த்தி இதில் பணிபுரியும் அனைவரையும் இறைவன் தனது ஆசீர்வாதத்தால் நிரப்ப மன மகிழ்ச்சியையும் திருப்தியும் அளிக்கவேண்டுகின்றேன். இறைவன் உங்களை ஆசீர்வதிப்பாராக?

பேரருட் திரு இ.தோமஸ் சௌந்தரநாயகம்

## மௌலவி எம்.எஸ்.எ. எம். முபாறக் அவர்களின் ஆசிச் செய்தி



யாழ்.ஜெய்ப்பூர் செயற்கைக் கால் நிறுவனம் தனது 25ஆண்டு சேவையை நிறைவு செய்வதையிட்டு பெரு மகிழ்ச்சியடைகின்றோம்.

கடந்த கால அசாதாரண சூழ்நிலையில் ஜெய்ப்பூர் செயற்கைக் கால் நிறுவனம் அளப்பரிய சேவையை வழங்கியுள்ளது. வாழ்வு உள்ளளவும் என்றும் அந் நிறுவனம் நினைவு கூரப்பட வேண்டியதாகும்.

இதற்காகப் பல நல்ல உள்ளவளை அன்றிலிருந்து இன்றுவரை பங்களிப்பு செய்துள்ளனர். இப்பணி சிறக்கவும் இதன் பணி ஓங்கவும் எமது வாழ்த்துக்கள், பாராட்டுக்கள் உரித்தாகவும்.

மௌலவி எம்.எஸ்.எ.எம்.முபாறக் , பிரதம இமாம், அல்லாப்பிச்சை முஹம்மதிய்யா மஸ்ஜித் முஸ்லிம் வட்டாரம், யாழ்ப்பாணம்.

## பொருளாளரின் பேனாவிலிருந்து..



ஒரு நிறுவனம் தனது சேவையை தொடர்ச்சியாக 25 வருடங்கள் வழங்கிவருவது நாம் எல்லோரும் பெருமைப்பட வேண்டிய விடயமாகும் 1980 ஆம் ஆண்டுகளில் யாழ்ப்பாணத்திலும் ஏனைய தமிழ் பகுதிகளிலும் பலர்அவயவங்களை இழந்து குறிப்பாக இளைஞர், யுவதிகள் வீட்டில் முடக்கப்பட்டு இருந்தார்கள்.

இந்த அவல நிலையை நன்கு உணர்ந்த யாழ். அன்னையர் முன்னணி அங்கத்தவர்கள், கொழும்பு நட்புறவுச்சங்கத்துடன் தொடர்பு கொண்ட காரணத்தால் எமது ஜெய்ப்பூர் நிறுவனம் 01.07.1987ஆம் திகதி கொழும்பு நட்புறவுச் சங்கத்தின் திட்டச் செயலாளர் திருமதி. கவர்ணா பேர்டின் அவர்களால் திறந்துவைக்கப்பட்டது.

ஆரம்ப நிலையில் எமக்கு நிதியுதவி வழங்கிய முக்கிய நிறுவனமான கொழும்பு நட்புறவுச் சங்கத்திற்கு மேலதிகமாக சர்வதேச நிறுவனங்களான NORAD, TRRO, SCT, ICRC, USAID ஆகியனவும் அதன் பின்னர் Motivation, UNICEF, IMHO போன்ற நிறுவனங்களும் பாதிக்கப்பட்டவர்களின் தேவைக்கேற்றவாறு எமது சேவையை விஸ்தரிப்பதற்கு நன்கு உதவின.

டாக்டர் (திருமதி) எஸ். தெய்வேந்திரம், கௌரவ பொருளாளர்.

## Message from the Hon.Governor, Northern Province



It gives me great pleasure to send the message to 25th years celebrations of Jaffna Jaipur Centre for disability Rehabilitation (JJCDR). The JJCDR is completing the noble 25th years of service.

The JJCDR is the only centre providing Prosthetic, Orthotic devices and Orthopaedic services in Jaffna Peninsula for over two decades also the centre provides mobility devices. Physiotherapist services Micro Credit loans and student educational grants to the differently able in our midst.

Its mission is to reach our to people with limbless/physical disabilities and empower them through a total rehabilitation programme to restore their dignity and rights.


While congratulating the Board of Management and Staff of JJCDR. I wish them every success in their future dreams and hopes.I take this opportunity to appeal to the donors and well wishers to contribute to these worthy causes to serve the needy to entire Northern Province.

G.A. Chandrasiri, Governor, Northern Province.

## வலுவிழந்தோர் இயல்பு வாழ்வு வாழ வழிவகுப்போம்

யாழ். ஜெய்ப்பூர் வலுவிழந்தோர் புனர்வாழ்வு நிறுவனம்
இல. 5, பழைய பூங்கா வீதி, சுண்டிக்குளி, யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org




பெரும்பாலும் மேகக் கூட்டத்துடன் கூடிய காலநிலை நிலவும்.

## சமய சந்நிதிகளில்

யாழ்ப்பாணம், ஜூலை 5

சித்தன்கேணி ஸ்ரீ நாக கன்னியம்பாள் ஆலய நூதன புனராவர்த்தன அஷ்ட பந்தன பிரதிஷ்டா மகாகும்பாபிஷேகம் எதிர்வரும் 8 ஆம் திகதி முற்பகல் 8.45 மணிக்கு நடைபெறவுள்ளது. எண்ணெய்க்காப்பு சாத்தும் நிகழ்வு நாளை வெள்ளிக்கிழமை நண்பகல் 12 மணி தொடக்கம் சனிக்கிழமை பிற்பகல் 3 மணிவரை நடைபெறும். (வ)

* * *

யாழ்ப்பாணம், ஜூலை 5

எழுதுமட்டுவாழ் விழுவளை கண்ணகை ஸ்ரீ மீனாட்சி அம்பாள் கோயிலின் பாலஸ்தாபன கும்பாபிஷேகம் இன்று வியாழக்கிழமை முற்பகல் 9.05 மணி தொடக்கம் 10.45 மணி வரையுள்ள சுபவேளையில் நடைபெறவுள்ளது. (வ-14)

### சிறைகளில் தடுத்து வைக்கப்பட்டுள்ள

# ஈழ அகதிகளை விடுவிக்கக்கோரி டென்மார்க்கில் நாளை கவனயீர்ப்பு




தமது உரிமைகளுக்காக பட்டினிப் போராட்டம் நடத்தும் செங்கல்பட்டு சிறப்பு முகாமில் தடுத்து வைக்கப்பட்டுள்ள தமிழ் ஏதிலிகளுக்கு ஆதரவாகவும், இலங்கை சிறைகளில் தடுத்து வைக்கப்பட்டுள்ள தமிழ் அரசியல் கைதிகளின் விடுதலைக்காகவும் ஐரோப்பிய நாடாளுமன்றின் டென்மார்க் தொடர்பகத்தின் முன்பாக டென்மார்க் தமிழர் நடுவத்தின் ஏற்பாட்டில் நாளை வெள்ளிக்கிழமை முற்பகல் 10.30 மணிக்கு கவனயீர்ப்பு நிகழ்வு இடம்பெறவுள்ளது.

கவனயீர்ப்பு நிகழ்வன்று இந்தியத் தூதரக அதிகாரிகளிடம் செங்கல்பட்டு சிறப்பு முகாமில் தமது உரிமைகளுக்காகப் போராடும் எமது உறவுகளின் உயிரைக் காப்பாற்றி விடுதலை செய்யுமாறு வேண்டிய மனுவையும் ஐரோப்பிய ஒன்றியத்திடம் 3 கோரிக்கைகள் அடங்கிய மனுவையும் தமிழர் நடுவத்தின் பிரதிநிதிகள் கையளிக்கவுள்ளனர்.

அந்தக் கோரிக்கைகள் வருமாறு:-

* தமிழ்நாட்டில் செங்கல்பட்டு சிறப்பு முகாமில் தமது உரிமைகளுக்காகப் போராடும் எமது உறவுகளின் உயிரைக் காப்பாற்றி விடுதலை செய்ய இந்திய அரசை வலியுறுத்துதல்

* இலங்கைச் சிறைகளில் தொடர்ச்சியாகத் தடுத்து வைக்கப்பட்டுள்ள தமிழ் அரசியல் கைதிகளை உடன் விடுதலை செய்ய இலங்கை அரசை வலியுறுத்துதல்

* தொடர்ச்சியாகதமிழ் மக்களின் பாரம்பரிய பிரதேசங்களை சிங்கள மயமாக்கி தமிழர் நிலங்களை இலங்கை இராணுவத்தினர் அபகரிப்பதைத் தடுத்து நிறுத்துதல்போன்ற கோரிக்கைகள் அடங்கிய மனுவே கையளிக்கப்படவுள்ளது. (வ)

# யாழ். கூட்டுறவுப் பணியாளருக்கு புதிய சம்பளம் நடைமுறைக்கு

யாழ்ப்பாணம், ஜூலை 5

யாழ். பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம் பணியாளர்களுக்கு புதிய சம்பளக் கொடுப்பனவை நடைமுறைப்படுத்த அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

இந்தச் சங்கத்தின் புதிய சம்பளக் கொடுப்பனவுக்கான விண்ணப்பம் பரிசீலிக்கப்பட்டு மேற்படி அனுமதி வழங்கப்பட்டுள்ளது. பெரும்பாலும் இந்தக் கொடுப்பனவு இந்த மாதக் கொடுப்பனவுடன் சேர்த்து வழங்கப்படவுள்ளது.

இதேவேளை யாழ். குடாநாட்டில் இதுவரைக்கும் ஆறு பல நோக்குக் கூட்டுறவுச் சங்கங்களுக்கு புதிய சம்பளக் கொடுப்பனவை நடைமுறைப்படுத்துவதற்கு அனுமதி வழங்கப்பட்டிருப்பதாக கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் வி.கே. அருந்தவநாதன் தெரிவித்தார்.

நல்லூர், அச்சுவேலி, நீர்வேலி, பண்டத்தரிப்பு, அளவெட்டி, மல்லாகம், கொடிகாமம் போன்ற சங்கங்கள் பணியாளர்களுக்கான ஐந்துவீதம் மற்றும் 15 வீதம் சம்பள அதிகரிப்பை மேற்கொள்வதற்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது. அனுமதி வழங்கப்பட்ட மேற்படி சங்கங்கள் பணியாளர்களுக்குரிய சம்பள அதிகரிப்பை நடைமுறைப்படுத்தியும் இக்கொடுப்பனவுகளில் முறைகேடுகள் மற்றும் தவறுகள் இருப்பின் பணியாளர்கள் எமக்கு அறிவிக்க முடியும். ஒவ்வொரு சங்கமும் இப்புதிய சம்பளக் கொடுப்பனவை பணியாளர்களின் ஆளணி தரவுக்கு அமைவாகவே வழங்கி வருகின்றன. தற்போது புதிய சம்பளக் கொடுப்பனவை அறிமுகப்படுத்திய ஆறு பல நோக்குக் கூட்டுறவுச் சங்கங்களைப் போன்று ஏனைய சங்கங்களும் தமது பணியாளர்களுக்கு இக் கொடுப்பனவை வழங்க முன் வரவேண்டும் என்று அவர் மேலும் தெரிவித்தார். (வ-17)

## ஆன்மிகப் பேருரை

கொழும்புத்துறை, ஜூலை 5

வடபிராந்திய சத்தியசாயி சேவா நிறுவனத்தின் ஏற்பாட்டில் யாழ்ப்பாணத்தில் பகிரங்க ஆன்மிகப் பேருரை நிகழ்வு நடைபெறவுள்ளது.

எதிர்வரும் 12 ஆம் திகதி வியாழக்கிழமை மாலை 4 மணிக்கு யாழ். இந்து மகளிர் கல்லூரியில் சர்வதேச சத்திய சாயி சேவா நிறுவனங்களின் தலைவர் டாக்டர் நரேந்திரநாத் ரெட்டி 'அவதாரங்களின் உருவ, அருவ நிலைகள்' என்னும் பொருளில் ஆன்மிக உரை நிகழ்த்துவார்.

பொதுமருத்துவராக, ஓமோன் சுரப்பிகளின் நோயியல் நிபுணராக அமெரிக்காவில் பணிபுரியும் நரேந்திரநாத் ரெட்டி பகவான் சத்தியசாயிபாபாவினாலே உயர் பதவிக்கு நியமிக்கப்பட்டவர் என்பது குறிப்பிடத்தக்கது. (வ-135)

## கண்ணீர் அஞ்சலி

திருமதி
### சின்னத்தங்கச்சி நாகரத்தினம்



எமது பாடசாலை அதிபர் திரு. நா. தனபாலசிங்கம் அவர்களின் அன்புத் தாய் சின்னத்தங்கச்சி நாகரத்தினத்தின் பிரிவுச் செய்தி கேட்டுத் துயரடைவதுடன் அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

யா/உயரப்புலம் குணபாலன் வித்தியாலயம் ஆசிரியர்,மாணவர்கள், பாடசாலைச் சமூகம்.

(30046)(5-6)

## 25 ஆவது ஆண்டு நினைவலைகள்



| தாயின் மடியில் | ஆண்டவன் அடியில் |
| --- | --- |
| 1946 | 1987 |
| 06 | 07 |
| 11 | 05 |

அமரர் குழந்தைவேல் தனபாலசிங்கம்

அப்பா உங்கள் அன்பான முகமும் அழகான உடற்கட்டும்
முத்தான புன்சிரிப்பு எல்லாம் மறைந்து
இருபத்தி ஐந்து வருடங்கள் சென்றும்
எங்கள் மனதிலிருந்து விலகவில்லை
உங்கள் ஆத்மா சாந்தி அடைய
கெருடாவில் முத்துமாரியை தினமும் வேண்டி நிற்கின்றோம்.

குடும்பத்தினரும்
உறவினர்களும்

கெருடாவில் தெற்கு, தொண்டமானாறு.

(18682)(6-8)

## மகிழ்ச்சிக்கு உள்ளத் தூய்மை வேண்டும்

உடல் நலத்துக்கு உடலைத் தூய்மையாய் வைத்திருத்தல் எப்படி முக்கிய தேவையோ அப்படியே ஆனந்தத்துக்கு உள்ளத் தூய்மை தேவையாகும். செய்யும் பணி ஒவ்வொன்றிலும் தூய்மையைக்காத்தலில் கண்ணும் கருத்துமாயிருந்து தெய்வார்ப்பணமாகவே செய்வதால்தான் உள்ளத்தூய்மை அல்லது சித்தசுத்தி பெற இயலும். மனிதன் அகங்கார உணர்வினால் உந்தப்பட்டு ஆடம்பரத்தில் ஈடுபடுவதால் வாழ்க்கையையே வீணடிக்கிறான். ஆடம்பரமும் அகங்காரமும் மேலோங்கியிருக்கும் வரை வாழ்க்கையில் ஆனந்தமும் மகிழ்ச்சியும் தூரமாகவே இருந்துவரும்.

நன்றி
தெய்வீகம் மலரும் பொழுது



சாயி சிந்தனை

# ஜெய்ப்பூர் வலுவிழந்தோர் நிறுவன வெள்ளிவிழா நிகழ்வுகள் சனியன்று

கொழும்புத்துறை, ஜூலை 5

யாழ்.ஜெய்ப்பூர் வலுவிழந்தோர் புனர்வாழ்வு நிறுவனத்தின் 25 ஆவது ஆண்டு நிறைவு வெள்ளிவிழா நிகழ்வுகள் நாளை மறுதினம் சனிக்கிழமை நடைபெறவுள்ளன.

காலை 8 மணிக்கு ஆரம்பமாகும் விளையாட்டுப் போட்டிகளுக்கு பிரதம விருந்தினராக யாழ். போதனா வைத்தியசாலை சத்திர சிகிச்சை நிபுணர் க. உமாபதி கலந்துகொள்வார்.

வலுவிழந்தோர் பங்குபெறும் சைக்கிள், ஓட்டோ ஓட்டப் போட்டிகளைத் தொடர்ந்து சென். ஜோன்ஸ் கல்லூரி மைதானத்தில் விளையாட்டுப் போட்டிகள், சங்கீதக் கதிரை, கயிறு இழுத்தல் ஆகிய போட்டிகள் இடம்பெறும்.

மாலை நிகழ்வுகள் ஜெய்ப் பூர் நிறுவனத் தலைவர் டாக்டர் திருமதி ஜெ. கணேசமூர்த்தி தலைமையில் பி.ப. 3மணிக்கு சுண்டுக்குளி மகளிர் கல்லூரி மண்டபத்தில் ஆரம்பமாகும்.

இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ். அரச அதிபர் சுந்தரம் அருமைநாயகமும், சிறப்பு விருந்தினராக சமூக சேவைகள் திணைக்களத்தின் வட மாகாணப் பணிப்பாளர் திருமதி நளாயினி இன்பராஜ், வடமாகாண சுகாதார சேவைகள் திணைக்களப் பணிப்பாளர் டாக்டர் திருமதி ரதினி ஜூட் ஆகியோரும் கலந்துகொள்வர்.

வெள்ளிவிழா மலர் வெளியீடு, சிரேஷ்ட பயனாளிகள் கௌரவிப்பு, பரிசில் வழங்கல் நிகழ்வுகளும் இடம்பெறும். (வ-135)

## கண்ணீர் அஞ்சலி



திருமதி
### செல்வராசா கௌசலாதேவி
(சிவகாமி அம்மன் கோயிலடி, இணுவில் கிழக்கு, இணுவில்.)

அன்னையவள் ஆறா துயிலில்
அபலைகளாய் நீர் எல்லாம்
இன்னாரெல்லாம் பல கூறியும்
உவகையுறா உம் மனம்
ஊராருடன் நாமும் ஆறுதல்
கூறியும் உம் அன்னை ஆத்மா
சாந்தியடைய பிரார்த்திக்கும்

Stars of Second
Inuvil

(20065)(5-6)

## மரண அறிவித்தல்

### சின்னத்தம்பி தவநாயகம்
(முன்னாள் C.T.B பஸ் நடத்துநர், கோண்டாவில் டிப்போ)



அச்சுவேலி பத்தமேனியைப் பிறப்பிடமாகவும், புன்னாலைக்கட்டுவன் நாச்சிமார் கோயிலடியை வசிப்பிடமாகவும் கொண்ட சின்னத்தம்பி தவநாயகம் கடந்த (30.06.2012) சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சின்னத்தம்பி - தங்கம்மா தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான முத்தையா - மகேஸ்வரி தம்பதியரின் அன்பு மருமகனும், இராஜேஸ்வரியின் அன்புக் கணவரும், செல்வகுலஜோதிநாதன் (சுவிஸ்), காலஞ்சென்ற பவானி மற்றும் சுரேஸ்குமார் (லண்டன்), பாமினி (கோண்டாவில்), காயத்திரி (பிரான்ஸ்) ஆகியோரின் பாசமிகு தந்தையும், கலாஜினி (சுவிஸ்), கஜேந்தினி (லண்டன்), பாலகுமார் (கோண்டாவில்), சிறிரமணன் (பிரான்ஸ்) ஆகியோரின் அன்பு மாமனும், தங்கரத்தினம் (கனடா), தனபாலசிங்கம் (கனடா), செல்வநாயகம் (கனடா) ஆகியோரின் அன்புச் சகோதரரும், பொன்னுத்துரை(கனடா), லில்லிமலர், ராணி ஆகியோரின் அன்பு மைத்துனரும், காலஞ்சென்ற பராசக்தி மற்றும் அருந்தவம் (சுவிஸ்) ஆகியோரின் சகலனும், விதர்ஷா, அபிலாஷ் (சுவிஸ்), ஜிஷ்னு (லண்டன்), சிவானுஜா, நிதுர்ஷன், தேவப்பிரியன், விஷால் (கோண்டாவில்), சஷ்னா (பிரான்ஸ்) ஆகியோரின் அன்புப் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (05.07.2012) வியாழக்கிழமை மதியம் அவரது இல்லத்தில் நடைபெற்று பிற்பகல் 3.00 மணியளவில் கோண்டாவில் இந்து மயானத்தில் பூதவுடல் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

கோகுல வீதி,
கோண்டாவில் வடக்கு, கோண்டாவில்.

தகவல்:
குடும்பத்தினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# ஸ்ரீ கண்ணகை அம்மன் கோயில் மஹா கும்பாபி

## ஆலய வரலாறு

இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன் ஒரு நாள் குன்றத்துக் குறவர்கள் இமயமலை சாரரிலே வேங்கை மர நிழலிலே பெண் ஒருவர் நின்றதையும் தேவர்கள் புஸ்பக விமானத்திலே ஏற்றிச் சென்றமையையும் சீத்தலைச் சாத்தனாரிடம் சொல்ல அதனைச் சீத்தலைச் சாத்தனார் இளங்கோவடிகளுக்குச் சொன்னார். இதனை இளங்கோவடிகள் சிலப்பதிகாரத்தில் வடித்தார். காவிரிப் பூம் பட்டிணத்து பெரு வணிகனன் மாறருத்துவான்மகன் கோவலன் கண்ணகியை மணந்ததையும் கோவலன் ஆடலரசி மாதவியின் ஆடலிலே மயங்கினான். அதன் பொருட்டு கண்ணகியை மறந்து மாதவியில் மையல் கொண்டமையும் இந்திரவிழா பார்க்கச் சென்றமையால் அங்கு கோவலன் யாழ்மீட்டுக் கங்கை குமரி நதிகளின் திறமையைப் பாடியமையும் தவறாக கருத்தில் கொண்ட மாதவி தான் வேறொருவனுடன் காதல் கொண்டதாகப் பாடியமையும் இதனால் கோவலன் மாதவியை விட்டுப் பிரிந்து கண்ணகியிடம் சென்றதையும் கவந்தியடிகளின் உதவியுடன் இடைய செயி நிமித்த கண்ணகியின் காற்சிலம்பு ஒன்றை மதுரை மாநகரில் விற்கச் சென்றமையும். அச்சிலம்பதனால் கோவலன் கொலையுண்டமையும், கொலையுண்ட செய்தி கேட்டு பதை பதைத்து அழுது கொலைக்களம் சென்று கோபம் கொண்டாள். நீதி கேட்பதற்கு பாண்டியன் அரண்மனை சென்று நீதி கேட்டமையும் பாண்டிய மன்னன் தனது தவறை உணர்ந்து கண்ணகியிடம் மன்னிப்புக் கேட்டமையும் கோபம் கொண்ட கண்ணகி மதுரை மாநகரை எரித்தாள். பின் மதுரையிலே தெய்வமாக அமர்ந்தாள், கண்ணகி யின் சிறப்புக்கண்ட சேரன் செங்குட்டுவன் கனக விஜயர் தலையிலே கல் சுமந்து மதுரையிலே கண்ண கிக்கு கோயில் அமைத்தான். பின் அவள் பெருமை கண்டு ஆங்காங்கே கோயில் அமைத்தார்கள். அதன் விளைவாக பராக்கிரமபாகு இலங்கையிலும் கோயில் அமைத்தான். இதன் சான்றாக ஒரு பாடல் உண்டு.

பாடல்

செந்திரு வளம் பெருக மதுரை மனோன்மணி
சுந்தரம்மிகுந்த கன்னாவயலோடு
நற்கட்டுபுரம் மிருசுவிலில்
விந்தை செறி அந்தூழுவில்
மெவுதின யானில் கல்வீருப்பினில்
திகழ்மிக்க வற்றாப்பளையினில்
வந்தங்கு வற்றாத
கிருபை செய்தே எனை ஆள
மாதனை மருவு கண்கையாம் மனே
கண்ணகியாள் இத்தனை இடங்களிலும்
குடிகொண்டு கண்ணகியாக அமர்ந்தாள்
அவளுக்கு நாங்கள் விழாக் காண்கின்றோம்
வாரீர் வந்து அருள் பெறுவீர்.

## அன்பும் அமைதியும் எங்கும் நிலவட்டும்

கண்ணகி வழிபாடு இலங்கையில் சிங்களவர் மத்தியிலும், தமிழர் மத்தியிலும் காணப்படுகின்றது. யாழ். குடாநாட்டில் வடமராட்சிப் பகுதியில் குறிப்பிடத்தக்க அளவில் இன்றும் கண்ணகி வழிபாடு நிலைத்திருக்கிறது. மாதனைக் கண்ணகி அம்பாள் கோயிலும், வழிபாட்டு முறைகளும் சிறு தெய்வ வழிபாட்டு முறையில் தொடர்ச்சியைப் பேணி வருகின்றன காவடி, கரகம், பழனிக் கரகம் மடை, பலிவெட்டல் தவிர்ந்த பல்வேறு தனிச்சிறப்புகளும் மிகுந்த கண்ணகி அம்மனுக்கு புதிதாகக் கோயில் கட்டடம் அமைத்துக் கும்பாபிஷேகம் நடைபெறுவதையிட்டு மகிழ்ச்சியடைகின்றேன். கண்ணகித் தெய்வத்தின் அருளாட்சியால் அன்பும், அமைதியும் எங்கும் நிலவ வேண்டி நிற்கிறேன்.

- பா.இரகுவரன், செயலாளர், ஞானசம்பந்த கலைமன்றம்.

## அம்மன் திருப்பாதம் பணிவோம்

மாதனையூரில் இலந்தை மரத்தடியில் வீற்றிருந்து மக்களுக்கு அருள்பாலித்துக் கொண்டிக்கும் கண்ணகை அம்மனுக்கு புதுக்கோயில் கட்டி 05.07.2012 இன்று குடமுழுக்கு விழா நடத்தவிருப்பதால் வராத்துப்பளை புலோலி கிழக்கு வாழ் மக்கள் அம்மனது திருமுழுக்கு சிறப்பாக நிறைவுபெற வேண்டுமென்று கண்ணகை அம்மனது திருப் பாதக் கமலமதைப் பணிந்து வேண்டி நிற்கிறார்கள்.

- நா.சுப்பையா (அம்பாள் ஸ்ரோர்ஸ்), புலோலி கிழக்கு, வராத்துப்பளை.

## வாழ்த்துச் செய்தி

சீருடன் விளங்கும் தும்பை நகர் மேற்கின் தெற்கு எல்லையோரமாக மாதனைக் கிராமத்தில் சிறப்புடன் விளங்கும் கண்ணகை அம்மனை நாள்தோறும் துதித்து நற்பலன் அடைந்திடுவோம். அன்பர்கள் வணங்கும் அருள் முகம் கொண்டவள் சோழத்திருநாட்டில் அவதரித்து சேரநாட்டில் நேடுவேள் தனிநில ஏறி தவேங்கை மலர்ச் சோலையில் தெய்வமாகிய சிலம்பரசியவள் மன்னவனாம் செங்குட்டுவன் பத்தினிக் கோட்டம் அமைக்க எண்ணி இமயமலைக் கல் எடுத்து புறத்தே சடா முடியும் வீராவேச முகமும் அஞ்சா நெஞ்சமும் கரந்தனிலே சிலம்பு சேர சிலை அமைத்து உன்னுருவம் எமக்களித்தான் மதுரை தனை நீறாக்கி இலங்காபுரிதனிலே வற்றாப்பளையில் வந்துதித்து மக்களிற்கெல்லாம் அருள்புரியும் கண்ணகைத் தாயவள் மாதனையில் சோலை தனைச் சூழ இலந்தை மரத்தடியில் வீற்றிருந்து எமக்கெல்லாம் அருள் பாலிக்கும் அன்னையவள் குடமுழுக்கு இனிதே நிறைவேற வாழ்த்துகிறோம்.

தும்பை வாழ் மக்கள் சார்பாக த. உதயமூர்த்தி
மக்கள் வங்கி உதவி முகாமையாளர், ஊழியர்கள்

## மகாகும்பாபிஷேக ஆசிச்செய்தி

இன்று நிகழும் பஞ்சகுண்ட அஷ்டபந்தன மஹா கும்பாபிஷேக விழாவில் ஆலயகுரு என்ற வகையில் பங்குபற்றுவதையிட்டு மட்டற்ற மகிழ்ச்சியடைகிறேன். இந்த நன்நாளில் அம்பாளின் கருணையை எல்லா மக்களும் பெற்றுச் சிறப்பாக வாழ அம்பாளை வேண்டுகின்றேன். - சதாசிவசர்மா, ஆலயகுரு.

## மாதனைக் கண்ணகை அம்பாள் ஆ

இலங்கையிலுள்ள சிறப்புவாய்ந்த கண்ணகை அம்மன் ஆலயங்களுள் பருத்தித்து
சிலப்பதிகாரக் கண்ணகி தன்னுடைய கணவன் கள்வனென்று பாண்டிய மன்னனாலே
அவையிலே வழக்காடி, மதுரையை எரித்து, சேரநாட்டிலே கோவலன் கொலையுண்
கண்ணகிக்கு கோயில் அமைத்து விழா எடுத்தான். அந்த விழாவுக்குச் சென்ற இலங்கை மன்
கண்ணகையின் திருவுருவத்தைக் கொண்டு வந்து பத்தினித் தெய்வத்துக்குக் கோயில்
இலங்கையின் வடக்குக் கிழக்கில் வாழும் தமிழ் மக்களிடையே ஒரு மரபுவழி வரலாறு உ

அம்மரபுவழி வரலாற்றின்படி கண்ணகைத் தெய்வம் சேரநாட்டிலிருந்து யாழ்ப
திருவடி நிலையத்தின் ஊடாக அங்கணாமக்கடவை தொடக்கம் மந்திகை, மாதனை, வ
பல இடங்களுக்கும் சென்று அடியார்களுக்கு அருள்பாலித்து அந்தந்த இடங்களிலே

மாதனைக் கண்ணகை கோயிலை எனது சிறுவயது முதல் அறிவேன். திருக்கோ
மாதணக் கண்ணகை அம்மனைத் தரிசிக்க வருவதுண்டு. வைகாசி மாத்தில் பூரணை
திங்கட்கிழமை முடிய ''கோவலனார் கதை'' என்னும் ஏட்டிலே கூறப்பட்டுள்ள கண்ண
படும். இந்த ஏட்டினைப் படிக்கும்போது இருவரிருந்து ஒவ்வொருவராக் மாறிமாறிப் படி
களிலே ஒருவராக இருந்து ஏடு படிப்பதைக் கேட்டு மகிழ்ந்துள்ளேன். வளர்ந்த பின்னர் அ
இருந்து படிப்படியாக வளர்ந்து வந்துள்ள அம்பாளுடைய ஆலயத்துக்கு இன்று புனராவ
அலங்கார ஆலயத்திலே அமர்ந்துள்ள கண்ணகையாள் எல்லோருக்கும் அருள்பாலிப்
அருளு டன் அவர்கள் மிகச் சிறந்த கூத்துக்களை ஆடிவருகின்றார்கள் கலைமலிந்த மாதனை ஊரி

பேராசிரியர் இ.

## மகாகும்பாபிஷேகம்

எமது ஊரின் காவல் தெய்வமாகிய வரலாற்றுப் புகழ்மிக்க கண்ணகை அம்மனுக்கும் பரிவார மூர்த்திகளுக்கும் நடைபெறும் பஞ்சகுண்ட மஹா கும்பாபிஷேக பெரு விழாவையிட்டு மிகவும் ஆனந்தமடைகிறோம்.

இந்த நன்நாளில் எல்லா மக்களும் அம்பாளின் அருள் பெற்று நோய் நொடியின்றி, பொருளாதார நிலையிலும் கல்வி நிலையிலும் சிறப்புப் பெற்று வாழ எல்லாம் வல்ல அம்மனை வணங்குகின்றோம். அத்துடன் ஆலயத் திருப்பணி வேலைகளுக்கு எல்லா வழிகளிலும் உதவி புரிந்த அனைத்து அன்பர்களுக்கும் அம்பாளின் அருள் கடாட்சம் கிடைக்க அம்பாளை வேண்டுகிறோம்.

கற்பகப்பிள்ளையார்
கண்ணகை அம்மன் கோயில்,
பரிபாலனசபையினரும்,
ஊர்மக்களும்.

மாதனை அருள்மிகு கண்ணகை அ
கண்ணகைத் தாயின் கண்ணுக்கெதிராக
பெறுபவர்களும் இப்பதிவாழ் மக்களே.
மிகவும் சிறப்புற நடைபெறுவது நாம்
வெளிவீதியில் நின்று வழிபட்ட நாம் சில
பெற்றுள்ளோம். அதுவும் பிறப்பொக்கும்
அனைவரும் நன்கு ஓதி உணர்ந்தமை
அமைந்துள்ளன. ஆயினும் மாதனை கண்
நீர்கொண்டு விளக்கெரித்தாரோ அதேபோ
படிக்கும் வழக்கம் மாதனைக் கண்ணகை

கண்ணகைத் தாயின் வடமேற்குத் தி
அருள் பாலித்து விநாயகப் பெருமான் மா
வழங்கிய திருவருளும் பெருவருளும் சே
நிறைந்த பெருங்கோயிலாக நிலைப்பட்டு
தலவிருட்சமான இலந்தை மரத்தை நி
நிலையில் திருக்கயிலாயம் என எல்லவரும்
செய்யும் கண்ணகைத் தாய் எல்லார்க்கும் இ
பாரதியாரின் பாடல் ஒன்று மிகவும் பொருத்

''வற்றவற்றக் கிணநூறும் வகைகண்
ஒன்றுபெரும் பொருளை ஊறுபுரி தொ
துறைசேர்ந்த வெளிநாடு சென்றுழைப்ப
சிந்தைசெய்வ தின்பம்'' இத்தகைய இ
நனைந்து நனைந்து தும்பளை தெற்கு வ

*''மேன்மைகொள் சைவநீதி விளங்கு*

★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★ பிரசுர அனுசரணை

**மிதுனா**
மரத்தொழிலகம்
அனைத்துவித மரவேலைகளும் செய்து கொடுக்கப்படும்
மாதனை, பருத்தித்துறை.

**சிந்து**
மரத்தொழில் கூடம்
மாதனை,
பருத்தித்துறை.

**குகன்**
சிமித் வோர்க்ஸ்
அனைத்துவித இரும்பு வேலைகளுக்கும் நாடவேண்டிய இடம்
மாதனை,
பருத்தித்துறை.

**சிறீ கிருஷ்ணா**
இரும்பு தொழில் கூடம்
அனைத்துவித தரமான இரும்பு வேலைகட்கும் நாடவேண்டிய இடம்.
மாதனை, பருத்தித்துறை.
077 4741933

**வதனா**
இரும்புத் தொழிலகம்,
பந்தல் சேவை.
மாதனை,
பருத்தித்துறை.

ஓம் விராட் விஸ்வப்பிரம்மனே நமக
**கௌரி சிற்பாலயம்**
மாதனை, பருத்தித்துறை
தொ.பே.இல. 077 4741 933, 021 3209 009
ஆலயங்களுக்கான வாகனங்கள்
திருவாசிகள், கேடகங்கள் மற்றும்
மரத்தினால் ஆன அனைத்துப்
பொருட்களும் பெற்றுக்கொள்ளலாம். மாதனை
பருத்தித்துறை.

**சிறீகிருஷ்ணா**
மரவேலைகள் தொழிலகம்,
அனைத்து வித மர
வேலைகளுக்கும், இவற்றுடன்
ஆட்டோ சேவை, அலுமினிய
Fittings, Welding works.
தொ.பே. 077 6327 609,
077 6913051 - யாலப்பை
லேன். மாதனை, பருத்தித்துறை.

**RAINBOW TRAVELS**
அனைத்து நாடுகளுக்குமான விமான
பயண சீட்டுக்கள்,
சதாம் ஸ்றீற்,
கொழும்பு - 1 எனும் விலாசத்தில்
பெற்றுக்கொள்ளலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ...ற - மாதனை



ஸ்ரீ ராம ஜெயம்

**புதுமை புரியும் பெண்ணரசி கண்ணகையே**

கண்ணகையின் காற்சிலம்பின் மணித வக்கலம்
கப்பல்தனில் வந்த மீகாமன் கண்ட
எண்ணரிய புகழுடைய பதியாம் பேறும்
எத்தும் கடல் நீரதனை உதவும் பேறும்
வண்ணமுறு ஆலய வளர்ச்சி யெண்ணி
விருப்பமொடு நிதியுதவி புரியும் பேறும்
பண்ணிசைக்கும் வீசாகப் பொங்கல் பெருவிழாவில்
பக்தியொடு "கண்ணகைகாதை" பாடும் பேறதைத்தும்
கொண்டாடும் கற்கோவளத்து மக்கள் கண்குளிரக்
கும்பாபிஷேகம் காணும் பேறுமன் புதுமை யன்றோ!

- கலாபூசணம் மு.தணிகாசலம்
முன்னாள் ஆலய நிர்வாக உறுப்பினர், கற்கோவளம்.

# ...பிஷேகம் - 05.07.2012

## நல்லை ஆதீன குருமுதல்வரின் அருளாசிச் செய்தி



பருத்தித்துறை மாதனை அருள்மிகு ஸ்ரீ கண்ணகை அம்பாள் கோயில் மஹாகும்பாபிஷேம் இன்று நிகழ்வதையிட்டுப் பெருமகிழ்ச்சி அடைகின்றோம். உலகைக் காக்கும் பரம்பொருளான ஆதிபராசக்தியானவள் இந்த மாதனைப்பதியிலே ஸ்ரீ கண்ணகை அம்பாளாக எழுந்தருளி வீற்றிருந்து அருள்பாலித்துக் கொண்டிருக்கிறாள்.

இன்று இந்த ஆலயத்தில் புனராவர்த்தன அஷ்டபந்தன பஞ்ச குண்ட பக்ஷ மஹாகும்பாபிஷேகம் நிகழ்வதற்குக் காரணகர்த்தாக்களாக விளங்கிய அம்பிகை அடியார்களின் அரும்பணி, அளப்பரிய சேவை பாராட்டுக்குரியது. பன்னிரண்டு ஆண்டுகளுக்கு ஒருமுறை நிகழ்கின்ற இந்தக் கும்பாபிஷேகம் காண்பதற்குப் பூர்வ ஜென்ம புண்ணியம் செய்திருக்க வேண்டும்.

இந்த ஆலயத்தை இவ்வளவு விரைவில் புனருத்தாரணஞ் செய்து அழகுற அமைத்துப் பூர்த்தியாக்கிய ஆலய அறங்காவலர்களும் அம்பிகை அடியார்களும் சீரோடுஞ் சிறப்போடும் நல்வாழ்வு வாழத் திருவருள் புரிய வேண்டுமென்று அம்பாளின் பத்ம மலர்ப்பாதம் பணிந்து, சிந்தித்து வந்தித்து அருளாசிகள் நல்கி உளமாரப் பிரார்த்தித்து வாழ்த்துகின்றேன். இன்றைய மஹாகும்பாபிஷேகம் சிறப்புற நிகழ எல்லாம் வல்ல நல்லைக் கந்தனின் திருவடிகளை வணங்கி எமது குருநாதர் நல்லைக்குருமணியின் பாதம் பணிந்து வாழ்த்தி இறைஞ்சுகின்றேன். ஸ்ரீ கண்ணகை அம்பாளின் திருவருள் எங்கும் பரவி யாவும் மங்களகரமாக நிகழப்பிரார்த்திக்கின்றேன்.

"என்றும் வேண்டும் இன்ப அன்பு"

- ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாச்சார்ய சுவாமிகள்.

## பிரதிஷ்டா பிரதமகுருவின் ஆசிச்செய்திகள்



சங்க கால இலக்கிய வரலாறுகள் மூலமாக கண்ணகை அம்பாள் வழிபாடு முக்கியத்துவம் பெறுகின்றது. இலங்கைத் திருநாட்டிலே பல கண்ணகை அம்பாள் ஆலயங்கள் தோன்றி பக்திபூர்வமான வழிபாடுகள் நடைபெறுவதை நாம் காணக்கூடியதாக உள்ளது.

கந்தபுராண கலாசார விழுமியங்களில் ஊறிய வடமராட்சி மக்கள் பருத்தித்துறை மாதனைப் பகுதியில் வீற்றிருந்து அருள் நல்கும் கண்ணகை அம்பாளைத் தமது தாயாகப் பேணி வழிபாடு செய்துவருகிறார்கள். மூர்த்தி, தலம், தீர்த்தம் மூன்றையும் ஒருங்கே அமையப்பெற்ற அன்னை கண்ணகா பரமேஸ்வரி அம்பாளுக்கு இன்று மங்கலகரமான சுபநேரத்தில் மஹாகும்பாபிஷேகம் நடைபெறுவதைக் காண்பது நாம் எல்லோரும் என்ன தவம் செய்தோமோ என்று எண்ணத்தோன்றுகிறதல்லவா?

இத்தகைய கும்பாபிஷேக பணியில் ஈடுபடும் சிவாச்சாரியார்கள், சிற்பக்கலைஞர்கள், வர்ணக்கலைஞர்கள், பொருள் உதவி நல்கிய உள்நாட்டிலும் வெளிநாடுகளில் வாழ்கின்ற மாதனைக் கிராம மக்கள் அனைவருக்கும் அம்பிகையின் திருவருள் கிடைப்பதோடு எனது நல் ஆசிகளையும் தெரிவிக்கின்றேன்.

"அம்பிகையை சரண் புகுந்தால் அதிக வரம் பெறலாம்"

- சிவஸ்ரீ பரமேஸ்வர மனோகர சிவாச்சாரியார், இந்துமத குருபீடாதிபதி, பிரதமகுரு, சிவன் தேவஸ்தானம், வல்வை.

## ...ஆலயத் திருக்குடமுழுக்கு



...த்தித்துறை மாதனைக் கண்ணகை அம்மன் ஆலயமும் ஒன்றாகும். ...ாலே கொலைசெய்யப்பட்டபோது ஒற்றைச் சிலம்புடன் பாண்டியன் ...லையுண்ட பதினான்காவது நாள் விண்ணகம் சென்றாள், சேரமன்னன் ...க மன்னன் கஜபாகு, விழா முடிந்து தன் நாட்டுக்குத் திரும்பும்போது ...கோயில் அமைத் தான் என்று வரலாறு கூறுகின்றது. இதேவேளை ...ாறு உண்டு.

...யாழ்ப்பாணம் மாதகலுக்கு அருகிலுள்ள ஜம்புகோளம் எனப்படும் ...ணை, வற்றாப்பளை ஆகிய இடங்கள் முதலாக கிழக்கு மாகாணத்தின் ...ரிலே கோயில்கொண்டருளினாள்.

...ருக்கோணமலையிலிருந்து எங்கள் குடும்பம் ஒவ்வோர் ஆண்டும் வைகாசித் திங்களில் ...ூரணையையும் விசாகத்தையும் உள்ளிட்ட ஒரு திங்கட்கிழமை விளக்குவைத்து அடுத்த ...ண்ணகை அம்மனுடைய வரலாறு மாதனைக் கண்ணகை அம்பாள் ஆலயத்திலே படிக்கப் ...ிப் படிக்கும் முறை கேட்டோருக்கு பெருவிருந்தாகும். என்னுடைய தந்தையார் சிலவேளை ...னர் அடியேனும் சில வேளைகளிலே படிக்கும் வாய்ப்பினைப்பெற்றுள்ளேன். சிறு கோயிலாக ...னராவர்த்தன அஷ்டபந்தன பஞ்சகுண்டபக்ஷ மஹா கும்பாபிஷேகம் நடைபெறுகின்றது. ...லிப்பாளாக. மாதனை என்றால் கூத்துக்குப் பேர்போன இடம். கண்ணகை அம்பாளுடைய ...ன ஊரிலே அமர்ந்துள்ள கண்ணகையின் பாதங்களைப் பணித்து இவ்வுரையை நிறைவுசெய்கிறேன்.

...ர் இ. சண்முகதாஸ், வாழ்நாள் பேராசிரியர், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.

## வாழ்த்துச் செய்தி

...கை அம்மனைத் தும்பளை தெற்கு வாழ்மக்கள் அனைவரும் வாழ்த்தி வணங்குகின்றோம். ...திராகவும், சுாலடியில் மிக நெருக்கமாகவும் இருந்து அன்னையின் அருட் காடட்சத்தைப் ...களே. இந்த ஆலயம் புனருத்தாரணம் செய்யப்பட்டு மகா கும்பாவிஷேகக் குடமுழுக்கு ...நாம் அனைவரும் செய்த தவப்பயனே ஆகும். ஏனெனில் பல்லாண்டு காலமாக ...ாம் சில காலங்களுக்குக்கு முன்னதாகவே உட்பிரகாரம் சென்று வழிபடும் திருவருளையும் ...ாக்கும் எல்லா உயிரும் சிறப்பொவ்வா செய்தொழில் வேற்றுமை யான்" என்னும் குறளை ...தமையே ஆகும். ஈழத்திருநாட்டில் எண்ணிலடங்காத கண்ணகை அம்மன் ஆலயங்கள் ...ன கண்ணகை அம்மனுக்குச் சிறப்பான ஒரு வரலாறு உண்டு. நமிநந்தி அடிகள் எவ்வாறு ...அதேபோன்று வங்கக் கடலிலே நீரெடுத்து விளக்கேற்றிக் கொடிநிறுத்திக் கோவலன் கதை ...ணகையின் வரலாறு.

...குத் திசையின் நூற்றாண்டு காலமாகச் சிறிய தோர் மண்ணாலான ஆலயத்தில் வீற்றிருந்து ...ன் மாதம் தோறும் மக்களுக்கு மோதகம் வழங்குவார். வெளிநாடு சென்றவர்களுக்கு விநாயகர் ...ரும் சேர்ந்து இன்று நாம்காணும் இமயம்போன்ற இராசகோபுரத்துடன் எல்லா வளங்களும் ...ப்பட்டுள்ளது. அதேபோல முன்பிருந்த கண்ணகை ஆலயத்தையும் முறைப்படி நீக்கித் ...த நிலைநிறுத்தி மூர்த்தி, தலம், தீர்த்தம் ஆகிய முப்பெருமைகளும் ஒருங்கிணைந்த ...லவரும் எண்ணும் அளவிற்கு அமைக்கப்பட்டுள்ளது. இவ்வாலயத்தில் வீற்றிருந்து அருளாட்சி ...க்கும் இன்பத்தையே அள்ளி வழங்குவாள். இந்த இடத்திலே பண்டிதமணி சு. நவநீதகிருஷ்ண ...பொருத்தமானதே.

...கண்டு நாமும் வாய்த்தபொருள் பிறர்க்குதவி வாழ்வதுவும் இன்பம் உற்றநடு நிலைதவறி ...ரி தொற்றுநோய் என ஒளிப்பதின்பம் சுற்றமென ஊர் நடுவன் சூழ்ந்து சோம்பாமல் ...ழைப்ப தின்பம் செற்றமொடு செருக்க கன்று சீவர்களை எல்லாம் செகதீசன் சந்நிதியாச் ...கய இன்பத்திலே திளைத்துத் திளைத்துக் கண்ணகைத் தாயின் கருணை மழையிலே ...ற்கு வாழ் மக்கள் அனைவரும் வாழ்த்துக் கூறுவதில் பெருமகிழ்வடைகின்றோம்.

*...விளங்குக உலகமெல்லாம்"*

- தும்பளை தெற்கு வாழ்மக்கள்

## கண்ணகை அம்பாளின் கருணை எங்கும் பரவட்டும்!



பருத்தித்துறை மாதனை அருள்மிகு கண்ணகை அம்பாள் ஆலய மகாகும்பாபிஷேகம் இன்று நடைபெறுவதையறிந்து பேருவகையடைகின்றேன். உலக மாதாவாகத் திகழ்கின்ற ஸ்ரீ கண்ணகை அம்பாள் இந்த மாதனைப்பதியிலே எழுந்தருளி வீற்றிருந்து வழிபடும் அடியார்களுக்கு இன்னருள் பாலிக்கின்றாள்.

இன்று பெருஞ்சாந்திவிழா எனும் குடமுழுக்குக் காணும் இந்த அம்பாள் ஆலயம் கீர்த்தி வாய்ந்தது. இங்கே வாழ்கின்ற அடியார்கள் பக்திபூர்வமான இறையன்புமிக்கவர்கள். அவர்கள் முழு நம்பிக்கையோடு அம்பாளை வணங்குகின்ற தன்மையையுடையவர்கள். வாழ்த்த வாயும் நினைக்க மட நெஞ்சும் தாழ்த்தச் சென்னியும் தந்தவளான ஆதி பராசக்தியான கண்ணகையம்பாளின் கருணை எங்கும் பரவட்டும்.

இன்றைய மஹாகும்பாபிஷேகத்தைச் சிறப்புறச் செய்யும் ஆலய நிர்வாகிகளும் அடியார்களும் பூர்வஜென்ம புண்ணியஞ் செய்தவர்கள். ஆதலால் இன்று நிகழ்கின்ற கும்பாபிஷேகப் பெருவிழா சிறப்புற நிறைவுற அம்பாளின் திவ்ய மலர்ப்பாதம் பணிந்து ஆசி நல்கி உளமாரப் பிரார்த்தித்து வாழ்த்துகின்றேன்.

"அம்பிகையை நம்பினால் அதிகவரம் பெற்றிடலாம்"

- நல்லை ஆதீன சமயப் பிரசாரகர் - சிவநெறிக்கலாநிதி இராசையா ஸ்ரீதரன்.

## கும்பாபிஷேகம் சிறக்கட்டும்



நீதியை நிலைநாட்டிய தாய்த் தெய்வமாக கண்ணகை அம்பாளை வழிபடும் மரபு தொடர்ந்து கொண்டிருக்கிறது. ஈழத்தமிழர் வரலாற்றில் துறைமுகப் பட்டினமாக விளங்குவது பருத்தித்துறை. இப்பதியில் விஸ்வப்பிரம்ம குல மக்கள் பேணிக்காத்த மாதனை அருள்மிகு கண்ணகை அம்பாள் ஆலயம் புதுமெருகூட்டப்பட்டு புனராவர்த்தன அஷ்டபந்தன மகாகும்பாபிஷேகம் நடைபெறுவது அறிந்து மிகவும் ஆனந்தமடைகின்றேன். கண்ணகித்தாயைப் பாடிப் போற்றிப் படையல் வைத்து வழிபடும் மரபு கிராமியப் பண்பாட்டில் முதன்மைபெற்று விளங்கியது. அந்த வகையில் சிறிய வழிபாட்டுக் கோயிலாக விளங்கிய இத்திருக்கோயில் இன்று பெருங்கோயிலாக வளர்ச்சி பெற்று விளங்குவது சிறப்புக்குரியது. மாதனை வாழ் மக்களின் மகத்தான முயற்சியால் இக்கோயில் மிக அழகாக விளங்குவதைப் பலரும் பெருமையோடு எடுத்துரைப்பார்கள். இத்திருக்கோயில் மகாகும்பாபிஷேகம் சிறப்பாக நடைபெறப் பிரார்த்திப்பதோடு, ஆலயத்திருப்பணிக்காக அயராது உழைத்த அன்பர்கள் அனைவருக்கும் என் இனிய நல்லாசிகளைத் தெரிவித்து அமைகின்றேன்.

- கலாநிதி ஆறுதிருமுருகன்,
தலைவர், ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானம், தெல்லிப்பழை, தலைவர், சிவபூமி அறக்கட்டளை.

## வாழ்த்துச் செய்தி



பருத்தித்துறை மாதனை அருள்மிகு ஸ்ரீ கண்ணகை அம்பாள் கோயில் மஹாகும்பாபிஷேகத்துக்கான வாழ்த்துச் செய்தி வழங்குவதில் பேருவகையடைகின்றேன். வடமராட்சி மண்ணில் சைவமும் தமிழும் தழைத்தோங்கும் மாதனை திருப்பதியில் எழுந்தருளி அருள்பாலிக்கும் கண்ணகை அம்பாளுக்கும் ஏனைய பரிவாரமூர்த்திகளுக்கும் சுபவேளையில் மஹாகும்பாபிஷேகம் நடைபெறத் திருவருள் கூடியிருப்பது எமக்கெல்லாம் பெருமகிழ்ச்சி தருகின்றது. நீண்ட வரலாறும் பாரம்பரியமும் கொண்ட இப்பதி இன்று விசேட பூசைகளுடனும், அபிஷேக ஆராதனைகளுடனும் சிவாச்சாரியார்களின் அருளாசியுடனும் புதுப்பொலிவு பெறுகிறது. எல்லாம் வல்ல ஸ்ரீ கண்ணகை அம்பாளின் அருட்கடாட்சம் இப்பிரதேசத்துக்கும் அடியார்களுக்கும் கிடைக்கவேண்டும் என்று பிரார்த்திப்பதுடன் கும்பாபிஷேக நிகழ்வுகள் சிறப்புற இறையருளை இறைஞ்சிப் பணிகின்றேன்.

- இ.த.ஜெயசீலன், பிரதேச செயலாளர், பிரதேச செயலகம், பருத்தித்துறை.

## ...ணையாளர்கள் ★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★

**நாதன்**
மரவேலைத் தொழிலகம்
(அனைத்து
மரவேலைகளுக்கும்)
மாதனை, பருத்தித்துறை.
021 2260 258

**காளி அம்பாள்**
தொழில் கூடம்,
மாதனை
பருத்தித்துறை.

**மரத்தொழில் கூடம்**
அனைத்துவித மர
தொழில்
வேலைகளுக்கும்.
மாதனை, பருத்தித்துறை
077 9184 443

ஓம் விராட் விஸ்வப் பிரம்மனே நமக
**நேரு பல்பொருள் வாணிபம்**
அருள் மிகு மாதனை ஸ்ரீ கண்ணகை அம்மன்
தேவஸ்தான மகா கும்பாபிஷேகத்தை மன
மகிழ்வுடன் வாழ்த்துகின்றோம்.
உங்களுக்கு தேவையான சகலவிதமான
பொருள்களையும்
மலிவாகப் பெற்றுக்கொள்ளலாம்
மிளகாய்த்தூள், ஈர அரிசி, ஈர உழுந்து,
உலர்ந்த தானியவகை போன்றவை
அரைத்துக் கொடுக்கப்படும்.
உங்களுக்குத் தேவயைான
மரத்தளபாடங்களையும் குறித்த தவணையில்
உத்தரவாதத்துடன் செய்து கொடுக்கப்படும்.
**திருசாந்தி மரத்தொழிலகம்**
யாலப்பை வீதி, மாதனை, பருத்தித்துறை.
**நேரு பல்பொருள்வாணிபம்**
**நிலாணி கிரைன்டிங் மில்**
யாலப்பை வீதி, மாதனை, பருத்தித்துறை.
உரிமையாளர்: இ. பாலசுப்பிரமணியம்.

**கவிசயா அச்சகம்**
பஸ்நிலைய மேல்மாடி வவுனியா,
அனைத்துவித Printing
வேலைகளும், Offset Printing
வேலைகளும்
செய்துகொடுக்கப்படும்.

**த லாண்ட் மார்க் புத்தகசாலை**
உள்ளூர் வெளியூர் துரித
பொதிசேவை
மெத்தைக்கடைச் சந்தி,
பருத்தித்துறை.
தொடர்பு: 075 038 9869

**City Medicals**
Pharmaceuticals Grocers
and Cosmetics
299, Main Street
Negombo
Tel: 031 22 31368,
031 5679695

(3/1146) (2 6 9)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




**தகவல் தொழினுட்ப ஒருங்கிணைப்பு, விநியோகம் மற்றும்**
**பக்கபலமளித்தல் ஆகியவற்றில புதிய பரிமாணங்களை உருவாக்க**

டிரைடென்ட் கோர்ப்பரேஷன் யாழ்ப்பாணக் கிளை தனது
அங்குரார்ப்பணத்தை அறிவிக்கின்றது

டிரைடென்ட் கோர்ப்பரேஷன் (பிரைவேற்) லிமிடட்
70, 72, ஸ்டான்லி வீதி, யாழ்ப்பாணம். | தொலைபேசி : 021 221 9523 | தொலைநகல் : 021 221 9524
தலைமை அலுவலகம் | 595, காலி வீதி, கொழும்பு 06.| தொலைபேசி : 0115 393300 | தொலைநகல : 0115 552323
கிளை | 198/1/1, டி. எஸ். சேனநாயக்க வீதி, கண்டி | தொலைபேசி : 081 222 0955 | தொலைநகல் : 081 222 0956

**www.trident.lk**

(சி/1152)(6-8)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சிவபூமி முதியோர் இல்ல ஆண்டு நிறைவு விழா

யாழ்ப்பாணம், ஜூலை 5

தொல்புரம் சிவபூமி முதியோர் இல்ல 5 ஆம் ஆண்டுப் பூர்த்தி விழா எதிர்வரும் 8 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை முதியோர் இல்லத்தில் நடைபெறவுள்ளது. செஞ்சொற் செல்வர் ஆறு திருமுருகன் தலைமையில் நடைபெறவுள்ள இந்த விழாவுக்கு பிரதம விருந்தினராக அகில இலங்கை இந்து மாமன்றத் தலைவர் வி. கைலாசபிள்ளை தம்பதிகளும் சிறப்பு விருந்தினர்களாக இந்தியத் தூதரக யாழ். அலுவலக உயர் அதிகாரி வி.மகாலிங்கமும் வலி.மேற்குப் பிரதேச செயலாளரும் கலந்துகொள்ளவுள்ளனர்.

ஆசியுரையினை நல்லை ஆதீன குரு முதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர் பராமாச்சார்ய சுவாமிகளும் யாழ். சிவதொண்டன் நிலைய முதல்வரும், வழக்கம்பரை முத்துமாரி அம்மன் ஆலய பிரதம குருவும் வழங்க உள்ளனர். இதில் சிவபூமி பாடசாலை மாணவர்களின் கலை நிகழ்வுகளும் இடம்பெறும். (16-32)

**விற்பனைக்கு உண்டு**

நகைக்கடை ஒன்று நடத்துவதற்கு தேவையான சகல பொருள்களும் கண்ணாடி (Fitting) உடன் விற்பனைக்கு உண்டு.

(19275)(6-8) தொடர்பு : 077 7905057

### கருத்தரங்கு பிற்போடப்பட்டுள்ளது

யாழ். மரியன்னை பேராலய இளைஞர் உருவாக்கல் அமைப்பினால் எதிர்வரும் 7 ஆம், 8 ஆம் திகதிகளில் நடத்தப்பட விருந்தகிறிஸ்தவ நாகரிக பாட கருத்தரங்கு பிற்போடப்பட்டுள்ளதாக அமைப்பின் பணிப்பாளர் அருட்திரு. ஆர்.எச். சகாயநாயகம் அறிவித்துள்ளார்.

இக்கருத்தரங்கு எதிர்வரும் 14 ஆம் திகதி சனிக்கிழமை, 15 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை ஆகிய திகதிகளில் முற்பகல் 9 மணிக்கு அகவெளி மண்டபத்தில் நடைபெறவுள்ளதாக அவர் தெரிவித்துள்ளார். (16)

### ஆசிரியர்களுக்கான கருத்தரங்கு

யாழ்ப்பாணம், ஜூலை 5

இந்து அறநெறிப் பாடசாலை ஆசிரியர்களுக்கான இறுதிநிலைப் பரீட்சை வழிகாட்டல் கருத்தரங்கு எதிர்வரும் 8 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 9 மணி முதல் பிற்பகல் 3 மணி வரை யாழ். இந்துக் கல்லூரி மண்டபத்தில் நடைபெறவுள்ளதாக இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்கள பணிப்பாளர் திருமதி சாந்தி திருநாவுக்கரசன் அறிவித்துள்ளார்.

இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களத்தினால் நடத்தப்படுகின்ற இக்கருத்தரங்கில் யாழ். மாவட்ட இந்து அறநெறிப் பாடசாலைகளைச் சேர்ந்த ஆசிரியர்களை கலந்து கொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளது. (16)

### மகா கும்பாபிஷேகம்

குப்பிளான் தெற்கு வீரமனை கன்னிமார் அருள்மிகு கௌரி அம்பாள் ஆலய மகா கும்பாபிஷேகம் எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10 மணிக்கு நடைபெறவுள்ளது. நாளை மறுதினம் சனிக்கிழமைகாலை 9 மணிக்கு எண்ணெய்க்காப்பு சாத்தலும் இடம்பெறவுள்ளதாக ஆலய பரிபாலன சபையினர் அறிவித்துள்ளனர். (16)

### பிற்போடப்பட்டுள்ளது

யாழ். பிராந்திய சுகாதாரத் திணைக்களத்தின் கீழ் இயங்கும் வைத்திய நிறுவனங்களுக்கும் அரச சார்பற்ற நிறுவனத் தலைவர்களுக்கும் நாளை நடைபெறவிருந்த மாவட்ட கண்காணிப்புக் குழுக் கூட்டம் பிற்போடப்பட்டுள்ளதாகவும் புதிய திகதி பின்னர் அறிவிக்கப்படும் எனவும் பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் எஸ். சிவராணி அறிவித்துள்ளார். (16)

**காணி விற்பனைக்குண்டு**

கச்சாய் தமிழ்க்கலவன் பாடசாலைக்கு அருகில் கச்சாய் தோட்டம் மாரியான்காடு என்னும் 17 ஏக்கர் விஸ்தீரணம் கொண்ட தென்னை பயிரிடக்கூடிய காணி விற்பனைக்குண்டு.

தொடர்பு : 077 5227107

(20061)(6-8)

**கைமாறிவிட்டது**

நல்லூரில் 01.06.2012 அன்று சைக்கிள் ஒன்று கைமாறி விட்டது. உரியவர்கள் கீழ்வரும் தொ.பே.இலக்கத்துடன் தொடர்பு கொள்ளவும்.

தொடர்பு : 077 3647318 (திரு. C.S. பூலோகசிங்கம்)

(20059)(6-8)

**தேவை**

யாழ். நகரில் இயங்கும் பிரபல வர்த்தக நிறுவனம் ஒன்றிற்கு

* கணக்கு இலிகிதர் (கணினி அறிவுள்ளவர்கள்)
* சிற்றூழியர்கள் தேவை.

சம்பளம் நேரில் பேசித் தீர்மானிக்கப்படும்.

தொடர்பு : விளம்பர இல 4373
மே/பா உதயன் பணிமனை,
361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்

(20062(6-8)

**சேமிப்பு கணக்குகளுக்கும் 10% அதி உயர் வட்டியையைத் தருவது NDB**

NDB Savings Star Plus

அழையுங்கள் 011 2 448 888

NDB வங்கி

(சி/1154)(6-8)

## 31 ஆம் நாள் நினைவஞ்சலி



அமரர் இராசலிங்கம் நகுலாம்பிகை

தோற்றம்
14★08★1935

மறைவு
05★06★2012

பாசத்தின் உறைவிடமே
எங்கள் நேசமான அம்மாவே!
ஆசையுடன் எமை வளர்த்த
பாசமான அன்னையே!
வெளிநாடு பல சென்று
உங்கள் பிள்ளைகளை கண்டீரோ
உலகமே பார்த்து விட்டு
இறைவனடி சேர்ந்தீரோ
தந்தையின்றி இரு உடன்
பிறப்பின்றி அழுத கண்ணீர்
மனம் மறக்க முடியவில்லையே
கரம் பிடித்த துணை தேடி
அப்பாவிடம் சென்றீரோ
பார்க்கும் இடம் எல்லாம்
உங்கள் அழகு முகம் தான் தெரிகிறதே
நேற்று வரை நினைத்திருந்தோம்
நீங்கள் எங்கள் துணை என்று
இப்போ தேற்றக் கூடயாருமில்லை
எம்மைத் தேடி எப்போ வந்திடுவீர்
அம்மா! என்றெனி மேல்
யாரை நாம் அழைத்திடுவோம்
பல ஆண்டுகள் கடந்தாலும்
உம் நினைவுடனே நாம் இருப்போம்.

எமது அன்புத் தெய்வத்தின் வீட்டுக்கிருத்திய நிகழ்வு இன்று (05.07.2012) வியாழக்கிழமை எமது இல்லத்தில் முற்பகல் 11 மணியளவில் நடைபெறும். இந்த நிகழ்விலும் தொடர்ந்து இடம்பெறும் மதிய போசனத்திலும் கலந்துகொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

உம்பிரிவால் வாடும்
பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்,
பூட்டப்பிள்ளைகள்.

ஐயனார் கோயிலடி,
சண்டிலிப்பாய்.

(20060) (45.6)

## மரண அறிவித்தல்

### துரையப்பா முத்துராஜா

வட்டுக்கோட்டை, அராலியை பிறப்பிடமாகவும் திருநெல்வேலியை வசிப்பிடமாகவும் கொண்ட துரையப்பா முத்துராஜா நேற்று( 04.07.2012) புதன்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான துரையப்பா -பொன்னம்மா தம்பதியரின் மகனும் பரமேஸ்வரி யின் அன்புக் கணவரும் சிவதர்சினி (ஆசிரியை - யா/முத்துத்தம்பி மகாவித்தியாலயம்), உமாநந்தினி (மருத்துவ பீட மாணவி)ஆகியோரின் அன்புத் தந்தையும் ஜெயராம்(யா/தே.க.க.) அவர்களின் மாமனும் ஹம்சிகாவின் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (05.07. 2012) வியாழக்கிழமை மு.ப.10 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக திருநெல்வேலி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

பழைய சந்தை,
திருநெல்வேலி கிழக்கு.

தகவல்:
குடும்பத்தினர்.

## 11 ஆம் ஆண்டு நீங்கா நினைவில்

மலர்வு
17 . 05 . 1977



உதிர்வு
05 . 07 . 2001

### நடராஜா உதயராஜ்

[விசுவமடு மேற்கு, முல்லைத்தீவு]

கண்முன்னே வாழ்ந்த காலம்
கனவாகிப் போனதுவோ
காலங்கள் பல உருண்டாலும்
கலையாது உன் நினைவு
மண்ணைவிட்டு விண் சென்று
விண் மீனாய் நீயிருக்க
மண்ணில் நாம் உள்ளவரை
ஓய்ந்திடாது உன் நினைவு

செல்வம் ஹாட்வெயார்
அன் உதயா ஸ்ரோஸ்,
விசுவமடு.

(சி/2223) ) (45.6.)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கைத்தொலைபேசிப் பாவனையால் அதிகம் பாதிக்கப்படுவது ஆண்களா? பெண்களா?

பெற்றோர்கள் முடிந்தளவு பாடசாலைக் கல்வியை தொடரும் தமது பிள்ளைகளுக்கு கைத்தொலை பேசியை வாங்கி கொடுப்பதனை முற்றாக நிறுத்த வேண்டும்.




இன்றைய நவீன உலகின் முன்னேற்றப் பாதையில் பயணித்துக் கொண்டிருப்பவர்கள் பெண்களாக இருந்தாலும் கூட கைத்தொலைபேசிப் பாவனையால் அதிகம் பாதிக்கப்படுவதும் பெண்களாகவே காணப்படுகின்றனர். ஆரம்ப கால கட்டத்தில் கைத்தொலைபேசி என்பது அவசிய தேவைகளுக்கு மட்டுமே பயன்படுத்தப்பட்டு வந்தது. ஆனால் இன்றோ யாழ்ப்பாணத் தமிழர் பண்பாடுகளையும் கலாசார சீரழிவுகளையும் ஏற்படுத்தவும் தேவையற்ற உரையாடல்களுக்காகவும் பயன்படுத்தப்பட்டு வருகின்றது. பெண்கள் கைத்தொலைபேசியை பாவிப்பதனால் பல்வேறுபட்ட அசௌகரியங்களுக்கு ஆளாகின்றனர்.

இனந்தெரியாத ஆண் நண்பர்களிடம் நட்புறவை வளர்த்துக் கொள்கின்ற சில பெண்கள் எதிர்கால வாழ்வில் பல்வேறு பிரச்சினைகளுக்கு தீர்வு காண இயலாமல் தவிக்கின்றனர். பெண்கள் கைத்தொலைபேசியைப் பாவித்தாலும் கூட தமது நட்பு வட்டாரத்தினைக் குறைத்துக் கொள்ள இயன்றளவு முயற்சி செய்யவேண்டும்.

பெண்கள் துஷ்பிரயோகங்களுக்கு உட்படுத்தப்படுவதற்குக் காரணமாக அமைவது பெண்களின் முறையற்ற தொலைபேசிப் பாவனை என்றே கூற முடியும். கைத்தொலைபேசிக்கு வருகின்ற முகம் தெரியாத நபர்களின் அழைப்புகளுக்குப் பதிலளிப்பதன் மூலம் எவ்வாறான பின்விளைவுகளைச் சந்திக்க நேரிடும் என்பதனைப் பெண்கள் புரிந்து கொள்வதில்லை. பெண்களின் மென்போக்கைச் சாதகமாகப் பயன்படுத்தி கைத்தொலைபேசி மூலம் பெண்களுக்குக் குறுஞ்செய்தி அனுப்பி மிரட்டல் புரிபவர்களும் இருக்கின்றனர்.

பெற்றோர்கள் முடிந்தளவு பாடசாலைக் கல்வியைத் தொடரும் தமது பிள்ளைகளுக்கு கைத்தொலைபேசியை வாங்கி கொடுப்பதனை முற்றாக நிறுத்த வேண்டும். நாம் உயர்கல்வியைத் தொடர்கின்ற இந்தக் காலகட்டத்தில் கைத்தொலைபேசிப் பாவனையைக் குறைத்துக் கொள்ள வேண்டும். பெண்கள் சிறுவயதிலிருந்தே பெற்றோர்களின் பாதுகாப்பில் வளர வேண்டும். இன்றைய இளைய சமுதாயம் கைத்தொலைபேசிப் பாவனையால் சீரழிவதை தடுக்க எல்லோரும் முன்வரவேண்டும்.

வீதிகளிலும், பஸ்களிலும், தனியார் கல்வி நிலையங்களிலும் பெண் பிள்ளைகளை ஒளிப்படம் எடுத்தல், வீடியோ பதிவு செய்தல் போன்ற காரணங்களால் பெண்கள் பாதிக்கப்படுகின்றனர். எனவே கல்வி நடவடிக்கைகளைத் தொடரும் மாணவிகள் கைத்தொலைபேசிப் பாவனையை இயன்றளவு குறைத்துக்கொள்ள வேண்டும்.

சு.லக்ஸ்னா
கெற்பேலி, மத்தி, மிருசுவில்

## விமர்சனம்

நீங்களும் எழுதலாம்....



கைத்தொலைபேசி பாவனையால் அதிகம் பாதிகப்படுவது ஆண்களா? பெண்களா?

உங்கள் காரணங்களை விமர்சனப் பகுதியில் முன் வைத்து விமர்சியுங்கள்.

தரமான விமர்சனங்கள் பிரசுரமாவதோடு சிறந்த விமர்சனங்களுக்குப் பரிசுகளும் வழங்கப்படும்.

## வானம் தொடும் தூரம்தான்



இன்று வாழ்க்கை ஒரு போராடும் போர்க்களமாக மாறிவிட்டது. எதனையும் போராடினால் தான் பெற்றுக் கொள்ள முடியும். இரவுக்கு எதிராக பகலும் இன்பத்துக்கு எதிராக துன்பமும் நீதிக்கு எதிராக அநீதியும் போர் புரிகின்றன. இவ்வாறு ஒன்றுக்கு ஒன்று எதிராக இருப்பினும் இறுதியில் வெல்வது சத்தியமே ஆகும்.

உண்மைகள் உறங்குவதில்லை என்று கூறுவார்கள். அது போல தீமைக்குள்ளும் சிறு நன்மையிருப்பது உறுதி. முத்தெடுப்பவன் கடலில் மூழ்கி மூச்சை அடக்கி எத்தனையோ இடர்களுக்கு ஆளாகின்றார். நீரில் மூழ்கியவன் மூழ்கியே போவதும் உண்டு. இத்தனை துன்பங்களைக் கடந்து முத்தெடுத்து வெளிவந்தவனின் முகத்தில் எத்தனை மகிழ்ச்சி முத்துக்கள் காணப்படுகின்றன.

நீ முயலாமல் கனவுகள் மலராது முயற்சியை சுவாசி உன் மூச்சுக்காற்று தென்றலாகலாம். கனவு மொட்டுக்கள் சட்டென்றே பூவாகும். எது நிகழ வேண்டுமோ... அது நிகழும் நீ நினைத்தால் மட்டுமே நீ எதை நினைக்கிறாயோ அதுவாக ஆகிறாய்.

உன்னை வலிமையுடையவன் என்று நினைத்தால் வலிமை படைத்தவன் ஆவாய் என சுவாமி விவேகானந்தர் கூறுகின்றார்.

எனவே நீங்கள் ஒவ்வொருவரும் உங்களைப் படைத்த பரம்பொருளை நோக்கி,

இறைவா!
பிறருக்காக சிந்தக் கண்ணீர் கொடு
எமக்காக சிந்த வேர்வை கொடு
தாங்க முடிந்த தோல்வி கொடு

கர்வம் பூசாத வெற்றி கொடு
எல்லோரும் சிரிக்கின்ற வாழ்வு கொடு
எதிரியும் அழுகின்ற மரணம் கொடு

என்று பிரார்த்தியுங்கள் பாரம் தூக்கும் வீரனாக நீங்கள் புகழ் பெற்றாலும் விழுந்தவனைத் தூக்கி விடும் மனிதனாகவும் வாழப் பழகிக் கொள்ளுங்கள்.

ஆகவே மனிதா! கனவு காண்

தூங்காதே விழித்திரு! கனவை வரையறு அதை இலட்சியமாக்கு. இலக்கு நோக்கி செயற்படுத்து. அப்பொழுது அந்த வானம் கூட தொட்டுவிடும் தூரத்தில் தான் இருக்கும்.

போ. சித்திரா
மானிப்பாய்.

## மரணித்து விடுவோமா?



ஜாதி மத பேதம்
பார்த்து பிரித்து
வைக்கும்
உறவுகளுக்கு
எப்படி
வாழ்வது ?
மரணித்திப் போவோமா?
நான் !
கோழை என்று நினைக்காதே..
எமக்காகவே இருக்கிறது.
மரண தேசம்
மரணத்தையும் தாண்டி
நானும் நீயும்
மகிழ்வோடு வாழலாம்!

சா.ஜிந்துஜா,
கோண்டாவில்.

## எண்ணச்சுவடு

பாசம்
பாசத்தின் வடிவத்தை
புரிய வைத்தவனும் நீ
இன்று என் பாசத்தை
புரிய மறுப்பவனும் நீ
தான்!

இதயம்
காதல் கனவுகளை
சுமக்கும் புனிதமான
கருவறை

காதல்
இரு இதயங்களின்
பார்வைகள் பாசத்தை
சுமந்து பிரசவிக்கும்
குழந்தை

பிரிவு
புரியாத காதல் பிரிந்தால்
மனசுக்குள் வன்முறை
புரிந்த காதல் பிரிந்தால்
மாற்றான் தாலி.

சோகம்
நீ என்னருகில்
தரும் சுகங்கள்
தொலைவாகிப்
போனால் எனக்கு
வரும் வறுமை!

மஞ்சு கமலநாயகம்
கோப்பாய் வடக்கு,
யாழ்ப்பாணம்.

## வாழ்வதற்காக

கட்டிப்பனி உருகுதடா!
கடல் மட்டம் பெருகுதடா!
தாழ்கிறது தேசங்கள்
கேட்கிறதா மனிதா?

தாழ்ந்து போகும்
மாலைதீவுக்கு
காரணம்
மாலைதீவார் அல்லடா!

கனேடிய அமில மழைக்கு
காரணம்
கனேடியர் அல்லடா!

ஆபிரிக்க வெப்பத்துக்கு
காரணம்
ஆப்ரிக்கர் அல்லடா!

எனக்கு மட்டும்
எண்ணம் கொண்ட
நாம் எல்லோரும்
தானடா

வீட்டுப்பிரச்சினை அல்ல
நாட்டுப் பிரச்சினை
அல்ல
நாம் வாழும்
பூமிப் பிரச்சினை

ஒன்றாக கைகோர்
தவறின்
இன்று அவர்கள்
நாளை நாம்.

ஸ்.வை.சசீகரன்,
அச்சுவேலி.

## இளைஞர், யுவதிகளே!

உங்களின் திறமைகளை வெளிக்கொணரவும் பிரச்சினைகள் பற்றிப் பேசவும் தேடல்களுக்குத் தீனி போடவும் 'இளவல்கள் வட்டம்' என்ற இந்தப் பகுதி மலர்ந்துள்ளது. இந்தப் பகுதிக்கான உங்கள் படைப்புக்களையும் ஏதாவது சந்தேகங்களையும் விமர்சனங்களையும் கீழேயுள்ள படிவத்தோடு இணைத்து அனுப்பிவையுங்கள்.

**'இளவல்கள் வட்டம்',**
'உதயன்', 361, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

பெயர் :-........................
முகவரி :- ........................
........................................
.................... திகதி .................... கையொப்பம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 180 அகதிகளுடன் மற்றொரு படகு கிறிஸ்மஸ்தீவு நோக்கிப் பயணம்

ஜகார்த்தா,ஜூலை 5

சுமார் 180 அகதிகளை ஏற்றிய மற்று மொரு படகு ஆஸ்திரேலியாவின் கிறிஸ் மஸ் தீவை நோக்கிச் சென்று கொண்டிருப் பதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்தப் படகு விபத்துக்கு உள்ளாகும் அபா யம் ஏற்பட்டுள்ளதாக இந்தோனேசியக் கடற் பாதுகாப்புப் பிரிவினர் தெரிவித்துள்ளனர்.

குறித்த படகு மூன்று மீற்றர் உயரமு டைய அலைகளுக்கு மேல் பாய்ந்து செல்வதால் விபத்தில் சிக்கக்கூடும் என இந்தோனேசிய அதிகாரிகள் குறிப்பிட்டுள்ளனர்.

படகு விபத்துக்குள்ளாகலாம் என படகில் உள்ளவர்கள் நேற்று அதிகாலை 4.30 அளவில் (இந்தோனேசிய நேரம்) தமக்கு அறிவித்துள்ளதாக இந்தோனேசியக் கடற் பாதுகாப்புப் பிரிவினர் தெரிவித்துள்ளார்.

அதனைத் தொடர்ந்து படகு பயணித்துக் கொண்டிருக்கும் இடத்துக்கு வணிகக் கப்பல் ஒன்றையும் விமானத்தையும் அனுப்பி வைத்துள்ளதாக அவர்கள் மேலும் தெரிவித்துள்ளனர்.

பலகையால் செய்யப்பட்ட அகதிகள் படகு விபத்து அபாயத்தை அடுத்து இந் தோனேசிய கடற்பக்கம் திரும்பியதாகவும் படகில் உள்ளவர்கள் இந்தோனேசியா செல்ல விருப்பம் கொள்ளாததால் படகு தற்போது கிறிஸ்மஸ் தீவை நோக்கிச் சென்று கொண்டிருப்பதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

# நோயாளர் நலன்பேணக் கோரி தனியாள் உண்ணாவிரதம்

யாழ்ப்பாணம், ஜூலை 5

யாழ். போதனா வைத்தியசாலையில் இடம்பெறும் விடயங்களால் நோயாளர்கள் எந்த விதத்திலும் பாதிக்கப்படக்கூடாது என்ற கோரிக்கையை முன்வைத்து யாழ். போதனா வைத்தியசாலை, நோயாளிகள் உரிமைக்கான மக்கள் இயக்கத்தைச் சேர்ந்த விஸ்வலிங்கம் கந்தவேள் இன்று ஒருநாள் அடையாள உண்ணாவிரதப் போராட்டத் தில் ஈடுபடவுள்ளதாக அறிவித்துள்ளார்.

வைத்தியசாலைப் பணிப்பாளர் அலுவ லகத்துக்கு முன்பாக இந்த உண்ணாவிரதப் போராட்டத்தில் ஈடுபடவுள்ளதாக அவர் தெரிவித்தார்.

இது தொடர்பாக பணிப்பாளர் வைத்திய கலாநிதி திருமதி பவானி பசுபதிராஜா வுடன் தொடர்புகொண்டு கேட்டபோது:

'இதுபற்றிக் கூற எது வுமில்லை' எனத் தெரி வித்தார். அரச வைத் திய அதிகாரிகள் சங்க யாழ். கிளைத் தலைவர் வைத்திய நிபுணர் எஸ். நிமலனிடம் தொடர்பு கொண்டு கேட்டபோது:

நோயாளர்கள் காப் பாற்றப்பட வேண்டும் என்பதில் மாற்றுக் கருத் துக்கு இடமில்லை. நாம் வைத்தியசாலையில் இடம்பெற்ற ஊழலுக்கு எதிராக செயற்படுகி றோம். ஊழல் அற்ற வைத்தியசாலையாக திகழ்ந்தால் தான் நோயா ளிகளுக்கு சிறந்த மருத் துவ சேவையை வழங்க முடியும் என்றார்.

இதேவேளை மருத்துவர்கள் நாளை பணிப்புறக்கணிப்பில் ஈடுபடவுள்ளதாக அறிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

(10-16-4)

## இசட் புள்ளி ஆராய புதிய குழு

இசட் புள்ளிகளை மீளக் கணித்தல் தொடர்பாக, பல் கலைக்கழக மானி யங்கள் ஆணைக்குழு வை கண்காணிப்ப தற்குப் பொறுப்பாக சிரேஷ்ட பேராசிரியர் ஆர்.ஓ.தாட்டில் தலை மையிலான மூவர் கொண்ட குழுவொன் றை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ நியமிப்பார் என அமைச்சர் எஸ்.பி. திஸாநாயக்க தெரிவித் தார்.

நாடாளுமன்றத்தில், எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்த கருத்துக்கு பதிலளிக்கும் முகமாக உயர்கல்வி அமைச்சர் எஸ்.பி.திஸாநாயக்க இவ்வாறு கூறினார்.

புதிய பாடத்திட் டத்திற்கும் பழைய பாடத்திட்டத்திற்கும் தனித்தனியாக இசட் புள்ளிகளை தயாரிக்கு மாறு உயர் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

(16)

**Personal Class**

தரம் 3 முதல் A/L. வரையான மாணவர்களுக்கு English Personal Class உம் Spoken with Grammar கற்க விரும்புபவர்களுக்கு (No age Limit) வீடுகளில் வந்து கற்பிக்கப்படும்.) அனுமதி மட்டுப்படுத்தப் பட்டவை)

தொடர்பு : K.K.S. Road தாவடி T.P : 077 5978621

(20068)(6-8)

**பணியாளர்கள் தேவை**

எமது குளிர்பான நிலையத்துக்கு முன் அனுபவமுள்ள காசாளர் மற்றும் உணவு பரிமாறுபவர்கள் தேவை. உடன் தொடர்பு கொள்ளவும்.

0716357267

(சி/1225)

**தார்**

- 80/100, 60/70
- இமல்ஷன் CRSI, CRSII, CSS1
- கட்பெக் MC 30

பெரல், தாங்கி (பவுசர்) ஆகிய வாகனங்களில் பெற்றுக்கொள்ளலாம்

அழையுங்கள்: 072-2235460

BITUMIX (PRIVATE) LIMITED

பிடுமிக்ஸ் (பிரைவேட்) லிமிட்டெட்

மதவாச்சி சேமிப்பு நிலையம் மன்னார் றோட், மதவாச்சி.

தொ.பேசி: 025-5621880, பெக்ஸ்: 025-2245278

வெப்: www.bitumix.lk

**தேவை**

யாழ்ப்பாணத்தில் இயங்கும் வியாபார ஸ்தாபனத்துக்கு விற்பனையாளர்கள் தேவை.O/L படித்த 25 வயதுக்கு உட்பட்ட ஆண், பெண் இருபாலாரும் தேவை. உங்கள் சுயவிவரக்கோவையைக் கீழ்க்காணும் முகவரிக்கு அனுப்பி வைக்கவும்.

தொடர்பு:-

No.06 (155), கன்னாதிட்டி வீதி, யாழ்ப்பாணம்.

(20067) (2,6)

## கண்ணீர் அஞ்சலி



எமது கல்லூரியில் கற்பிக்கும் ஆசிரியை R.சுஜாதா அவர்களின் தந்தை.

**சீனிவாசகம் சுந்தரலிங்கம்**

அவர்களின் பிரிவினால் துயருற்றிருக்கும் அவரது குடும்பத்தினருக்கும், உறவினருக்கும் எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடைப் பிரார்த்திக்கின்றோம்.

கிளி/பளை மத்திய கல்லூரி

(20070)(6-8-)

## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்



மலர்வு 29★04★ 1924 உதிர்வு 05★07★2012

**அமரர் வேலுப்பிள்ளை சரஸ்வதி**

கடந்த 05.06.2012 செவ்வாய்க்கிழமை சிவபதமடைந்த எங்கள் குடும்ப விளக்கு அமரர் வேலுப்பிள்ளை சரஸ்வதி அவர்களின் வீட்டுக்கிருத்தியக் கிரியைகள் இன்று (05.07.2012) வியாழக்கிழமை அவரின் இல்லத்தில் நடைபெற உள்ளதால் அன்னாரது ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதிய போசன நிகழ்விலும் பங்கு கொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

சப்பச்சி மாவடி வீதி,
சங்கத்தானை, சாவகச்சேரி.

**குடும்பத்தினர்.**

(18108) (2-6)

## முல்லைத்தீவு முள்ளியவளை கனுக்கேணி அருள்மிகு கற்பக விநாயகர் ஆலய புனருத்தாரண அஷ்டபந்தன நவகுண்ட பஷ பிரதிஸ்டா மகா கும்பாபிஷேக விஞ்ஞாபனம்

எண்ணெய்க்காப்பு (07.07.2012) சனிக்கிழமை
காலை 7.00 - 4.00 மணிரை
கும்பாபிஷேகம் (08.07.2012) ஞாயிற்றுக்கிழமை
காலை 8.45 - 9.45 மணிவரை


**கற்பகப்பெருமான் அடியார்களே**

அருள்மிகு கற்பகவிநாயகர் ஆலய மகாகும்பா பிஷேகம் ஆனித்திங்கள் 24 ஆம் நாள் (08.07.2012) சதய நட்சத்திரமும், பஞ்சமி திதியும் சித்தயோகமும் கூடிய காலை 8.45 மணி முதல் 9.45 மணி வரையுள்ள சிங்க லக்கின சுபமுகூர்த்த வேளையில் விநாயகப் பெருமானுக்கும் ஏனைய பரிவார மூர்த்திகளுக்கும் கும்பாபிஷேகப் பெரும் சாந்திவிழா நடைபெற திருவருள் கைகூடியுள்ளது. எனவே அடியார்கள் அனைவரும் வருகை தந்து விநாயகப் பெருமானின் அருள் பெற்றுய்யுமாறு வேண்டுகின்றோம்.

ஆலய பரிபாலன சபையினர்.

(20064)(6-8)

## 25 ஆம் வருட அன்பின் நினைவு



அமரர்

**செ.திருநாவுக்கரசு**

(சமாதான நீதிவான், முன்னாள் பருத்தித்துறை சிங்கர் கொம்பனி முகாமையாளர், முன்னைய உடுப்பிட்டி கிராம சபைத் தலைவர்)

அன்னை மடியில் :- 15.07.1920
ஆண்டவன் அடியில் :- 12.07.1987
திதி:- 05.07.2012

அன்புத் தெய்வமே! பண்பின் திருவுருவாய்
பாசத்தின் பிறப்பிடமாய் எம்மை ஆளாக்கி
ஆறாத்துயரில் ஆழ்த்திவிட்டு மீளாத்துயில் கொண்டு
இன்றுடன் ஆண்டுகள் இருபத்தைந்து சென்றாலும்
என்றென்றும் உங்கள் பாச விளக்கின் ஒளி
அணையாத தீபமாய் பிரகாசித்துக்கொண்டிருக்கும்
எங்கள் நெஞ்சங்களில் என்றும் அழியாத
சித்திரமாய் நிறைந்திருக்கும் எங்கள் அன்புத் தந்தையின்
ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கும்....

**குடும்பத்தினர்.**

(மனைவி, மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்)

கரணவாய் மத்தி, கரவெட்டி.

(சி/1224)(2-6)

## 2 ஆம் ஆண்டு நினைவலைகள்



தோற்றம் 06.01.1947

மறைவு 29.06.2010

**கந்தசாமி மனோன்மணி**

கண்ணீரில் கரைந்ததம்மா ஆண்டுகள் இரண்டு
கண்முன்னே நீங்களில்லை உறவாட எம்மோடு
உம்மை எண்ணாத நாளில்லை இதயத்தில் எப்போதும்
உம் நினைவுகளே எம்மையிங்கு ஆளுதம்மா
இறுதிவரை எம்மோடு சேர்ந்திருப்பீர்கள் என்றிருந்தோம்
இடைநடுவே தவிக்கவிட்டு எங்கே தாயே சென்றாய்?
எம் முயிர் உள்ளவரை உம் நாமம் மறவோம்
எம் தாயின் ஆத்மா சாந்தியடைய இறைவனை வேண்டுகிறோம்.

[illegible] வீதி,
கட்டுடை, மானிப்பாய்.

கணவர், மக்கள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

(20065)(2-6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வட மாகாண தடகளப்போட்டிகள் நேற்று ஆரம்பம்


இலங்கை மெய்வன்மைச் சங்கத்தின் உப தலைவர்களில் ஒருவரான தெய்வேந்திரன் ஒலிம்பிக் சுடரை ஏற்றிவைத்தார்.


யாழ். மாவட்ட அரச அதிபர் சுந்தரம் அருமைநாயகம் போட்டிகளை சம்பிரதாய பூர்வமாக ஆரம்பித்து வைத்தார்.


வீரர்களின் சத்தியப் பிரமாண நிகழ்வின்போது...




ஆரம்ப நிகழ்வில் அனைவரையும் கவர்ந்த அணி வகுப்பு நிகழ்வில்...

(ந-23)

# பல்கலை. ஹொக்கி இறுதியாட்டம் இன்று

வலி.வடக்கு, ஜூலை 5

யாழ்ப்பாணம் பல்கலைக்கழக விளையாட்டு அவையும் ஹொக்கி விளையாட்டு அணியும் இணைந்து யாழ்.மாவட்ட ஹொக்கி விளையாட்டுக்கழகங்களுக்கு இடையே நடத்தும் ஆண்களுக்கான ஹொக்கிச் சுற்றுப் போட்டியின் இறுதி ஆட்டம் இன்று வியாழக்கிழமை மாலை 4 மணிக்கு யாழ்.பல் கலைக்கழக விளையாட்டு மைதானத்தில் விளையாட்டுத்துறைப் பணிப்பாளர் கே.கணேசநாதன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இறுதிப் போட்டியில் யாழ்.பல்கலைக்கழக ஹொக்கி அணியும் யாழ்.ஸ்ரார்விளையாட்டுக்கழக அணியும் மோதவுள்ளன.

இரு அணிகளும் சமபலம் கொண்ட அணிகளாக காணப்படுவதால் போட்டி மிகவும் விறுவிறுப்பாக அமைந்து இறுதி வரை ரசிகர்களை மிகவும் உற்சாகப்படுத்தும் என்பதில் சந்தேகம் இல்லை.

இந்தப் போட்டிக்கு தொழில் அதிபர் கெ.காண்டீபன் பிரதம விருந்தினராகவும் சிறப்பு விருந்தினராக யாழ்.மாவட்ட ஹொக்கி விளையாட்டுச் சங்கத்தின் தலைவர் கே.குலரத்தினமும் கலந்து சிறப்பிக்கவுள்ளனர். (ந-86)


பல்கலைக்கழக அணி


யாழ். ஸ்ரார் அணி

## 'எச்.பி.எல்' கரப்பந்தாட்டம்

இன்று மோதும் அணிகள்

- ஜப்னா லயன்ஸ் எதிர் யுத் ஸ்ரார்ஸ்
- ஜப்னா பிரண்ட்ஸ் எதிர் சுப்பர் கிங்ஸ்

# 'எச்.பி.எல்.' கரப்பந்தாட்டத் தொடர்; ஜப்னா கிங்ஸ், சுப்பர் கிங்ஸ் வெற்றி

பண்டத்தரிப்பு, ஜூலை 5

யாழ் மாவட்ட கரப்பந்தாட்ட சங்கத்தின் அனுசரணையுடன் ஆவரங்கால் இந்து இளைஞர் விளையாட்டுக் கழகம், ஏனைய விளையாட்டுக் கழகங்களுடன் இணைந்து நடத்தும் எச்.பி.எல் கரப்பந்தாட்டச் சுற்றுத்தொடர் நேற்று முன்தினம் ஆரம்பமாகியது. ஆரம்ப வைபவத்திற்கு பிரதம விருந்தினராக யாழ்.மாவட்ட கரப்பந்தாட்டசங்கத்தின்தலைவர் சி.மனோகரன் கலந்துகொண்டார்.

### முதல் போட்டியில் ஜப்னா கிங்ஸ் வெற்றி

சுற்றுத்தொடரின் முதலாவது போட்டியில் ஜப்னா கிங்ஸ் அணியும், யுத் ஸ்ரார்ஸ் அணியும் மோதிக்கொண்டன. முதல் சுற்றின் இறுதி நேரத்தில் ஜப்னா கிங்ஸ் அணியினர் அடுத்தடுத்து புள்ளிகளைப் பெற்றுக்கொள்ள முதல் சுற்று 25:19 என்ற புள்ளிகள் அடிப்படையில் ஜப்னா கிங்ஸ் வசமானது.

இரண்டாம் சுற்றின் ஆரம்பத்திலிருந்தே ஜப்னா கிங்ஸ் அணியினரின் ஆதிக்கம் தொடர்ந்தது. இதனால் இரண்டாம் சுற்றும் 25:19 என்ற புள்ளிகள் வித்தியாசத்தில் ஜப்னா கிங்ஸ் வசமானது. தொடர்ந்து மூன்றாவது சுற்றில் 25:15 என்ற புள்ளிகள் வித்தியாசத்தில் ஜப்னா கிங்ஸ் அணி இலகுவான வெற்றியைப் பெற்றுக்கொண்டது. இதனால் இப்போட்டியில் 3-0 சுற்றுக்கள் என்ற அடிப்படையில் ஜப்னா கிங்ஸ் அணி வெற்றியுடன் எச்.பி.எல் தொடரை ஆரம்பித்தது.


பிரதம விருந்தினருக்கு வீரர்கள் அறிமுகம் செய்து வைக்கப்படுகின்றனர்.

### லயன்ஸை வென்றது சுப்பர் கிங்ஸ் அணி

ஜப்னா லயன்ஸ் அணியினருக்கும் சுப்பர் கிங்ஸ் அணியினருக்குமிடையில் நடைபெற்ற எச்.பி.எல். இன் இரண்டாவது போட்டி மிகவும் விறுப்பானதாக அமைந்திருந்தது. இப்போட்டியின் முதல் சுற்றில் ஜப்னா லயன்ஸ் அணி வெற்றி பெற்றிருந்தாலும் அடுத்த மூன்று சுற்றுக்களையும் வெற்றி கொண்ட சுப்பர் கிங்ஸ் அணியினர் போட்டியின் வெற்றியைத் தமதாக்கிக்கொண்டனர்.

இப்போட்டியில் முதல்சுற்றில் ஜப்னா லயன்ஸ் 25:18 என்ற புள்ளிகள் வித்தியாசத்தில் இலகுவான வெற்றியைப் பெற்றுக்கொண்டது. போட்டியின் இரண்டாவது சுற்று கடும் போராட்டத்துக்கு மத்தியில் 25:21 என்ற புள்ளிகள் வித்தியாசத்தில் சுப்பர் கிங்ஸ் அணி வசமானது.

தொடர்ந்து மூன்றாவது சுற்றிலும், நான்காவது சுற்றிலும் 25:20 என்ற புள்ளிகள் வித்தியாசத்தில் சுப்பர் கிங்ஸ் அணி முன்னிலைபெற்றது. இதனால் 3:1 சுற்றுக்கள் என்ற அடிப்படையில் சுப்பர் கிங்ஸ் அணி வெற்றியைத் தனதாக்கியது. (ந-130)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# செரினாவின் வேகத்தில் வெளியேறினார் கிவிட்டோவா



விம்பிள்டன் ரென்னிஸ் பெண்கள் ஒற்றையர் பிரிவில் நடப்புச் சம்பியன் கிவிட்டோவா காலிறுதியில் தோல்வியடைந்து வெளியேறினார்.

லண்டனில், விம்பிள்டன் கிராண்ட்ஸ்லாம் ரென்னிஸ் தொடர் நடக்கின்றது. இதன் பெண்கள் ஒற்றையர் பிரிவின் காலிறுதியில் செக் குடியரசின் பெட்ரா கிவிட்டோவாவால், அமெரிக்காவின் செரினா வில்லியம்சின் அனல் பறக்கும் ஆட்டத்துக்கு ஈடுகொடுக்க முடியவில்லை. செரினா 6-3, 7-5 என்ற நேர் செற் கணக்கில் வென்று அரையிறுதிக்கு முன்னேறினார்.

**பெரர் அசத்தல்**

ஆண்கள் ஒற்றையர் பிரிவின் நான்காம் சுற்றில் ஸ்பெயினின் டேவிட் பெரர், ஆர்ஜென்டினாவின் ஜுயன் மார்டின் டெல்போட்ரோவை சந்தித்தார். முதல் செற்றை பெரர் 6-3 என்று எளிதாக வென்றார். இரண்டாம் செற்றிலும் அசத்திய பெரர் 6-2 என்று கைப்பற்றினார். மூன்றாவது செற்றில் ஆதிக்கம் செலுத்திய பெரர் 6-3 என்று தன் வசப்படுத்தினார். முடிவில், பெரர் 6-3, 6-2, 6-3 என்ற நேர் செற் கணக்கில் வென்று, காலிறுதிக்கு முன்னேறினார்.

**முர்ரே அபாரம்**

மற்றொரு நான்காம் சுற்றுப் போட்டியில் இங்கிலாந்தின் ஆன்டி முர்ரே, குரோஷியாவின் மரின் சிலிக்கை 7-5, 6-2, 6-3 என்ற நேர் செற் கணக்கில் வென்று, காலிறுதிக்குள் நுழைந்தார். மற்ற போட்டிகளில் ஜேர்மனியின் புளோரின் மேயர், பிரான்ஸின் ரிச்சர்டை 6-3, 6-1, 3-6, 6-2 என்று போராடி வீழ்த்தி காலிறுதிக்கு தகுதி பெற்றார். ஜேர்மனியின் பிலிப் கோசெகர்பர், அமெரிக்காவின் பிரைன் பேக்கரையை 6-1, 7-6, 6-3 என்ற நேர் செற் கணக்கில் வீழ்த்தி, காலிறுதிக்குள் நுழைந்தார்.

நேற்று முன்தினம் நடந்த ஆண்கள் இரட்டையர் பிரிவு இரண்டாவது சுற்றில், பூபதி-போபண்ணா ஜோடி, உஸ்பெகிஸ்தானின் இஸ்தோமின், ரஷ்யாவின் மிக்கெய்ல் ஜோடியிடம் 5-7, 6-7, 3-6 என்ற நேர் செற்கணக்கில் தோல்வியடைந்தது.

**போராடி தோல்வி**

ஆண்கள் இரட்டையர் பிரிவு மூன்றாவது சுற்றில் இந்தியாவின் லியாண்டர் பயஸ், செக் குடியரசின் ஸ்டெபானேக் ஜோடி, குரோஷியாவின் டோடிக், பிரான்ஸின் மெலோ ஜோடியை சந்தித்தது. 2 மணி நேரம் 49 நிமிடங்கள் நடந்த போராட்டத்தின் முடிவில், பயஸ் ஜோடி 6-4, 3-6, 4-6, 7-6, 6-8 என்ற செற்கணக்கில் போராடி வீழ்ந்தது.

**ஆறுதல் கிடைக்குமா**

லண்டன் ஒலிம்பிக்கில் சேர்ந்து விளையாட வேண்டும் என்று பெரும் சர்ச்சை கிளப்பிய பூபதி-போபண்ணா ஜோடி விம்பிள்டனில் ஏமாற்றியுள்ளது. கலப்பு இரட்டையரில் பூபதி-சானியா மிர்சா ஜோடியும் வெளியேறிவிட்டது. தற்போது கலப்பு இரட்டையரில் பயஸ் - வெஸ்னினா (ரஷ்யா) ஜோடி மட்டுமே மீதம் உள்ளது. (5)

## பாலின சர்ச்சையில் பிங்கியை நிர்வாணப்படுத்தி சித்திரவதை



ஆசிய தடகளப் போட்டியில் தங்கம் வென்ற தடகள வீராங்கனையான பிங்கி பிராம்னிக் ஆணா? பெண்ணா? என்ற சர்ச்சையில் சிக்கியுள்ளார். இது தொடர்பில் இவருக்கு நடத்தப்பட்ட மருத்துவப் பரிசோதனையில் அவரை நிர்வாணப்படுத்தி சித்திரவதை செய்துள்ளதாக 'வீடியோ' ஆதாரங்கள் வெளிவந்துள்ளன. மேற்கு வங்கத்தைச் சேர்ந்த தடகள வீராங்கனையான பிங்கி பிராம்னிக், ஆசிய தடகளப் போட்டி உட்பட பல போட்டிகளில் பதக்கம் வென்றுள்ளார்.

இவர் மீது, கடந்த மாதம் 14 ஆம் திகதி பெண் ஒருவர் பொலிஸில் பாலியல் துஷ்பிரயோக முறைப்பாடு ஒன்றை பதிவு செய்தார். அதில் பிங்கி ஒரு ஆண் என்றும் தன்னை பாலியல் துஷ்பிரயோகம் செய்து ஏமாற்றியதாகவும் அதில் குறிப்பிட்டிருந்தார். இதனையடுத்து அவர் கொடுத்த புகாரையடுத்து அவர் கைது செய்யப்பட்டார். அவருக்கு நடத்தப்பட்ட முதற்கட்ட மருத்துவ சோதனை திருப்தியளிக்காததால் மீண்டும் கொல்கத்தாவில் உள்ள ஒரு மருத்துவமனையில் சோதனை நடத்தப்பட்டு நீதிமன்றத்தில் மருத்துவ அறிக்கை தாக்கல் செய்யப்பட்டது. இந்த நிலையில் பிங்கிக்கு நடத்தப்பட்ட மருத்துவ பரிசோதனையில், அவரை நிர்வாணப்படுத்தி சித்திரவதை செய்ததாக குற்றச்சாட்டு எழுந்துள்ளது. இது தொடர்பான 'வீடியோ கிளிப்' வெளியாகியுள்ளது. (5)


## இந்தமுறை 7 போட்டிகளில் மாத்திரமே

ஐக்கிய அமெரிக்காவின் நீச்சல் வீரர் மைக்கல் பெல்ப்ஸ் இந்த முறை லண்டனில் இடம்பெறவுள்ள ஒலிம்பிக் போட்டிகளில் 7 வகையான போட்டிகளில் பங்குபற்றவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. அவரது வழக்கமான 8 வகையான போட்டிகளுக்குப் பதிலாகவே அவர் 7 வகையான போட்டிகளில் பங்குபற்றவுள்ளார்.

கடந்த முறை சீனாவில் இடம்பெற்ற ஒலிம்பிக் போட்டிகளில் 8 போட்டிகளில் பங்குபற்றி 8 தங்கங்களை வென்று உலக சாதனை படைத்த மைக்கல் பெல்ப்ஸ், இந்த முறை 200 மீற்றர் freestyle போட்டிகளில் பங்குபற்றமாட்டார் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. இந்த அறிவிப்பை அவரது பயிற்றுவிப்பாளர் விடுத்துள்ளார்.

2008 ஒலிம்பிக் போட்டிகளில் 100 மீற்றர் butterfly, 200 மீற்றர் butterfly, 200 மீற்றர் freestyle, 200 மீற்றர் தனிநபர் கலவை நீச்சல், 400 மீற்றர் தனிநபர் கலவை நீச்சல், 4 x 100, 1 x 200 மீற்றர்களுக்கான அஞ்சல் நீச்சல், 4 x 100 மீற்றர் அஞ்சல் கலவை நீச்சல் ஆகியவற்றில் பெல்ப்ஸ் கடந்த தடவை பங்குபற்றி தங்கப்பதக்கங்களைப் பெற்றிருந்தார்.

தனது 8 தங்கப் பதக்கங்களுக்கான சாதனையை அவர் இந்த முறையும் திரும்ப நிகழ்த்துவார் என்று எதிர்பார்க்கப்பட்டிருந்த நிலையிலேயே இந்த அறிவிப்பு விடுக்கப்பட்டுள்ளது. இந்த மாற்றம் காரணமாக பெல்ப்ஸ் ஏனைய வகையான போட்டிகளில் தனது கவனத்தைச் செலுத்துவதற்கு உதவும் எனத் தெரிவித்த பயிற்றுவிப்பாளர், ஏனைய 7 போட்டிகளிலும் அவர் பங்குபற்றுவார் எனவும் தெரிவித்தார். (5)



# டெஸ்ட் போட்டி சமநிலையில்

இலங்கை - பாகிஸ்தான் அணிகளுக்கிடையிலான இரண்டாவது டெஸ்ட் கிரிக்கெட் போட்டி வெற்றிதோல்வியின்றி முடிவுற்றுள்ளது.

கொழும்பு எஸ்.எஸ்.சி. மைதானத்தில் நடைபெற்ற இப்போட்டியில் பாகிஸ்தான் அணி முதல் இன்னிங்ஸில் 6 இலக்குகள் இழப்புக்கு 551 ஓட்டங்களைப் பெற்ற நிலையில் துடுப்பாட்டத்தை நிறுத்திக் கொண்டது. பதிலுக்கு இலங்கையும் சிறப்பாக துடுப்பெடுத்தாடியது. எனினும் இடையிடையே மழை குறுக்கிட்டதால் ஆட்டம் அடிக்கடி தடைப்பட்டது. இலங்கை அணி சார்பாக டில்ஷானும் சங்கக்காராவும் சதமடித்தனர்.

போட்டியின் இறுதிநாளான நேற்று இலங்கை அணி முதல் இன்னிங்ஸில் 391 ஓட்டங்களைப் பெற்ற நிலையில் சகல இலக்குகளையும் இழந்தது. சங்ககாரா 192 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்து இரட்டைச் சதமடிக்கும் வாய்ப்பைத் தவறவிட்டார். பாகிஸ்தான் அணியின் யுனைட்கான் 5 இலக்குகளை வீழ்த்தினார்.

அதையடுத்து பாகிஸ்தான் அணி தனது இரண்டாவது இன்னிங்ஸில் 2 இலக்குகள் இழப்புக்கு 102 ஓட்டங்களைப் பெற்ற நிலையில் துடுப்பாட்டத்தை நிறுத்திக்கொண்டது.


வெற்றி பெறுவதற்கு மேலும் 262 ஓட்டங்கள் தேவையான நிலையில் இலங்கை அணி நேற்று மாலை தனது இரண்டாவது இன்னிங்ஸை ஆரம்பித்தது. எனினும் இலங்கை 2 இலக்குகள் இழப்புக்கு 86 ஓட்டங்களைப் பெற்றநிலையில் போட்டி சமநிலையில் முடிவடைந்தது.

ஆட்ட நாயகனாக யுனைட்கான் தெரிவானார். (ங)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அஜ்மலின் பந்து வீச்சு சரியானதா?



இலங்கை அணிக்கு எதிராக இரண்டாவது டெஸ்ட் ஆட்டத்தில் அஜ்மல் வீசிய பந்து வீச்சுக்கள் சந்தேகத்தை ஏற்படுத்துவனவாக அமைவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. துடுப்பெடுத்தாடுகையில் அரைக்கை 'ரீ சேட்டுடன்' களமிறங்கும் அஜ்மல் பந்து வீசுகையில் ஏன் முழு நீள கை 'ரீ சேட்' பயன்படுத்துகின்றார் என்றும் கேள்வி எழுப்பப்பட்டுள்ளது.

பாகிஸ்தான் அணியின் இளம் சுழற்பந்து வீச்சாளர் சயிட் அஜ்மல். இவரது பந்து வீச்சுக் குறித்து சர்வதேச அணிகள் ஏற்கனவே கேள்வி எழுப்பின. தற்போது இலங்கை அணி மீண்டும் சந்தேகத்தை வெளியிட்டுள்ளது. இது குறித்து தெரிவிக்கப்பட்டிருப்பதாவது,

பயிற்சியிலும் சரி, போட்டியிலும் சரி, சயிட் அஜ்மலுக்கு 'ஷோர்ட் பிட்ச்' பந்துகளை எப்படி வீசுவதென்றே தெரியவில்லை. சர்வதேச கிரிக்கெட் சபை (ஐ.சி.சி.) அனுமதித்த, 15 'டிகிரியை' விட அதிகமாக வளைத்து பந்து வீசுகிறார். துடுப்பாட்டத்தின் போது மட்டும் அரை கை வைத்த 'ரீ சேர்ட்' அணியும் இவர், பந்து வீச்சு செய்தால் முழு அளவில் கையை மறைக்கும் வகையில் 'ரீ சேர்ட்' அணிவது ஏன். இதனால், இவர் கையை வளைக்கிறாரா, இல்லையா என்று தெளிவாக பார்க்க முடியவில்லை. மொத்தத்தில் இவரது பந்து வீச்சுக் குறித்து யாரும் நடவடிக்கை எடுப்பதாகத் தெரியவில்லை - என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

### தகர்ந்தது கவாஸ்கர் சாதனை

சங்ககாரா பாகிஸ்தானுக்கு எதிரான இரண்டாவது டெஸ்டின் முதல் இன்னிங்ஸில் 60 ஆவது ஓட்டத்தை எடுத்த போது, பாகிஸ்தானுக்கு எதிராக அதிக ஓட்டங்கள் எடுத்தவர்கள் பட்டியலில் இந்தியாவின் கவாஸ்கரை (24 டெஸ்ட், 2,089 ஓட்டங்கள்) வீழ்த்தி முதலிடம் பிடித்தார். சங்ககாரா 15 டெஸ்டில் 2174 ஓட்டங்கள் எடுத்துள்ளார்.

இதனைத் தவிர 30 ஆவது சதம் அடித்த சங்ககாரா, டெஸ்ட் அரங்கில் அதிக சதம் அடித்துள்ளவர்கள் பட்டியலில் ஆஸ்திரேலிய ஜாம்பவான் பிரட் மனை (29 சதங்கள்) முந்தி, 10 ஆவது இடம் பிடித்தார். இந்தப் பட்டியலில் இந்தியாவின் சச்சின் (51 சதங்கள்) முதலிடத்தில் உள்ளார்.

### டில்ஷான் 5000

பாகிஸ்தான் அணிக்கு எதிராக தனது 3 ஆவது சதம் பதிவு செய்தார் டில்ஷான். டெஸ்ட் அரங்கில் 5000 ஓட்டங்களை கடந்த 8 ஆவது இலங்கை வீரர் என்ற பெருமையும் பெற்றார். (5)



# ஆஷஷ் தொடருக்கு வோர்ண் அறிவுரை முக்கியம்

இங்கிலாந்தில் தற்போது இடம் பெற்றுக் கொண்டுள்ள ஒரு நாள் சர்வதேசப் போட்டித் தொடர் மற்றும் அடுத்தாண்டு இடம்பெறவுள்ள ஆஷஷ் தொடர் ஆகியவற்றில் ஆஸ்திரேலிய அணி சிறப்பாகச் செயற்பட ஷேன் வோர்ணின் அறிவுரைகளைப் பெற்றுக்கொள்வதாக ஆஸ்திரேலிய அணியின் தலைவர் மைக்கல் கிளார்க் தெரிவித்துள்ளார். கிரிக்கெட் சம்பந்தமான ஷேன் வோர்ணின் அறிவு பரந்துபட்டது எனத் தெரிவித்த அவர், அவரிடம் அறிவுரை கேட்கக் கூடியதாகக் காணப்படுவது அதிர்ஷ்டகரமானது எனத் தெரிவித்தார்.

ஷேன் வோர்ணிடமிருந்து தான் ஏராளமானவற்றைக் கற்றுவருவதாகத் தெரிவித்த மைக்கல் கிளார்க், நுட்ப ரீதியாக ஷேன் வோர்ண் மிகச்சிறந்தவர் எனவும், இது வரை தான் சந்தித்தவர்களில் சிறந்த நுட்ப அறிவைக் கொண்டவர்களில் ஷேன் வோர்ணும் முக்கியமானவர், எவரிலும் குறைந்தவரல்லர் எனவும் மைக்கல் கிளார்க் தெரிவித்தார்.

ஷேன் வோர்ணோடு தனிப்பட்ட ரீதியில் நெருக்கமான நட்பைக் கொண்டவராக அறியப்படும் மைக்கல் கிளார்க், டெஸ்ட் போட்டிகள் சம்பந்தமாகவோ, ஒரு நாள் சர்வதேசப் போட்டிகள் சம்பந்தமாகவோ தனக்கேதும் சந்தேகங்கள், பிரச்சினைகள் ஏற்படும் போது ஷேன் வோர்ணிடம் அறிவுரைகளைக் கோருவதாகத் தெரிவித்தார்.

ஷேன் வோர்ணின் நுட்ப அறிவு தவிர, இங்கிலாந்தின் பிராந்திய அணியான ஹம்ப்ஷயர் அணிக்குத் தலைமை தாங்கிய அனுபவம், இங்கிலாந்தில் விளையாடிய அனுபவம், தற்போது நேர்முக வர்ணனையாளராகக் கடமையாற்றும் அனுபவம் ஆகியவற்றால் இங்கிலாந்து பற்றிய அறிவு அவரிடம் காணப்படுவதாகத் தெரிவித்த மைக்கல் கிளார்க், ஆஷஷ் தொடர் அடுத்தாண்டு இடம்பெறவுள்ள நிலையில் அவரது கருத்துக்கள் முக்கியமானவை எனத் தெரிவித்தார். (5)

# யு.டி.ஆர்.எஸ்
## எதிர்க்கிறது இந்தியா; ஆதரிக்கிறது பாகிஸ்தான்

பாகிஸ்தான் அணி தான் விளையாடுகின்ற போட்டித் தொடர்களில் நடுவர்களின் முடிவை மீள் பரிசீலனை செய்கின்ற (யு.டி.ஆர்.எஸ்.) முறையினை பயன்படுத்தப் போவதாக அறிவித்துள்ளது. ஆஸ்திரேலியாவுக்கெதிராக ஐக்கிய அரபு இராச்சியத்தில் நடைபெற ஏற்பாடாகியுள்ள போட்டித் தொடரில் நடுவர் மீள்பரிசீலனைத் திட்டத்தைப் பயன்படுத்த விரும்புவதாக பாகிஸ்தான் கிரிக்கெட் சபை தனது விருப்பத்தை வெளியிட்டுள்ளது. நடுவர் பரிசீலனைத் திட்டத்திற்குத் தாங்கள் ஆதரவாகக் காணப்படுவதாகவும் அந்தச் சபை அறிவித்துள்ளது.

அண்மையில் இடம்பெற்ற சர்வதேசக் கிரிக்கெட் சபையின் வருடாந்த மாநாட்டில் நடுவர் பரிசீலனைத் திட்டத்தைக் கட்டாயப்படுத்த சர்வதேசக் கிரிக்கெட் சபை மறுத்திருந்த நிலையிலும் தாங்கள் தொடர்ந்தும் நடுவர் மறுபரிசீலனைத் திட்டத்திற்கு ஆதரவாகக் காணப்படுவதாக அந்தச் சபை தெரிவித்துள்ளது. இதில் இந்தியக் கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபை மாத்திரமே தனது முழுமையான எதிர்ப்பினை வெளியிட்டிருந்தது.



சர்வதேசக் கிரிக்கெட் சபையின் முடிவு காரணமாக நடுவர் மீள்பரிசீலனைத் திட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்குத் தேவையான செலவுகளை அந்தக் கிரிக்கெட் சபையேபொறுப்பேற்றுக்கொள்ள வேண்டும் என்ற நிலையில் அதற்கான அனுசரணையாளர் ஒருவரைத் தேடுவதாக பாகிஸ்தான் கிரிக்கெட் சபை தெரிவித்துள்ளது. நடுவர் மீள்பரிசீலனைத் திட்டம் கிரிக்கெட்டிற்கும், நடுவர்களுக்கும் உதவியாக அமைந்துள்ளதாகக் கருதுவதாகவும் தெரிவித்துள்ளது.

இந்த நிலையில் இலங்கைக்கெதிராக அண்மையில் ஐக்கிய அரபு இராச்சியத்தில் இடம்பெற்ற தொடரில் நடுவர் மறுபரிசீலனைத் திட்டத்தைத் தாங்கள் கொண்டிருந்ததாகவும், அப்போது தங்களுக்கு அதற்கான அனுசரணையாளர் கிடைக்கப் பெற்றிருந்ததாகவும் தெரிவித்த பாகிஸ்தான் கிரிக்கெட் சபை, இடம் பெற்றுவரும் இலங்கைத் தொடரில் நடுவர் மீள்பரிசீலனைத் திட்டம் பயன்படுத்தப்படாமைக்கான காரணங்களை உணர்ந்து கொள்வதாகவும் தெரிவித்துள்ளது. (5)

French Language Center
(பிரெஞ்சு மொழிப் பயிலகம்)
(யாழ்ப்பாணம், மானிப்பாய், நெல்லியடி)

France, Canada
ஆகிய நாடுகளுக்கு செல்ல
உள்ளோர்க்கான
"French Classes"
பிரெஞ்சு மொழி வகுப்புக்கள்
மூன்று இடங்களிலும்
ஆரம்பம்!!

குறிப்பு : வகுப்புக்கள் யாவும் பிரான்ஸில் பயிற்சி பெற்ற பல்கலைக்கழக விரிவுரையாளரால் நடாத்தப்படும்.

விபரங்களுக்கு :- UNI - ICT Campus
No :- 83, Palaly Road,
Kantharmadam, Jaffna.
T.P :- 021 321 6433 / 077 9789456

வேலையாள்கள் தேவை
கோண்டாவில் பகுதியில் புதிதாக ஆரம்பிக்கப்படவுள்ள ரெஸ்ரோரன்ட் ஒன்றுக்கு
★ சமையலாளர்
★ உணவு பரிமாறுபவர்
★ உதவியாளர் (Room boy)
தங்குமிடம், உணவு என்பன இலவசம்
சம்பளம் நேரில் பேசித் தீர்மானிக்கப்படும்
தொடர்புக்கு - 071 4546800

யாழில் எமது நிறுவனம் நிகரற்ற சேவை
வெளியீட்டு மலர், நினைவுமலர் கவர், படங்கள், விசிட்டிங் காட், Letter Pad, அழைப்பிதழ்கள், வில் புத்தகம், லேபில்கள், சான்றிதழ்கள் மற்றும் உடன் பிறிண்டிங் தேவைகளை ஆட்போட், ஆட்பேப்பர், ஸ்ரிக்கர் பேப்பர், கொங்கொங் தாள், போட், (4 கலர்) பதிப்பு, துரிதகதியில் செய்திட
யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரி அருகில் எமது நிறுவனம்
கொழும்பு டிஜிற்றல் இமேஜ்
பிளேட், பொசிட்டிவ், தேவையில்லை நேரம் மிக மிச்சம்!
துரிதகதியில் துள்ளியமான பதிப்பு
ஒரே நாளில் செய்திட யாழில் எமது நிறுவனம். 0771974875

ஆஸ்திரேலியா குடும்ப விசா ஆலோசனைக் கட்டணங்கள் சரி அரைவாசியாக குறைக்கப்பட்டுள்ளது.

மலேசியாவில் IELTS இல்லாமல்
குறைந்த செலவில்
கல்வி கற்கலாம்
தொழில் வாய்ப்பு.

நியுஸிலாந்தில் குறைந்த செலவில் கல்விகற்கலாம்.

திசைகாட்டி பிறைவேற் லிமிட் (pv82703)
முன்மாதிரியான விசா ஆலோசனை நிறுவனம்,
37, சிவகுரு நாதர் ஒழுங்கை,
பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்.
0212219016
22A Frank fort place
Bampalapitty, T.P- 0112508443



பாராட்டி வாழ்த்து

காமராஜர் பல்கலைக்கழக (B .Sc) பட்டதாரிகளாகிய எமக்கு பட்டதாரி பயிலுநர் நியமனம் கிடைத்தமையையிட்டு பெருமகிழ்ச்சி அடைகின்றோம். எம்மை பட்டதாரிகளாக்கிய புதிய உயர் கல்லூரி நிர்வாகத்தினருக்கும், விரிவுரையாளர்களுக்கும் எமது நன்றியை மிக மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்வதுடன் மேலும் பல பட்டதாரிகளை உருவாக்கும் உங்களை பாராட்டி வாழ்த்துகின்றோம்.

புதிய உயர் கல்லூரி
காமராஜர் பல்கலைக்கழகம்
B .Sc பட்டதாரி
மாணவர்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 05.07.2012 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.